நூற்றாண்டு விழா மலர்

கற்பகம்

யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்

J/ Urumpirai Saivathamil Vidyalayam

Centenary Souvenir

1915 - 2015

யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்

"கற்பகம்"

நூற்றாண்டு விழா மலர்

1915 - 2015

நூல் வெளியீட்டுத் தரவுகள்

நூல் : நூற்றாண்டு விழா மலர்

பதிப்பு : 30.09.2015

தாள் : 70g பாங் பேப்பர்

அளவு : B5

பக்கங்கள் : LX + 132

வழிகாட்டலும்
ஆலோசனையும்: திரு. மு. விக்னேஸ்வரன் (அதிபர்)

நூலாசிரியர்கள் : திருமதி. செ. பரமலிங்கம்,
திருமதி. சு. ரமணிதரன்

வெளியீடு : மலர் குழு

பிரதிகள் : 500

அச்சமைப்பு : ஷாம்பவி பதிப்பகம், 276, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(கரந்தன் வீதி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி)
தொலைபேசி : 021 2224143

உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் ஆலய முகப்புத் தோற்றம்

“சர்வமங்களம் ஆகட்டும் இங்கு சகல மனங்களும் ஆறட்டும்”

“கற்பக விநாயகரின் அருள் ஆசியுடன் தொடங்கப்பட்டது
விநாயகரின் அருள் ஆசி எந்நாளும் நிறைந்திருக்கக் கடவதாக.

குத்துவிளக்கு:- அறிவின் சுடராகத் தொடரும்

மகுடவாசகம்:- “கற்றாங்கு ஒழுகு”
“பாடசாலையில் கற்ற கல்விக்கேற்ப வாழப்பழகு”

தூரநோக்கு

மனித நேயம் மிக்க மாணவர் சமுதாயத்தை உருவாக்கி சமூகத்திற்கு ஒப்படைத்தல்

பணிக்கூற்று

- காலமாற்றத்திற்கு ஏற்ப பயிற்சிகளைப் பெறுதல்.
- அனுபவங்களைத் திசைகோளப் படுத்துதல்.
- கற்றல் செயற்பாடுகளுக்கு வழிகாட்டுதல்.
- செயற்பாடுகளைக் கணிப்பிடுதல், மதிப்பிடுதல்.
- இணைப்பாடவிதானத்தை வலுவூட்டல்.
- ஒழுக்க விழுமியங்களைப் பேணுதல்.

பாடசாலைக் கீதம்

இராகம் : ஹம்ஸத்வனி **தாளம்: ஆதி**

பல்லவி

திருமலி ஈழத் திருபுகழ் வாழி!
சிவநெறி வாழி தமிழ் வாழி!!

அனுபல்லவி

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியா சாலை
உமாபதி போல நனி வாழி!!

(திருமலி)

சரணம்

இருளினை ஓட்டி ஒளியினை யூட்டும்
இரவிபோல் எங்கலாசாலை - மன
மருளினை யோட்டி அறிவொளி தீட்டி
மங்களமாகவே வாழியவே!

(திருமலி)

கற்பகப் பிள்ளையார் காத்திடக் கந்தன்
கருணை கொழிக்கும் கலைக் - கோயில்
அற்புதமான நவீன அறிவியல்
அனைத்தும் ஓங்கி வாழியவே!!

(திருமலி)

கண்ணியங் கட்டுப்பாடு கடமைகளாதி
கருத்தினைக் கொண்டு புது - முறையில்
நண்ணருங் கல்வியில் நாமும் தழைத்திட
நலந்தருவாய் கருணாகர ஓம்!!

(திருமலி)

தமிழ்த் தாய் வாழ்த்து

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமென திகழ் பரத கண்டமதில்
தெக்கணமும் அதிற் சிறந்த திராவிட நல் திருநாடும்
தக்க சிறு பிறை நுதலும் தரித்த நறுந் திலகமுமே!
அத்திலக வாசனை போல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெரும் தமிழணங்கே!
பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்து துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன்னிருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமுந்துளுவும்
உன்னுதரத்தே யுதித்த யொன்று பலவாயிடினும்
ஆரியம் போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம் வியந்து செயன் மறந்து வாழ்த்துவமே.

மனோன்மணியம் பெ. சுந்தரம்பிள்ளை

கொடிக் கீதம்

இராகம் : ஹம்ஸத்வனி **தாளம்: ஆதி**

ஸாஸா நிரி பாபா காகா ரிரி கபப ரிநிஸ
ஸகக ஸகக கக நிபப பபநிகரி பாநிஸ

நீலவானம் நிழல் பரப்பிட
நிமிர்ந்து நிற்கும் கொடியிது
சைவத் தமிழின் சாதனை பலதை
சாற்றியசையும் கொடியிது

ஒழுக்கம் உயர்வு நேர்மை உறுதி
உணர்த்தி நிற்கும் கொடியிது
கல்விக்கலையைத் தரணிக் குணர்த்த
ஆடி அசையும் கொடியிது

அலை அலையாய் வரும் அணியை
அணைத்து நிற்கும் கொடியிது
தத்துவம் உணர்த்தி மேன்மை பேணித்
தாயாய் அணைக்கும் கொடியிது.

ஆக்கம்: சிவானந்தன் சுகன்ஜா
ஆசிரியை

எமது பாடசாலையின் கொடி

தமிழ் மொழி வாழ்த்து

தான தனத்தன தான தனத்தன தான தந்தானே
வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ்நாடே!
வாழ்க தமிழ் மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ் மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே!

சுப்பிரமணிய பாரதியார்

நூற்றாண்டுக் கீதம்

இராகம் : வலசி **தாளம்: ஆதி**

நூற்றாண்டு கொண்டாடும் எங்கள் பாடசாலை
நூலோர்கள் வளம் சேர்த்த எங்கள் பாடசாலை - நூற்றாண்டு

சைவத்தின் ஊற்றான நம் பாடசாலை
தமிழ்த்தாயின் எழில் கூட்டுந் தனிப் பாடசாலை - நூற்றாண்டு

உரும்பிராய் உதரத்தில் உருவாக்கம் கொண்டு
உரும்பிராய்ச் சைவத்தமிழ் வித்தியாலயம் என்று
உலகோர்கள் புகழ்வார்கள் உயர் சேவை கண்டு
உவப்பான உன் அகவை நூறான இன்று - நூற்றாண்டு

விக்னேஸ்வரன் என்னும் முதல்வரைப் பெற்று
விந்தைமிகு சாதனை விருதுகள் ஏற்று
இக்காலம் வரலாற்றில் பொற்காலம் உற்று
இணை இல்லாக் கல்விதரும் இன் அமுத ஊற்று - நூற்றாண்டு

ஆயிரமாய் மாணவர்கள் அணி அணியாய்ச் சேர்ந்து
ஆசிரியர்கள் அறுபதின்மர் அறிவொளியாய் இணைந்து
தாயிடத்துப் பிள்ளைகளாய் அன்புடனே பயின்று
ஆக்கிவிட்ட சாதனைகள் ஆயிரமாய்க் குவிந்து - நூற்றாண்டு

நாட்டிய சங்கீத சித்திரத்தில் மகுடம் சூட்டி
நந்தமிழில், ஆங்கிலத்தில் விருதுகளைத் தட்டி
நாட்டுக் கூத்து தெருநாடகம் வில்லிசையில் தனியிடத்தை எட்டி
நாட்டில் உயர் விஞ்ஞான ஆக்கங்களைக் காட்டி - நூற்றாண்டு

கரப்பந்து மல்யுத்தக் களம் கண்ட வெற்றி
கைதேர்ந்த எல்லேயும் நமக்குக் கிடைத்த வெற்றி
சிறப்புற்று புகழ் கூட்டும் சைவத்தமிழ் தாயே
செகம் மீது பல்லாண்டு நீடு வாழ்வாய் - நூற்றாண்டு

ஆக்கம்: வரகவி கவிஜோதி, ஸ்சைவப்புலவர்
மயில்வாகனம் சிவலிங்கம் (ஜே.பி)
B.A, P.G.D in Edu.
ஆசிரியர் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.

எமது பாடசாலையின் நூற்றாண்டு விழா பிரகடனம்

இன்று தனது நூறாவது வயதில் தடம் பதிக்கும் இவ் வித்தியாலயத்தின்
நூற்றாண்டு விழாவை பிரகடனம் செய்து வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.
இவ்வாண்டில் நூற்றாண்டு விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.

மார்கழி 1915

மார்கழி 2015

திரு. செ. உதயகுமார்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

திரு. மு. விக்னேஸ்வரன்
அதிபர்,
யா/ உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்

திரு. ஆ. சு. சற்குணராசா
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
கோப்பாய்.

எமது அதிபர்

திரு. மு. விக்னேஸ்வரன் (Pr.Trd, B.A, P.G.D.E, SLPS -I)
ஜனாதிபதி விருது 2012 - பிரதீபா பிரபா.

பிரதி அதிபர்

திரு. ம. ஸ்ரீகாந்தன்
(Sci.Trd, B.E.d)

நூற்றாண்டு விழா
மலர்க்குழு

ஆலோசனையும் வழிகாட்டலும் :- திரு. மு. விக்கினேஸ்வரன் (அதிபர்)

மலராசிரியர்கள் :- திருமதி செந்தில்நாயகி பரமலிங்கம்
திருமதி சுஜித்தா ரமணீதரன்

மலர்க்குழு அங்கத்தவர்கள் :- திரு. மா. ஸ்ரீகாந்தன்
திரு. பா. சத்தியநாதன்
திரு. ம. ரகுநாதன்
திரு. இ. ராஜ்குமார்
திருமதி. சித்திரா மகேந்திரன்
திருமதி. செல்வறஞ்சினி ஸ்ரீதரன்
திருமதி. சூரியகுமாரி ஸ்ரீஸ்வரன்
திருமதி. இலங்கேஸ்வரி குகநாதன்
ராதிகா விக்கினேஸ்வரன்

மலரின் உள்ளே...

01.	ஆசிச் செய்திகள்	I
02.	வாழ்த்துச் செய்திகள்	IV
03.	பிரதி முதல்வர் உள்ளத்தில் இருந்து	XL
04.	இதழாசிரியர்களின் இதயத்திலிருந்து...	XLII
05.	ஆரம்பக்கல்விப் பகுதித் தலைவரின்.....	XLIV
06.	எமது வித்தியால அதிபர்...	XLVI
07.	அதிபர் அறிக்கை	XLVIII
08.	சைவத் தமிழ் வித்தியாலத்தில்....	01
09.	மலரும் நினைவுகள்	07
10.	நூற்றாண்டு விழாக் காணும் சைவத் தமிழ் வித்தியாலயம்....	10
11.	என்னை வளர்தெடுத்த அறிவாலயமும் தொழிலாலயமும்....	13
12.	சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் உரும்பிராய்....	16
13.	சைவத்தமிழ் வித்தியாலய வரலாற்றில் இடம்பெயர்வும், மீள்...	28
14.	நூறாவது அகவையில்....	34
15.	நேரம் ஒரு வளம்	37
16.	கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளும் உலக உணவுத் திட்டமும்	43
17.	மீண்டும் பல்லாண்டு கண்டு மேன்மையுடன் வாழ்க..	51
18.	கல்வியும் வாழ்வும்	53
19.	உரும்பிராயில் விவசாயம்	56
20.	சைவத்தமிழ் வித்தியாலயம்	61
21.	பழைய மாணவியின் ஓர் பார்வை	65
22.	சைவத்தமிழ்ப் பாடசாலையின் இனிய நினைவுகள்	67
23.	அகவை நூறு கண்ட அன்னையே வாழ்க...	71
24.	வகுப்பறை முகாமைத்துவமும் கற்றல் கற்பித்தல் வெற்றியும்	73
25.	வகுப்பறையினுள் கற்றல், கற்பித்தல் சாதனமாக கணினியை பயன்...	77
26.	ஆரம்ப வகுப்புகளில் விழுமியக் கல்வியின் முக்கியத்துவம்...	82
27.	உடலின் சக்தியின் மையம்	86

28.	கலைக்கூடம் பற்றிய கலையா நினைவுகள்	88
29.	சைவ வழிபாட்டில் மரபுவழிக் கலைவடிவங்கள்..	90
30.	பழைய மாணவர் சங்கச் செயலாளரின் அனுபவம்...	94
31.	தரம் II க. பொ. த. சாதாரண தர சித்தி ...?	98
32.	Challenges are the Secret of Succes	102
33.	Why English is Essential?	104
34.	Aurobuds	106
35.	English as the International...	109
36.	எனது பள்ளிப்பருவமும் அதிபர், ஆசிரியர்களும்	116
37.	உழவர் நலம் காக்கும் உன்னத கருவி...	122
38.	இலக்கியத்தில் கற்புக்கரசிகள்	124
39.	நன்நீரைப் பாதுகாப்போம்	129
40.	என் அன்னை	132



சிவஸ்ரீ தியாக கிருஷ்ணமூர்த்திக் குருக்கள் அவர்களின் நல்லாசிச் செய்தி

சிவஸ்ரீ தியாக கிருஷ்ணமூர்த்திக்குருக்கள்
பிரதமகுரு,
உரும்பிராய் கற்பக விநாயகர் ஆலயம்,
உரும்பிராய் காமாட்சி அம்மன் ஆலயம்.

கஜானநம் பூத கணாதி சேபிதம்
கவிர்த்த ஜெம்பு பல சார ப க்ஷிதம்
உமா சுதம் சோக விநாச காரணம்
நமாமி விக்னேஸ்வர பாத பங்கயம்

உரும்பிராய்ப் பதியில் சைவமும் தமிழும் தழைத்தோங்குவதற்காக உருவாக்கப்பட்ட பாடசாலைகளில் ஒன்றாக விளங்குகின்ற யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அன்னையவள் தனது பணியைச் சிறப்புடன் செய்து நூற்றாண்டைப் பூர்த்தி செய்வதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இப்பிரதேசத்தின் கல்வி வளர்ச்சியில் அச்சாணியாகத் திகழ்கின்ற இப் பாடசாலை பௌதீக வளங்களின்றிப் பல சவால்களை எதிர் கொண்டாலும் அண்மையில் விளையாட்டுத்துறையில் தேசிய மட்டத் தினைப் பெற்று ஏனைய பாடசாலைகளுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கின்றமை குறிப் பிடத்தக்கது.

நூறு ஆண்டுகள் எம் சமூகத்தை கல்வியிலும், விளையாட்டுத் துறையிலும், நற்பண்புகளிலும் வளர்த்தெடுத்து அரும்பணி ஆற்றுகின்ற இப்பாடசாலையைச் சேர்ந்த அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது நல்லாசிகளைக் கூறுவதோடு இம்மலர் சிறப்புற மலர நல்லாசி வழங்கி சமுதாயத்தின் கல்வியறிவு மேலோங்க எல்லாம் வல்ல கற்பக விநாயகர் காமாட்சி அம்மன் அருள் பெறப் பிரார்த்திக்கின்றேன்.

"திருவும் கல்வியும் சீருடன் தழைத்தோங்குக



ஆசிச் செய்தி

ஜாக்ரத சைதன்யா சுவாமிகள்,
சின்மயா மிஷன்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

யாழ் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா நடைபெறுவது சிறப்புக்குரியது. நூறு ஆண்டுகளாக சைவத்தையும், தமிழையும் சிவபூமியாம் நம் நாட்டில், உரும்பிராய்ப்பதியில் பேணிப் பாதுகாப்பதில் இவ்வித்தியாலயம் அளப்பெரும் பணியை ஆற்றி வந்திருக் கின்றது. அது மட்டுமில்லாமல் கல்விச் செல்வத்தையும் நற்பண்பு களையும் ஆளுமையையும் ஆயிரக்கணக்கான மாணவ நட்சந்திரங்களிற்கு வழங்கி வருகின்றது. தொடர்ச்சியாக நூறு ஆண்டுகள் ஒரு பாடசாலை இயங்குவது என்பது மிகப்பெரும் சாதனை இவ்வித்தியாலயத்தின் பணிகள் தொடர்ந்து சிறப்பாக நடைபெறவும் நூற்றாண்டு விழா சிறப்புறவும், விழா மலர் சிறப்பாக வெளிவருவதற்கும் எல்லாம் வல்ல இறைவனுடைய திருவருளும், பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் குருவருளும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!!



பங்குத்தந்தையின் ஆசிச்செய்தி

யோன் அற்புதமணி,
பங்குத்தந்தை,
தூய இம்மானுவேல் ஆலயம்,
உரும்பிராய்.

கல்வியகம் ஒன்று தனது வாழ்வில் 100 வருடங்களைக் கடத்தல் என்பது தன்னைச் சூழவுள்ள சமூகத்துக்கும் அதன் சிறப்பிற்கும் எத்தனை சிறப்புமிக்கது என்று வார்த்தையால் வர்ணிக்க முடியாது. அந்த வகையில் சைவத் தமிழ் வித்தியாலயமானது தனது ஓட்டத்தில் நூறாவது மைல் கல்லைக் கடந்து ஓடும் இவ்வோட்டத்தில் அதன் சிற்பிகள், சமூக ஆர்வலர்கள் என்போரை போற்றுவதோடு மேலும் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து வளர வாழ்த்துகின்றேன்

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

வாழ்த்துச் செய்தி

திரு. சிவஞானம் ஸ்ரீதரன்,
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ் மாவட்டம்.

யாழ் மண்ணில் புகழ் பூத்த வித்தியாலயங்களில் ஒன்றாகத் திகழ்வதில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயமும் ஒன்றாகும். 1915ல் ஆரம்பிக்கப் பட்ட உரும்பிராய் இந்துக்கல்லூரியின் ஒரு பகுதியில் தோற்றம் பெற்றதே இவ் வித்தியாலயம் ஆகும். 1949ல் இடம்பெயர்ந்து தற்போதய இடத்தில் நிரந்தரமாகக் காலூன்றியதாக அறியவருகின்றது. ஊர்க் குழந்தைகளின் கல்வியில் ஆர்வம் கொண்ட கற்பகப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையினர் குறித்த நிலத்தைக் கொடுக்க முன்வந்தமை காலத்தால் செய்த உதவி இது. எக்காலத்திலும் பாராட்டப்பட வேண்டியதொன்று.

இன்று கோப்பாய்க் கோட்டத்திலுள்ள பாடசாலைகளில் ஆயிரத் துக்கு மேற்பட்ட மாணவர்களையும் ஐம்பதிற்கும் மேற்பட்ட ஆசிரியர் களையும் தன்னகத்தே அடக்கி ஊர்போற்றக் கல்விப்பணியாற்றி வருகின்றது ஆயினும் வளப்பற்றாக்குறை மலிந்து காணப்பட்ட போதிலும் செயற்பாடு உன்னத நிலையில் இருப்பது. மகிழ்ச்சிக்குரியது. இவ்வாண்டில் தேசிய மட்டத்தில் இணைப்பாடவிதானத்தில் சாதனைகள் புரிந்தமையையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இது இன்று மட்டும் நின்று விடாது என்றும் நிலைத்திட வழிகோல வேண்டும்.

தமிழர் பண்பாடு, தமிழர் மரபு, தமிழர் கலாசாரம், சைவப்பாரம் பரியம் என்பவற்றைப் பேணிக்காத்து சமூகத்தின் வளர்ச்சிக்குப் பக்கபலமாக செயற்படும் என்றும், நின்று நிலைத்திட வாழ்த்துகின்றேன்.

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

வாழ்த்துச் செய்தி

திருமதி. விஜயகலா மகேஸ்வரன்,
சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர்,
பாராளுமன்ற உறுப்பினர், யாழ் மாவட்டம்.

உரும்பிராய்ப் பிரதேசத்தில் கடந்த நூறு ஆண்டுகளாக அறிவினைப் புகட்டிவரும் சைவத்தமிழ் வித்தியாலயம் நூறாவது அகவையைக் கொண்டாடுவதோடு சிறப்பு மலர் வெளியிடுவதிலும் பெருமிதம் அடைகின்றேன்.

ஒரு நாட்டின் வளர்ச்சியானது மக்களின் செயற்பாடுகளில் தங்கியிருப்பது போல ஒவ்வொரு மாணவரினதும் வளர்ச்சி கல்வியிலே தங்கியுள்ளது. அப்படி கடந்த நூறு ஆண்டுகளாக இக் கல்லூரியானது நிறைவு செய்த சாதனைகளையும், அதனது வெற்றிக்காக அயராது உழைத்தவர்களையும், இன்னோரன்ன விடயங்களையும் இம் மலரானது தாங்கி வருவது எதிர்காலத்தில் இவ் வித்தியாலயத்தின் சகல விடயங்களையும் சமுதாயம் அறியக் கூடிய வகையில் அமைந்திருப்பது. பாராட்டப்பட வேண்டியது. ஒவ்வொரு குழந்தைகளுக்கும் கல்வி இன்றியமையாத செல்வமாகும். அத்துடன் அக் கல்வியினை யாரும் அழிக்கவோ அன்றி சூறையாடவோ முடியாது. இச் செல்வத்தினை இவ் வித்தியாலயம் நூறு ஆண்டுகளாக ஊட்டி பல பொறியியலாளர்களையும், வைத்தியர்களையும். பேராசிரியர் களையும். கணக்காளர்கள் மற்றும் கல்வியியலாளர்களையும் உருவாக்குவதற்கு அடித்தளமிட்டதையிட்டு நாம் மட்டற்ற பெருமை கொள்வதோடு மேலும் இக் கல்விப் பணியானது சிறப்பாகத் தொடர எனது மனமுவந்த வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



அரசாங்க அதிபரின் வாழ்த்துச்செய்தி

நா. வேதநாயகன்,
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்,
யாழ்மாவட்டம்.

யா/ உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலை உரும்பிராய்ப் பிரதேசத்தில் சைவத்தமிழ் பாரம்பரிய வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிவரும் பாடசாலையாகும். இப் பாடசாலை **1915**ம் ஆண்டு பிரதேச மக்களின் அனுசரணையுடன் பண்டிதர் வேலுப்பிள்ளை அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது நூற்றாண்டு விழா கொண்டாடுவது சிறப்புக் குரியதாகும்.

நூறு ஆண்டுகளில் பல அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவச் செல்வங்களைக் கண்ட இப்பாடசாலை சாதாரண மக்களின் பிள்ளைகளாக விளங்கும் மாணவர்களின் நற்பண்பு, நல்லொழுக்கம் மனித நேயம்மிக்க மாணவ சமுதாயத்தை உருவாக்கிய பாடசாலையாக மிளிர்வதாக அறியப்படுகின்றது.

தூரநோக்கோடு செயற்பட்டு பல்வேறு சாதனைப் பெறுபேறுகளை தனது விடாமுயற்சியினால் பெற்றதோடு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் மட்டுமன்றி இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் வீறு நடைபோட்டு தனது சாதனைப் பயணத்தை தொடர்கிறது. இதற்கு நற்சான்றாக இந்த வருடம் எல்லே விளையாட்டுப் போட்டியில் தேசிய மட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளமை பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

இப்பாடசாலையின் சிறப்புக்களையெல்லாம் வெளிப்படுத்தும் வகையில் நூற்றாண்டுகாணும் இவ்வேளையில் வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மனமகிழ்வடைகின்றேன்.

நூற்றாண்டு மலர் மலர்ந்து மணம் பரப்ப எல்லா வழிகளிலும் உழைத்துக் கொண்டிருக்கும் மலர்க்குழுவினர், அதிபர், ஆசிரியர்கள், மாணவச் செல்வங்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச்சங்கம் அனைவருக்கும் மனமார்ந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாழ்த்துச் செய்தி

திரு. த. குருகுலராசா,
கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை,இளைஞர் விவகார அமைச்சர்,
வடமாகாணம்.

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் தனது நூற்றாண்டு அகவையில் கால்பதித்து வெளியிடப்படும் நூற்றாண்டு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

ஒரு சமூகத்தின் கட்டமைப்பிலே முக்கிய வளர்ச்சிப் படிக்கல்லாக அமைவது அச்சமூகத்தில் உள்ள பாடசாலைகள் ஆகும். அந்த வகையிலே உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் 1915ம் ஆண்டு தொடக்கம் அயராது அரும்பணி ஆற்றியதன் பெறுபேறாக அல்லது அறுவடையாக 2015ம் ஆண்டிலே நூற்றாண்டு காண்கிறது. இந்நிலையானது கல்விப் புலத்தினரை பெருமிதம் கொள்ள வைக்கிறது.

சைவ, தமிழ்ப் பாரம்பரியங்களையும், சமூகமேம்பாட்டினையும் ஒருங்கே வளர்த்த இப்பாடசாலையானது தனது கல்விசார் செயற்பாடுகளிலே தேசிய மட்டம் வரை எட்டியிருப்பது பாராட்டிற்குரியது.

இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு ஆரம்பம் முதல் இன்றுவரை பாடுபட்டுழைத்த அனைத்து நிலையினரும் என்றும் போற்றப்படுவதுடன், அனைத்து விபரங்களையும் ஆவணப்படுத்துதல் மிக அவசியமானதாகும்.

தொடர்ந்து இப்பாடசாலை பல்லாண்டு விழாக்கண்டு காத்திரமான கல்விப்பணிபுரிய வேண்டுமென வாழ்த்துவதோடு, விழா சிறப்புற நடைபெறவும் வெளியிடப்படும் நூற்றாண்டு மலர் சிறந்த ஆவணப்படுத்தலாக அமையவும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வடைகிறேன்.

வாழ்த்துச் செய்தி

திரு. இ. இரவீந்திரன்
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சு,
வடமாகாணம்.

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

1915ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை உரும்பிராய்ப் பிரதேசத்தில் சைவத் தமிழ்ப் பாரம்பரிய வளர்ச்சிக்குப் பெரிதும் பங்காற்றி வருகின்றது. அத்துடன் இப்பாடசாலை மாணவர்கள் விளையாட்டு மற்றும் இணைபாட விதான செயற்பாடுகளில் பங்கேற்று கோட்ட, வலய மற்றும் மாவட்ட, மாகாண மட்டத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளமை பாராட்டத்தக்கதாகும்.

பாடசாலையின் பௌதீக, கல்வி, விளையாட்டு, கலாசாரம் போன்ற துறைகளின் வளர்ச்சியை ஆவணப்படுத்தும் சான்றுகளாக காலத்துக் காலம் வெளிவரும் பாடசாலைச் சஞ்சிகைகள் அமைவதுடன் பிற்கால சந்ததியினருக்கும் வரலாற்றுப் பதிவுகளாகவும் இவை உதவுகின்றன. அவ்வகையில் இப்பாடசாலையின் அபிவிருத்தியைச் சுட்டிக் காட்டுவதிலும் இப் பாடசாலையின் செயற்பாடுகளை ஆவணப்படுத்துவதிலும் நடவடிக்கை எடுத்ததையிட்டு அதிபர், ஆசிரியர்கள், மலர்க்குழு உறுப்பினர்கள் அனைவரையும் பாராட்டுகின்றேன்.

இப்பாடசாலை பல சாதனைகளைப் படைத்து நற்பிரஜைகளை உருவாக்க எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் பாடசாலைச் சமூகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள நூற்றாண்டு விழா நிகழ்வும், மலர் வெளியீடும் சிறப்புற அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாழ்த்துச்செய்தி

திரு. செ. உதயகுமார்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடக்கு மாகாணம்.

யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் நூற்றாண்டு விழா வினைக் கொண்டாடுவதையிட்டு வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயமானது உரும்பிராய்ப் பிரதேசத்தில் சைவப் பாரம்பரியத்துடனான கல்வியை வளர்க்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையாகும். இப்பகுதி மாணவர்களுக்குத் தரமான கல்வியை வழங்குவதில் இப்பாடசாலை சிறந்து விளங்குகிறது. இவ் வித்தியாலய மாணவர்கள் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் கோட்ட, வலய, மாவட்ட, மாகாண மட்டங்களில் பங்குபற்றி சாதனை களைப் படைத்து வருகின்றனர்.

தற்போது இப்பாடசாலையில் 1200 மாணவர்கள் வரையில் கல்வி கற்று வருகின்றனர். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க. பொ. த. (சா. த) பரீட்சை என்பவற்றிலும் இப்பாடசாலை மாணவர்கள் கடந்த காலங்களில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். நூற்றாண்டு விழாக் காணும் இப்பாடசாலை தன்னை நாடி வருகின்ற மாணவர்களுக்குச் சிறந்த கல்வியை வழங்கி அவர்களை சமூகத்தில் நற்பிரஜைகளாக உருவாக்குவதோடு உயர்கல்வி வாய்ப்புக்களைப் பெறுவதற்கும் வழிசமைத்தல் வேண்டும்.

இப்பாடசாலை மென்மேலும் வளர்ச்சி பெற்று சிறப்பான கல்விப் பணியினை இப்பிரதேச மாணவர்களுக்கு வழங்க வாழ்த்துகின்றேன்.



வாழ்த்துச் செய்தி

திரு. தெய்வேந்திரராசா,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் நூறு ஆண்டு கால வரலாற்றைக் கொண்டு அப்பிரதேச மாணவர்களின் முன்னேற்றத்திற்காக உழைத்து வந்துள்ளது. நாவலர் வழியில் சைவத்தமிழ்ப் பண்பாட்டு ஒழுக்க விழுமிய நெறியில் மாணவர்களை உருவாக்கிவருவது பெருமைக்குரியது. வித்தியாலயத்தின் பெயரிலே சைவமும் தமிழும் இணைந்திருப்பது இவ்வித்தியாலயத்தின் பாரம்பரியத்தை மேலும் உறுதிப்படுத்துகின்றது. நூற்றாண்டு விழாவின் அடையாளமாக வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

புதிய நூற்றாண்டில் அறிவுத் தொகுதி விரிவடைந்து வருகின்றது. பாடசாலைகள் அறிவை வழங்கும் இயங்கு தளங்களாக செயற்பட வேண்டியது முக்கியமானதாகும். அறிவைத் தேடி அதனைப் பகிர்ந்து கொள்ளும் உயர்செயற்பாடுகளை பாடசாலைகள் காலம் காலமாகச் செய்து வருகின்றன. சமூக வளர்ச்சிப் போக்கில் பாடசாலையில் கல்வியை மட்டும் வழங்காமல் உயர் விழுமியங்கள், பண்பாட்டுப் பாரம்பரியங்கள் ஒழுக்க நெறிமுறைகள், ஆன்மீகச் சிந்தனைகள், உயர் நாகரிக வாழ்க்கைப் பழக்க வழக்கங்கள் என்பவற்றை வழங்கி வந்துள்ளன.

சமூகத்தில் அறிவாலயங்களும், ஆன்மீகத் தளங்களும் பண்பட்ட மனித வாழ்க்கைக்கு உந்து சக்தியைக் கொடுக்கின்றது. ஆன்மீகம் சார்ந்த இப்பள்ளிச்சூழல் நல்ல மனிதர்களை உருவாக்க வேண்டும்.

உரும்பிராய்க் கிராமத்தின் மக்களில் வசதி வாய்ப்பும் வளங்களும் ஓங்கப் பெற்ற மாணவர்கள் நகர்ப்புறத்தை நாடிச் செல்ல மேற்படி வாய்ப்புக்கள் கிடைக்காத சமூகச் சூழலில் இருந்து வரும் மாணவர்களுக்கு ஆதார துணையாக இப்பாடசாலை விளங்குகின்றது. இவ்வித்தி யாலயத்தில் கல்வி கற்றவர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நல்ல நிலையில் வாழ்கின்றனர்.

கோப்பாய்க் கோட்டத்தில் 1000 இற்கும் மேற்பட்ட மாணவர் களைக் கொண்டு விளங்கும் இப்பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தை மேம்படுத்துவதில் அதிக அக்கறை காட்ட வேண்டும் இப் பிரதேச சமூகம், பழைய மாணவர்கள் இங்கு கல்வி கற்கும் மாணவர்களுக்குத் தரமான கல்வியை வழங்குவதற்கும், பெற்றோர்களுக்கு கல்வி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் காத்திரமான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

நூற்றாண்டு விழா சிறப்பாக அமைய எல்லாம் வல்ல ஓடையம்பதி கற்பக விநாயகரின் அருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

வாழ்த்துச் செய்தி

திரு. த.இராசலிங்கம்,
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக் கல்வி),
மாகாணக் கல்வித்திணைக்களம், வடமாகாணம்.

"முத்துப்பதித்த நித்திலம் தன்னில்
முகிழ்ப்புடன் மலரும் நூற்றாண்டு விழா"

மண்ணுடன் புரண்டு பயிர் வளர்த்திடும் இப் பூமியில் கண்ணெனும் கல்வி, கலாசாரத் தொன்மை கொண்டது உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் "தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவச் செய்தல் வேண்டும்." என்ற பாரதி கண்ட கனவினை உள்ளத்தில் நிறுத்தி "நூற்றாண்டு விழாமலர்" மலர்ச்சியுற்று கைகளிலே தவழும் போது உள்ளம் களிப்படைகின்றது.

"கல்லூரி என்பது உயிர்மூச்சு அதனை வளர்த்தெடுப்பது உழைப்பு" கல்வித் தாயும் கற்பக விநாயகரும் கைகோர்த்து மகிழ விக்கினங்களை தீர்க்கும் கலைக்கூடமது நாளைய சமூகத்தின் தூணாக விக்னேஸ்வரராய் பரிணமித்து விளங்குகின்றார் இப்பாடசாலை அதிபர்.

வளரும் பயிர்களுக்கு வழிமுறையாய் உரமூட்டி புலமைத் திறனில் புகழோங்க வழிகாட்டியாக விளங்குகின்றார். இச்செம்மண்ணில் கால் பதித்தவர்கள் பொன்மண்ணாக மாற்றி மண்ணின் மைந்தராக விளங்கு வதற்கு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை சான்றாதாரமாகும்.

ஐயாறு ஆண்டுகளாக இப்பாடசாலை அதிபருக்கும் எனக்கும் நெருங்கிய தொடர்புண்டு. பாடசாலை மேம்பாடு தொடர்பாக அக்கறை யுடன் என்னோடு பகிர்ந்து கொள்வது அவரது செயற்திறனுக்கு எடுத்துக் காட்டாகும். படிப்படியாக் கல்வியில் உயர்வு பெற்று வரும் இப் பாடசாலை நங்கையின் நேர்வகிடு கொண்ட விளையாட்டு மைதானம், கணித மேம்பாட்டு நிலையம், பைந்தமிழ் ஏடுகளும், ஆங்கில மொழி வளம்

கொண்ட நூல்களும் தாங்கிய நூலகம் கவின்நிலை கொண்ட கலைக் கூட மாகக் காட்சியளிக்கின்றது.

கலைக்கூடத்தின் தோற்றமும், வளர்ச்சியும் முனைப்புற்றோரின் தேடலும் உள்ளத்தில் தேக்கிய பாக்களும் கொண்டு தம் கரம் தூக்கி எழுது கோலினால் எழுதப்பட்ட ஆக்கங்கள் இந்நூலின் ஈடற்ற ஊற்றாகும். இப் பாடசாலையின் வளங்களை மேலும் மெருகூட்டுவது மாணவச் செல்வங் களின் அறிவுப் பசிக்கு பெரும் விருந்தாக அமையும் என்பதில் ஐயமில்லை.

வித்தியாலய வளர்ச்சியின் ஆகுதியாய் தம்மை உருக்கி உதவிக்கரம் நீட்டும் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் அனைவருக்கும் எனது இதயம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



வாழ்த்துச் செய்தி

திரு. கோ.வரதராஜமூர்த்தி,
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

சைவமும் தமிழும் செழித்த கற்ற சான்றோர்களைக் கொண்டது உரும்பிராய்ப்பதி. இப் பிரதேசத்துக்குரிய கல்வி வழங்கும் நிறுவனங்களுள் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயமும் குறிப்பிடத்தக்க ஒன்று. இக்கல்விச்சாலை சைவபாரம்பரியமுடைய பண்புடைய மாணவர்களை ஈன்ற தாய் எனக் கூறுவதில் மிக்க உவகையடைகின்றேன். இது இன்று தனது வளர்ச்சிப்பாதையில் நூறாண்டுகளைக் கடந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களை உள்வாங்கி செழித்து வளர்ந்து செல்வதையிட்டு மனம் குளிர்கின்றேன்.

இங்கு கல்விபயிலும் மாணவர்கள் ஆன்மீக வழியில் பண்புடையராக இருப்பதையிட்டும் இவ்வித்தியாலயம் மேலும் மேலும் பலவளங்களைப் பெற்றும் சமூகத்தில் நன்மதிப்பைப் பெற வேண்டும் என்றும் வாழ்த்துவதில் உவகையடைகின்றேன். மேலும் இங்கு கல்விகற்பிக்கும் ஆசிரியப் பெரு மக்கள் நல்மனப்பாங்குடையவராய் இருந்து இந் நிறுவனத்தை வளர்த்துச் செல்வதையிட்டு மனம் நிறைவடைந்து வாழ்த்துக் கூறி நிறைவு செய் கின்றேன்.



வாழ்த்துச்செய்தி

யோகசுவாமி ரவீந்திரன்,
பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
வடமராட்சி.

'வயிற்றுக்குச் சோறிட வேண்டும்
இங்குவாழும் மனிதருக்கெல்லாம்
பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்"

ஒளி பரப்பிவரும் யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அகமகிழ் கின்றேன்.

இயற்கை எழில் நிறைந்த உரும்பிராய்ப் பிரதேசத்தில் சைவத்தமிழ்ப் பாரம்பரிய வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்ற வேண்டும் என்ற உன்னத நோக்கில் **1915**ல் அமிர்தலிங்கம் சட்டம்பியார் மற்றும் சின்னப்பு வாத்தியார், பிரதேச மக்களின் அனுசரணையுடன் பண்டிதர் வேலுப்பிள்ளை அவர்களின் தலைமையில் உருவாக்கப்பட்டதே இந்த உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.

சைவத்தமிழன்னை தனது தோற்றமும் வளர்ச்சியும் அதன் நோக்கி லிருந்து வழுவாது தற்காலச் செல்நெறிகளையும் உள்வாங்கி நூறாவது ஆண்டில் தடம்பதிக்கின்றாள். கல்வித் தேடலில் நகர்நோக்கிய மாணவரின் நாட்டம் கிராமியப் பாடசாலைகளைப் பெரிதும் பாதித்த இக்கால கட்டத்தில் மாணவர் உள்வாங்கலில் ஸ்திரத்தன்மையினை வித்தியாலயம் தக்க வைத்திருப்பது ஸ்தாபகர்களது நோக்கினைச் செவ்வனே நிறை வேற்றியுள்ளது என்றே கூறவேண்டும்.

'......யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்ற பாரதியின் வாக்கிக்கேற்ப கல்விக்காய்த் தம் தேவையினை நாடிநிற்கும் முற்றுமுழுதான வறுமைக்கோட்டிற்குட்பட்ட மாணவர்களது கல்விப் பசியினை ஆற்றி அவர்தம் ஆளுமை விருத்திக்கு வித்திட்டு வருகின்றாள் சைவத்தமிழன்னை என்றால் அது மிகைக் கூற்றாகாது.

காலத்திற்குக் காலம் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அதிபர்களின் வரிசையில் அதிபர் திரு. மு. விக்னேஸ்வரனும் சிறப்பிடம் பெற்று விளங்குகின்றார். இவருடைய மனிதநேயம்மிக்க நெறிப்படுத்தலிலும் அர்ப் பணிப்பு மிக்க ஆசிரியப் பெருந்தகைகளது சேவைத்திறனாலும் கல்வி உலகின் சவால்களை வென்று சாதனை படைத்து வருகின்றாள் சைவத் தமிழன்னை.

தனது நூற்றாண்டு கால நீண்ட வரலாற்றுப் பாதையில் தற்காலக் கல்வியுலகு வேண்டி நிற்கும் ஆளுமை கொண்ட மாணவர்களை இப் பாரினுக்களித்து தலைநிமிர்ந்து நிற்கும் சைவத்தமிழன்னையவள் பல நூற்றாண்டுகள் உன்னத சாதனையுடன் கல்விப் பணிதொடரக் கற்பக விநாயர் என்றும் துணை நிற்பாராக.

"கல்வியாலிங்கு மேனிலை சேர்வோம்"



வாழ்த்துச் செய்தி

திரு. ஆ. சு. சற்குணராஜா,
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
கோப்பாய்.

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயமே! ஆண்டு நூறை அமைதியாய்க் கடக்கும். உன்னில் அதிக மாணவர் அடக்கம், உன் அதிபரோ தன்னடக்கம், உன்னில் வேண்டிய அறுவடை கிடைக்கும் உன் மண்ணில் சைவமும், தமிழும். பண்பாடும் முன்னுரிமை. மாணவர் பெற்றோர் மகிழ்வுடன் விரும்பும் நீ வெள்ளிவிழா, பொன்விழா, வைரவிழா கொண்டாடி நூற்றாண்டு விழாக்கண்டு பார் போற்ற விளங்குகின்றாய். கல்வியுடன் மட்டுமல்ல கலாசார விழாக்களுடன் விளையாட்டுப் போட்டியிலும் வருடம் தோறும் வரவேற்று நின்றுவிட்டாய். பற்பல போட்டிகளில் பரிசில்கள் வெல்வதும் பரீட்சைப் பெறுபேற்றால் தலை நிமிர்ந்து நிற்பதும் உரும்பிராய் மண்ணிற்கு உரமேற்றும் செயற்பாடு. பள்ளியின் தனித்துவத்தை பாங்கோடு பேணி இளைய தலைமுறைக்கு கல்வியை மட்டுமல்ல நன்நெறியைப் போதித்து நாளெல்லாம் உழைக்கின்றார் நம் அதிபர் விக்கி! காணி சிறிது, கட்டிடமோ பழையது, பெரிய மைதானம் இல்லை என்ற பேரிடர்கள் இருந்தாலும் கல்வித் தரத்தை அதிபர் கண்ணிமைபோல் காக் கின்றார். நீதியரசர்கள் நாகலிங்கம், சுந்தரலிங்கம், பொன்ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் செனட்டர் நடேசன் ஆகியோர் உன்னை அணைத்து வளர்த்து ஆனந்தம் அடைந்தனர். பண்டிதர் வேலுப்பிள்ளை எனும் பண்பான அதிபருடன் இந்து போர்ட் தொடக்கிய இப்பாடசாலை கற்பகப் பிள்ளையார் களிப்புடன் அருள காலங்கள் பல கடந்து கல்வித் தாகம் என்றும் தீர்த்திட கலைமகளை வேண்டி எனது வாழ்த்துக்களை வழங்கு கின்றேன்.

வாழ்த்துச்செய்தி

"வித்தியாவிஜயஸ்ரீ , குரு பிரதீபா பிரபா"
திரு. சு. சண்முககுமார்,
B. A, Sci. td, P. G. D. E, M. Ed.
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
கோட்டக்கல்வி அலுவலகம்,
நல்லூர்.

யாழ்ப்பாணநகரின் வலிகிழக்கில் கல்விப்புகழைப்பரப்பி நிற்கும் தலைநிமிர் கல்விக்கூடமே உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் தனது 100 வருடத்தைக் கொண்டாடும் கல்விச்சாலை பல்லாயிரக்கணக்கான மாணவ புலமைசார் விற்பன்னர்களை உருவாக்கிப் பெருமை கொள்கின்றது. சைவத்திற்கும் தமிழுக்கும் உயிர்கொடுத்த உத்தம பாடசாலை என்றால் மிகையாகாது.

இவ்வித்தியாலயத்தில் ஓராண்டு கல்வி கற்பித்த பாக்கியத்தைப் பெற்றுக்கொண்ட வகையில் பெருமையடைகின்றேன். தனது 100 வருடத்தைக் கொண்டாடும் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் மேலும் பல சிறப்புக்களை எல்லாம் பெற்று கல்விப்பயிரை வளர்க்க எல்லாம் வல்ல இறையருள் வேண்டி நிற்கின்றேன்.

நின்று நிலைத்த நீடித்த புகழ்மிக்க வித்தியாலயம்

திரு. ஆ. ராஜேந்திரன்,
ஓய்வுநிலை
மாகாணக் கல்விப் பணிப்பாளர்.

இவ்வாண்டு நூற்றாண்டு காணும் யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்துடனான எனது பரிட்சயம் 1994ம் ஆண்டு காலப் பகுதியில் இருந்து ஆரம்பமானது. இக்காலத்திற்கு முற்பட்ட காலத்தில் இப் பாடசாலைச் செயற்பாடுகளை நான் அறிந்திராது விடினும் 1994ல் இருந்து இப்பாடசாலை தொடர்பாக தொடர்ச்சியான அவதானத்தை மேற் கொண்டு வந்துள்ளேன்.

நான் கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் கடமையேற்ற 1994ன் ஆரம்ப நாட்களில் ஒருநாள் இவ்வித்தியாலத்தைத் தரிசிக்க எதிர்பாராத விதமாகச் சென்றிருந்தேன். அவ்வேளையில் பாடசாலையின் செயற் பாடுகள், மாணவரின் கற்றல் நடவடிக்கைகள், ஆசிரியர்களின் செயற்பாடு கள், அதிபரின் முகாமைத்துவம், பாடசாலையின் சுற்றாடல், வளப்பகிர்வு என்பன என்னை வெகுவாகக் கவர்ந்திருந்தன. இப்பாடசாலை மீதான மதிப்பையும் ஏற்படுத்திவிட்டன.

தொடர்ந்து பின்னொருநாளில் வெளிவாரி மதிப்பீட்டிற்காக எமது ஆளணியினருடன் சென்றிருந்தேன். பாடசாலையின் அனைத்துச் செயற்பாடுகளையும் முழுமையாக மதிப்பீடு செய்தோம். இம்மதிப்பீட்டின் முடிவுகள் இப்பாடசாலை மீதான எனது கணிப்பை பன்மடங்கு உயர்த்தி விட்டன. மதிப்பீட்டில் கலந்துகொண்ட அனைத்து ஆளணியினரும் இப் பாடசாலை தொடர்பாக உயர்வான கருத்தையே வெளிப்படுத் தியிருந்தனர்.

நான் கடமையாற்றிய காலப்பகுதியில் பலதடவைகள் இவ்வித் தியாலயத்தை தரிசிக்கின்ற வாய்ப்புகள் எனக்கு கிட்டியது. இவ்வித்தியால யத்தால் ஆண்டுதோறும் வெளியிடப்பட்டு வந்த “கற்பகம்“ கையெழுத்துச் சஞ்சிகை வெளியீடு, பாடசாலை நூலகமும் நூல்களின் கண்காட்சியும்,

கற்றல் உபகரணம் உள்ளிட்ட கண்காட்சியும், பரிசளிப்பு உள்ளிட்ட மாணவர் ஊக்குவிப்பு நிகழ்வுகள், இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் உள்ளிட்ட இணைப்பாடவிதான செயற்பாடுகள் எனப் பல நிகழ்வுகளிலும் கலந்து கொண்டிருந்தேன். இப்பாடசாலையின் எதிர்காலம் தொடர்பாக உயர்வான எண்ணமே எனது மனதில் தோன்றியது.

இவ்வித்தியாலத்தின் மீது நான் வைத்திருந்த நன்மதிப்பு இன்று நிஜமாகி வருகின்றது. பாடசாலை மீதான சமூகத்தின் மதிப்பு அதிகரித்துள்ளது. பாடசாலைச் சமூகம் இணைந்து பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துள்ளனர். மாணவர் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து இன்று ஆயிரத்தைத் தாண்டி விட்டது. பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்ச்சியாக அதிகரித்துள்ளன. நன் மாணவர்களை உருவாக்குவதிலும் இவ்வித்தியாலயம் வெற்றிகண்டுள்ளது.

1915ல் இவ்வித்தியாலயத்தை உருவாக்கிய பெரியோர்களின் கனவை நனவாக்க வேண்டியது எமது அனைவரினதும் தலையாய கடமையாகும். நல்லதிபர்களால் வழிநடத்தப்பட்ட இவ் வித்தியாலயம் இன்றும் நல்லதிபர், ஆசிரியர்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. நூற்றாண்டு காலம் நின்று நிலைத்த இவ் வித்தியாலயம் இன்னும் பல நூற்றாண்டு காலம் நீடித்த புகழுடன் விளங்கும் என நம்பலாம். அவ்வாறு விளங்கவேண்டுமென மனமார வாழ்த்துகின்றேன்.

நாலுகால் நூறுகண்ட நாமகளே நீவாழி!

திரு. வ. செல்வராஜா,
ஓய்வுநிலை மாகாணக்கல்விப் பணிப்பாளர்,
கரவெட்டி.

ஆங்கிலேயரின் ஆட்சியிலே ஆலயத்தினருகினிலே
பண்டிதரின் தலைமையிலே பரிணமித்து
அமிர்தலிங்கம், சின்னப்பு ஆசான்கள் வழிகாட்ட
அறிவு புகட்டி வந்த ஆலயமே நீ வாழி!

நல்லைநகரீந்த நாவலரின் பாதையிலே
நம்மினத்துக் கலாசாரம் பேணிப்போற்ற
உரும்பிராய்ப்பதி யுதித்த ஆலயமே
நாலு கால் நூறு கண்டு நீடு வாழி!

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்திலே உதித்த பள்ளிகளிலொன்று. எமது மொழி எமது நெறிகளுக் கமைய எமது பிள்ளைகள் கல்விகற்க வேண்டுமென்ற உயரிய சிந்தனையில் உதித்த பள்ளிகளில் இதுவுமொன்று. ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்திலே தமிழையும் சைவத்தையும் வளர்க்க முற்பட்ட ஆறுமுக நாவலர் வழியிலே தோன்றிய பாடசாலைகளில் இதுவுமொன்று இப்பள்ளிக்கூடம் பண்டிதர் வேலுப்பிள்ளையின் தலைமையிலே, அமிர்தலிங்கம் சின்னப்பு ஆகிய ஆசான்களின் வழிகாட்டலிலே தோற்றம் பெற்றது. சிறியதொரு பள்ளியாகத் தோன்றி சிகரமாக உயர்ந்து நூற்றாண்டு விழாக் காணும் இப்பள்ளிக் கூடத்தை வாழ்த்துவதிற் பெருமிதமடைகிறேன்.

இப்பள்ளிக்கூடம் உரும்பிராய்க் கிராம மக்களின் எண்ணறிவையும், எழுத்தறிவையும் மேம்படுத்திய பெருமைக்குரியது. இப்பிரதேசத்தில் பல கல்விமான்களை உருவாக்குவதில் இப்பள்ளிக்கூடம் முனைப்புடன் செயற் பட்டுள்ளது. நூற்றாண்டு விழா ஆண்டில் இப்பாடசாலை மாணவர்கள் எல்லே போட்டியில் மாகாண மட்டத்தில் வெற்றி பெற்றுச் சாதனை படைத்துள்ளனர். கரப்பந்தாட்டப்போட்டியிலும் இப்பள்ளி மாணவர்கள் ஆற்றலை வெளிப் படுத்திச் சாதனை படைத்துள்ளனர்.

கல்வியிலும், இணைப்பாடச் செயற்பாடுகளிலும் சாதனைகள் படைத்து மாணவர்களைச் செழுமை செய்த இவ்வித்தியாலயம் தனது கல்விப் பணியைத் தொடர வாழ்த்துகிறேன்.

வாழ்த்துச் செய்தி

திருமதி அ. வேதநாயகம்,
ஓய்வுநிலை வலயக்கல்விப் பணிப்பாளர்

நூறு ஆண்டுகள் அயராத கல்விச் சேவையால் கம்பீரமாக தலைநிமிர்ந்து விளங்கும் யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் நூற்றாண்டுவிழா மலருக்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

யாழ் கல்வி வலயத்தில் கோப்பாய்க் கோட்டத்திலே குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய சிறப்புமிகுந்த பாடசாலையே யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம். பாடசாலைக் கவின்நிலை மனிதநேயம், தரமான கல்விச் செயற்பாடுகள், இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபாடு என்பவற்றால் தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்று ஆயிரத்து இருநூறு மாணவர்களால் நிரம்பப் பெற்று இப்பாடசாலை மிகவும் செழிப்புடன் விளங்குகின்றது.

எனது சேவைக்காலத்தில் பாடசாலையில் அலுவலர்கள், பெற்றோர், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களிடையேயான உறவுநிலை மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது. இதனால் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் மட்டுமன்றி பாடவிதான இணைக் கலைத்திட்ட செயற்பாடுகள் பலவற்றை மாணவர்களின் பாடமேம்பாடு கருதி சிறப்பாக நடைமுறைப்படுத்தி பாராட்டுக்களைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. இந்த ஒற்றுமையே பாடசாலையில் ஆரம்பித்த கணித மூலவள நிலையம் வலயமட்ட கணித மூலவள நிலையமாக மிளிர்வதற்குக் காரணமாக அமைந்தது.

தற்போதைய அதிபர் திரு. மு. விக்னேஸ்வரன் அவர்கள் பாடசாலையை மிகவும் நேசித்தார். தனது நிர்வாகத் திறமையால் பாடசாலைச் சமூகம் பழைய மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்றார். அலுவலர்கள் அனைவரதும் கணிப்பை பெற்றுக் கொண்டார். அயற்

பாடசாலை அதிபர்களின் நட்பைப் பெற்றார். பாடசாலை ஆசிரியர்கள் அனைவரதும் ஒன்றிணைந்த ஆதரவைப் பெற்றார். மாணவச் செல்வங்களின் அன்பைப் பெற்றார். இதனால் பாடசாலை மிகவும் செழிப்புற்றுள்ளது.

யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் நூற்றாண்டு விழா வினை மிகவும் உற்சாகமாகக் கொண்டாடும் இவ்வேளையிலே வளப் பற்றாக்குறைகள் சில இருந்த போதும் பாடசாலையின் உன்னதமான செயற் பாடுகளால் எல்லோரது உள்ளங்களும் நிறைந்து காணப்படுகின்றது. உங்களுடன் நாங்களும் இணைந்து ஆனந்தம் அடைகின்றோம். மேலும் பல நூற்றாண்டுகள் உயர்சேவை தொடர்ந்து பாடசாலை வளம்பெற உளமார வாழ்த்துகின்றேன்.

வாழ்க பல்லாண்டு



அறிவார்ந்த சமூகத்தை உருவாக்க அர்ப்பணிப்புடன் உழைக்க வாழ்த்துக்கள் பல

திரு. பொ. அருணகிரிநாதன்,
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

கல்வி என்ற இனிய தடத்தில் பயணிக்கின்ற போதுதான் மனிதர்கள் முழுமையாக மலர்கிறார்கள். கல்வி கண்களின் ஒளியை நியாயப் படுத்து கின்றது. இதயத்தை குளிர்விக்கின்றது. அனைவரும் கல்வி பெற்று உயர் பண்புகளுடன் விளங்கினால் சமுதாயம் அழகிய சோலையாக மாறுவதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன.

நெறிப்படுத்தப்பட்ட அறிவினை வழங்குகின்ற நிலையமாக பாடசாலை விளங்கவேண்டும். சமூக அசைவியக்கத்தின் இயங்கு தளங்களாக பாடசாலைகள் தம்மை உருவாக்கிக் கொள்ள வேண்டும். ஒரு நாட்டின் தலைவிதி அந்நாட்டின் பாடசாலைகளின் வகுப்பறைகளில் தீர்மானிக்கப்படுவதாக ஒரு அறிஞர் குறிப்பிட்டுள்ளார். பாடசாலையின் பங்கும் பணியும் மிகக் காத்திரமானதாகவும், பயனுறுதிமிக்கதாகவும் இயங்குவதனூடாகவே தரமான மனித வளத்தினை உருவாக்க முடியும். உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் நூற்றாண்டு கடந்து கல்விப் பணியை ஆற்றி வருகின்றது. சைவத்தையும் தமிழையும் தாங்கி நிற்கும் இப்பாடசாலை நாவலர் அவர்களின் தூரநோக்கினையும் யாழ்ப்பாணத்தின் கந்தபுராண கலாசார விழுமியப் பண்புகளையும் பேணிப் பாதுகாத்து கல்வியை வழங்குவது மகிழ்ச்சிக்குரியது.

அறிவார்ந்த சமூக உருவாக்கத்திற்கான அறிவாலயமும் மனதினை செழுமைப்படுத்தி பண்பட்ட வழியில் மக்களை ஆன்மீக நெறிமுறையில் ஆற்றுப்படுத்தும் ஆலயமும் ஒன்றாக ஒரே சூழலில் அமைந்திருப்பது இப்பாடசாலைக்கு மேலும் ஒரு பலத்தை வழங்குகின்றது. இத்தகைய சூழல் மாணவர்களை நல்ல மனிதர்களாக உருவாக்குவதில் பங்கெடுக்க முடியம்.

1915ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று 1000ற் கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கல்வியை வழங்குகின்றது. யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தில் பாடசாலைகளின் உருவாக்கத்திலும், கல்வியை

வழங்குவதிலும் உபாத்தியாயர்கள், பண்டிதர்கள், புலவர்கள் கனதியான பணிகளை ஆற்றியுள்ளனர். இத்தகைய ஒரு பின்புலம் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலத்திற்கு உண்டு. இத்தகைய பரம்பரையினர் பன்முக ஆளுமையுள்ளவர்களாக விளங்கினார்கள்.

- ❖ ஒன்றிற்கு மேற்பட்ட பாடங்களைக் கற்பிக்கும் வல்லமை கொண்டிருந்தார்கள்.
- ❖ சோதிடக் கலையைக் கற்றிருந்தார்கள்
- ❖ நில அளவை திறன் பெற்றிருந்தார்கள்.
- ❖ புராணங்களுக்குப் பயன் சொல்லி கிராமத்தில் கோயில்களில் கல்வி வளர்த்தார்கள்.
- ❖ கிராம மட்டத்தில் நீதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்தும் முகவர்களாக விளங்கினார்கள்.
- ❖ சமூக பிரச்சினைகளைத் தீர்க்கும் நீதிபதிகளாகவும் விளங்கினார்கள், கல்விக்கும், அரசியலுக்கும், ஆலயங்களுக்கும் தலைமை தாங்கினார்கள்.

இத்தகைய சிறப்புக்கள் கொண்ட இவர்கள் பாடசாலை உருவாக் கத்திற்கு வித்திட்டார்கள். இவர்களுடைய ஆசீர்வாதமும் வாழ்த்தும் இன்னும் இப்பாடசாலைக்கு வழிகாட்டி நிற்கின்றது.

வசதியும் வாய்ப்பும் உள்ள குடும்பங்களின் பிள்ளைகள் நகர்ப்புறக் கல்லூரிக்கு நாடிச்செல்ல இவற்றில் மட்டுப்பாடுகளைக் கொண்ட மாணவர்கள் இங்கு கல்வியைப் பெறுகின்றார்கள். பாரதி சொன்னது போல் “ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் எல்லாப் புண்ணியங்களிலும் மேலானது” என்ற உயர் சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுக்கும் இடமாக இப்பாடசாலை செயற்பட்டு வருவது பாராட்டுக்குரியது.

புதிய நூற்றாண்டின் தேவைக் கேற்ப இப்பாடசாலை தமது செயற் பாடுகளை விளைதிறன்மிக்கதாக மாற்றுவதற்கு அனைவரும் அர்ப்பணிப் புடன் உழைப்பதற்கு அணியாக இணைந்து செயற்பட வேண்டும் எனக் கேட்டு அதற்கு எனது வாழ்த்துக்களும் ஆசிகளும் என்றும் இருக்கும்.

பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

திரு. ம. பிரதீபன்,
பிரதேச செயலர்,
வலி கிழக்கு – கோப்பாய்.

வலிகாமம் கிழக்கு கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் கல்வியுடன் சைவத் தமிழ்ப் பாரம்பரிய வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றி வரும் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் நூறு ஆண்டுகள் கல்விப் பணியாற்றி நூற்றாண்டு விழாக் காணும் இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

உரும்பிராய், ஊரெழு பகுதி மக்களுடைய கல்வி வளர்ச்சியில் இப்பாடசாலை பெரும்பங்காற்றி வருகின்றதுடன், மனிதநேயமிக்க மாணவ சமுதாயத்தை உருவாக்கி நன்மக்களை சமுதாயத்திற்கு வழங்கி வருவது பாராட்டுதற்குரியது.

கால மாற்றத்திற்கு ஏற்ப புதிய அணுகுமுறையினூடாக கலைத் திட்டத்திற்கு அமைய மாணவ சந்ததியினரை உருவாக்க வேண்டிய தலை யாய பொறுப்பு பாடசாலையையே சாரும். அந்த வகையிலே உருவாக்கப் பட்ட நோக்கிலிருந்து சற்றும் மாறுபடாத சைவத்தமிழ்ப் பாரம்பரியத்தைப் பேணி வளர்ப்பதோடு மாணவர்களுக்கான சிறந்த கற்றல் கற்பித்தல் சூழலையும் பேணி வருவது பாராட்டுதற்குரியது.

தற்போதைய அதிபர் திரு. மு. விக்னேஸ்வரன் அவர்களுடைய வழிகாட்டுதலிலே மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் மேம்பட்டு நிற்ப தோடு இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் முன்னேற்ற நிலமையை வெளிக்காட்டி நிற்பதுவும் குறிப்பிடத்தக்கது.

எதிர்கால சந்ததியினருக்கு அறிவையும், சைவத்தமிழ்ப் பாரம்பரியத் தினையும் வழங்கும் அறிவுப் பொக்கிசமான உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் நின்று நிலைக்கவும் மேலும் பல சாதனைகளைப் படைக்கவும் இறையருளை வேண்டி நிற்கின்றேன்.



நூற்றாண்டு விழாக்காணும் சைவத்தமிழ் அன்னை வாழ்க இன்னும் பல நூறாண்டுகள்

திரு. சி. மாணிக்கராசா
பிரதிக்கல்விப்பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

யாழ்/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அன்னை தன் நூறாவது பிறந்த நாளைக் கொண்டாடுவதனையிட்டு வெளியிடப்படவுள்ள மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் சிறப்பான கிராமமாக உரும்பிராய்ப் பிரதேசம் விளங்குகின்றது. இப்பிரதேசத்தில் சைவத்தையும், தமிழையும், உயர் விழுமியப்பாங்குகளை வளர்ப்பதிலும் நடைமுறைப் படுத் துவதிலும் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய கல்விச்சமூகம் உழைத்து வருவது அனைவரும் அறிந்த விடயமாகும். கடந்து சென்ற பல ஆண்டு களிலும் பல்வேறு சோதனைகள், வேதனைகளை சைவத்தமிழ் அன்னை அனுபவித்தாலும் அண்மைய ஆண்டுகளில் அதிபர், ஆசிரியர்களின் ஆற்றல் மிகு உழைப்பால் கல்வி தொடர்பானதும், இணைப்பாடவிதானம் தொடர் பானதுமான விடயங்களில் சாதனை இலக்கை நோக்கி செல்லும் இக் காலத்தில் அன்னைக்கு நூற்றாண்டு விழா எடுக்க முற்பட்ட நிலையானது மிகமிகப் பொருத்தமானதாகும்.

பல பாடசாலைகளுக்கு க. பொ. த. உயர்தரத்திற்கு மாணவர்களை வழங்கும் ஊட்டப் பாடசாலையாக இப்பாடசாலை விளங்குகின்றது. இப்பாடசாலையின் பெருமைமிகு அதிபர் திருவாளர் விக்னேஸ்வரன் அவர்கள் தலைமையில் சிறந்த ஆசிரியர் குழாம் ஒன்றை உருவாக்கி நல்லொழுக்கமும், உயர்விழுமியமும் கொண்ட மாணவர் பரம்பரை ஒன்று இப்பாடசாலையில் கட்டி வளர்க்கப்பட்டு வருவது நூற்றாண்டு நிகழ்வு வாழ்த்துக்களுக்குப் பெருமை சேர்ப்பதாக உள்ளது

உரும்பிராய் பிரதேசத்திற்கு அண்மையாக பலாலி வீதியில் பல பாடசாலைகள் உள்ள போதும் இப்பாடசாலைக்கு மாணவர் சேர்வு வீதம்

ஆண்டு தோறும் அதிகரித்துச் செல்வது பாடசாலையின் தனித்துவம், பெருமை என்பன உயர்நிலையில் இருப்பதே காரணம் என சான்றோர் பலர் உரையாடுவதனைக் கேட்டிருக்கின்றேன்.

இப்பாடசாலையின் நூறு ஆண்டு கால வரலாற்றில் அதிபர் விக்னேஸ்வரன் காலம் பொற்காலம் என பாடசாலைச் சமூகம் பேசுவதை பல முறை கேட்டிருக்கின்றேன். இவரது காலத்தில் நூறாவது ஆண்டு விழா பாடசாலை அன்னைக்கு எடுக்கப்படுவது என்பதும் மேலும் பெருமை சேர்ப்பதாகும். ஏனைய பல பாடசாலைகளுடன் ஒப்பிடும் போது நிலப்பரப்புவசதி, வசதிமிகு கட்டிட வசதி என்பன மிக மிக குறைவாக இருக்கின்ற போதும் உள்ள வளங்களை சிறப்பான வகையிற் பிரயோகித்து தரமான கல்வியினை மாணவர்களுக்கு இப்பாடசாலை ஆசிரியர் சமூகம் வழங்கி வருவதை பாடசாலை மேற்பார்வைகளின் போது அவதானித்தவன் என்ற வகையில், அதிபர் அவர்களின் நிர்வாகத்திறமைக்கு, இவ்வாழ்த்து ஊடாக பாராட்டுக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

இப்பாடசாலையில் இன்றுள்ள கல்விக்கலாசார சூழல் இன்னும் பல புது மெருகூட்டத்துடன் எதிர்காலத்தில் வளர வேண்டும் என்றும் அதற்கு ஊடாக இப்பாடசாலை யாழ்ப்பாணக்கல்வி வலயத்தில் கோப்பாய்க் கோட்டத்தில் முதல்தரப் பாடசாலையாக மிளிர வேண்டும் என அன்னையின் நூறாவது பிறந்த நாளில் வேண்டுதலாக விடுகின்றேன். உலகளாவிய மாற்றங்களை இயலுமானவரை உள்வாங்கி கல்வியின் மகத்து வத்தையும் அதனை தமக்கு வழங்கும் பாடசாலையின் கௌரவத்தையும் பாதுகாக்கும் கௌரவம் மிக்க பிரஜையாக சமூகத்திடம் மீண்டும் செல்வோம் என என் அன்பு மாணவச் செல்வங்கள் அன்னையின் நூறாவது பிறந்த நாளான இன்று உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். எமது எண்ணங்களே எதிர்கால செயல் வடிவம் மாணவர்களே நல்லதை எண்ணுங்கள் அது ஒருநாள் செயல் வடிவமாகும்.

சைவத்தமிழ்க் கலையரசிக்கு நூற்றாண்டு விழா நிகழ்வை கோலா கலமாக எடுக்கும் பாடசாலைச்சமூகம், புலம்பெயர் உறவுகள் அனைவரும் என்றும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

"வரப்புயர நீருயரும்" என்னும் ஔவையாரின் உயர்வாக்கினை வலியுறுத்தி வாழ்த்தி விடைபெறுகின்றேன்.



வாழ்த்துச் செய்தி

K. பார்த்தீபன்,
கணக்காளர்,
வலயக் கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

சரித்திர மகிமை பொதிந்த பன்முக விம்பங்களின் பதாதை ஏந்திய வசீகரமான பயணத்தில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் பட்டொளி வீசிப் பிரகாசித்து நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதையிட்டு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

*சுதேசப் புலமையாளர்களின் அபரிமிதமான முயற்சியால் **1915**இல் ஆரம்பிக்கப்பட்டு மேலைத்தேயக் கல்விச் செல்நெறிகளுக்கும் சாத்தியமான உன்னத ஆளுமைகளைச் செதுக்கி சுவர்ண சகாப்தமாக மிளிர்கிறது. யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தின் அடையாளமாகி, சைவத்தமிழ்ப்பண்பாட்டின் உள் நீரோட்டத்தை குன்றாத வளத்தோடு பேணி வருகின்றமை விதந்துரைக்கத்தக்கது. அண்மைக் கால நெருக்கடிகளைக் கடந்து ஒழுக்கமும் மனிதநேயமும், நுண் திறனும் மிக்க பிரஜைகளை உருவாக்குவதில் வெற்றி கண்டுள்ளது.*

செழிப்பான பெறுபேறுகளும், அகலித்த சாதனைமிகு இணைப்பாட விதானச் செயற்பாடுகளும், மேதமை சுவறிய முகாமைத்துவமும் நிகழ் அகவையில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்திற்குப் புகழாரஞ் சூட்டி எழில் மிடுக்கு மிகுந்த தருணங்களை கட்டமைத்து வருகின்றமை மகிழ்வினை ஏற்படுத்துகிறது. தேசிய விருதுகளும், தற்புமையான சாதனைகளும் அதிகரிக்க பின்புலமாக அமைந்த அதிபர் திரு. மு. விக்னேஸ்வரன் அவர்களுக்கும், அர்ப்பணிப்புமிகு ஆசிரியர்களுக்கும், மாணவர்கள், பெற்றோர்கள், கல்விச்சமூகத்தினர் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



வாழ்த்துச் செய்தி

திரு. அ. அருணந்திசிவம்,
அதிபர்,
உரும்பிராய் இந்துக்கல்லூரி.

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் ஒரு நூற்றாண்டு காலமாக கல்விப்பணியை வழங்கி இன்று நூற்றாண்டு விழா காணுவதையிட்டு மகிழ்ச்சியடைவதோடு நூற்றாண்டு விழாவிற்கு வாழ்த்துரை வழங்குவதையிட்டுப் பேருவகை அடைகிறேன்.

கடந்த நூறு வருடங்களாக கிராமப்புற மாணவர்களின் கல்வி மேம் பாட்டினை நோக்கமாகக் கொண்டு வீறு நடைபோடும் இப் பாடசாலை கல்வி அபிவிருத்தியிலும் பௌதீகவள அபிவிருத்தியிலும் பாரிய வளர்ச்சியைக் கண்டு கோப்பாய்க் கோட்டத்தில் அதிகமான மாணவர்களைக் கொண்ட பாடசாலையாகத் திகழ்கிறது.

மாணவர்களை கல்வியில் மட்டுமன்றி இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் ஈடுபடுத்தி ஒழுக்கமிக்கவர்களாகவும் ஆளுமைமிக்க வர்களாகவும் வளர்ப்பதில் பெரும்பங்காற்றி வரும் இப்பாடசாலையை இன்று இந்நிலைக்கு உயர்த்திய பெருமை காலத்திற்கு காலம் தன்னலமற்ற சேவையைப் புரிந்த அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்விசார ஊழியர்கள் அனைவரையும் சாரும்.

இன்று நூற்றாண்டு விழாவையும் மலரையும் வெளியிடும் பெருமைக் குரிய பேற்றினை அதிபர் திரு. மு. விக்னேஸ்வரன் அவர்களும், ஆசிரியர் குழாமும் பெற்றுக் கொண்டமை பராட்டுக்குரியதாகும்.

“சைவத்தமிழ்” வித்தியாலயம் என்ற பெயருடன் கற்பக விநாயகர் ஆலயத்திற்கு அருகே சைவத்தையும் தமிழையும் பேணிக் காத்து வளர்த்து வரும் இப்பாடசாலை இன்னும் பல ஆண்டுகள் மனிதகுலம் உள்ள வரைக்கும் சிறந்த கல்விப் பணிபுரிந்து வீறுநடை போட எனது நல்வாழ்த்துக் களை தெரிவிக்கிறேன்.

ஊருக்கு ஒளியூட்டும் ஓர் உன்னத பாடசாலை.

திரு. வே. பாலசுப்பிரமணியம்,
பிரதிக்கல்விப் பணிப்பாளர் தென்மராட்சி வலயம்.
முன்னாள் கோட்டக்கல்விப் பணிப்பாளர் கோப்பாய்.

சைவமும் தமிழும் செழித்தோங்கும் உரும்பிராய் மண்ணின் தனிப் பெரும் அடையாளமாகத் திகழும் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலத்தின் நூற்றாண்டு மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன் ஊருக்கு அணிகலனாக விளங்கும் சைவத்தமிழ் வித்தியாலயம் மக்களின் மனங்களை வென்ற பாடசாலையாக விளங்குவதோடு கல்விப் பெறுபேறுகளிலும், இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் கோப்பாய்க் கோட்டத்தில் சிறப்பான இடத்தைப்பெற்ற பாடசாலையாகவும் திகழ்கின்றது. "வீடுகள் தோறும் கலைகளின் விளக்கம் வீதிகள் தோறும் இரண்டொரு பள்ளி" என மகாகவி பாரதி கண்ட கனவு உரும்பிராய்ப் பிரதேசத்தில் நனவாகவே உள்ளது.

உரும்பிராய்க்கு அழகு சேர்க்கும் பல பாடசாலைகளிடையே தனக்கென தனியான இடத்தைப்பெற்ற இப்பாடசாலை க.பொ.த (சா/த) பரீட்சையில் சகலபாடங்களிலும் அதிவிஷேட சித்தியைப் பெற்றுச் சாதனைகளையும் நிகழ்த்தியுள்ளதுடன் புலமைப் பரிசில் பரீட்சையிலும் அதிகளவான மாணவர்கள் சித்தியடையும் பாடசாலையாகவும் மிளிர்கின்றது. இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாகாணம், தேசிய மட்டம் வரையும் பதிவுகளைச் செய்து இப்பாடசாலை மேலும் வளர்ச்சியுற வாழ்த்துகின்றேன்.

இத்தனை வெற்றிகளுக்கும் சொந்தக்காரரான ஆசிரியர்களையும், அவர்களை ஊக்குவித்து வழிநடத்தி வரும் அதிபர் திரு.மு. விக்கினேஸ்வரனின் முயற்சிகள் பாராட்டுக்குரியவை. புதுமைகளை புகுத்தும் இயல்பு கொண்ட அதிபரின் முயற்சிகளை நான் கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளராக இருந்த சந்தர்ப்பங்களில் அவதானித்தது உண்டு. அவரது தலைமையில் நடைபெறும் இந்நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெறவும், சைவத்தமிழ் வித்தியாலயம் மென்மேலும் வளர்ச்சியுறவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

வாழ்த்துச் செய்தி

M. T. செல்வராஜா
காரியதரிசி,
உரும்பிராய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்,
இலண்டன்.

பாலர் வகுப்பு முதல் அ, ஆ சொல்லித்தந்த வயது தாய்ப் பாடசாலைக்கு வயது நூறு என்று எண்ணும் போது இரு கரங்களையும் கூப்பி வணங்கவே தோன்றுகிறது. நான் ஒரு பழைய மாணவன் என்ற வகையிலும் உரும்பிராய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் லண்டன் கிளையின் காரியதரிசி என்ற வகையிலும் எமது சங்கத்தின் சார்பில் ஓர் வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்கிறேன்.

நாம் ஏதேதோ காரணங்களுக்காக தாயகத்தை விட்டு புலம்பெயர்ந்த போதும் நாம் கல்வி கற்ற பாடசாலைகளையோ, தாய் மண்ணையோ, தமிழையோ மறக்கவில்லை. வேண்டியபோதெல்லாம் எமக்கு கல்வி புகட்டிய பாடசாலைகளுக்கு எம்மால் இயன்றளவு உதவிகளும் செய்து கொண்டே வருகிறோம். இனி வருங்காலங்களிலும் நிச்சயம் செய்வோம் என்ற நம்பிக்கையும் எனக்குண்டு.

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் நூற்றாண்டு விழாக்காணும் இவ்வேளையில் நாம் அங்கே இளவயது முதல் கற்ற கல்வி பெற்ற அனுபவங்கள், செய்த குறும்புகள், வாங்கிய தண்டனைகள் எல்லாம் மீண்டும் ஒருமுறை எம்மனக்கண்களில் காட்சிகளாகத் தெரிகின்றன. எல்லாமே இப்போது இனிக்கின்றன.

உரும்பிராயில் உள்ள இரண்டு பெரிய பாடசாலைகளின் நூற்றாண்டு விழாக்களையும் காணும் பாக்கியம் பெற்றவர்கள் நாம் உங்கள் விழா சிறக்கவும், பாடசாலை இன்னும் பல நூற்றாண்டுகளைக் காணவும் இறைவனை வேண்டி எமது உரும்பிராய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம், லண்டன் கிளையின் சார்பில் எமது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உரும்பிராயப் பாடசாலைகளின் பழைய மாணவர் சங்க கனடா கிளையினரின் வாழ்த்துச் செய்தி

உரும்பிராய் என்றால் மண்ணோடு போராடி, மனதோடு உறவாடி மகிழ்வோடு வாழ்ந்த எமது விவசாய மக்களை தன்னகத்தே கொண்டமைந்த மண்ணாக எல்லோர் மனக்கண்ணிலும் தோன்றும் "திரை கடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற முது மொழிக்கு இணங்க நாம் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் எமது கிராமம், அதன் பாரம்பரியங்கள், பண்பாடுகளை சிறப்பிக்கச் செய்துகொண்டு இருப்பது எமக்கு பெருமையே! அவ்வகையில் எமக்கு "அ, ஆ" என்ற வாழ்வின் முதல் அத்தியாயத்தை சொல்லித் தந்த எமது பாடசாலை இன்று நூறாண்டு விழாவில் அடியெடுத்து வைப்பது எமக்கு ஆனந்தமே!

உரும்பிராய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா என்ற மகுடம் தாங்கி நாங்கள் செயற்பட்டாலும் அனைத்து உரும்பிராய்ப் பாடசாலைகளுக்கு அவர் தேவையறிந்து பல்வகையான உதவிகளைச் செய்து வருகின்றோம். எமது அனைத்து செயற்பாடுகளுக்கும் மூல காரணம் எமது உரும்பிராய் பாடசாலையில் கல்வி கற்று நல் மனிதர்களாய் வாழும் எமது பழைய மாணவர்களே!

"சுற்றத்திற்கழகு சூழ இருத்தல்" என்ற ஔவையாரின் கூற்றுக்கு அமைவாக சான்றோர் பலரை உருவாக்கிய எமது பாடசாலை இன்று நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தில் மகிழ்வுற்றுக் கொண்டிருக்கும் இவ் வேளையில் நாம் எமது மனது நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் இவ்விழா இனிதாக நடைபெற இறைவனையும் வேண்டுகின்றோம்.



வாழ்த்துச் செய்தி

திரு. இரா. குணநாதன்,
பிரதிக்கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்),
வலயக் கல்வி அலுவலகம்,
தீவகம், வேலணை.

ஒரு நாட்டின் எதிர்காலம் வகுப்பறைகளில் தீர்மானிக்கப் படுகின்றன. பொறியலாளர்கள், மருத்துவர்கள், கல்வியலாளர்கள், அரசியலாளர்கள், சமூகத்தலைவர்கள், விவசாயிகள் யாவரும் வகுப்பறைகள் ஊடாகவே சமூகத்திற்கு பிரசவிக்கப்படுகின்றார்கள். இந்தவகையில் பாடசாலைகள் சமூகத்தின் முக்கிய நிறுவனங்களாக மிளிர்கின்றன. வலிகாமம் கிழக்கு உரும்பிராயிலுள்ள சைவத்தமிழ் வித்தியாலயம் இதற்கு விதிவிலக்கானதல்ல.

கடந்த நூறு ஆண்டுகளாக இத்தகைய பெரும்பணியை ஆற்றி இன்று நூற்றாண்டு விழாக் காணும் இக் கல்விக் கூடத்தினால் வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

கோப்பாய்க் கல்விக் கோட்டத்திலுள்ள வகை 2 பாடசாலைகளில் அதிகளவான மாணவர்களை உள்வாங்கி கல்வி புகட்டும் பாடசாலையாக உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் விளங்குகின்றது. அதனிலும் மேலாக இக் கல்விக் கோட்டத்தில் அதிகளவு மாணவர்களைத் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையச் செய்து வரும் வரலாற்று பெருமையும் இப் பாடசாலைக்கு உண்டு. இக் கல்விக் கோட்டப் பாடசாலை களில் இரண்டு தசாப்த காலமாக கல்விப் பணியாற்றியவன் என்ற வகையில் இப் பாடசாலையையும் அதன் சாதனைகளையும் நான் நன்கு அறிவேன்.

தனது பெயருக்கு ஒத்ததாக சைவப்பாரம்பரியங்களை முழுமையாக பின்பற்றி வரும் இப்பாடசாலையின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் துடிப்பு மிக்க அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகத்தினர் ஆகியோரின் விடாமுயற்சியைப் பாராட்டுவதோடு இக் கல்விக் கூடத்தின் செயற்பாடுகள் எதிர்காலத்தில் மென்மேலும் வளர்ந்து பாடசாலை உயர் வடைய உளப்பூர்வமாக வாழ்த்துகின்றேன்.

வாழ்த்துச் செய்தி

திருமதி. சாரதலீலா சிவபாலன்,
பழைய மாணவி,
கற்பகப் பிள்ளையார் கோயில் வீதி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கியொளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கெழுத்தறிவித்தல்

(மகாகவி பாரதியார்)

ஆயிரம் அன்னதானமடங்களைக் கட்டுவதைவிடவும், பத்தாயிரம் கோயில்களைக் கட்டுவதைவிடவும் கோடிபுண்ணியம் நிறைந்த செயல் என்னவென்றால் ஒரு ஏழைக்குக் கல்வியைக் கொடுப்பது ஆகும் என்ற மகாகவி பாரதியார் கவிதைப் பொருளுக்கேற்ப சகலசெல்வங்களும் பொருந்தி விளங்கும் உரும்பிராய்ப் பிரதேசத்தில் கற்பகப் பிள்ளையார் கோயில் மேற்குப் பக்கத்தில் சைவப்பற்றுமிகு உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் ஸ்தாபிக்கப்பட்டு நூறு வருடங்கள் பூர்த்தியாகி நூற்றாண்டு விழா கொண்டாடுவதையிட்டு பேருவகை அடைகின்றேன். அரிய பெரிய சாதனையாக எமது மக்கள் மத்தியில் அறிவொளியூட்டும் நிறைபணியில் பூரிப்பதாக உள்ளது.

பக்தியில் சிறந்து விளங்குபவர்கள் சைவமக்கள் சைவம் என்ற பதம் தமிழ் என்ற எமது செம்மொழியாம் தாய்மொழியுடன் இணைந்து இப் பாடசாலைக்கு அமைந்திருப்பது மிகுந்த பொருத்தப்பாடுடையது ஆகும்.

மாணாக்கரை சிறந்த கல்விமான்களாக மட்டும் உருவாக்கியதுடன் நின்று விடாது அவர்களை சான்றோராக்கிய சிறப்பு இந்தப் பாடசாலைக்கு உண்டு.

இத்தகைய சிறப்புடைய இப்பாடசாலையில் நான் கல்வி கற்ற காலப் பகுதியில் கலைப்பட்டதாரியாகிய திரு. வி. அரியநாயம் அதிபராகவும், திரு. அ. பஞ்சாட்சரம் உபஅதிபராகவும் கடமையாற்றினார்கள் என் பெரிய தாயாராகிய திருமதி. காந்திமதி இராஜகோபால் ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிந்தார். நான் திருமதி காந்திமதி இராஜகோபால் அவர்களிடம் மாணவியாகத் திகழ்ந்து ஆங்கிலம் கற்றேன். க. பொ. த. சாதாரண தரத்தில் சித்தியடைந்ததன் மூலம் சிறந்த துறையாக விளங்கும் இலங்கை வங்கியில் கடமைபுரியும் வாய்ப்பு கிடைத்தடையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வித்தியாலயம் மேலும் பலநூற்றாண்டுகள் பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கி இவ்வூரின் கலங்கரை விளக்காக பிரகாசிக்க வேண்டும் என எல்லாம் வல்ல கற்பகப்பிள்ளையாரின் பொற்பாதங்களில் பணிந்து வேண்டுகின்றேன்.

வாழ்த்துச் செய்தி

திருமதி. நந்தினி நற்குணராஜன்,
நிர்வாக உத்தியோகத்தர்,
யாழ் வலயக் கல்வி அலுவலகம்.

இருபதாம் நூற்றாண்டு கல்வியற் சிந்தனைமயமாக வர்ணிக்கப் படுகின்றது. குறிப்பாக ஈழமணித்திருநாட்டின் சைவத் தமிழ்ச் சமூகம், தன் சமூக சமய மொழி சார்ந்த சுதேச பாரம்பரிய பண்பாட்டுக் கோலங்களாகப் பேணவும், வளர்க்கவும் பல வழி முறைகளைக் கையாளத் தொடங்கியது. அதன் முக்கிய செயல்நெறியாக நவீன கல்விப் பாடசாலைகளை அமைத்து தமது தாய் மொழியில் உரிய சுதேச சூழலில் கல்வியை வழங்க முயற்சி எடுக்கப்பட்டது. இதன் மூல ஊற்றாகத் திகழ்ந்தவர் நல்லை நகர் ஆறுமுக நாவலர், சேர். பொன். இராமநாதன். சைவ வித்தியாவிருத்திச் சங்கம், இராமகிருஷ்ண மிஷன், சைவபரிபாலன சபை போன்ற பல நிறுவனங்களும் இக் கைங்கரியத்தில் ஈடுபட்டன. அப்பயணத்தில் **1915**ம் ஆண்டு அமிர்தலிங்கம், சின்னப்பு போன்ற நன் மக்களின் சிந்தனைக் கருவூலமே இப் பாடசாலையாகும்.

சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகக் கொண்ட நீர்வளம், நிலவளம் நிறைந்த பூமியாம் உரும்பிராய். மூன்று கோயில் கட்டப்பட்ட பல சைவப் பெரும் கோயில்களும் கிராமிய வழிபாடுகளும் நிறைந்த புலம் இது. பண்டிதர் வேலுப்பிள்ளை தலைமையில் கல்விப்பணியில் ஊற்றெடுத்த இவ்வித்தியாலயம் இன்று நூற்றாண்டு விழாக்கண்டு மிளிர்கின்றது. மிடுக்குடன் வீறுநடை போடுகின்றது. இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சிக்குத் துணை நிற்கும் அனைத்துள்ளங்களையும் பாராட்டுகின்றேன். நூற்றாண்டு விழாக் காணும் வித்தியாலயத்தின் பணி மேலும் தொடர வாழ்த்துவதுடன், அர்ப்பணிப்புடன் பணிபுரியும் அதிபர், ஆசிரியர்களை மனதாரப் பாராட்டு கின்றேன். நற்பணி மேலும் பெருக.

" அன்னயாவினும் புண்ணியங்கோடி......
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

வாழ்த்துச்செய்தி

திருமதி. தேவிகா சிவானந்தராஜா,
செயலாளர்.
பாடசாலைஅபிவிருத்திக் குழு.

யாழ்குடாநாட்டிலே பெயர் பெற்ற ஊர்களிலே எமது உரும்பிராய்க் கிராமம் மிகவும் பிரபல்யமானது. ஆரம்ப காலத்திலே மண்வளமும், நீர் வளமும் மிக்க விவசாயக்கிராமமாக விளங்கிய இக்கிராமம் இன்று குறு நகரமாகக்காட்சி தருகிறது. ஓடையம்பதி கற்பக விநாயகரினால் பரிபாலிக் கப்பட்டு வரும் எங்கள் கிராமத்தின் மத்தியிலே, இவ்வாலயச் சூழலிலே வானளாவிய கட்டிடங்களுடன் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர் களோடும் அறுபதிற்கும் மேற்பட்ட ஆசிரியர்களோடும் "கற்றாங்கு ஒழுகு" என்னும் மகுட வாசகத்தை இலட்சினையில் பொறித்து சைவத்தையும், தமிழையும் அதன் கலாசாரத்தின் நெறி பிறழாது கல்வியூட்டி வரும் எங்கள் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயமானது தனது நூறாவது அகவையைக் கொண்டாடு வதில் புளகாங்கிதம் அடைகின்றேன்.

இந்த நூற்றாண்டு கால வரலாற்றில் எங்கள் சைவத்தமிழ் அன்னை யானவள் பல வைத்தியர்களை, பொறியியலாளர்களை, சட்டத்தரணிகளை, விரிவுரையாளர்களை, அரசியல்வாதிகளை, விடுதலைத் தியாகிகளை, சிறந்த ஆசிரியர்களை, இவர்களைக் கடந்து சிறந்த மனித நேயமுள்ள நல்ல மனிதர்களை, சமூக ஆர்வலர்களை பிரசவித்துள்ளாள் என்றால் அது மிகையல்ல.

காலத்திற்குக் காலம் செயற்றிறனும் அர்ப்பணிப்பும் மிக்க பல முதல்வர்களின் வழிகாட்டலிலும் அயரா உழைப்பின் விளைவாக கல்வித் தரத்திலும், இணைப்பாடவிதான செயற்பாட்டிலும் எமது மாணவர்கள் பல சாதனைகளைப் புரிந்ததோடு, பௌதீகவளங்களையும் கணிசமானளவு பெற்றுள்ளோம்.

இவையெல்லாவற்றிற்கும் மேலாக இந்த நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் தருணத்தில் பல சோதனைகளின் மத்தியில் எமது மாணவர்கள் பல சாதனைகளையும் படைத்துள்ளனர். கல்விப் பொதுத் தராதரப்பரீட்சையில் சகல பாடங்களிலும் அதிவிசேட சித்தி, விஷேட சித்தி, திறமைச்சித்திகளைப் பல மாணவர்கள் பெற்றுள்ளனர். தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையிலும் வருடா வருடம் ஐந்து தொடக்கம் பதினைந்து மாணவர்கள் சித்தி பெறுகின்றனர். இவ்வருடம் "எல்லே விளையாட்டில் எங்கள் பாடசாலை பெண்கள் அணியினர் கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம் என்பவற்றில் வெற்றி பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தகுதி பெற்று விளையாடவுள்ளனர்.

இப்படிப் பல சாதனைகள் புரிந்து வரும் எமது சைவத்தமிழ் வித்தியாலயமானது மேலும் மேலும் பல நூற்றாண்டுகள் கடந்து இன்று போல் என்றும் வான்புகழ் ஓங்கி வாழ வேண்டுமென எல்லாம் வல்ல கற்பக விநாயகர் தாழ் பணிந்து ஆசிகளை வேண்டி வாழ்த்துகிறேன்.

பிரதி முதல்வர் உள்ளத்திலிருந்து....

திரு. ம. ஸ்ரீகாந்தன்,
Trd-Sci, B.Ed,
பிரதி முதல்வர்,
உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்.

கற்பக விநாயகன் கழலடி பணிந்து
வித்தைக் கிறைவியை விரும்பியே தொழுதே
பாலமுருகன் நற் பாதமலர் பரவி
நூறாண்டு புகழினை நுவல்கிறேன் கேளீர்.

நூறாண்டு காலம் வாழ்க. நோய் நொடி இல்லாமல் வளர்க. என்பது ஆன்றோர் ஆசி. நூறு ஆண்டுகள் என்பது எம்மால் நினைத்துப் பார்க்க முடியாத ஒரு பெரிய விடயம். ஏனெனில் எம்மில் எவரும் நூறாண்டு கண்டவர் இல்லை. எமது வித்தியாலய அன்னை இன்று நூறாண்டு வாழ்ந்து புதுப் பொலிவுடன் திகழ்கின்றாள். இவள் இன்னும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் அகலக்கால் பரப்பி ஆலமரம் போல் விழுதுகள் ஓச்சி நெடிது வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

ஏழை மாணவர்களின் கல்விக்கோர் கலங்கரை விளக்கு எம் வித்தி யாலயம். நிதி மிகுந்தவர் வேறிடம் செல்ல கதியிலை எனக் கலங்கிடும் சிறார்களை மதிநலம் மிகு தடக்கையால் மாண்புடன் அணைத்து அறிவுப்பால் ஊட்டுபவள் எமது வித்தியாலய அன்னை. கற்பக விநாயகன் அருளாட்சிச் சூழலிலே பாலமுருகன் பக்கத்திலிருந்து பரிவு நல்க ஏற்றம் மிகு அதிபர், எறும்பு போல் இடைவிடாது உழைக்கும் நல்லாசான்கள் வழி காட்டலிலே நகரத்துப் பாடசாலைகளுக்கு இணையாக கல்வியிலும், இணைபாடவிதானச் செயற் பாடுகளிலும் புகழ்க் கொடி நாட்டுகிறாள் எம் வித்தியாலய அன்னை.

"அன்னசத்திரம் ஆயிரம் நாட்டல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்ற அருண் மொழிக்கேற்ப கல்விக்காக ஏங்கி நிற்கும் ஏழை மாணவர்களுக்கு எம்மாலியன்ற அறிவுப்பாலை ஊட்டுவதற்கு எமக்கெல்லாம் களம் சமைத்துத் தரும் எமது எழிலான அன்னை இன்னும் புத்தொளி வீசிப் பிரகாசிக்க வேண்டும். அன்னையின் புகழ் அகிலமெங்கும் விளங்க வேண்டும். அதற்காக அனைவரும் அணிதிரண்டு உழைப்போம். என எம் அணியினரிடம் அன்பாக வேண்டி விடை பெறுகின்றேன்.

இதழாசிரியர்களின் இதயத்திலிருந்து....

திருமதி. செந்தில்நாயகி பரமலிங்கம்,
திருமதி. சுஜித்தா ரமணீதரன்

"அறிவை வளர்த்திட வேண்டும் - மக்கள்
அத்தனை பேருக்கும் ஒன்றாய்
சிறியாரை மேம்படச் செய்தால்
தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும்."

செம்புலச் செழும்பதியாம் உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயத்தின் அருகில் உயர் சிகரமெனத் துலங்கிக் கொண்டிருக்கும் சைவத் தமிழ் அன்னையின் நூறாவது அகவை நிறைவு மலராசிரியர்கள் என்ற வகையில் பெருமகிழ்வு கொள்கின்றோம். சைவத்தமிழ் அன்னையின் வெற்றிப் பயணத்தின் வெளிப்பாடே இம் மலராகும் என எண்ணுகின்றோம். அதி நீண்ட வரலாற்றுப்பாதையைத் தன்னகத்தே கொண்ட பழமை மிக்க பாடசாலையாக எமது பாடசாலை திகழ்கின்றது.

மேலும் பலவரலாற்றுச் சுவடுகளையும், வரலாற்றுப் பதிவுகளையும், அவற்றின் வளர்ச்சியையும் பலரிடமிருந்து தத்துவ ரீதியாக ஆராய்ந்து பெற்ற அரிய சொத்துக்களை அடுத்த சந்ததிக்குப் பரிமாற்றம் செய்யும் ஒரு ஆவணக்காப்பாகவும் இம்மலர் வெளியீடு அமைகின்றது.

இவ்விழா சிறப்புறவும் இம்மலர் வெளியீடு சிறக்கவும் ஆர்வத்துடன் அயராது முன்னின்று உழைத்து பெறுமதிமிக்க வழிகாட்டலையும், ஆதரவையும் நல்கி இம் மலருக்கு உயிர்கொடுத்த தந்தையான அதிபர் திரு. மு. விக்னேஸ்வரன் அவர்களுக்கு வித்தியால சமூகத்தின் சார்பில் மன மார்ந்த நன்றிகள் பற்பல.

இம்மலர் சிறப்பு ஆசிச் செய்திகள் வழங்கிய மதகுருமார்களுக்கும், வாழ்த்துச் செய்திகள் வழங்கிய பெருந்தகைகளுக்கும், மலரைச் சிறப்பித்த பெரியோர்களுக்கும், ஆக்கங்களைத் தந்துதவிய அதிபர்கள், ஆசிரியர்கள்,

மாணவர்கள், பழைய மாணவர்களுக்கும், ஆக்கங்களைச் சீர்ப்படுத்த உதவிய மலர்க்குழுவினருக்கும் உளம் கனிந்த நன்றிகள். தமிழோடு சைவமும் கலந்து அளித்து அகவை நூறினை அடைந்த வித்தியாலயத்தாயை நேசிப்போம், பூசிப்போம், வாழ்த்துவோம். எமது வித்தியாலயத்தின் வளர்ச்சிப் பாதைக்கு வழிவகுத்து இதுவரை காலமும் சேவைபுரிந்த அதிபர்கள், பிரதிஅதிபர்கள், பகுதித் தலைவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் இந்த நேரத்தில் நினைவு கூருதல் பொருத்தமான ஒன்றாகும்.

மலர் சிறப்பாக வெளிவர கணினியில் எழுத்துருவாக்க உதவியோர் மற்றும் மலர் உருவாக்கத்திற்கு நிதியுதவி மற்றும் பலவகையிலும் உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் மனம் நிறைந்த நன்றிகள் . அத்துடன் முதற் பிரதி, விசேடசிறப்புப்பிரதி, சிறப்புப்பிரதிகளைப் பெற்று விழாவைச் சிறப்பித்த பெரியோர்களுக்கும், விளம்பர அனுசரணையாளரகளுக்கும், மலரை அச்சேற்ற உதவிய "சாம்பவி" பதிப்பகத்தாருக்கும் நன்றிகள் உரித் தாக்குக.

நூறாவது ஆண்டு நிறைவுமலர் சிறப்பாக வெளிவர பல்வேறு விதத்திலும் உதவியும் ஒத்தாசையும் வழங்கிய அனைத்து நல் உள்ளங் களுக்கும் மனம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"வாழ்க சைவத்தமிழ் இன்னும் வளர்க்க எம் சைவத்தமிழ்"

நன்றி



ஆரம்பக் கல்விப் பகுதித் தலைவரின் எழுதுகோலிலிருந்து...

திரு. பா. சத்தியநாதன்,
ஆரம்பக்கல்வி பகுதித் தலைவர்.

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அன்னையின் நூற்றாண்டு நிறைவு குறித்த மலருக்கு எனது எண்ணத்தினைப் பகிர்ந்து கொள்வதற்கு வாய்ப்புக் கிடைத்தமையை பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன். முதலில் உரும்பிராய் கற்பக விநாயகருக்கு எனது முதல் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் பாடசாலையின் உள்ளே வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருகின்ற பாலமுருகனையும் வணங்கிக் கொள்கின்றேன். உரும்பிராய் முதல்வராக விக்கினேஸ்வரன் (கற்பக விநாயகர்) அமர்ந்திருந்து பேரருள் வழங்குகின்றமையால் உரும்பிராய் உலகிலேயே புகழப்படுகின்ற கிராமமாக அமைந்துள்ளது. அதே போல் எமது பாடசாலையின் முதல்வராக எம் விக்கினேஸ்வரன் கடமை புரிவதால் பாடசாலை இன்று முன்னணி வகித்துக் கொண்டிருக்கின்றது.

நான் இப்பாடசாலைக்கு 2007ம் ஆண்டு சேவையாற்ற வந்திருந்தேன். வந்த வருடமே அதிபர் தரம் 5 புலமைப் பரிசில் வகுப்பினை எனக்குக் கற்பிக்க வழி செய்தார். அப்போது தரம் 5ல் என்னுடன் திரு. ப. பாலமுரளிதரன், திரு. த. ரவீந்திரன் ஆகியோர் கடமையாற்றினர். அத்தோடு தரம் நான்கில் திரு. சு. பன்னீர்ச்செல்வம். திரு. ந. கண்ணதாசன், திருமதி. த. ஜெயகௌரி தரம் நான்கு,ஐந்திற்கு பகுதித் தலைவராக செயற்பட்டார். அதே போன்று தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரை திருமதி க. கலாமோகன். பகுதித் தலைவராகக் கடமையாற்றினர். எமது பாடசாலையில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை யில் அதிகளவான மாணவர்கள் சித்தி பெறுவது குறிப்பிட்டுக் கூறக் கூடிய விடயமாகக் காணப்படுகின்றது.

தற்போது எமது பாடசாலையில் முதன்மை நிலை ஒன்றில் திருமதி. ம.தனராஸ், திருமதி. அ. சந்திரதேவா,திருமதி. கௌ. சந்திரமோகன், திருமதி. நி. சிற்சபேசன் ஆகியோரும் முதன்மைநிலை. இரண்டில் திருமதி. நி. மகேஸ்வரன். திருமதி. சி. லவணன், திருமதி. த. இராஜேஸ்வரன், திருமதி.

சிறிதரன், திருமதி. சி. கௌரீதரன், திருமதி டோமினிக்ஜீவா ஆகியோரும். முதன்மை நிலை மூன்றில் திரு. கா. சுகுமார், திருமதி. ச. இராசநாயகம், திருமதி. சி. ஸ்ரீமதன், செல்வி. சிவலைலா ஆகியோரும் என்னுடன் இணைந்து திறம்பட சேவை ஆற்றுகின்றனர். அத்தோடு எமது பாடசாலை யில் இருந்து அண்மையில் இடமாற்றம் பெற்றுச் சென்ற திரு. சி. மகேந்திரராசா, திருமதி. கா. ரவிதரன், திருமதி. அ. கணேசன், திருமதி. ஜீ. சுகந்தினி ஆகியோரும் தமது சேவையினைத் திறம்பட ஆற்றியிருந்தனர்.

நான் தற்போது ஆரம்பப் பிரிவு பகுதத் தலைவராகச் செயலாற்று வதற்கு என்னுடன் சேவையாற்றிய ஆரம்பப் பிரிவு, இடைநிலைப் பிரிவு ஆசிரியர்களோடு அனைத்து உத்தியோகத்தர்களும் திறம்பட ஒத்துழைப்பை நல்கின்றமை சிறப்பான விடயமாகும்.

எமது வித்தியாலய அதிபர்

திரு. மு. விக்கினேஸ்வரன்,
(pr.Trd, B.A, P.G.D.E,SLPS - I),
ஜனாதிபதி விருது 2012 – பிரதீபா பிரபா.

கோப்பாய் மத்தி நாவலடியிலுள்ள அடிச்சேரிப் பகுதியில் முத்துச்சாமி இராசம்மா தம்பதியினரின் மூத்த புதல்வர் திரு. விக்கினேஸ்வரன். ஆரம்பக்கல்வியை இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள இ/ பெல்மதுளை அ.த..வி யிலும் தரம் 6 -10 வரையான கல்வியை இ/ காவத்தை ஸ்ரீகிருஷ்ண வித்தியாலத்திலும், க.பொ.த சா/த, க.பொ.த உ/த வரையான கல்வியை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும். பட்டப்படிப்பை பேராதனை பல்கலைக்கழகத்திலும் (வெளிவாரி) பட்டப்பின் கல்வி டிப்ளோமாவை (P.G.D.E) தேசிய கல்வி நிறுவனத்திலும் பெற்றார். இவரது தந்தையாரும், தாயாரும் கடமையின் நிமித்தம் இம்மாவட்டத்தில் வசித்தமையால் இவரது ஆசிரியப்பணியும் அம்மாவட்டத்திலேயே ஆரம்பமாகியது.

1981ல் ஜேர்மன் கரிதாஸ் நிறுவனத்தின் அனுசரனையுடன் வண்பிதா பியோசம்பா அடிகளாரின் மலையக கல்விச் சேவைத்திட்டத்தில் இணைந்து இ/ நீலகாமம் அரசினர் தமிழ் வித்தியாலத்தில் ஆசிரியப் பணியில் காலடி வைத்தார். 1983ல் நிரந்தர நியமனம் பெற்று இறக்குவானை நாவிள்ள அ.த.வியில் கடமையேற்றார். இ/ பெல்மதுளை நில்லேனை அ.த.வி, இ/ கலவன் அ.த.க.வ. ஆகிய பாடசாலைகளில் கடமை நிறைவேற்று அதிபராக கடமையாற்றினார்.

1985 - 1986ம் ஆண்டுகளில் கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையில் ஆரம்பக்கல்விப்பயிற்சியைப் பெற்றபின் 1987ல் கிளி/ இயக்கச்சி அ.த.க.வி யில் ஆசிரியராக , ஆரம்பக்கல்வி பகுதித் தலைவராகக் கடமையாற்றினார். 15.06.1990 - 31.12.1997 வரை யா/ உரும்பிராய் றோ.க.த.க பாடசாலையில் ஆசிரியராக, பகுதித் தலைவராகக் கடமை யாற்றினார். 01.01.1998 - 14.02.199 வரை யா/ சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலையில் உதவியாசிரியராகக் கடமையாற்றி பின் மீண்டும் யா/ உரும்பிராய் றோ.க.த.க பாடசாலையில் அதிபர் பதவியை ஏற்று 15.02.1999 - 10.10.2006 வரை கடமையாற்றினார். 04.08.2000 தொடக்கம்

அதிபர் சேவை தரம் 2 II க்கு பதவி உயர்வு பெற்றார். இவரது காலத்தில் பௌதிகவள விருத்தி, பாடவிதான இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் துரித வளர்ச்சியடைந்தன. 2006ல் தரம் ஒன்றுக்கு 60 மாணவர்கள் இணைத்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. 11.10.2006 தொடக்கம் எமது பாடசாலையில் அதிபராகக் கடமையேற்று 2007ல் அதிபர் சேவை தரம் 2 I க்கு பதவி உயர்வு பெற்றார்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த முரசொலிப் பத்திரிகையிலும், தொடர்ந்து வலம்புரி பத்திரிகையிலும் பிரதேச செய்தியாளராகக் கடமையாற்றியதுடன் ஏனைய பத்திரிகையிலும், சஞ்சிகையிலும் கல்விப் புலம் சார்ந்த பல கட்டுரைகளிலும் எழுதியுள்ளார்.

எமது பாடசாலையில் க.பொ.த சா/த பரீட்சையில் பாடசாலை வரலாற்றில் முதற் தடவையாக 2011ல் செல்வி. ப. லறீனா 8ஏ, பி, 2012ல் செல்வன் க. சுதர்சன் 9ஏ, செல்வி சி. திலக்சனா 8ஏ, பி பெற்றனர். தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் கூடுதலான மாணவர் சித்தி பெற்று வருகின்றனர். 2012ல் சிறந்த அதிபருக்கான ஜனாதிபதி விருதான பிரதீபா பிரபா விருது பெற்றமை, நூறாவது ஆண்டில் தடம் பதிக்கும் 2015ல் முதற்தடவையாக 19வயது பெண்கள் விளையாட்டுத்துறையில் தேசிய மட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளனர் (எல்லே) 13வயது கரப்பந்தாட்ட பெண்கள் அணியினர் மாகாணமட்டத் தகுதி பெற்றுள்ளனர். தட்டெறிதலில் மாணவி டர்சி தேசியமட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளார். விஞ்ஞானத் துறை புத்தாக்கப் போட்டியில் செல்வன் சி. சிறிதரன் தேசியமட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளார்.

பிரிட்டிஸ் கவுன்சில் நாடளாவிய ரீதியில் பாடசாலைக் கிடையே யான கலைத்திட்ட அமுலாக்கம் செயற்பாட்டில் 2015 - 2016 சர்வதேச விருது கிடைத்தமை, அன்பின் கல்விகூடம் மத்திய மாகாணம் கண்டி விகாரமாதேவி வித்தியாலயம், தென்மாகாணம் கா/ வல்ல கனிஸ்ட வித்தியாலய பாடசாலைகளுக்கிடையே அகில இலங்கை குத்துச்சண்டைப் போட்டியில் செல்வன் கே. டிலக்சன் இரண்டாம் இடத்தையும் செல்வன் எ. டெனிசன் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டமை, நூற்றாண்டு விழா கட்டிடம் கட்டப்பட்டமை, மாணவர்களை கல்விச் சுற்றுலாவிற்காக அகில இலங்கைக்கு நான்கு தடவை அழைத்துச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலைச் சமூகம்

அதிபர் அறிக்கை

திரு. மு. விக்னேஸ்வரன்,
(pr.Trd, B.A, P.G.D.E,SLPS - I),
ஜனாதிபதி விருது 2012 – பிரதீபா பிரபா.

பல் வகைச் சிறப்புக்களும் பொருந்திய உரும்பிராய்க் கிராமம் கல்வியிலும் சிறந்த விளங்க வேண்டும் என்ற ஊர்மக்களின் சிந்தனைக்கு உயிரூட்ட இப்பகுதியில் உருவாகிய நல்லறிஞர்கள், பெரியோர்கள், பிரமுகர்களின் கனவில் உருவாகி பின் அது கருவாகி **03.12.1915**ல் தோற்றம் பெற்றதே சைவத்தமிழ் வித்தியாலயம். இவ்வித்தியாலயத்தின் நூறாவது ஆண்டில் அதிபராகக் கடமையாற்ற எனக்கு வாய்ப்பளித்த சைவத்தமிழ் வித்தியாலய தாயையும், அதே வேளையில் கோயில் கொண்டு அருளாட்சி புரியும் கற்பக விநாயகரையும், வெற்றிக்குத் துணை நிற்கும் காளி அம்பாளையும் இப்பாடசாலையில் அருளாட்சி நல்கும் பாலசுப்பிரமணியரையும் சிரம் தாழ்த்தி கரம் கூப்பி வணங்கி அறிக்கையை முன் வைப்பதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன்.

11.10.2006 அன்று பெருமதிப்புக்குரிய யாழ்வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. V. T. செல்வரட்ணம் அவர்களால் இப்பாடசாலைக்கு அதிபராக நியமிக்கப்பட்டேன். அவரைத் தொடர்ந்து திருமதி. அ. வேதநாயகம், திரு. வை. செல்வராசா, திருமதி. செ. உதயகுமார் ஆகியோரின் வழிகாட்டலில் இவ் வித்தியாலயம் அவனி போற்றும் வகையில் செயற்பட்டேன். தற்போது எமது வித்தியாலயத்தின் நூறாவது ஆண்டில் திரு. ந. தெய்வேந்திரராசா அவர்களின் வழிகாட்டலில் செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றமை மகிழ்ச்சிக்குரியது. இக்காலத்தில் பல சாதனைகள் தொடர்வது மேலும் ஒரு படி மகிழ்ச்சிக்குரியதாகும்.

இப்பாடசாலையில் நான் பொறுப்பேற்ற போது கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளராக திரு. இ. சிவஞானசுந்தரம், திரு. கே. வி. குணசேகரம், திரு. சி. சித்திரவடிவேல், திரு. வே. பாலசுப்பிரமணியம் ஆகியோர் வரிசையில் தற்போது திரு. ஆ. சு. சற்குணராசா கடமையாற்று கின்றார். இவர்களது வழிகாட்டலையும், ஆலோசனைகளையும் முழு

மனதாக ஏற்று மதிப்பளித்து வருகின்றேன். இவை எமது பாடசாலையின் வளர்ச்சியின் மைல் கல் எனக் கருதுகின்றேன். நான் பொறுப்பேற்ற காலம் தொடக்கம் 21.07.2010 வரை திருமதி. பவானி தியாகலிங்கம் பிரதி அதிபராகக் கடமையாற்றினார். பாடசாலையில் எனது தலைமைத்துவத் துக்கும் நிர்வாக செயற்பாடுகளுக்கும்பக்க பலமாயிருந்தார். ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆலோசனைகளையும், பொருத்தமான வழிகாட்டலையும் அவ்வப்போது எடுத்துரைப்பார். நேரசூசிக்கு ஏற்ப கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளையும் தங்குதடையின்றி மேற்கொள்வார். இணைபாட விதானச் செயற்பாடுகளிலும் மிகுந்த ஆர்வமுடையவர். அரச சுற்று நிருபத்துக்கு அமைவாக இடமாற்றம் வழங்கப்பட்ட போது அதற்கு மதிப்பளித்து உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்று விட்டார். எனினும் இன்றுவரை அவரை மதிக்கின்றேன். அவர் எனக்கு வழங்கிய நிர்வாக ஆலோசனைகளையும் வழிகாட்டலையும் நினைத்துப் பார்க்கின்றேன். உள்ளம் பூரிப்படைகின்றது.

எமது வித்தியாலயம் நூறாவது வயதைக் கொண்டாடும் வேளையில் இதன் வளர்ச்சிக்காக உழைத்த உத்தம அதிபர்கள் போற்றுவதற்குரியவர்கள். அந்தவகையில் திரு. ஆ. கந்தையா, திரு. சி. பொன்னுத்துரை, திரு. சு. குமாரசேகரம், திரு. கு. சபாரத்தினம், திரு. க. கதிரவேல் ஆகியோருடன் திரு. ச. கதிரவேலு, திரு. க. நடராசா என்போர் முறையே அவ்வப்போது கடமையாற்றியுள்ளார்கள். (ஆதாரம் - சைவத்தமிழ் வித்தியாலய வைரவிழா மலர். அதிபர் - வி. அரியநாயகம்) 1975க்கு பின் திரு. வி. அரியநாயகம், ஆசிரியமணி. அ. பஞ்சாட்சரம், திருமதி. சகுந்தலாதேவி பரங்கிரிநாதன், செல்வி சின்னத்தம்பி, திருமதி. ஸ்ரீபவானந்தன் ரங்கநாயகி (பதில் அதிபர்) திரு. அ. ஈஸ்வரநாதன், திரு. சு. யோகராசா, திருமதி. ப. தியாகலிங்கம் (பதில் அதிபர்) திரு. சிவகடாட்சம் ஆகியோர் கடமையாற்றியுள்ளார்கள். தற் போது யான் கடமையாற்றுகின்றேன். இவ்வாய்ப்பை எண்ணி மனம் பூரிப்படைகின்றது.

இடைக்காடு திரு. ஆ. கந்தையா இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் அதிபராகவிருந்து கல்விச் சமூகத்தின் பேரபிமானத்துக்கு காத்திரமாய் உழைத்திருக்கின்றார். பாடசாலையை நேசித்ததுடன் இந்துக் கல்லூரி அதிகார சபையின் பெரும் பாராட்டுக்களையும் பெற்றவர் என அறிய வருகின்றது. அவரின் தூய்மையான உழைப்பின் பயனே வித்தியாலயத்தின் வளர்ச்சிக்குத் தளமாக அமைந்துள்ளது.

திரு. சி. பொன்னுத்துரை அவர்கள் ஆசியராய், அதிபராய் மூன்று தலை முறைக்கு அறிவூட்டிய பெருமைக்குரியவர். பாடசாலையின் வளர்ச்சியில் அதிக அக்கறையுடையவர். பாடசாலையில் அதிக கட்டடங்கள் அமைப்பதற்கு வழிகோலியவர். பாடசாலையிலுள்ள நாடகமேடை இன்றும் "பொன்னுத்துரை கலையரங்கு" என்ற நாமத்தை சூடியுள்ளமை மகிழ்ச்சிக்குரியது.

திரு. சு. குமாரசேகரம் நிமிர்ந நடையும் நேரான பார்வையும் கம்பீரமான தோற்றமுமுடையவர். நெற்றிக் கண்ணைக் காட்டிலும் குற்றம் குற்றமே என்ற நக்கீரர் பரம்பரையைச் சேர்ந்தவர். இவருடைய காலத்தில் கட்டிட வளர்ச்சி உன்னத நிலையை அடைந்து பரீட்சைப் பெறுபேறுகளும் வளர்ச்சியடையத் தொடங்கியது. இவருடைய காலம் பொற்காலம் எனக் கூறப்படுகின்றது.

திரு. கு. சபாரத்தினம், திரு. க. கதிரவேலு, திரு. ச. சடராஜா ஆகிய இவர்கள் குறைவான காலங்களே அதிபராகக் கடமையாற்றியுள்ளனர். எனினும் தமது காலப்பகுதியில் பாடவிதான, இணைப்பாடவிதான செயற்பாடுகளில் நிறைந்த சேவையைச் செய்துள்ளார்கள்.

திரு. வி. அரியநாயகம் இவ்வித்தியாலயத்தின் வைரவிழாக்கால அதிபர் என்ற சிறப்புக்குரியவர். பாடசாலையின் பாடவிதான, இணைபாட விதானம் ஆகியவற்றில் சிறந்த கவனத்தைச் செலுத்தியுள்ளார். இப் பாடசாலையின் ஆங்கிலக் கல்வியின் அபிவிருத்திக்கு அச்சாணியாகச் செயற்பட்டவர். இவரது தலைமையில் வைரவிழா நடைபெற்றதுடன் வைரவிழா சிறப்புமலர் வெளியிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

ஆசிரியமணி. அ. பஞ்சாட்சரம் 03.09.1951 - 12.11.1987 வரை 37 வருடங்கள் இப்பாடசாலையில் ஆசிரியராய், துணை அதிபராய், அதிபராய் கடமையாற்றிய போற்றுதற்குரியவர். இக்கிராமத்தவர்களால் பெரிதும் மதிக்கப்படுபவர். வைரவிழா மலர் சிறப்புற வெளிவர உழைத்ததுடன் அக்காலத்தில் துணை அதிபர் பதவியை அலங்கரித்த பெருமைக்குரியவர்.

திருமதி. சகுந்தலாதேவி பரங்கிரிநாதன் 1950 - 1989 வரை 39 வருடங்கள் இப்பாடசாலையில் ஆசிரியராக, துணை அதிபராக, அதிபராக

கடமையாற்றியிருந்தார். முதல் பெண் அதிபராகக் கடமையாற்றிய பெருமைக்குரியவர். இவர் பாடசாலையின் சகல துறைகளிலும் ஒத்துழைப்பு வழங்கியதுடன் ஓய்வின் பின்பும் பாடசாலையின் வளர்ச்சிக்குக் காலத்துக் காலம் ஒத்துழைப்பை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

செல்வி. அ. சின்னத்தம்பி **01.02.1976**ல் விஞ்ஞான ஆசிரியராக இடமாற்றலாகி வந்தார். உப அதிபராக கடமையாற்றிய இவர் **1989**ல் அதிபராகக் கடமையேற்றார். அனைவரது ஒத்துழைப்புடனும் பாடசாலையை திறம்பட நடாத்தி வந்தார். இவரது தலைமையில் பாடசாலையின் பவளவிழா சிறப்பாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதுடன் பவளவிழா மலர் வெளியிடப்பட்டமையும் சிறப்புக்குரியது.

திரு. அ. ஈஸ்வரநாதன் அவர்கள் இடர் நிறைந்த காலப்பகுதியில் சுடராக செயற்பட்டவர். பாடசாலையில் “பிச்சை புகினும் கற்கை நன்றே” என்ற அமுத வாக்கிற்கொப்ப பாடசாலையின் கல்விச் செயற்பாடுகள், இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் வீறுநடை போட்டுள்ளமை சிலாகிக்கத்தக்கது. இன்றுவரை தேவையான ஆலோசனைகளை நான் நாடி நிற்கும் போது பொருத்தமான ஆலோசனைகளை வழங்கி வருகின்றார். இவரது சேவையின் உன்னதம் தற்போது தெல்லிப்பளை கோட்டத்தில் மிளிர்கின்றது. ஆசிரியப்பணியில் ஆரம்பித்து கோட்டக் கல்விப் பணிப்பாளராய் கடமையை நிறைவு செய்யவுள்ளமை மகிழ்ச்சிக்குரியது.

திருமதி. ஸ்ரீரங்கநாயகி பவானந்தன். இவ்வித்தியாலத்தின் பழைய மாணவியாகிய இவர் இங்கு நீண்ட காலம் ஆசிரியராகவும், குறுகிய காலம் பதில் அதிபராகவும் கடமையாற்றியுள்ளார். ஓய்வு பெற்ற பின்பும் பாடசாலை வளர்ச்சியில் அதிக அக்கறையுடன் இன்றுவரை செயற்பட்டு வருகின்றார்.

திரு. சு . யோகராசா இவருடைய சேவைக்காலம் பாடசாலையின் பௌதீக பாடவிதான இணைப்பாடவிதான செயற்பாடுகளின் உன்னத வளர்ச்சியில் போற்றுவதற்குரிய காலம் எனக் கருதப்படுகின்றது. பௌதீக வளத் தேவைகள் இவரது முயற்சியினால் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகளின் அனுசரனையுடன் மேற்கொள்ளப்பட்டமை தெரிய வருகின்றது. நாட்டுச் சூழ்நிலையும் வாய்ப்பாக அமைந்தமை இவரின் செயற்பாடுகளுக்கு உவப்பாக அமைந்தது.

திருமதி. பவானி தியாகலிங்கம் அவர்கள் அதிபர்கள் இடமாற்றத்தின் பின்பு புதிய அதிபர் நியமனம் வரையுள்ள இடைக்காலப் பகுதியை தற் துணிவுடன் பொறுப்பேற்று பாடசாலைச் செயற்பாடுகளில் தொய்வுநிலை ஏற்படாத வகையில் அதிபர் பணியை அலங்கரித்து அனைத்துத் தரப்பி னரதும் பாராட்டைப் பெற்றவர். இவரது காலம் நாட்டில் அசாதரண சூழ் நிலை தாண்டவமாடிய காலம். தற்துணிவுடன் பதவியை வழி நடத்தி யுள்ளார். இவரது காலம் வரலாற்றில் போற்றுதற்குரியது. திரு. நெ. சிவகடாட்சம் அவர்களது சேவைக்காலம் குறுகியதாக அமைந்தாலும் பாடசாலைச் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்கவை.

1915ம் ஆண்டு ஆரம்பம் முதல் இன்றுவரை வரலாறு கூறப்பட்ட போதிலும் 1945 முதலான அதிபர்களின் சேவைக்காலம் மட்டுமே ஆவணங்களுடன் எமக்குக் கிடைத்துள்ளன. தற்போதைய நிலையிலும் பாடசாலை உன்னதமாக வீறு நடை போடுகின்றது. இந்நிலைமை எந்நாளும் தொடர்ந்திட இறை அருள் துணைநிற்கப் பிரார்த்திப்போம்.

பாலசுப்பிரமணிய ஆலயம்

பாலசுப்பிரமணியரை வணங்கி வரலாற்றை எழுதத் தொடங்கு கிறேன். பாடசாலை வளாகததில் அமைந்துள்ள மண்டபத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. அவரது அருளாசி எங்கள் எல்லோரையும் மேன்மைப் படுத்துவதாக உணர்கிறோம். பாடசாலையின் மேம்பாட்டில் அதிக அக்கறையுடையவரான திரு. அ. இளையதம்பி அவர்களின் உயரிய சிந்தனைக் கருவூலத்தின் இவ்வாலயம் அமைக்கப்பட்டது. மலேசியாவில் உயர்ந்த உத்தியோகத்தை வகித்துவந்த இவர் ஒய்வு பெற்று ஊர் வந்த போது இந் நடவடிக்கையை மேற்கொண்டார். இவருக்கு ஒத்தாசையாக மலாயன் பென்சினியர் திரு. இ. சிவகுரு இருந்துள்ளார். இவ்வாலயத்தின் தினசரி பூசையும் விசேடகாலத்தில், விசேட பூசையும் நடைபெறுவதுண்டு. வருடந்தோறும் இந்துமன்றத்தின் செயற்பாட்டில் ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்படுவதுண்டு. 2008ம் ஆண்டு தொடக்கம் தேய்பிறையில் ஷஷ்டி திதியில் அதிபர், ஆசிரியர்களின் பங்களிப்புடன் சங்காபிஷேகம் நடைபெற்று வருகின்றது. இது தங்குதடையின்றி எக்காலத்திலும் தொடர அவர் அருளை வேண்டி நிற்கின்றேன். உற்சவத்தை கற்பகப் பிள்ளையார் ஆலய பிரதமகுருவே நடத்தி வைப்பார். பாலசுப்பிரமணியரின் அருட் கடாட்சம் பாடசாலையெங்கும் பரவியுள்ளது.

எனினும் இடவசதிகளற்ற நிலையில் நெருக்கமான வகுப்பறைகளுக்கு நடுவே இவ்வாலயம் அமைந்துள்ளது. சமய விதிகட்கு பொருத்தமானதல்ல. ஆலயச் சூழலை உரியமுறையில் பேணமுடியாதுள்ளமை ஆரோக்கிய மானதல்ல என்பதை உணர்கின்றோம். எனவே சிறிய கோயில் ஒன்றை அமைத்து பிரதிஷ்டை செய்யலாம் என தீர்மானித்துள்ளோம். வெகு விரைவில் எமது எண்ணம் ஈடேற இறையருளையும், திருவருளையும் வேண்டி நிற்பதுடன் பரோபகாரிகளின் உதவியையும் எதிர்பார்த்து நிற்கின்றோம்.

கல்விச் செயற்பாடுகள்

ஒருபாடசாலையின் பெயரை சமூகத்தில் நிலைக்கச் செய்வதிலும் மிளிரச் செய்வதிலும் கல்விச் செயற்பாடுகளே முக்கிய பங்கினை வகிக்கின்றது. அதன் குறிகாட்டிகளில் பொதுப்பரீட்சையே உயர்ந்து நிற்கின்றமை யாவரும் அறிந்ததே. தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையிலும் பாராட்டதக்க பெறுபேறுகளைக் காட்டி வருகின்றது. அதே போன்று க.பொ.த சாதாரண தரப் பரீட்சையிலும் மிளிர்ந்து நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது. 2011ல் செல்வி செ. லறினா 8ஏ, பி யையும், 2012ல் செல்வன். சுதர்சன் 9ஏ யையும், செல்வி சி. திலச்சனா 8ஏ, பி யையும் பெற்றனர்.

ஆயினும் பெற்றோர் மத்தியில் நகரப்பாடசாலைகளின் கவர்ச்சி தற்போது அதிகரித்து வருகின்றது. இதனைத் தடுப்பது இலகுவான தொன்றாகத் தெியவில்லை. இந்நிலை யாவரும் அறிந்ததே. இந்நிலை கிராமப்புற பாடசாலைகளில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. இது எமது பாடசாலைக்கும் பொருந்தும். மறுபுறம் நகர்ப்புறங்களில் வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள முடியாத 1149 மணவர்களைத் தாங்கி எமது பாடசாலை கல்விப் பணியாற்றி வருகின்றது. மாணவர்களின் எண்ணிக்கைக் கேற்ப பௌதீக வளங்கள் அற்ற நிலையில் உள்ள வளங்களைப் பயன்படுத்தி உச்ச வளத்தை வழங்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலுள்ளோம். கல்வித் திணைக்களமும், நடைமுறைக்கமைவாக வளப்பங்கீட்டைத் தந்துதவியது. இனியும் தந்துதவும் என்ற நம்பிக்கையுண்டு. 2015ம் ஆண்டில் நூற்றாண்டு விழா மண்டபம் (மாடிக் கட்டடம்) ஒன்று கட்டப்பட்டு மாகாணக் கல்வி அமைச்சர் தம்பிராசா குருகுலராசா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மாடிக்கட்டிடத்தின் கீழ்ப் பகுதி விஞ்ஞான ஆய்வு கூடமாகவும், மேல்பகுதிஒன்றுகூடல் மண்டபமுமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

பாடசாலையின் நிலையை அறிந்த அமைச்சர் அவர்கள் 125 அடி நீளமான மாடிக் கட்டிடம் ஒன்றை தந்துதவுவதாக குறிப்பிட்டமையை பாடசாலைச் சமூகம் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது. இது நிறைவேற அனைத்துத் தரப்பினரதும் பங்களிப்பையும், ஒத்துழைப்பையும் நாடி நிற்கின்றோம். நீண்ட காலமாக விஞ்ஞான கூடம் இல்லாத நிலையில் விஞ்ஞான கூடத்திற்கான மண்டபத்தை சிபாரிசு செய்து ஆற்றுகைப் படுத்திய முன்னாள் யாழ்வலய கல்விப்பணிபாளரும், ஓய்வுநிலைக் கல்விப் பணிப் பாளருமாகிய திருமதி. அ. வேதநாயகம் அவர்களையும், மேல்மாடிக் கட்டிடத்தை சிபாரிசு செய்து ஆற்றுகைப்படுத்திய முன்னாள் யாழ் வலயக் கல்விப்பணிப்பாளரும் இந்நாள் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளருமான திரு. செ. உதயகுமார் ஆகியோரையும் பாடசாலைச் சமூகம் நன்றியுடன் வாழ்த்துகின்றது. திட்டமிடல் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. இரவீந்திரநாதன் அவர்களுக்கும் நன்றியைச் செலுத்துகின்றது. யாழ் வலயத்தின் கணிதபாட வளநிலையம் எமது பாடசாலையின் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இதற்கான வாய்ப்பை ஏற்படுத்திய பழைய மாணவரும் ஓய்வு பெற்ற கணித பாட பிரதிக் கல்விப் பணிப்பாளருமான திரு. S.V. மகேந்திரன் அவர்கட்கும் நன்றியை தெரிவிக் கின்றது.

பாடசாலையின் பரீட்சைப் பெறுபேறுகளை பொறுத்த வரையில் வீதம் போதுமானவை அல்ல என்பதை உணர்கின்றோம். அதை உயர்த்துவதற்கான செயற்பாடுகளை வலுவூட்டி வருகின்றோம். இதில் பெற்றோரின் ஆதரவையும், பங்களிப்பையும் எதிர்பார்க்கின்றோம். கோட்டக் கல்வி அலுவலகம், வலயக் கல்வி அலுவலகம், மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஒத்தாசையை நாடுகின்றோம். எனினும் இவ்விடயத்தில் எமது முயற்சிகள் தொடரும். எமது பலத்தினால் பலவீனத்தை இல்லாமல் செய்ய உறுதி பூணுகின்றோம்.

பாடசாலையின் வளர்ச்சிப் பாதையில்...

"மனித நேயமிக்க மாணவ சமுதாயத்தை உருவாக்கி சமூகத்துக்கு ஒப்படைப்போம்" என்ற இலக்கை நோக்கி கரடுமுரடான பாதைகளைத் தாண்டிப் பாடசாலையின் வளர்ச்சிப்போக்கில் பயணித்துக் கொண்டிருக் கிறோம். நூற்றாண்டு விழாவின் இக்காலப்பகுதியில் சமூகத்தின் அரவணைப்பும் ஆதரவும் வலுவூட்டப்படுகின்றது. இச் செயற்பாடுகள்

கோடை மழையாக எம்மைக் குளிரச் செய்கிறது ஆயின் மாரி மழையாக இது தொடர வேண்டும் என்பது எமது அவா. நூறு வயதைத் தாண்டும் எம் வித்தியாலத்திற்கென விளையாட்டு மைதானம் இல்லாத போதும் விளை யாட்டுத் துறையில் இவ்வாண்டில் பல சாதனைகளை நிலைநாட்டியுள் ளோம். 2014ல் முதன் முதலாக உடற்கல்வி ஆசிரியராக திரு செ. யோகேஸ்வரன் நியமிக்கப்பட்டார். அதே ஆண்டு 19வயதுக்குட்பட்ட பெண்கள் எல்லை அணியினர் மாகாணமட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றனர். ஆசிரியர் பயிற்சிக்காக இவர் சென்ற பின் 2015ல் திரு. பா. பாஸ்கரன் நியமிக்கப்பட்டார். இடைக்காலத்தில் தமிழ்ப் பாட ஆசிரியர் திரு. இ. இராஜ்குமார் இப்பணியை (உடற்கல்வி) ஏற்றுக் கொண்டார். இவர்களின் அயராத உழைப்பினால் அதே அணியினர் இவ்வாண்டில் தேசிய மட்டப் போட்டிக்கு தகுதி பெற்றனர். கரப்பந்தாட்டத்தில் 13வயதுப் பெண்கள் மாகாண மட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளனர். தட்டெறிதல் போட்டியில் செல்வி. இ. தர்சி தேசியமட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளார். அனைத்து வீராங்கனைகளும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட பெற் றோரின் பிள்ளைகளே. இவர்களின் வெற்றி எம்பாடசாலையின் செயற் பாட்டிற்கு மகுடம் வைத்துள்ளது. எல்லே பயிற்சிக்காக எம்முடன் சிநேக பூர்வ போட்டியில் பங்குபற்றி உற்சாகப்படுத்திய யாழ் பல்கலைக்கழக அணியினருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். இதற்கான மைதானத்தை தந்துதவிய உரும்பிராய் இந்துக்கல்லூரி அதிபர் திரு. அ. அருணந்திசிவம் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் எதிர்காலத்திலும் எதிர்பார்க்கின்றோம். மேலும் உதவிகளை புலம் பெயர்ந்த பழைய மாணவர்களிடமிருந்தும் ஆவலோடு எதிர்பார்க் கின்றோம்.

இலங்கை குத்துச் சண்டை சங்கத்தால் நடாத்தப்பட்ட தேசியமட்டக் குத்துச் சண்டைப் போட்டியில் (BASL) 15 வயது ஆண்கள் பிரிவில் 66 - 70 Kg எடைப்பிரிவில் இரண்டாம் இடத்தைப் பெற்று அ. டெனிசன் வெள்ளிப் பதக்கத்தையும் 80 Kg மேற்பட்ட எடைப்பிரிவில் கு. டிலக்சன் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கத்தையும் பெற்றுள்ளனர். விளை யாட்டுத்துறையில் பெண்கள் அணிக்கு ஒத்துழைப்பு நல்கி வரும் திருமதி. பி. விக்ரோறியா, திருமதி எமிலி கிறிஸ்ரின், செல்வி. சு. ராஜினி ஆகியோரையும் பாராட்டுகிறேன்.

புத்தாக்கப் போட்டியில் செல்வன் சி. சிறிதரன் மாகாண மட்டப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளார். இதே மாணவன் சுகாதாரப் பிரிவினரால் நடாத்தப்பட்ட போட்டியில் டெங்கு நோய்க்கான மூலிகை மருந்து ஒன்றைக் கண்டு பிடித்து அனுப்பியுள்ளார். இம்மருந்து தற்போது ஆய்வுக்குட்படுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச விருதைப் பெற்றுள்ள (2015 - 2018) இணைப்பாளர் திருமதி . நித்திலா தர்மசீலன், உதவி இணைப்பாளர் திருமதி தவச்செல்வி நவகாந்தன், திருமதி ராதிகா விக்கினேஸ்வரன் ஆகியோரைப் பாராட்டுகிறேன் அத்துடன் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பை நல்கிய ஆசிரியர்களையும் கல்விசாரா ஊழியர்களையும் பாராட்டுகின்றேன்.

மன்றங்கள்

மாணவர்களிடையே புதைந்து கிடக்கும் பல்வகைப்பட்ட திறன்களை வெளிக்கொணரும் வகையில் பாடத்துறை சார்ந்த மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்துமா மன்றம்

இம்மன்றத்தின் மூலம் மாணவர்கள் மத்தியில் சைவப்பாரம்பரிய ஒழுக்க நெறிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் பூசை ஆராதனைகளும் சிவபுராணம், பஞ்சபுராணங்கள் பண்ணுடன் இசைக்கப்பட்டு வருவதுடன் நாயன்மார் குருபூசை, வருடாந்த கும்பாபிஷேக தினம், நவராத்திரிதினங்களில் மாணவர்களிடையே பிரிவு ரீதியாக பண்ணிசை, மாலைகட்டுதல், தோரணம் பின்னுதல் போன்ற போட்டிகள் நடாத்தப்பட்டு விஜயதசமி தினத்தில் பரிசில்கள் வழங்கல் போன்றனவும் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இம் மன்றத்தின் வழிகாட்டலுடன் பேச்சுப்போட்டி, பண்ணிசைப்போட்டி போன்ற கோட்ட, வலய மட்டங்களில் பங்குபற்றி வெற்றியீட்டியமையும் குறிப்பிடத்தக்கது.

தமிழ் மன்றம்

இது மூன்று பிரிவாக தரம் 1 -5, தரம் 6 - 8, தரம் 9 - 11 வரை என மூன்று பிரிவுகளாக நடாத்தப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு மாணவருக்கும் சந்தர்ப்பம் அளிக்கும் வகையில் நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டு பொறுப் பாசிரியர்களால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. வருடம் தோறும் தமிழ்தினப் போட்டி, கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள், கவிதை, நாடக போட்டிகளிலும் மாணவர்கள் கோட்டம், வலயம் ஆகிய மட்டங்களில் பங்குபற்றி வெற்றி பெற்று வருகின்றமை பாராட்டுக்குரியது.

வணிகமன்றம்

தரம் 10ற்கு மேற்பட்ட வணிகத்துறை சார்ந்த மாணவர்களை உள்ளடக்கியதாக இம் மன்றம் அமைக்கப்பட்டுள்ளது. வணிகப் போட்டிகளை பாடசாலையில் நடாத்துவதோடு மட்டுமல்லாது வெளி யிடங்களிலும் வணிகத்துறை சார்ந்த போட்டிகளில் மாணவர்களை பங்கு கொள்ளச் செய்து மாணவர்கள் சான்றிதழ்களும் பரிசில்களும் பெற்றுள் ளமை குறிப்பிடத்தக்கது.

தொழிநுட்ப மன்றம்

மாணவர் மத்தியில் படைப்பாற்றல்களை வளர்ப்பதே இம் மன்றத்தின் நோக்கமாகும். பாடசாலையில் விவசாயத் தோட்டம் உருவாக்கப்பட்டு பராமரிக்கப்படுவது போன்ற பல செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. வெளியிடங்களிலிருந்தும் பாடம் சார்ந்த நிபுணத்துவ சேவையினர் வரவழைக்கப்பட்டு மாணவர்களுக்கு பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. பலவகையான போட்டிகளிலும் பங்கு பற்றி மாணவர்கள் பரிசில்கள் பெற்றுள்ளனர்.

சுகாதாரமன்றம்

மாணவர்கள் மத்தியில் சுய சுத்தம், புறச் சுத்தம் என்பன பேணப்பட வேண்டியதன் அவசியத்தை இம்மன்றத்தின் மூலம் வலியுறுத்தப்படு கின்றது. அவ்வப்போது சுகாதார பரிசோதகர்கள் வரவழைக்கப்பட்டு மாணவர்கள் பரிசோதிக்கப்படுவதுடன் பொருத்தமான சிகிச்சை முறை களும் வைத்திய ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்

ஆசிரியர்களிடையே நட்புறவையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்தி சுமூகமான ஆக்கச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்குடன் ஆசிரியர் நலன்புரிக் கழகம் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் ஆசிரியர் இடமாற்றம், ஓய்வு பெறுதல், பதவியுயர்வு ஆகிய நிகழ்வுகளின்போது சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் கௌரவிக்கப்படுகின்றார்கள். வருடந்தோறும் பொதுக் கூட்டம் கூட்டப்பட்டு நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படு வார்.

கணித விஞ்ஞான மன்றம்

இம் மன்றம் மாணவர் மத்தியில் பலதரப்பட்ட கணிதசார், விஞ்ஞானம் சார் போட்டிகளை நடாத்தி கணித விஞ்ஞான மேம்பாட்டிற்கு உழைத்து வருகின்றது. பாடசாலை மட்டத்தில் வினைத்திறனான செயற்பாட்டினால் எமது மாணவர்கள் கோட்ட, வலய, மாகாண, தேசிய மட்டங்களில் பங்குபற்றி வெற்றி பெற்றுள்ளனர்.

சமூகக்கல்வி மன்றம்

பாடம் சம்பந்தமான அறிவை வளர்த்துக் கொள்வதோடு மாணவர் மத்தியில் பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் இம்மன்றம் செயற்பட்டு வருகின்றது. இம்மன்றத்தின் வழிகாட்டலுடன் கோட்ட, வலய மட்டங்களில் மாணவர்கள் பங்கு பற்றி வெற்றி பெற்றுள்ளனர்.

கவின் கலை மன்றம்

சித்திரம், சங்கீதம், நடனம் ஆகிய கலைத்துறை சார்ந்த தரம் ஆறுக்கு மேற்பட்ட மாணவர்கள் இம்மன்றத்தில் அங்கம் வகிக்கின்றனர். கல்வித் திணைக்களம் மற்றும் பொது அமைப்புக்கள் என்பவற்றால் நடத்தப்படும் கவின் கலைசார் போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆங்கில மன்றம்

மாணவர்களுக்கு ஆங்கில மொழிப்பயிற்சி அளிப்பதே இம் மன்றத்தின் நோக்கமாகும். பாடசாலை மட்டத்தில் ஆங்கிலதினப் போட்டிகள் நடத்தப்பட்டு பாடசாலை மட்டத்தில் தெரிவு செய்யப்படும்

மாணவர்கள் கோட்ட வலயமட்டம் ஆகிய நிலைகளில் பங்குகொள்வதற்கான பயிற்சிகளை இம்மன்றப் பொறுப்பாசிரியர்களே வழங்கி வருகின்றனர்.

உடற்கல்வி மன்றம்

மாணவர் மத்தியில் இருக்கும் பல்தரப்பட்ட திறன்களை வெளிக்கொணரும் வகையில் திறம்படச் செயலாற்றுகின்றது. விளையாட்டு மைதானம் இல்லாத போதும் இம் மன்றம் பொறுப்பாசிரியர்களின் வழிகாட்டல்களின் கரப்பந்தாட்டம், தட்டெறிதல், எல்லே, குத்துச் சண்டை, பெண்கள் துடுப்பாட்டம் ஆகிய விளையாட்டுக்கள் கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம், தேசிய மட்டம் வரை செல்வதற்கும் தகுதி பெற்றுள்ளமை மகிழ்ச்சிக்குரியதாகும்.

கணினி மன்றம்

மாணவர்களுக்கு கணினித்துறையில்அடிப்படை அறிவை வழங்கும் நோக்கத்தோடு இம்மன்றம் அமைக்கப்பட்டது. ஆரம்பக் கல்வி மாணவர்கள், தரம் 6க்கு மேற்பட்ட மாணவர்கள் என்ற வகையில் கணினிச் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. இவ் கணினிச் செயற்பாடுகளில் மாணவர்கள் மிகவும் ஆர்வத்துடன் பங்குபற்றி வருகின்றனர்.

கிறிஸ்தவ மன்றம்

இம்மன்றத்தின் மூலம் மாணவர் மத்தியில் கிறிஸ்தவ ஒழுக்க நெறிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் வழிபாடுகள் நிகழ்த்தப்பட்டு வருகின்ற. இம்மன்றத்தின் வழிகாட்டலுடன், மாணவர்கள் பலவகையான சமய அறிவுப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்றுள்ளார். ஆண்டு தோறும் ஒளிவிழா நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நிறைவுரை

இங்கு எனது சேவைக்காலத்தில் பாடசாலை வளர்ச்சிக்காக தோளோடு தோள்கொடுத்து பக்கபலமாகச் செயற்பட்ட பிரதி அதிபர்களான திருமதி. ப. தியாகலிங்கம், திரு. மா. சிறிகாந்தன், உப அதிபர் திருமதி. மா. அரியானந்தம், பகுதித் தலைவர்கள் திருமதி கல்யாணி கலாமோகன்,

திருமதி. கௌரி தயாபரன், திரு. பா. சத்தியநாதன், திரு. வி. கனகராசா, திருமதி. செ. பரமலிங்கம், மற்றும் பாட இணைப்பாளர்கள், பாட ஆசிரியர்கள் கல்வி சாரா உத்தியோகத்தர்கள் திரு. த. தயாளன், திரு. ச. யுகபாலா, திரு.இ. பிரதீபன் திரு. ந. முரளிதரன், திரு.சி. சிவநோசன் ஆகியோரின் பங்களிப்பை மதிக்கின்றேன். நன்றிகளை நவில்கின்றேன். இவர்களின் எதிர்காலம் சிறந்திட வாழ்த்துகின்றேன். சேவை நிறைவு செய்த திருமதி. மா. அரியானந்தம், திருமதி. தி. கணேசலிங்கம், திரு. வி. கனகராசா ஆகியோரின் ஒத்துழைப்பை மதிக்கின்றேன்.

பாடசாலைச் செயற்பாடுகளுக்குப் பக்கபலமாக ஒத்தாசை நல்கும் பாடசாலை அபிவிருத்திக்குழு, பழைய மாணவ சங்கத்தினர் அனைவருக்கும் நன்றி கூறுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். நிறைவாக நூற்றாண்டு விழா செயற்பாடுகளுக்குத் துணைநிற்கும் அனைத்துத் தரப்பினருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

யா/ சைவத்தமிழ் வித்தியாலய அதிபர், ஆ

ர், ஆசிரியர் மற்றும் ஆளணியினர் - 2015

STAFF LIST - 2015

NO	NAME	PROFESSIONAL QUALIFICATION	GRADE
01.	Mr. Muthusamy Vikneswaran	Trd. Pri, B.A, P.G.D.E	SLPS - I
02.	Mr. Markandu Srikanthan	Trd. Sci, B.Ed	SLTS - II
03.	Mr. Pakiyanathan Sathiyanathan	B.Ed, Trd	SLTS - 2 - II
04.	Mrs. Senthilnayaki Paramalingam	Trd. Tamil	SLTS - 2 - II
05.	Mr. Ponniah Kathirkamavasan	Trd English	SLTS - 2 - II
06.	Mr. Mathiyaparanam Ragunathan	Trd. Agri, BA, M.Ed	SLTS - 2 - I
07.	Mrs. Vijayaladsumy Premakumar	Dip in Teach (PTS)	SLTS - 2 - I
08.	Mrs. Kiruvakini Kokulan	B.Com, Dip in Edu	SLTS - 2 - II
09.	Mr. Nadarajah Ramanan	Trd Maths	SLTS - 2 - II
10.	Mrs. Arunthavachelvi Sivakaran	B.com, Dip in Edu	SLTS - 2 - II
11.	Mrs. Sooriakumary Sriswaran	Trd. Pri	SLTS - 2 - II
12.	Mrs. Sujitha Ramanitharan	B.F.A, Dip in Edu	SLTS - 2 - II
13.	Mr. Nadarajah Balachandran	Trd. Commerce	SLTS - 2 - II
14..	Mr. Kunapalan Satheeskumar	Trd. Maths, B.Ed	SLTS - 2 - II
15.	Mrs. Saraswathy Rasanagam	Trd. Primary, B.Ed	SLTS - 2 - I
16.	Mrs. Nirmala Maheswaran	Trd. Primary	SLTS - 2 - I
17.	Mrs. Thayaranjini Pathmanathan	Trd. Home Eco	SLTS - I
18.	Mrs. Vasanthakumary Kamalachanran	B.A, Dip in Edu	SLTS - I
19.	Mrs. Jenatha Balasingam	Trd Music, Dip in Mu	SLTS - I
20.	Mrs. Malini Thanarasa	Trd Primary	SLTS - I
21.	Mrs. Thavachelvi Navakanthan	B.Com, Dip.In. Edu	SLTS - 2 - II
22.	Mrs. Ushajini Kumanan	Trd. Hindusium	SLTS - 2 - II
23.	Mrs. Agalya Santhiratheva	Trd. Primary	SLTS - 2 - II
24.	Mrs. Sakila Mayuran	B.F.A	SLTS - 2 - II
25.	Mr. Maylvaganam Sivalingam	B.A Dip In Edu	SLTS - I

NO	NAME	PROFESSIONAL QUALIFI	GRADE
26.	Mrs. Victoriya Elvis Presly	B.A, Dip in Edu	SLTS - 2 - I
27.	Mrs. Thiruveni Krishnamenan	B.Ed, Dip. in. Teach. Ma	SLTS - 2 - II
28.	Mrs. Manohari Kamalraj	B.A.(Hons) Dip. in. Edu	SLTS - 2 - II
29.	Mrs. Rathika Vickneswaran	B.A. Dip in Edu	SLTS - 2 - II
30.	Mrs. Rajitha Dominic Jeeva	B.A, Dip. in Edu	SLTS - 2 - II
31.	Mrs. Sithira Mahendran	Bsc, Dip in Edu	SLTS - 2 - II
32.	Miss. Rajini Subramaniam	B.A (Hons), Dip in Edu	SLTS - 2 - II
33.	Mrs. Thamilny Rajeswaran	B.A Dip in Edu	SLTS - 2 - II
34.	Mrs. Sivajini Lavanan	B.A Dip in Edu	SLTS - 2 - II
35.	Mrs. Ilangeswary Kuganathan	Trd Hindusium	SLTS - 2 - II
36.	Mr. Thangavadivel Senthooran	Bit, Dip in Teach	SLTS - 3 - I
37.	Mrs. Emly Christene Kanagarajah	Trd. English	SLTS - 3 - I
38.	Mrs. Selvaranjini Sritharan	Spc.Trd com	SLTS - 2 - I
39.	Mr. Rasenthiram Rajkumar	Dip in Teach Tamil	SLTS - 3 - I
40.	Mrs. Tharanee Rameshkumar	B.A Dip in Edu	SLTS - 3 - I
41.	Miss. Maheswary Kulanthai	Trd. Primary	SLTS - 2 - II
42.	Mrs. Nithhila Tharmaseelan	BFA (Hons) Dip In Edu	SLTS - 2 - II
43.	Mr. Kayarohanar Sugumar	B.A, Dip In Edu	SLTS - 2 - II
44.	Mrs. Gowri Chandramogan	B.com, Dip In Edu	SLTS - 2 - II
45.	Mrs. Sinthuja Gowreetharan	Dip in Teach	SLTS - 3 - I
46.	Mr. Vellaithamby Ameeilton	B.A, Dip in Edu	SLTS - 2 - II
47.	Mrs Kowshiga Loyds Ignetius	B.IT, Dip in Teach Mat	SLTS - 3 - I
48.	Mr. Murugaiah Sritharan	Bsc Dip in Edu	SLTS - 2 - II
49.	Mrs. Kalavathy Murali	Trd. Hindusium	SLTS - 2 - II
50.	Mr. Vallipuram Navaloganathan	Trd. Sc. Bed	SLTS - 2 - I
51.	Mr. Balasubramaniyam Baskaran	Trd. PEd, B.A, Dip in Edu	SLTS - 2 - II
52.	Mrs. Kavitha Rajeevan	B.A, Dip in Edu	SLTS - 2 - II

NO	NAME	PROFESSIONAL QUALIFI	GRADE
53.	Mrs. Sivanthy Srimathan	B.A, Dip In Edu	SLTS - 2 - II
54.	Mr. Thangeswaran Visakan	B.Sc Dip in Edu	SLTS - 2 - II
55.	Mrs. Nirajini Sitsabesan	B.A, Dip In Edu	SLTS - 2 - II
56.	Mrs. V. Kamalachandiran	B.A, Dip In Edu	SLTS - 2 - II
57.	Miss. Sivalaila Kanthasamy	G.C.E. A/L	Voluted Teac

Non Acadamic Staffs - 2015

NO	NAME
01.	Mr. Thayalan
02.	Mr.S. Yokapalan
03.	Mr. R. Peratheepan

யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய வளர்ச்சிக்கு உழைத்த அதிபர்கள்

திரு. ஆ. கந்தையா
அவர்கள்

திரு. க. கதிரவேல்
அவர்கள்



திரு. சி. பொன்னுத்துரை
அவர்கள்

திரு. கு. சபாரத்தினம்
அவர்கள்

திரு. க. குமாரசேகரம்
அவர்கள்

யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய வளர்ச்சிக்கு உழைத்த அதிபர்கள்

திரு. வி. அரியநாயகம் அவர்கள்

திருமதி சகுந்தலாதேவி பரங்கிரிநாதன் அவர்கள்



திரு. அ. பஞ்சாட்சரம் அவர்கள்

திரு. செ. யோகராஜா அவர்கள்

திரு. ச. கதிரவேலு அவர்கள்

யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் பகுதித் தலைவர்களும், முகாமையாளர்களும்.

திருமதி சி. மகேந்திரன்
நூல்நிலையப் பொறுப்பாளர்

திருமதி செ. பரமலிங்கம்
இடைநிலைப் பிரிவு பகுதித் தலைவர்

திரு. பா. சத்திநாதன்
ஆரம்பப் பிரிவு பகுதித் தலைவர்

திரு. ந. றமணன்
கணிதவள நிலைய முகாமையாளர்

சைவத் தமிழ் வித்தியாலத்தில் எனது அனுபவப் பகிர்வு...

திருமதி.சிறிரங்கநாயகி பவானந்தன்,
பழைய மாணவியும்,
ஓய்வு பெற்ற ஆசிரியரும்.

"தக்கோரும் நில நன்மை, தண்ணீரும் நில நன்மை" என்ற ஆன்றோர் வாக்குக்கிணங்க நன்னீர்க் கிணறுகளும், செல்வம் கொழிக்கும் விவசாய நிலங்களும், பல்வகை கனிதரும் மரங்களும், பூஞ்சோலைகளும், ஆலயங்களும், கல்விக் கூடங்களும் செறிந்து காணப்படும் செம்மண் நிறைந்த கிராமம் உரும்பிராய்.

பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலக் கல்வி மிகவும் அத்தி யாவசியமாக விளங்கியது. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கிறீஸ்தவ பாட சாலைகளை ஆரம்பித்து ஆங்கிலக் கல்வியை ஊட்டுவதோடுமத மாற்றமும் செய்வதற்காக நாடெங்கும் முற்பட்டனர். அவர்கள் அக்காலகட்டத்தில் சைவம் வளர்த்த ஆறுமுக நாவலர் போன்ற பெரியோர்கள் மிகவும் மனம் வருந்திச் சைவ ஆங்கிலப் பாடசாலைகளை ஆரம்பித்தனர். எமது ஊரிலுள்ள கல்விமான்களும், பெருமக்கள் அவர்கள் தம் முயற்சியினாலும் இந்துக் கல்லூரி, இந்துக்கல்லூரி அதிகாரசபை உதவியினாலும் முதலில் உரும்பிராய் இந்துக் கல்லூரியும், பின்னர் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயமும் ஆரம்பிக்கப்பட்டன.

__1915__ம் ஆண்டு உரும்பிராய் இந்துக்கல்லூரி வளவில் புறம்பான கட்டிடத்தில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் இயங்கி வந்தது. அப்போதைய அதிபராக இடைக்காட்டைச் சேர்ந்த திருவாளர் ஆ. கந்தையா அவர்கள் கடமையாற்றினார். திரு வாளர்கள் சி. பொன்னுத்துரை, ஆ.ஏ நவரத்தினம், விசுவலிங்கம், கோ. சதாசிவ ஐயர், பண்டிதர் நவரத்தினம், திருமதி தங்கமணி இராமுப்பிள்ளை, திருமதி இராசலட்சுமி அப்புதுரை என்பவர்கள் உதவி ஆசிரியர்களாகக் கடமையாற்றினர்.

__1944__ல் நான் இப்பாடசாலையில் அரிவரி வகுப்பில் சேர்ந்து ஆரம்பக் கல்வியைக் கற்றேன். ஆசிரியை தங்கமணி நிலத்தில் மணல் பரப்பி மாணவர்

களது கைவிரலை பிடித்து மணலில் ஆரம்ப எழுத்துக்களை எழுதுவித்தமை இன்றும் எனது மனதில் பசுமரத்தாணி போல பதிந்துள்ளது. இட நெருக்கடி காரணமாக உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயத்துக்கு மேற்குப் பக்கமாக இருந்த கோயில் காணியில் பாடசாலையைக் கட்டத் தீர்மானித்தனர். வளவின் கிழக்குப் புறமாக அத்திவாரமிட்டு ஒரு மண்டபம் கட்டப்பட்டது. வேலையாட்களோடு ஆண் ஆசிரியர்களும் சேர்ந்து கஷ்டப் பட்டுக் கட்டினர். மாணவர்களாகிய நாங்களும் ஒடு எடுத்துக் கொடுத்தல் போன்ற சிறிய வேலைகளுக்கு ஒத்தாசை புரிந்தோம். வேலை பூர்த்தி யடைந்ததும் 1949ம் ஆண்டு புதிய பாடசாலையான உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலத்தில் கற்கத் தொடங்கினோம். குடிக்க தண்ணீர் வசதி இல்லாதபடியால் அயல் வீட்டார் தண்ணீர் தந்துதவினர்.

நான் அப்பொழுது ஐந்தாம் வகுப்பில் கற்றுக்கொண்டிருந்தேன். அக்காலத்திலும் புலமைப்பரிசில் பரீட்சை நடத்தப்பட்டது. ஆசிரியர் பொன்னுத்துரை கணிதமும், பண்டிதர் நவரத்தினம் இலக்கணம், இலக்கியமும், ஆசிரியர் ஐயாத்துரை ஆங்கிலமும் கற்பித்தனர்.

வைத்திய கலாநிதி பொ. சிவன்பாலன் உட்பட பதினொரு பேர் பரீட்சைக்குத் தோற்றினோம். ஆசிரியர் பொன்னுத்துரை அவர்கள் தனது வாகனத்தில் ஏற்றி பரீட்சை நிலையத்தக்கு அழைத்துச் சென்றார் அங்கு பரீட்சை எழுதினோம். அவ்வாண்டு சிவன்பாலன் ஒருவர்தான் சித்தியடைந்தார். ஐந்தாம் வகுப்புவரை உள்ள பாடசாலையானபடியால் நான் 1950ம் ஆண்டு உரும்பிராய் இந்துக் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்து ஆங்கில S.S.C வரையும் படித்து சித்தியடைந்தேன். எனது குடும்ப நிலை காரணமாக மேற்கொண்டு படிக்க முடியவில்லை. எனவே வீட்டில் தங்கி தொழில் தேடிக் கொண்டிருந்தேன். என்னிடம் கேட்டுப் படிப்பதற்குப் பிள்ளைகள் வருவார்கள். நானும் ஒய்வு நேரத்தை நன்முறையில் கழித்தேன்.

இந்துக் கல்லூரி அதிகாரசபையினர் உதவியுடனும் அதிபர், பெற்றோர் ஆசிரியர் சங்கப் பிரமுகர்களின் பரிந்துரையினாலும் 1960ம் ஆண்டு யூலை மாதம் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலத்தில் நான் ஆசிரிய நியமனத்தைப் பெற்றேன். திருவாளர் சி. பொன்னுத்துரை அவர்கள் அதிபராக இருந்தார். உனக்கு கற்பித்த ஆசிரியர்களுடன் திருமதி தெய்வநாயகி குழந்தைவேலு, திருமதி பொற்கொடி ஜெகநாதன், திருமதி

ஞானேஸ்வரி சிவசுப்பிரமணியம், திருமதி தங்கரத்தினம் வெற்றிவேலு, திருமதி சகுந்தலாதேவி பரங்கிரிநாதன், திருமதி. சி. தாமோதரம்பிள்ளை, திரு. ச. பொன்னுச்சாமி, திரு. ந. இராசையா, திரு. செ. சின்னத்துரை, திரு.க. அப்புத்துரை, ஆசிரியமணி பஞ்சாட்சரம் என்பவர்கள் சக ஆசிரியர்களாக இருந்தனர்.

ஆரம்ப வகுப்பு எனக்கு கற்பிக்கத் தரப்பட்டது. நான் பயிற்றப்பட்ட ஆசிரியை ஆனபடியால் திருமதி தங்கமணி ஆசிரியருக்கு பக்கத்து வகுப்பு எனக்குத் தரப்பட்டது. அவர் கற்பிக்கும் முறையினைப் பின்பற்றிக் கற்பிக்கும்படி பணிக்கப்பட்டது. கற்பித்தல் முறையினை முதன் முதலில் அவரிடமிருந்து கற்றுக் கொண்டேன். இக்காலத்தில் **1963**ம் வருடம் பாடசாலையை அரசாங்கம் சுவீகரித்துக் கொண்டது. நானும் ஒரு அரசாங்க ஆசிரியர் ஆனேன். இப்படியாக நான்கரை வருடங்கள் கற்பித்தபின் **1965**ம் வருடம் கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலைப் பயிற்சிக்கு **1965 - 1966** கற்று பயிற்சியை முடித்தக் கொண்ட பின் **1967**ம் வருடம் ஜனவரி மாதம் கொ/ விவேகானந்தா மகா வித்தியாலத்தில் நியமனம் பெற்றேன். அங்கு ஆறு வருடங்கள் சேவையைப் பூர்த்தி செய்ததுடன் வெளி மாவட்ட சேவையையம் முடித்துக் கொண்டேன்.

1973ம் வருடம் தை மாதம் யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலத் துக்கு மாற்றம் பெற்று வந்தேன். அப்பொழுது அதிபராக திரு. கதிரவேலு கடமை செய்தார். அக்கால கட்டத்தில் ஒன்றிணைந்த பாடத்திட்டம் அமுலானது. ஆசிரியர் திருமதி ஞானேஸ்வரி, வள்ளியம்மை அவர்களுடன் நானும் நான்கு பிரிவு வகுப்புகளை நடத்தினோம். எங்களின் கற்பித்தல் செயற்பாடுகளைக் கவனிப்பதற்கு வட்டாரக் கல்வி அதிகாரியாக இருந்த திருவாளர் வ. ஈஸ்வரபாதம் அடிக்கடி வருவார். கற்பித்தல் சாதனங்களைச் செய்து காட்டி மாணவர்களைத் திறமையாகச் செயற்படுத்துவதில் அக்கறை செலுத்தி மதிப்பையும் பெற்றோம். கண்காட்சிகளையும் காண்பித்தோம்.

காலத்திற்குக் காலம் பௌதீக வளங்கள் அமைவதற்கும், மாணவர் செயற்பாட்டுக்கு அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், அபிமானிகள் அனைவரும் ஒரே மனதுடன் செயற்பட்டமையாலும் குறுகிய காலத்தில் பாடசாலையின் புகழ் எங்கும் பரவியது. பாடசாலை மட்ட, கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள் என்பனவற்றில் மாண வர்கள் பங்கு கொண்டு வெற்றிவாகை சூடினர்.

அக்காலத்தில் சாதாரண தரம் (O/L) வரை வகுப்புக்கள் நடைபெற்றன. ஆங்கிலப் பயிற்சிபெற்ற ஆசிரியர் திருமதி காந்திமதி இராஜகோபால். கணித ஆசிரியராகத் திருமதி கமலாம்பிகை இராசேந்திரம் என்பவர்களும் வந்து சேர்ந்தனர்.

உயர்தர வகுப்புகளைக் கொண்ட பாடசாலைக்கு அண்மையிலுள்ள பாடசாலைகள் இடைநிலைப் பாடசாலைகளாகத் தரம் குறைக்கப்பட்ட நிலையில் அங்குள்ள உயர்தர வகுப்புக்கள் உள்ள பாடசாலை வகுப்புக்களுடன் எமது பாடசாலை வகுப்புக்கள் இணைக்கப்படவேண்டும் எனக் கல்வி அமைச்சிலிருந்து சுற்று நிருபம் வந்தது. இதனால் பெற்றோர்கள், ஆசிரியர்கள் பெரும வேதனைக்குள்ளாகிக் கல்வி அமைச்சுடன் நேரடியாகச் சென்று கலந்துரையாடியதன் பயனால் பாடசாலையின் தரம் மீளப் பெறப்பட்டது. இதற்கு மும்முரமாகச் செயற்பட்ட திறமை ஆசிரியமணி பஞ்சாட்சரத்தையே சாரும். முன்னைய தரத்துக்கு வந்ததனால் இடையில் வந்த அதிபரும் திரும்பச் சென்று விட்டார். இக்காலகட்டத்தில் ஆங்கிலக் கலைப்பட்டதாரியான திரு.வி. அரியநாயகம் அதிபராக இங்கு வந்தார். ஆசிரியமணி பஞ்சாட்சரம் உபஅதிபராகினார். இவர்களது நிர்வாகத்தில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் முன் வைக்கப்பட்டன. ஆண்டு தோறும் பரிசளிப்பு விழா. இல்ல விளையாட்டுப் போட்டி, மாணவ முதல்வன் தெரிவு போன்றன நடைபெற்றன. புதிய கட்டடங்களில் நூல் நிலையம், நடன அறை என்பன அமைக்கப்பட்டு அவற்றிற்கான விசேஷட பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் வந்து சேர்ந்தனர். வித்தியாலயமும் சிறப்பாக முன்னேற்ற மடைந்து வலி கிழக்கில் புகழ் பூத்த தரம் 02 பாடசாலையாக நிமிர்ந்து நின்றது.

1987ம் ஆண்டு யாழ் கல்விப்பணிப்பாளராக இருந்த திருவாளர். இ. சுந்தரலிங்கம் பெற்றோர், ஆசிரியர் சங்கத்தின் விருப்பத்திற்கு இணங்கவும், அதிபர் திரு. வி. அரியநாயகத்தின் விருப்பத்திற்கு இணங்கவும் ஆசிரியமணி அவர்களை அதிபராக நியமித்தார். பல அதிபர்கள் கடமையாற்றிய காலத்திலும் இப்பாடசாலை வளர்ச்சியில் அக்கறையுள்ளவராக இருந்த காரணத்தால் குறுகிய கால அதிபராக கடமையாற்றி 12.11.1987ல் ஓய்வு பெற்றுச் சென்றார். அவரின் பின் திருமதி சகுந்தலாதேவி அவர்கள் அதிபரானார். அவரும் ஓய்வு பெற்றுச் செல்ல செல்வி அருணோதயம் சின்னத்தம்பி அதிபராகக் கடமையேற்றார். அவரும் ஓய்வு பெற்றுச் சென்ற காலகட்டத்தில் திருவாளர் அ. ஈஸ்வரநாதன் அதிபர் தரத்துடன் அதிபர்

பொறுப்பை ஏற்றுச் செயற்பட்டார். அவருக்கு உப அதிபராக திரு. த. சிவசுப்பிரமணியமும், அவருக்கு பின் திருமதி கமலாம்பிகை இராசேந்திரமும் முறையே உப அதிபர்களாக கடமை புரிந்தனர். அவர்களும் ஓய்வு பெற்றுச் செல்ல **1997**ம் ஆண்டு நான் உப அதிபராக கடமையாற்றினேன். அலுவலக நிர்வாக ஒழுங்கு, மாணவர் ஒழுங்கு என்பவற்றைச் சீராக செய்து நிர்வாக அறிவைப் பெற்றுக் கொண்டேன். இக்கால கட்டத்தில் அலுவலக உதவியாளர் ஒருவரும் இங்கு வந்து சேர்ந்தார். என்னிடம் கல்வி கற்றவர் களான திரு. இ. இராஜ்குமார், செல்வி. சுஜாதா, செல்வி. இராகினி ஆகியோரும் ஆசிரியர்களாகக் கடமை யாற்றினர். எனது கற்ப்பித்தலின் பெரும் பகுதி **5**ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை தயார்ப்படுத்தலிலே கழிந்தது. மாதிரி வினாத்தாள்களை தயாரித்தல், வெளியிடங்களில் இருந்து வினாப்பத்திரங்களை எடுத்து பரீட்சை வைத்தல், மேலதிக வகுப்புக்கள் நடாத்துதல் போன்றவற்றை அர்ப்பணிப்புடன் செய்து அடைவு மட்டத்தை உயர்த்தி சிறந்த பெறு பேற்றை மாணவர் அடைய வழிசெய்தேன். இவற்றை இப்போது நினைத்துப் பார்த்து புளகாங்கிதம் அடைவேன்.

அதிபர் ஈஸ்வரநாதன் அவர்கள் தனது முன்னேற்றம் கருதி **1999**ம் ஆண்டு மாசிமாதம் உரும்பிராய் இந்துக்கல்லூரிக்கு மாற்றம் பெற்றுச் சென்ற போது பாடசாலைப் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்துச் சென்றார். நான் பொறுப்பை ஏற்று பகுதித் தலைவர்களான திருமதி மதுரை நாயகி, திருமதி அன்னலட்சுமி ஆசிரியர்களின் உதவியுடனும், மற்றும் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடனும் பதில் அதிபராக கடமையாற்றும் பாக்கியத்தையும் பெற்றேன். அந்த வருட இல்ல விளையாட்டுப் போட்டியை நடாத்தும் பொறுப்பும் இருந்தது. இதற்கான பயிற்சியினைப் பெறுவதற்கான வசதிகளை விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களான திரு வி. ஜெயராசா, திரு. சுகுமார், இல்லப் பொறுப்பாசிரியர்களின் உதவியினாலும் இல்ல விளையாட்டு போட்டியை சிறப்பாக நடாத்திய பெருமையும் உண்டு.

பாடசாலை பரிசீலனைக்காக கல்வி வலயத்தில் இருந்து வந்தவர்கள் அதிபராக இருக்கும் படி வேண்டினர். அப்பொழுது அதிபர் கூட்டங்களுக்கு செல்ல எனது வசதி குறைவாலும், அலைச்சலாலும் அப்பதவியை ஏற்க மறுத்துவிட்டேன். அதிபர் ஒருவரை நியமிக்க வேண்டியதற்கிணங்க **1999**ம் வருடம் மேமாதம் திரு. சு. யோகராசா அவர்கள் அதிபராகக் கடமையேற்றார். 5வருடங்கள் அவருடன் கடமை செய்து **1999**ம் ஆண்டு ஐப்பசிமாதம் ஒய்வு பெற்றுச் சென்றேன்.

காலத்துக்கு காலம் பாடசாலை வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள், செயற் பட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என்பவர்களின் பங்களிப் பினால் ஒரு சிறு கட்டிடத்துடன் ஆரம்பித்த பாடசாலை இன்று பல மண்ட பங்களையும், மேல்மாடியையும் உள்ளடக்கி அயலில் ஒரு நூற்றாண்டு விழா மண்டபத்தையம் கட்டி நிற்கின்றது. நூற்றாண்டு விழாக்காணும் இவ்வேளையில் இவ்வாறான பௌதீக வளங்களுடன் காட்சி தருவது பெரும் மகிழ்ச்சியை ஊட்டுகின்றது.

இவ்வித்தியாலயத்தின் பழைய மாணவியாக. ஆசிரியராக, பகுதித் தலைவராக, உப அதிபராக, பதில் அதிபராக இருந்ததுடன் பாடசாலை வைரவிழா, பவளவிழா போன்றவற்றைச் சேவையிலிருக்கும் போது காணும் பேற்றையும் ஓய்வு பெற்ற பின் நூற்றாண்டு விழாவைக் காண்பதும் நான் செய்த பேறு எனக் கருதுகின்றேன். இங்கு கற்ற மாணவர்கள் வைத்தியர் களாக, பொறியியலாளர்களாக, நியாய வாதிகளாக பேராசிரியர்களாக , கூட்டுறவாளர்களாக விடுதலை வீரர்களாக வளர்தெடுத்த பெருமை இவ்வித்தியாலத்திற்கு உண்டு. எனினும் ஒரு விளையாட்டு மைதானம் இல்லாதது பெருங் குறையே. எதிர்காலத்தில் இக்குறை நிறைவேற எல்லாம் வல்ல கற்பகவிநாயகர் அருள் புரிவராக.

இவ்வித்தியாலத்தின் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக நடாத்த இருக்கும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள். அபிவிருத்திச் சங்கத்தினர், அலுவலக உதவியாளர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள், பழைய மாணவர் சங்கத்தினர் ஒன்று சேர்ந்து முழுமனதுடன் சிறப்பாக நடாத்தவும் பல்லாண்டுகள் சீரும் சிறப்பும் பெற்று நிலைத்திருந்து பணியாற்றியும் பெரு விருட்சமாக் கிளை பரப்பி விழுதுகளின் துணையோடு வீறு நடைபோட்டுச் சாதனைகள் படைத்துச் சூரிய சந்திரர் உள்ளவரை புகழ்பரப்பித் தன் வளர்ச்சிப்பாதையில் தலை நிமிர்ந்து நின்று கல்விச் சமூகத்தை உருவாக்கிச் சிறந்து ஓங்க வேண்டும் என்று எல்லாம் வல்ல கற்பக விநாயகரின் பொற்பாதங்களையும், வித்தியாலத்தில் அமைந்திருக்கும் பாலசுப்பிரமணியரின் பாதக் கமலங்களையும் வேண்டி மனதார வேண்டு கின்றேன்.

எனது ஆசிரிய சேவைக் காலத்தில் பெரும் பகுதியை (32வருடங்கள்) நிறைவு செய்த அதே வேளை எட்டு அதிபர்களின் கீழ் சேவை செய்துள்ளேன். இவ்வித்தியாலய நினைவுகளை மீட்டுப் பார்க்கச் சந்தர்ப்பம் அளித்த அதிபர் மற்றும் மலர்க் குழுவினருக்கும் எனது நன்றியையும் வாழ்த்துக்களையும் கூறி நிறைவு செய்கின்றேன்.

பாடசாலை நிகழ்வுகளில் சில . . .



மலரும் நினைவுகள்

செல்வி. அருளோதயம் சின்னத்தம்பி,
ஓய்வுநிலை அதிபர்,
யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.

இப்பாடசாலையில் எனது கடந்தகால நினைவுகளை மீட்டுப்பார்க்கிறேன், மகிழ்ச்சியடைகின்றேன். 01.02.1976ல் விஞ்ஞான பாட ஆசிரியராகக் கடமை ஏற்றேன். அப்போது இன்னுமோர் ஆசிரியரும் இங்கு கடமையாற்றிக் கொண்டிருந்தார். விஞ்ஞான அறை ஒன்று ஆய்வுகூடமாக இருந்தது. ஓரளவுக்கு உபகரணங்கள் இருந்தாலும் இரசாயனப் பொருட்கள் பற்றாக்குறையாக இருந்தது. அக்காலத்தில் நடைபெற்ற பாடசாலைக் கண்காட்சியில் விஞ்ஞானப் பகுதி அனைவரையும் கவரக் கூடியதாக இருந்தமை எனக்கு மகிழ்ச்சியாக இருக்கின்றது. நான் இங்கு கடமை ஏற்ற போது திரு. வி. அரியநாயகம் அதிபராகவும், திரு. சு. பஞ்சாட்சரம் உப அதிபராகவும் கடமையாற்றினார்கள். விளையாட்டுத் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பாடங்களுக்கும் விஷேட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இருந்தார்கள். மைதானம் இல்லாத போதும் விநாயகர் ஆலயத்தின் தெற்கு வீதியில் போட்டிகள் நடைபெறும். காணி கொள்வனவு செய்ய முயன்றபோதும் அது கைகூடவில்லை.

சமய விழாக்கள் விதிமுறைக்கு அமைவாக நடாத்தப்படும். இதற்கு அனைத்துத்தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்குவதுடன் கலந்து சிறப்பிப்பார்கள். விஜயதசமி நிகழ்வின் போது ஏடு தொடக்கும் வைபவம் மிகவும் கோலாகலமாக நடைபெறும். பாடவிதான, இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் தொட்டுக் காட்ட கூடியளவுக்கு முன்னேற்றம் காணப்பட்டன. ஆண்டு 1 - 9 வரையான வகுப்புக்களுக்கு வசதிகள் சேவைக் கட்டணமாக ரூபா 3.00 அறவிடப்பட்டது. பாடசாலையின் ஒழுக்க விதிகள் மிகவும் கட்டுப்பாட்டுடன் பேணப்பட்டது. தினசரி பாடசாலை தேவாரத்துடன் ஆரம்பமாகி தேவாரத்துடனே பாடசாலை நிறைவடையும். வெள்ளிக்கிழமைகளில் பாடசாலையின் கிழக்கு மண்டபத்தில் ஆராதனைகள் மற்றும் கூட்டுப்பிரார்த்தனை நடைபெறும். மன ஒருமைப்பாட்டை

ஏற்படுத்தும் இன்பப்பொழுதாக அக்காலை நேரம் அமையும். ஓய்வு பெற்ற அதிபர் திரு. அ. பஞ்சாட்சரம் அவர்கள் ஓய்வு பெற்ற பின்பும் வெள்ளிக் கிழமைகளில் பாடசாலைக்கு வந்து ஆராதனையில் கலந்து கொள்வார். இது அவர் பாடசாலை மீது கொண்டுள்ள பற்றுதலை வெளிப்படுத்துவதாகும்.

வருடம் தோறும் மாணவர்களின் கையேடு ஒன்று “கற்பகம்“ என்ற பெயரில் வெளியிடப்பட்டு வந்தது. ஆரம்பத்தில் கையெழுத்துப் பிரதியாக வந்த கையேடு தற்போது புத்தகமாக வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது.

எனது அதிபர் காலம் மிகச்சிரமமான கால கட்டத்தில் அமைந்தது. பிரச்சினைகள் மலிந்த காலம். போக்குவரத்து வசதி குறைந்த காலம் அதிபர் கூட்டத்திற்கு செல்வதாயின் துவிச்சக்கரவண்டியில்தான் செல்ல வேண்டும். இதற்கு யாராவது ஒருவரது உதவியைத்தான் நாடவேண்டியிருக்கும். ஆசிரியர் சம்பளத்தைப் பெறுவதிலும் இது போன்ற சிரமம்தான் எனக்கு. இது தொடர்கதையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. பாடசாலைக்கு சம்பளத்தை கொண்டு வந்து சேர்ப்பதில் பலத்த சிரமத்தை எதிர்நோக்குவோம். ஆனால் துணிச்சலுடன் கொண்டு வருவோம். பின்னர் காசோலை நடைமுறை மேற்கொள்ளப்பட்டமையால் சிரமம் குறைந்ததுடன் நிம்மதியாகவும் இருந்தது. மாணவர் சீருடைத்துணி, இலவசப்பாட நூல்கள், மதியபோசனம் போன்றவை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. இவற்றை ஒழுங்கமைத்தலிலும், கல்வித் திணைக்களத்தி லிருந்து எடுத்து வருவதற்கும் செல்வரத்தினம் ஆசிரியர் உதவியாக இருந்தார். உதவி அதிபராக ச. சிவசுப்பிரமணியம் அவர்கள் கடமையாற்றினார். எனது நிர்வாகச் செயற்பாடுகளுக்குப் பேருதவியாக இருந்தார். இங்கு கடமையாற்றிய ஆசிரியர்களின் ஒத்துழைப்பு நூறுவீதம் கிடைத்தமை திருப்தியாக இருந்ததுடன் எனது பணியையும் இலகுவாக்கியது. திருமதி காந்திமதி, இ. ராஜகோபால் ஆகியோர் தமது ஓய்வின் போது ரூபா 2000 நிரந்தர வைப்பிலிட்டுச் சென்றனர். இது போன்று ஏனைய ஆசிரியர்களிலும் சிலர் பங்களிப்பை வழங்கியிருந்தனர். வைப்பிலிடப்பட்ட பணத்தின் வட்டிப்பணம் மட்டுமே இந்நிகழ்வுக்கு பயன்படுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டுப் பிரச்சினை காரணமாக வலி வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து உரும்பிராய் பகுதியில் தற்காலிகமாகக் குடியேறினார்கள். அதன் போது அம்மாணவர்களையும் பாடசாலையில் இணைத்துக் கொள்ளவேண்டிய

சூழ்நிலை ஏற்பட்டது. இது காலத்தின் தேவையாக இருந்தது. இவ் வேளையில் இடப்பற்றாக்குறையும், தளபாடப் பற்றாக்குறையும் அச்சுறுத்திய போதும் மிகச் சிரமத்துடன் மிகச் சிறப்பாக பாடசாலையை நடத்தினோம். 1993ல் மிகச் சிறப்பாகப் பாடசாலையின் பவளவிழா நடைபெற்றதுடன் பவளவிழா மலர் ஒன்றையும் வெளியிட்டோம். மூன்று நாட்கள் விழா கொண்டாடப்பட்டது.

2014ம் ஆண்டு ஆசிரியர்தின விழாவில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிப்பதற்கு கிடைத்த வாய்ப்பை எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன். 2015ல் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுவதையிட்டு மகிழ்வடைகின்றேன். விழா சிறப்புற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். நூற்றாண்டு மலரில் எனது ஆக்கத்துக்கு வாய்ப்பு வழங்கியமையையிட்டு புளகாங்கிதம் அடைகின்றேன். இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன். இப்பாடசாலையை ஒரு பெண்கள் பாடசாலையாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தபோதும் அது கை கூடவில்லை. எனினும் இது ஒரு உயர்தரப்பாடசாலையாக மாறவேண்டும் என்பது எனது அவா. தற்போது பாடசாலையின் சாதனைகள் எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றன. இது போல இன்னும் பல சாதனைகள் நிலை நாட்டப்படவேண்டும். பாடசாலை ஊர்போற்ற, நாடு போற்ற, உலகம் போற்ற, திகழ்ந்திட எல்லாம் வல்ல கற்பக விநாயகரையும், பாடசாலையில் கோயில் கொண்டு அருள்பாலிக்கும் பாலமுருகனையும் பிரார்த்திக்கின்றேன்.

மற்றவர்களிடம் இருந்து எதையும் எதிர்பார்க்காதீர்கள் ஏனென்றால் அவர்களுக்கு தெரியாது உங்களுக்கு என்ன தேவையென்று.



நூற்றாண்டு விழாக் காணும் சைவத் தமிழ் வித்தியாலயமும் ஆசிரியமணி. அ. பஞ்சாட்சரம் ஐயாவும்

திரு. க. சிவபாலன்.

உரும்பிராய்ப்பதி பிரபல மான கல்வி மான்களையும் சைவச் சான்றோர் களையும், நீதியரசர் களையும், சட்ட வல்லுனர் களையும் சமுதாயத் தொண்டர் களையும் ஈன்றெடுத்த பெருமை பெற்ற மண் இங்கு அமைந்துள்ள பாடசாலைகளின் வளர்ச்சியும் பெருமையும் தனித்துவமானது. இன்று நூற்றாண்டு விழாவைக் காணும் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் கடந்த காலங்களில் நடைபெற்ற நாட்டு யுத்தங்களில் பெரும் பாதிப்பைச் சந்தித்தது கல்விச் சமூகத்தின் விடா முயற்சி யும் ஒற்றுமையும் காரண மாக வீறுநடை போடுகின்றது.

31/12/2015ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட சைவத்தமிழ் வித்தியாலயம் இன்று 2015ல் நூற் றாண்டு விழா கொண்டாடு கின்றது. இச்செய்தி கல்விச் சிந்தனை கொண்ட அனைவருக் கும் பெரு மகிழ்ச்சியையும் பூரிப் பையும் அடையச் செய்கின்றது.

“கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்” என்பது எம் ஒளவைப் பிராட்டியாரின் அறிவுரையாகும். இதற்கமைய இப்பாடசாலை இந்துக்கல்லூரி அதிகாரசபை பரிபாலனத்தில் இயங்கி வந்த போதிலும் பலாலி வீதியில் அமைந்த உரும்பிராய் கற்பக விநாயகர் ஆலய மேலைத் தெரு வீதியில் அமைந்துள்ளமை யால் புனிதம் பெறுகின்றது. இங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும் கல்வி கற்கும் மாணவ மணிகளும் விநாயகப் பெருமான் திருவரு ளுக்கு பாத்திரமாகி கல்வி ஞானத் தால் பெரும் பேறு பெற்று வெற்றி யடைந்துள்ளனர். இதற்குச் சான் றாதாரமாக அமைந்ததுதான் இன்று நடைபெறும் நூற்றாண்டு விழாச் சிறப்பாகும்.

1925ம் ஆண்டு இவ்வித் தியாலயத்துக்கு உயர்திரு வி. அரியநாயகம் அதிபராகப் பணி யாற்ற வருகை தந்தார். அக்காலத் தில் அங்கு ஆசிரிய ராகவும், பிரதி அதிபராகவும் பணிபுரிந்தவர் ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அவர்கள். இவருடைய பெரும் பண்புகளை நன்கு அறிந்து கொண்டார். புதியவராக வந்த

அதிபர் உயர்திரு வி. அரிய நாயகம். 1977ல் வித்தியாலய வைரவிழாவும், வைரவிழா மலரும் வெளியிட கல்விச் சமூகம் ஏற்பாடு செய்தது. "இதனை இதன்கண் இவன் முடிப்பான் என்று ஆய்ந்து அதனை அவன் கண்விடல்" என்ற திருவள்ளுவரின் குறட்பாவுக்கு இணங்க வைரவிழாச் சபையினரும் அதிபர் உள்ளிட்ட அனைவரும் மலர் வெளியீட்டுப் பதிப்புப் பணியை ஆசிரிய மணி அ. பஞ்சாட்சரம் அவர்களிடம் விட்டார்கள் போலும் இம் மலரில் வெளிவந்த அனைத்து ஆக்கங்களிலும் பெரும் பெரும் கல்விமான்களும் அறிஞர் பெருமக்களும், பல்துறைப் பேராசிரியர்களும் எழுதிய கட்டுரைகளும் பரந்து கிடக்கப் பெற்றமையைப் பார்க்கலாம். மேலும் இடது சாரிக் கொள்கைகள் கொண்ட பேராசிரியர். கலாநிதி. கா. சிவத்தம்பி, க. கைலாசபதி போன்றவர்களைக் கூட விட்டுவிடவில்லை.

அன்று வைரவிழாவின் போது வெளிவந்த வைரவிழா மலர் - ஒரு வைரம். இது யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தின் மூலவேர் எனப்பெருமிதம் கொள்ளலாம். இம்மலர் வித்தியாலத்துக்கு பெருமை சேர்த்தது.

இவ் வித்தியாலயத்தின் கல்வி வளர்ச்சிப் பணியிலும் பாடசாலை வளர்ச்சிப் பணியிலும் கண்ணும் கருத்துமாக இருந்தவர் ஆசிரியமணி இன்னும் ஒன்று உண்டு இதற்கு அன்னாரின் மறைவின் போது புலம் பெயர் நாடுகளில் இருந்து வந்த அநுதாபங்களும், அஞ்சலி களும் சான்றாதரமாக உள்ளது.

அதிபராக இருக்கலாம், ஆசிரியராக இருக்கலாம் மாணவர்களாக இருக்கலாம். ஊரவர்களாக இருக்கலாம். இவர் கல்வித் தொண்டுக்கு எத்துணைத் தொண்டு செய்தாரோ அதே போல அவர்களின் குடும்பத்தாரின் சுக துக்கங்களில் பங்குபற்றத் தவறுவதில்லை. இத்துணை மனித நேயப் பண்பாளரான ஆசிரியமணி எவருக்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அதனை முன்னின்று செய்வார்.

ஆசிரியமணி எவ்வாறு தமது சைவத்தமிழ் வித்தியாலயத்தையும் மாணவச் செல்வங்களையும் நேசித்தாரோ அதே போன்று நாட்டையும் மக்களையும் நேசித்து இருக்கிறார். சமுதாய உணர்வும் சமுதாய உறவும் கொண்ட பஞ்சாட்சரம் ஐயா "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற புற நாநூற்றுச் சிந்தனை கொண்டவர்.

ஆசிரியமணி அவர்களின் கல்விப்பணி சைவவாலயப் பரிபாலனப் பணி, பத்திரிகைப்பணி, சமுதாய நலனோம்புப் பணி என்பன பற்றி தனித்தனியாக எழுதமுற்பட்டால் கட்டுரை நீண்டு விடும் என்ற அச்சத்தால் விட்டுவிடுகின்றேன்.

ஆயினும் பண்டிதமணி அவர்களுக்குஆற்றிய தொண்டும் உரும்பிராய் கருணை இல்லத் தொண்டும், சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாருக்கு ஆற்றிய தொண்டும் மறந்து விட முடியாது.

தமிழ் கூறும் நல்லுலகில் நாவலருக்குப் பின் பண்டி சிவத்தமிழ் செல்வி அம்மையாரும் நம் நாட்டில் பிரசித்தமானவர்கள். பண்டிதமணி அவர் களிடம் திருநெல்வேலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய பயிற்சி பெற்ற நாள்முதல் அன்னார் சிவபதம் எய்தியது வரை நிழல் போல தொடர்ந்து அரும் பணியாற்றியவர். பண்டிதமணி அவர்கள் 30ற்கும் மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்து பெருமை கொண்டவர்.



இவரின் மறைவைக் கேள்வியுற்ற உரும்பிராய் கருணை இல்லத்தின் ஸ்தாபகரான இலண்டன் தமிழர், அநாதைகள் அறநிதியத் தலைவர் பொன் தெய்வேந்திரன் அவர்கள் சிந்திய கண்ணீர் ஆறாப் பெருகியது. இதனையான் அறிந்தவன்.

யாழ் கல்விப் பாரம் பரியத்தில் கொடிகட்டிப் பறந்த ஆசிரியமணி தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தின் அடையாளமான நெஷனல் வேட்டி, வெள்ளைச் சால்வை அணிந்த கடைசித் தமிழ் ஆசிரியர் இவர் என்றே கூறலாம். ஆசிரியமணியின் நினைவாக சைவத்தமிழ் வித்தியாலயம் நீடு வாழ்க எனப் பிரார்த்திப்போமாக.

பாடசாலை நிகழ்வுகளில் சில . . .

என்னை வளர்த்தெடுத்த அறிவாலயமும் தொழிலாலயமும் பற்றிய நினைவலைகள்

திருமதி. மதுரைநாயகி திருநாவுக்கரசு
பழைய மாணவி,
ஓய்வு பெற்ற உபஅதிபர்,
யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் தனது நூற்றாண்டு விழா வினைக் கொண்டாடும் இந் நேரத்திலே என் மனமும் அவ்வித்தியால யத்தின் பழைய பசுமையான நினைவுகளை மீட்டிப் பார்க்கின்றது. அது எனது வாழ்க்கையின் பெரும் பகுதியினைத் தன்னோடு பிணைத்துக் கொண்டுள்ளது. இவ் வித்தியாலயத்தின் ஆரம்ப கட்டமும் எனது கல்வியின் ஆரம்ப கால கட்டமும் ஒரே நேரத்தில் அமைந்துள்ளது.

நான் உரும்பிராயைச் சொந்த ஊராகக் கொண்டிருந்தபடியால் இவ் வித்தியாலயத்திலேயே எனது கல்வியை ஆரம்பித்தேன் அரிவரி தொடக்கம் க. பொ. த. சாதாரண தரம் வரை இங்கேயே கல்வி பயின்றேன். நான் க. பொ. த சாதாரண தரத்திலே திறமையாகச் சித்தி அடைந்தமைக்கு இப் பாடசாலையே காரணமாகத் திகழ்ந்து. பின்பு க. பொ. த. உயர்தரத்தை உரும்பிராய் இந்துக் கல்லூரியில் தொடர்ந்தேன்.

நான்கு வயதிலே எனது அண்ணன்மாருடன் உரும்பிராய் இந்துக் கல்லூரியிலே கல்வி கற்கச் சென்றேன் அங்கே அழுது முடித்து முத்தையா ஆசிரியரின் "குண்டுடுக்கி குடுகுடுக்கி கூடை கையில் ஏந்தி" என்ற பாடலைப் பாடிக் கொண்டிருக்கும் போது ஏனோ தெரியவில்லை சைவத்தமிழுக்கு கொண்டு வந்து சேர்த்து விட்டார்கள் நான் அங்கு தான் படிக்கப்போகிறேன் இங்கு வரவில்லை என்று திரும்ப அழுகிதேன். ஒரு மாதிரி அழுகை குறைய கையைப் பிடித்துத் தேய்த்து "அ" எழுதப் பழக்கத் தொடங்கி விட்டார்கள். தங்கமணி ஆசிரியையும், விசுவலிங்கம் ஆசிரியரும் பின்பும் துன்பம் தான் இங்கு நான் வரும் போது முதலாவது தலைமை ஆசிரியராக திரு. கந்தையா அவர்கள் சேவையில் இருந்தார்.

ஓலையால் வேய்ந்த கொட்டில் நிலத்திற்கே சீமெந்து போடப்பட வில்லை. அவ்வாறான வகுப்பிலேயே தரம் 1, தரம் 2 என்று படித்துக் கொண் டிருந்தேன். 3ம் வகுப்பிலே நடந்தது என்னால் மறக்க முடியாது. அந்தக் கால

கட்டத்திலே வகுப்பில் நீள வாங்கும் மேசையும் சேர்த்து 3 அல்லது 4 சோடியாக இருக்கும். எங்களுக்கு வகுப்பாசிரியராக இருந்த திரு காசிப்பிள்ளை ஆசிரியர் பெண்களையும், ஆண்களையும் கலந்தே இருக்க விட்டார். ஆனால் எட்டு ஆண்களுடன் என்னை மட்டும் ஒரு பெண்ணாக முதல் வாங்கில் இருக்க விட்டார். ஆனால் நானோ இருக்க மாட்டேன் என்று அழுது புலம்பினேன். எல்லோரும் சிரித்தார்கள். ஒரு நாள் முழுக்க நின்று கொண்டே எழுதினேன். மறுநாள் என்னுடன் இரண்டு பெண் பிள்ளைகளை இருத்தி சமாதானப்படுத்தி விட்டார். அன்று தான் அழுத அழுகையை இன்றும் என்னால் மறக்க முடியாது.

அக்காலத்தில் இங்கு கணவன் மனைவியாக மூன்று சோடி ஆசிரியர்கள் கல்வி கற்பித்தார்கள். அவர்கள் அப்புத்துரை இராஜலட்சுமி, சின்னத்துரை பரமேஸ்வரி, சரவணமுத்து மகேஸ்வரி ஆவர். இவ் ஆறு ஆசிரியர்களிடமும் நான் கல்வி கற்றிருக்கிறேன். பூமிசாத்திரம் கற்பித்தலில் சின்னத்துரை ஆசிரியர் மிகவும் கெட்டிக்காரர். கரும்பலகையில் படங்களை வரைந்து விளங்கப்படுத்துவார். சரித்திரம் கற்பிப்பதில் எனக்கு யாரும் நிகரில்லை என்பதற்கமைய திரு. இராசையா ஆசிரியர் அவர்கள் கதை போல சொல்லிக் கொண்டே போவார் கவனிக்காமல் இருந்தால் கன்னத்தில் பழம் விழும்.

பண்டிதர் நவரட்ணம் ஆசிரியர் அவர்கள் இலக்கணம் கற்பிப்பதில் திறமைசாலி. பாடமாக்கிச் சொல்லாவிட்டால் அவர் எங்களுக்கு அடித்துக் களைத்தும் போவார். ஆசிரியமணி பஞ்சாட்சரம் அவர்களும் தேவாரம் திருவாசகம் முறையாகப் பாடமாக்கிச் சொல்லாவிட்டால் காதை திருகிப் பிடுங்கி கையிலே கொண்டு வந்து விடுவார்.

தலைமை ஆசிரியர் கந்தையா அவர்கள் ஓய்வு பெற்றதும் கல்வி கற்பித்துக் கொண்டிருந்த பொன்னுத்துரை ஆசிரியர் அவர்கள் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்று திறம்பட நடாத்திக் கொண்டு வந்தார். கையில் பிரம்புடன் தான் வகுப்புகளைச் சுற்றிப் பார்வையிடுவார். வாய்ப்பாடு கேட்டு அடி போடுவார். அக்காலத்திலே அடி வாங்கித்தான் படித்து முன்னேறினோம். இப்படியான இனிய நாட்களை என்னால் மறக்க முடியாது. இது வரை அறிவாலயமாகத் திகழ்ந்த இந்த சைவத்தமிழ் ஆலயம் 1985ல் இருந்து தொழிலாலயமாகத் திகழ ஆரம்பித்தது.

பாடசாலைப் படிப்பைப் முடித்து மலைநாட்டிலே ஆசிரியையாக 15 வருடங்கள் சேவை செய்து மாற்றம் பெற்று யாழ்ப்பாணம் வந்த போது சைவத்தமிழில் உப அதிபராக இருந்த திரு. பஞ்சாட்சரம் அவர்கள் கல்விக் கந்தோருக்குச் சென்று இப்பாடசாலையின் பழைய மாணவி என்ற வகையிலே இங்கேயே ஆசிரியராகப் பணிபுரிய எனக்கு அனுமதியைப் பெற்றுத் தந்தார். இங்கு நான் கடமை ஏற்ற பொழுது என்னைக் கற்பித்த ஆசிரியர்களும் இருந்தார்கள். அவர்களுக்குக் கீழ்ப்படிந்து எனது கடமை களைத் திறம்படச் செய்தேன்.

அக்காலத்தில் திரு. அரியநாயகம் அவர்கள் அதிபராக இருந்தார். அவர் ஓய்வு பெற்றதும் திரு. பஞ்சாட்சரம் அவர்கள் அதிபராகக் கடமை ஏற்றார். அவருக்குப் பின்னர் செல்வி சின்னத்தம்பி அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்று நிர்வாகத்தினை நடாத்தினார். அவருடைய காலத்திலேயே பவளவிழா நடைபெற்றது. அவ்விழா மூன்று நாட்கள் வெகு சிறப்பாக நடைபெற்றது. அவருக்குப் பின்னர் திரு. ஈஸ்வரநாதன் அவர்கள் அதிபராகக் கடமை ஏற்று நடாத்தினார். அவர் மாற்றமடைந்து உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு அதிபராகச் சென்றார். அவரின் பின்னர் திரு. யோகராஜா அவர்கள் அதிபர் பதவியைப் பொறுப்பேற்று நடாத்தினார். இவருடைய காலத்திலேயே நான் ஆசிரியர் சேவையில் இருந்து ஓய்வு பெற்றேன்.

பழைய மாணவியும் ஊரவரும் என்ற காரணத்தால் இங்கு நடைபெற்ற ஒவ்வொரு விழாக்களிலும் முக்கிய பங்கெடுத்து திறமையாகச் செயற் பட்டேன். இப்படியாக 20 வருடங்கள் ஆசிரியராகவும், பகுதித் தலை வராகவும், உப அதிபராகவும் சேவை செய்து ஓய்வு பெற்றேன். எனது ஒவ் வொரு பேச்சிலும், ஒவ்வொரு எழுத்திலும் செயலிலும் என்னை வளர்த் தெடுத்த சைவத்தமிழ் அன்னை உரிமை கோரி நிற்கிறாள்.

எனது வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா மலரில் எனது நீங்காத நினைவுகளைப் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைவதோடு வித்தி யாலயம் மேன்மேலும் வளர்ந்து விருட்சமாக வளர வேண்டும் என்று எல்லாம் வல்ல கற்பக விநாயகரைப் பிரார்த்திக்கின்றேன்.



சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் உரும்பிராய்

திரு.ம. சிவலிங்கம்,
B.A, PGDE in Edu
சைவப்புலவர்,ஆசிரியர்,
யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.

சிவபூமி என்றும் குபேரபூமி என்றும் போற்றப்படுகின்ற இலங்கை நாடானது உலகிலே சைவ சமயத்தினதும் தமிழ்மொழியினதும் பெருமை கூறுகின்ற தீவாகத் திகழ்வது புராதன வரலாறு ஆகும். இலங்கைத்தீவின் வடபால் அமைந்துள்ள யாழ் மாவட்டம் சைவத்தினதும் தமிழ் மொழியினதும் விளைநிலமாக அமைந்திருப்பது ஆன்றோர்களின் சான்றாதரமாக அமைந்துள்ளது.

யாழ்ப்பாண தீபகற்பத்திலே சைவசமயத்தையும் தமிழ் மொழியையும் செல்வச் செழிப்பையும் தான தருமங்களையும், கல்வி கலாசார நற்பண்புகளையும் நின்று நிலைக்கச் செய்த உரும்பிராய்க் கிராமம் அன்று தொட்டு இன்று வரை பாடசாலைகளையும், சைவ ஆலயங்களையும் தன்னகத்தே கொண்டு பெருமை சேர்க்கின்றது.

அவ்வாறான சைவ ஆலயங்களின் சமய வெளிப்பாடுகளை உரும்பிராய்ச் சைவ ஆலயங்களின் வரலாறுகளை வெளிப்படுத்துவதன் மூலம் இந்த உலகில் கண் முன் வைக்கலாம்.

உரும்பிராய் ஒடையம்பதி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்:

இவ்வாலயம் பழமையும் பெருமையும் நிறைந்த ஆலயம். இதன் கருவறையில்கற்பக விநாயகர் கருணை கொண்டு உறைந்திருப்பதால் வேண்டுவார்க்கு வேண்டிய வரங்களை வழங்கிக் கொண்டிருக்கிறார். இவ்வாலயம் ஈழத்தின் யாழ்ப்பாணத்தில் வலிகிழக்குப் பகுதியில் உரும்பிராயில் பலாலி வீதியின் அருகில் அமைந்துள்ளது. மூல மூர்த்தியாக கற்பக விநாயகர் அமைந்துள்ளார். இவ்வாலயம் உரும்பிராய் வாழ் சைவப் பெருமக்களால் மிகப்பழங்காலந்தொட்டு வழிபடப்பட்டு வந்துள்ளது. பின்பு இலங்கையில் போர்த்துக்கேயரின் ஆட்சி ஏற்பட போர்த்துக் கேயர்கள் சைவக் கோயில்களை இடித்தும், சைவ வழிபாட்டைத் தடுத்தும் வந்ததனால் இவ்வாலயப் பூசைகள் தடுக்கப்பட்டன. பின்பு அந்நியர் ஆட்சியின் கீழ் சைவக் கோயில்கள் அமைக்கவும் பிரதிட்டை செய்யவும் சைவ வழிபாடு செய்யவும் அந்நியர்களால் அனுமதி வழங்கப்பட்ட பின்பு மீண்டும் இவ்வாலயம் அமைக்கும் பணி தொடங்கியது.

கி. 1834ம் ஆண்டு கணபதி ஐயர் என்பவர் மூன்று பரப்புக் காணியில் ஊர்மக்களின் உதவியுடன் கோயிலை உண்டாக்கினார். அதனைத் தொடர்ந்து ஆலயத்தின் மேற்குப்பகுதிக் காணியையும் அதன் மேற்கே அமைந்த சைவத்தமிழ் வித்தியாலயக் காணியையும் இலங்கை நாத முதலி என்பவர் தம் தர்மசாதனமாக எழுதிக் கொடுத்தார். அன்று தொட்டு இன்றுவரை பல தர்மவான்கள் தோன்றி காலத்துக்கு காலம் வாரிவழங்கி ஊர்மக்களின் உதவியுடன் படிப்படியாக ஆலயம் வளர்ச்சி காணுகின்றது.

ஆலயத்தின் மேற்குப்புறத்தில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் அமைந்தள்ளது. சைவத்தையும் தமிழையும் கல்வியையும் கலைப்பண்பாடுகளையும் வளர்ப்பது இன்றும் காணக்கூடியதாக உள்ளது. இப்பாடசாலை உரும்பிராய் இந்துக்கல்லூரியில் இயங்கிப் பின்பு இவ்வாலயத்திற்கு மேற்கில் நிறுவப்பட்டமை வரலாறு ஆகும். கற்பக விநாயகர் ஆலயத்தில் கருவறையுடன் அர்த மண்டபம், மகா மண்டபம். கும்பமண்டபம், தம்ப மண்டபம், கோபுர மண்டபம், வெளி மண்டபம். உள் மண்டபம், வசந்த மண்டபம், மணிக்கூட்டுக் கோபுரம், தென்கோபுரம் முதலானவை அமைந்து வழிபாட்டுக்கு மிகவும் வசதிகள் கொண்டுள்ளன. பரிவார மூர்த்திகளின் ஆலயங்களில் சுப்பிரமணியர், நடேசர், மகாலட்சுமி, சந்தானகோபாலர், உள்வைரவர், தேரடிவைரவர், தட்சணாமூர்த்தி, சண்டேஸ்வரர், காளிஅம்மன் என்போர் அமைந்து அருளாட்சி செய்கின்றனர். மேலும் பிள்ளையாருக்கான தேர், முருகன்தேர், மஞ்சம், கைலாயவாகனம், சப்பறம் என்பன அமைந்து சைவ சமய உண்மைகளையும் பக்தியையும் வெளிப்படுத்துகின்றன. இவ்வாலயம் உரும்பிராய்க் கிராமத்தில் தனித்துவ இடத்தைப் பெற்று மக்களின் சைவத் தமிழ் எழுச்சிக்கு உந்து சக்தி ஆகின்றது. கோயில் சிறக்க குடிகள் சிறப்புறுவதற்குச் சான்று ஆகியது.

உரும்பிராய் மேற்கு பரத்தைப்புலம் பிள்ளையார் ஆலயம்

இவ்வாலயம் கி.பி 18ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து உரும்பிராய் மக்களால் பூசிக்கப்பட்டு வந்துள்ளது. இவ்வாலயம் உரும்பிராய் மேற்கில் இணுவில் கிராமத்தை அண்டிய பகுதியில் மூன்று கோயிலடி எனும் இடத்தில் அமைந்துள்ளது.

முன்னைய அரசன் கருணாகரத் தொண்டமான் என்பவரால் இவ்வாலயம் பூசிக்கப்பட்டது. சரித்திர முக்கியத்தவம் வாய்ந்த ஆலயமாகும். இதன் பழைமையை எடுத்துக் கூறும் முகமாக இங்கு இரண்டு கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் கல்வெட்டுக்கள் உள்ள ஆலயம் எனும் பெருமை கொண்டுள்ளது.

உரும்பிராயில் மிக ஆதிகாலத்தில் எழுந்த முதலாவது பிள்ளையார் ஆலயம் எனும் பெருமை உடையது. உரும்பிராயில் உள்ள எல்லா மக்களாலும் பாகுபாடு இன்றி வழிபடப்பட்டு வருதலும் சிறப்பம்சம் ஆகும். அயல் ஊர்களில் இருந்தும் சகல மக்களும் வருகைதந்து விநாயகரை வணங்கும் மரபினை உடையது.

மூர்த்தி, தலம், தீர்த்தம், கோபுரம், கோட்டம் என்பவற்றுடன் மணி மண்டபமும் கொண்டு திகழ்கின்றது. பத்து நாட்கள் கொண்ட பெருந்திரு விழா ஆவணிச் சதுர்த்தியில் ஆரம்பித்து நடைபெறுகின்றன. மகோற்சவத் திருவிழாவில் தேர்ப்பவனி அருளாட்சி நிறைந்ததாகும். பல மக்களின் வழிபாட்டை எடுத்துக் காட்டுவதும் ஆகும்.

ஆலயவரலாற்றில் குறிப்பிட்டுள்ளதன் படி யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த தமிழரசன் விஜய கூழங்கைச் சக்கரவர்த்தி காலத்தில் தோன்றிய ஆலயம் இது என்றும் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இவ்வாலயத்தில் அரசமரத்தின் கீழ் பிள்ளையார், லிங்கம் தோன்றி இருந்ததாகவும் அதன் காலம் யாரும் அறியாதது என்றும் கூறுவர். இவ்வாலய வழியால் வந்த கூழங்கைச் சக்கரவர்த்தி இந்த லிங்கத்தை கண்டு வணங்கி இன்பம் பெற்று அந்த இடத்தில் செங்கற்களினால் ஆலயம் அமைத்தார் என்றும் கூறுவர். அதன் பின்பு ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் இவ்வாலயத்தை உடைத்தனர் என்றும் கூறுவர். அதன் பின்பு கருணாகர ஐயர் ஆலயத்தைப் புதுப்பித்து பூசைகள் செய்து நிர்மாணம் செய்துள்ளார். அதனால் கருணாகரப் பிள்ளையார் என்னும் பெயர் பெற்று விளங்குகின்றது. கருணாகர ஐயரின் வழித்தோன்றல்கள் தலைமுறை தலைமுறையாக இன்றுவரை பூசைகளையும், திருவிழாக்களையும் செய்துகொண்டிருப்பது இன்றும் காணக்கூடிய ஒன்றாகும். இவ்வாலயத்தின் மூலம் உரும்பிராய் மக்களின் விநாயக பக்தியும் சைவ ஒழுக்கமும் தமிழ்ப்பண்பும் மேலோங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாலயச் சூழலில் வசிப்போரும், அயற் கிராமத்தவர்களும் சைவத் தமிழ் மேம்பாட்டில் உயர்ந்திருப்பது இக் காலத்திலும் காணக்கூடியதாக இருக்கின்றது.

உரும்பிராய் பர்வத வர்த்தினி அம்மன் கோயில்

இவ்வாலயம் உரும்பிராய் மேற்கில் மூன்றுகோயிலடியில் அமைந் துள்ளது. ஈழத்தில் சக்திகிரீடமாகத் திகழ்கின்றது. பழமையும், பெருமையும்

வாய்ந்தது. நித்திய நைமித்திய பூசைகள் வரன்முறையாக நடைபெறும் ஆலய மாகும். இவ்வாலயத்தை தரிசிப்பவர்கள் பேரின்பம் பெறுவார்கள். மூல மூர்த்தியான பர்வத வர்த்தினி நோய்தீர்க்கும் தாயாக விளங்குகிறாள். அவளின் ஆலயம் தோன்றியமை அநாதியானது. யாரும் அறியாதது. கருத்துக்கு எட்டாதது.

இலங்கையில் கண்ணகை அம்மன் வரலாறு கூறும் செய்யுளில் "உரும்பிராயில் உறைந்தவள்" என்னும் குறிப்புக் காணப்படுவது சிறப்பம்ச மாகும்.

சரித்திரவியலாளரின் கண்ணுக்கு எட்டாத காலத்தில் இருந்து வில்வ மரத்தடியில் பாம்புகளை அணிந்த வண்ணம் அன்னை தோன்றுகின்றாள் அன்னையின் மடியிலும் பாம்புகள் காட்சி தருகின்றன. வில்வ மரத்தின் வேரில் தோற்றமளித்த பாம்புகளுக்குப் பால்வார்த்து வழிபட்டவர் விநாசித்தம்பி என்பவர் ஆவார். வில்வமர வேர்கள் வழியாக முளைத்த பற்றையை தெற்கு விதியில் இன்றும் காணலாம். வில்வமரத்தடியில் அன்னை அடிக்கடி பக்தர்களுக்கு அருளாட்சி கொடுத்த வண்ணம் அற்புதம் செய்கின்றாள்.

வினாசித்தம்பியின் கனவிலே தோன்றி ஆலயம் அமைத்து ஆகம முறைப்படி வழிபாடு செய்யுமாறு அன்னை கட்டளையை ஆரம்பகாலத்தில் இட்டதன் காரணத்தினால் சிறு குடிலாக ஆலயம் அமைக்கப்பட்டது. வரணியில் இருந்து பிராமணர்களை அழைத்துப் பூசைகள் செய்விக்கப் பட்டமை சிறப்பம்சமாகும்.

1930ஆம் ஆண்டில் இருந்து ஸ்தூபியும் மண்டபங்களும் அமைக்கப் பட்டன. 1948ம் ஆண்டு சித்திரை மாதத்தில் முதலாவது மகோற்சவம் நடைபெற்றது. சித்திரைப் பௌர்ணமியில் தீர்த்தத் திருவிழா நடைபெற்றது. 1963ம் ஆண்டின் பின் மகோற்சவம் வைகாசி மாதத்துப் பௌர்ணமிக்கு மாற்றப்பட்டது. 10 நாட்கள் திருவிழா நடைபெறுகின்றன. பங்குனித்திங்கள் பொங்கல் உற்சவம் சிறப்பு விழாக்கள் ஆகும். ஆலமரத் தடியில் அதிகாலை வேளை தாளலயம் தப்பாமல் கேட்கும் ஓசையும், முரசம் ஒலிக்கும் ஓசையும் அற்புதமானவை. வெண்கலக் கலசம் வைத்து ஊர்மக்கள் பொங்கிப் படைக்கும் காட்சி தனித்துவம் ஆனவை. பெருந் தொகையான நிலப்பரப்புக் களை கொண்டுள்ள இவ்வாலயம் அப்பிரதேச மக்களின் கல்வி கலாசாரம்

ஒழுக்கம் மற்றும் சைவப்பழக்கம், தமிழ்மொழிப் பண்பாடு என்பவற்றுக்கு பெருந்துணையாக அமைந்துள்ளமை சிறப்பம்ச மாகும். உரும்பிராய் மேற்கில் மூன்று கோயிலடி எனும் இடத்தில் அமைந் துள்ள இணுவில், கோண்டாவில் மக்களை ஒன்றிணைக்கின்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம், தேர், கைலாயவாகனம், சப்பறம் என மிக விமரிசைகள் கொண்டு திகழ்கின்றது. உரும்பிராயில் மூத்த தாய்த்தெய்வக் கோயிலாகக் கொண்டு பர்வதவர்த்தினி வெள்ளைக் கிழவியாக வந்து ஆரம்பத்தில் தன்னை ஆதரிக்குமாறு கூறியமை யாவரையும் மெய் சிலிர்க்க வைக்கிறது. அந்த இடம் இன்று ஆலயமாகும் அதன் மூலம் உரும்பிராய்க் கிராமம் பல்வேறு துறைகளிலும் சைவத்தமிழ் மேம்பாட்டிலும் முன்னணியில் திகழ்வதற்கும் இந்த ஆலய வழிபாடு பிரதான இடத்தைப் பெறுகின்றது.

உரும்பிராய் மேற்கு முருகன் ஆலயம்.

இவ்வாலயம் மிகவும் பழமை வாய்ந்தது. இங்கு முருகன் சிதம்பர சுப்பிரமணியராகக் கருவறையில் காட்சி கொடுக்கின்றார். தென் இலங்கை யில் கதிர்காமத்தில் முருகனுக்குத் திருவிழா எடுக்கின்ற போதே உரும்பிரா யில் முருகனுக்கும் திருவிழா எடுக்கின்றனர். கதிர்காமத்தில் நடைபெறுவது போன்றே ஆடிவேல் உற்சவம், தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழா கைலாசவாகனம், சப்பறம் ஆகியவை இடம்பெறுகின்ற சிறப்புக் களை இவ்வூர் மக்கள் பெறுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் உரும்பிராயில் மூன்று கோயிலடியில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் உரும்பிராயில் ஒரே ஒரு முருகன் ஆலயம் எனும் சிறப்புடையது. வருடத்திலே இரண்டு மகோற்சவங்கள் நடை பெறுகின்ற ஆலயம் என்பது இதன் விசேட சிறப்பம்சமாகும். தைப்பூசத்திலே தீர்த்தம் அமைந்த 12 நாட்கள் கொண்ட உற்சவம் முதன்மையானது. அது போன்று திருவோண நட்சத்திரத்தில் தீர்த்தம் அமைந்த 16 நாட்கள் கொண்ட அலங்கார உற்சவம் இரண்டாவதாகும். இந்த உற்சவங்கள் மூலம் உரும்பிராய் மக்களுக்கு இறை உணர்வினை ஊட்டுகின்றது.

அதன் வரலாற்று அடிப்படையில் மரத்தின்கீழ் சிறு கொட்டிலாக அமைந்திருந்தது. இன்று பெரும் கோயிலாகத் திகழ்கின்றது. உரும்பிராய் பரத்தைப்புலத்தில் அமைந்துள்ள முருகன் ஆலயத்தின் தோற்றமானது மிகவும் அநாதியானது. ஆரம்பத்தில் சிறு முகட்டுக் கோயிலாக இருந்தது. இன்று உட்பிரகாரம் முழுவதும் மூடு மண்டபங்கள், அழகான முகப்பு மண்டபம், சித்திரத்தேர் கொண்டு அடியவர்களை வாழவைக்கின்றது.

அந்தணர்களால் ஆகமமுறையில் மூன்று காலப் பூசைகள் இடம்பெறுகின்ற. இவ்வாலய வரலாற்றில் உரும்பிராயின் சைவமேம்பாடு விளக்கப் பெறுகின்றது. அதாவது கல்வி, கேள்விகளில் சிறந்த கற்றறிந்த பெரியோர்கள் உரும்பிராயில் வாழ்ந்தார்கள் என்பதற்குச் சான்றாக உரும்பிராய்க் கிராமத் தையும், தமிழர் பெருமையும் சர்வதேச ரீதியில் துலங்கச் செய்த உரும்பிராய்ப் பஞ்சலிங்கங்கள் இவ்வாலயத்திற்கு தொண்டாற்றியுள்ளார்கள். அவர்கள் வைத்தியர் பஞ்சலிங்கம், நீதியரசர் நாகலிங்கம், அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம், சட்டமேதை தியாகலிங்கம், கலாநிதி அமிர்தலிங்கம் ஆகிய சகோதரர் ஐவர் இவ்வாலய வளர்ச்சியில் பங்கேற்றவர்களாவர். தற்போதைய ஆலயம் **1954**ம் அண்டு அடிக்கல் நாட்டப்பட்டு பின்பு விளம்பி வருடம் பங்குனிமாதம் **13**ம் நாள் **(26.03.1958)** புதன்கிழமை ரோகினி நட்சத்திரத்தில் தியாகலிங்கம் தலைமையில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. **1979**ம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்து திருப்பணி ஆரம்பமானது. ரௌத்திரி வருடம் சித்திரை மாதம் **18**ம் நாள் **(30.04.1980)** புதன் கிழமை சுவாதி நட்சத்திரத்தில் இரண்டாவது கும்பாபிஷேகம் இடம்பெற்றது. மூன்றாவது கும்பாபிஷேகம் **1992**ம் ஆண்டு நடைபெற்றது. அவ்வருடம் சித்திரத்தேர் அமைக்கப்பட்டது. ஆலய உற்சவ காலங்களில் சமயச் சொற்பொழிவுகள், சமய அறிவுப் போட்டிகள் நிகழ்த்தப்படுகின்றன. பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படு கின்றன. வருடாந்த மகோற்சவங்களோடு சிறப்பு உற்சவங்களும், மாதப் பிறப்பு, மாதச்சங்கிராந்தி தீர்த்தமும் மாதந்தோறும் கார்த்திகை உற்சவமும், சித்திராப் பௌர்ணமி, வைகாசி விசாகம், ஆவணிச் சதுர்த்தி, சனிக்கிழமை விரதங்கள், வெள்ளிக்கிழமை விரதங்கள், கார்த்திகை விளக்கீடு, மார்கழித் திருவாதிரை கூட்டுப்பிரார்த்தனை மூலம் அடியவர்களைச் சிறப்புற மேம் படுத்துகின்றது. அதிக நிலவளம் கொண்ட ஆலயம் உரும்பிராயில் சைவமும் தமிழும் நின்று நிலைக்கக் காரணமாக அமைந்துள்ளது.

<u>உரும்பிராய் சிவன் ஆலயம்</u>

உரும்பிராய் பலாலி வீதியியை அண்மித்து இவ்வாலயம் அமைந் துள்ளது. மிகவும் பழமை வாய்ந்த சிவன் கோயிலாகத் திகழ்கின்றது. இது தனிப்பட்டவரின் பரம்பரையினரால் தற்போது பராமரிக்கப்பட்டு வருகின் றது. சிவன் ஆலயம் என்பதனால் சைவப் பண்பாடுகள் இங்கே முழுமையாகப் பேணப்படுகின்றது.

<u>சிவபூதராஜர் ஆலயம்</u>

இவ்வாலயம் உரும்பிராய் கோப்பாய் நீர்வேலி ஆகிய மூன்று கிராமங் களின் எல்லையில் அமைந்துள்ளமை சிறப்பம்சமாகும். கருவறையில்

சிவமூர்த்தமாகிய சிவபூதராயன் அமைந்துள்ளார். வருடந்தோறும் பெருந்திருவிழாவில் தேர்த்திரவிழாவும், தீர்த்த திருவிழாவும் அன்பர்களின் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. மூன்று கிராம மக்களும் ஒன்று கூடுவதனால் சைவப் பாரம்பரியம் மேம்பாடு அடைய வசதியாகவுள்ளது.

காமாட்சி அம்பாள் ஆலயம் (காளிகோயில்)

இது மிகப் பழமையான ஆலயம் தனியாருக்குச் சொந்தமானது தற்போது பெருந்திரளான பொது மக்களால் வழிபாடு செய்யப்பட்டு வருகிறது. பெருந்திருவிழாவில் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டு அன்னையின் திருவருளைப் பெறுவது அற்புதமான நிகழ்வு ஆகும்.

பேச்சியம்மன்ஆலயம்

இது உரும்பிராய் வடக்கில் உள்ளது.இது மகா மாரியம்மன் என்னும் பெயருடன் விளங்குகின்றது. வருடந்தோறும் இவ்வாலயத்திலிருந்து கிராம அலுவலர் அதாவது வீதிப் பவனி வந்து அம்மன் மக்களுக்கு அருள் வழங்குவது பழைய மரபாகும். கிராம ஊர்வலத்தில் ஊர்மக்கள் யாவரும் ஈடுபடுதல், சாத்துப்படி சாத்தல் என்பன தெய்வீக அனுபவங்களாகும். ஊர்மக்களை அருள் வெள்ளத்தில் திளைக்கச் செய்பவள் மாரியம்மன் ஆகும். இவ்வாலயப் பெருந்திருவிழா மக்களின் தாய்த்தெய்வ வழிபாட்டையும் அன்பையும் வெளிப்படுத்தி நிற்பது பெருமைக்குரிய விடயமாகும்.

ஆதிபராசக்தி அம்மன் ஆலயம்

இவ்வாலயம் உரும்பிராய் வடக்கில் அமைந்துள்ளது. சின்னக் காளி என்னும் பெருமை கொண்டுள்ளது. இங்கு பழமையான வழிபாட்டு முறைகள் பேணப்படுகின்றன. கிராம மக்களின் துன்ப துயரங்களை நீக்கும் ஆலயமாகத் திகழ்கின்றது.

நாகபூஷனி அம்மன் ஆலயம்

இது உரும்பிராய் மேற்கில் அமைந்துள்ளது. வருடந்தோறும் பெருந்திருவிழாவைக் கொண்டுள்ளன. அவை பத்து நாட்கள் கொண்ட அலங்காரத் திருவிழாவாக அமைந்திருக்கின்றது. பொதுக் கோயில் எனும் நிலையில் நிர்வகிக்கப்படுகின்றது. ஒவ்வொரு வருட மகா சிவராத்திரி தினங்களும் பக்தியும் வழிபாடும் நிறைந்ததாயுள்ளது. அடியவர்களின் சமயப் பழக்க வழக்கங்கள் சம்பிரதாயங்களை நன்கு வளர்ப்பதற்கு இவ்வாலயம் உதவுகின்றது.

ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம்

இவ்வாலயம் உரும்பிராய் சந்தியிலிருந்து கிழக்கு நோக்கி அரைக் கிலோ மீற்றர் தொலைவில் கோப்பாய் வீதியில் அமைந்துள்ளது. இது உரும்பிராயின் காவல்த் தெய்வமாக அமைந்த வைரவப் பெருமானை கருவறையிற் கொண்டுள்ளது. மிகவும் பழமையான ஆலயம். சமயப் பணியோடு சமூகப்பணிகளையும் செய்து மக்களுக்கு வழிகாட்டுகின்றது. சிறந்த நிருவாகக் கட்டமைப்பைக் கொண்டு பணி செய்து வருகின்றது. அயற்கிராம மக்கள் தினந்தோறும் வருகை தந்து வழிபட்டு நோய் நொடிகளைத் தீர்க்கும் ஆலயமாகத் திகழ்கின்றது. யாழ்ப்பாணத்து மக்களால் மிகவும் அறியப்பட்ட ஆலயமாகவும் திகழ்கின்றது. வாரம் தோறும் வெள்ளிக் கிழமைகளில் பொங்கல் நடைபெறுவதும் புரட்டாதிச் சனி நாட்களில் ஊர்மக்கள் யாவரும் எள்ளெண்ணெய் எரிப்பதும். விபூதி போட்டு நூல்கட்டி நோய் தீர்த்தலும் இவ்வாலயத்தின் சிறப்பம்சமாகும். சிவராத்திரி உற்சவம் முக்கியத்துவம் உடையது. பண்ணிசை, சமயஅறிவுப் போட்டி, சொற்பொழிவுகள், பரிசளிப்புகள் போன்றவை சகல மக்களையும் ஒன்றி ணைக்கின்றது. அலங்கார உற்சவம் 25நாட்கள் நடைபெறுவதும் அக்காலத் தில் விஷேட அபிஷேகமும் இவ்வாலயச் சிறப்பை மேலும் வலுவாக்குகிறது. ஊர்மக்களோடு பின்னிப் பிணைந்த ஆலயம் சைவப் பணிக்கு முன்னுரிமை கொடுக்கின்றது.

காட்டு வைரவர் ஆலயம்

இது உரும்பிராய் கிழக்கில் அமைந்துள்ளது. இது மிகவும் பழைமை யான வணக்க முறையான வேள்வி முறையினைக் கொண்டிருக்கின்றது. அதனால் யாழ்மாவட்ட மக்களாலும் இலங்கையின் வெவ்வேறு பிரதேச மக்களாலும் நன்கு அறியப்பட்ட ஆலயமாகவும் திகழ்கின்றது.

வேம்படி வைரவர் ஆலயம்

இது உரும்பிராய் வடக்கில் எல்லைத் தெய்வமாக அமைந்துள்ளது. விவசாயிகளுக்கும் மற்றும் தொழிலாளர்களுக்கும் காவல்த்தெய்வமாக பழங்காலந் தொட்டு அருள் புரிவது குறிப்பிடத்தக்கது.

இராசாட்டி அண்ணமார் ஆலயம்

அண்ணமார் ஆலயங்கள் உரும்பிராய்ப் பிரதேசத்திற்குச் சிறப்பான ஆலயங்களாகத் திகழ்கின்றன. உரும்பிராயில் மட்டும் மூன்று அண்ணமார்

ஆலயங்கள் காணப்படுகின்றன. உரும்பிராய் வடக்கில் அமைந்த இராசாட்டி அண்ணமார் ஆலயம் மிகவும் பழமையானது. சிவமூர்த்தமாக அண்ண மாரைக் கொண்டு வழிபாடு செய்யப்படுகின்றது. சைவ விழாக்களும் நடை பெறுகின்றன. இவ்வாலயத்திலுள்ள தலவிருட்சம் உரும்பிராய் சைவசமயத் தவரின் தொன்மையை எடுத்தக் காட்டுகின்றது. சுமார் 300 வருடங்கள் பழமையுடையது. அங்குள்ள விருட்சம் என்ன மரம் என்பது யாராலும் அடையாளம் கண்டு கொள்ள முடியாது. இலங்கையில் திருக்கேதீஸ் வரத்திலும் தீவகத்திலும் உரும்பிராயிலுமாக 3 மரங்கள் உள்ளன. அதன் சுற்றளவும், பரந்த வளர்ச்சியும் பார்ப்போரை அதிசயிக்க வைக்கின்றது. இவ் விருட்சத்தின் பெயர் என்னவென்று தெரியாது. அதனால் ஆயுள்மரம், வேங்கைமரம், என்றும் மக்கள் அழைக்கின்றனர். மக்களின் ஒற்றுமைக்கும் பண்பாட்டிற்கும் அடிகோலிய ஆலயமாகத் திகழ்கின்றது. இதைவிட உரும்பிராய் மறக்கணாவில் ஒரு அண்ணமார் ஆலயம் உண்டு. உரும்பிராய் செல்வபுரத்திலும் அண்ணமார் கோயில் உண்டு.

இராசாட்டி அண்ணமார் ஆலயம் தற்போது திருவாளர் புஸ்பநாதன் அவர்களின் தலைமையைக் கொண்ட நிர்வாக சபையினரால் நிர்வகிக்கப் படுகிறது. பிரம்மஸ்ரீ ஜெகநாத ஐயர் நித்திய பூசகராக உள்ளார். சைவப்பாரம் பரியத்தில் பூசைகள் நடைபெறுகின்றன. கும்பாபிஷேகம் விகிர்திவருடம் சித்திரைமாதம் அத்த நட்சத்திரத்தில் நடைபெற்றது. அதாவது 26.04.2010ம் ஆண்டு இவ்வாலய வரலாற்றின் படி மூன்று சகோதரர்கள் காட்டு வழியில் போகும் போது விதிவசத்தால் தனித்துப் போய்விட்டார்கள். இளையவர் அண்ணமாரே அண்ணமாரே என்னைக் காப்பாற்றுங்கள் என்று கத்தி அழுதார். சிவபெருமான் அண்ணன்மாராய் வந்து காப்பாற்றினார். அவ்வாறு அவர்கள் ஒன்ற சேர்ந்து காலைவேளை உரையாடியபோது தனித்தனியாக ஒவ்வொருவரையும் சிவனார் காப்பாற்றியுள்ளார் எனும் உண்மை புரிந்தது. அந்த மூவரும் பேறு பெற்றவர்கள் என்பதனால் அவர்கள் மூவருக்கும் ஆலயம் அமைந்தது. அதுவே அண்ணமாரின் வரலாறு ஆகும். அதனால் ஆலயத்தில் சிவவழிபாடும் தொடர்கிறது.இவ்வாலயத்தில் வருடாந்த கும்பாபிஷேகம், திருவெம்பாவை, சரஸ்வதிபூசை, சித்திரைப்பௌர்ணமி, மாதக் கடைசி வெள்ளிக்கிழமைப் பூசை என்பன சிறப்பாக இடம்பெறுகின்றது.

பொது மக்கள் பொங்கல் செய்து படைப்பது அற்புதமானது. 1990ம் ஆண்டின் பின் ஒழுங்கமைந்த நிர்வாகம் உண்டு. தலைவர் உட்பட 11 உறுப்பினர்கள் கொண்ட சபையினர் நிர்வகிக்கின்றனர். குருக்களைக் கொண்டு பூசை நடைபெறுகின்றது. ஐயருக்கு சம்பளத்துடன் 2500.00 ரூபா

சேர்த்து மாத உபயகாரர் வழங்குகிறார்கள். நிர்வாகம் ரூபா 1000.00 சம்பளம் வழங்குகின்றது. மக்களின் சேவை நிறைவேற்றல் சிறந்த பூசையாகும். 10 நவராத்திரி உபயகாரர்கள் உண்டு ஆலயச் சூழலில் 36 குடும்பங்கள் ஆலயத்திற்கு வருகை தருகின்றனர். பொதுக் கோயிலாக அமைந்துள்ளது. கோயிற்காணி பொதுவானது. அது 2 பரப்பளவுள்ளது. ஆலயத்தை அரசாங்கத்தில் தற்போது பதிந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. 2015ம் ஆண்டு கலாசார அமைச்சில் பதிவு பெற்றுள்ளது.

ஆலயத்தில் காணப்படும் அற்புதம் அதிசயமானது. அதாவது இரவில் யாரும் ஆலயத்தில் நிற்கமுடியாது. காவல் தெய்வமாகக் காட்சிதருகின்றார். ஒரு தாயார் தனது குழந்தை இரவு காணாது போனது பற்றிக் கலங்கி எங்கும் தேடினார் குழந்தையைக் காணவில்லை. அண்ணமாரே நீதான் என்னிடம் என்குழந்தையைச் சேர்க்கவேண்டும் என்று பிரார்த்தித்துக் கண் உறங்கி விட்டார். என்ன அதிசயம் அவளின் கனவில் அண்ணமார் தோன்றி குழந்தை இருக்கும் இடத்தைக் காட்டி குழந்தையைக் காப்பாற்றிக் கொடுத்தார். மக்கள் ஆச்சரியமடைந்தனர். அண்ணமாரின் அற்புதத்தை வியந்தனர். இவ்வாலயத் தின் பின் வீதியில் உள்ள மரம்தான் ஆலயம். மரத்தின் கீழ் நிலம் ஒவ்வொரு நாளும் மத்தியானம்வரை ஈரமாகக் காணப்படுகின்றது. மாலைவேளையில் உலர்ந்துவிடும். இவ் அற்புதம் இன்னும் தொடர்கிறது.

ஆலயத்தில் பொங்கல் நடைபெறுகின்ற போது பாம்புகள் வருகின் றன. விவசாயத்தில் முதலில் விளைந்த விளை பொருடகள் அண்ணமாருக்கு வழங்கப்படுகின்றது. உரும்பிராய் வடக்கு மக்களின் குல தெய்வமாகவும் அண்ணமார் திகழ்கின்றார். கும்பமூலம் சுவாமி சுற்றப்படகின்றது. விக்கிரகங்கள், எழுந்தருளிகள் இல்லை. மரம் முக்கியமானது. முன்னோர் மர அருகில் சூலம் வைத்துள்ளனர். அது இன்றும் உள்ளது. பழங்காலத்தில் இரவுப் பூசையும் இடம்பெற்றது. இந்தியாவில் இருந்தும் கலைஞர்கள் வந்தனர். மானம்பூ உற்சவமும் நடைபெற்றுள்ளது. திரு. ஆனந்தராசா அதிபர் அவர்கள் பிரசங்கங்களை திகழ்த்தியிருக்கிறார். இவ்விதமாக உரும்பிராய் மக்களின் விவசாயம் பெருகவும், சைவசமயம் ஓங்கவும், நோய் நொடி அகலவும் பழமை பேணவும் அண்ணமார் ஆலய வழிபாடுகள் உதவி நிற்கின்றன எனலாம்.

உரும்பிராய் வடக்கு காமாட்சி அம்மன்கோயில்

இவ்வாலயம் உரும்பிராய் வடக்கில் அமைந்துள்ளது. பெருந்தொகை யான பக்தர்களின் வழிபாட்டிற்கு முக்கிய ஆலயமாகத் திகழ்கின்றது. தங்கம்மா கோயில் என்றும் அடியவர்கள் குறிப்பிடுகின்றனர். நோய் தீர்ப்பவளாகக் காமாட்சி விளங்குகிறாள். ஆலயத்தில் கலையாட்டம் நிகழ்வதில்லை. சரஸ்வதி பூசை, திருவெம்பாவைப் பூசைகள் மிகவும் மக்கள் நிறைந்த விழாக்களாக அமைந்துள்ளன.

முன்னோர்கள் காணி ஒன்றை காமாட்சிக்கு என்று ஒதுக்கினார்கள். அக்காணியில் நாகங்கள் அடிக்கடி வந்து காட்சிதரும். அந்தக் காணியில் காமாட்சி கோயில் உருவானது.

நாகராசா தங்கம்மா (79வயது) அவர்கள் கோயிலைக் கட்டுவித்தார். அவரின் பெற்றோர் காமாட்சியை ஆதரித்தனர். அதனைத் தங்கம்மா இன்றுவரை தொடருகின்றார்.

வேம்பு தலவிருட்சமாக உள்ளது. மூலஸ்தானத்தில் ஐந்துதலை நாகம் அமைந்துள்ளது. பரிவாரத் தெய்வங்களாக 11 மூர்த்திகள் காணப்படுகின்றன. இற்றைக்கு 15 வருடங்கள் முடிகின்றன ஆலயத்தை கட்டி எழுப்பிபுகின்ற குடும்பத்தவர் கூறுகின்றனர்.

உரும்பிராய் மக்களும் அயற்கிராம மக்களும் வழிபடுவோராக உள்ளனர். அவர்கள் பொங்கல் விழாக்கள் செய்து படைத்து வழிபட்டு ஆலயத்துக்குப் பெரும் பண உதவியும் செய்கின்றார்கள். அதனால் அம்மனுக்கு நிறைவான சொத்துக்களும் நிதியும் இருப்பில் காணப் படுகின்றது.

பொதுமக்களின் நேர்த்திக்கடன்கள் நிறைவாக செய்யப்படுகின்றன, திருமண நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறுகின்றன. வெளிநாடுகளுக்குப் பக்தர்கள் சென்று பணம் திரட்டுகின்றார்கள். குழந்தைச் செல்வங்களைப் பெறுகின்றனர். ஆலயப் பூசையினை தங்கம்மாவும் அவருடைய மகளும் நிறைவேற்றுகிறார்கள். தங்கம்மா பிரதான பூசகராக உள்ளார்.

ஆலயத்தில் அற்புதங்கள் நடந்த வண்ணம் உள்ளன. குறிப்பிடக்கூடிய ஒன்று உள்ளது. ஆலயத்திற்குச் சொந்தமான ஒலி பெருக்கிகளை ஒருவர் திருடியிருந்தார் அவருக்கு பலதுன்பங்களைக் காமாட்சி கொடுத்தாள். அதனால் திருட்டுப் பொருளை ஆலயத்தில் விட்டுச் சென்றனர். அதனால் பெரும் ஏமாற்றம் அடைந்தார். பின்பு அன்னையிடம் சரணடைந்தார்.

அம்பாளுக்கு என்று வங்கியில் தனிக்கணக்கு வைத்திருக்கிறார்கள். அது பிற்காலத்தில் ஆலயத்துக்கு ஐயரை வைத்துப் பூசை செய்விக்க உதவும்.

சரஸ்வதி பூசை, திருவெம்பாவை, வைகாசிப் பொங்கல், ஆனி உத்தரம் என்பவை அடியார்களால் மேற்கொள்ளப்படுகின்றன. தினமும் ஒருவேளைப் பூசை நடைபெறுகின்றது. (மதியத்தில் இடம்பெறும்) ஆலயத்தில் பார்வை பார்த்து நூல் கட்டிவிடுதல் மூலம் அடியாரின் குறைகள் தீர்க்கப்படுகின்றன. மூலஸ்தானமும். ஒரு மண்டபமும் ஒரு அறையும் கொண்ட ஆலயம். தேவாரம் இசைத்து விபூதி கொடுத்தல் விஷேட அம்சமாகும். அண்ணமார் வழிபாடும் இங்கு இடம்பெறும். தங்கம்மா 40 வருடங்களுக்கு மேலாக இவ்வாலயத்தை ஆதரிக்கின்றார். அவரின் பின்பு அவரின் வாரிசுகளும், பரம்பரையினரும் ஆதரிப்பார்கள்.

இவ்விதமாகக் காமாட்சி அம்மன் ஆலயம் உரும்பிராய் மக்களின் வாழ்வோடு இணைந்து அவர்களின் முன்னேற்றத்திற்கும் சமயப் பழக்க வழக்கங்களுக்கும் பெருந்துணை செய்து வலுவூட்டுவது இங்கு சுட்டிக் காட்டப்படுகின்றது.

கிருஷ்ணன் ஆலயம்

உரும்பிராயின் கிழக்கெல்லையில் கோப்பாய் வீதிக்கு அருகாமையில் அமைந்துள்ளது. இது கோப்பாய் கிருஷ்ணன் ஆலயம் என்ற பிரபல்யம் பெற்றாலும் உரும்பிராயின் கிழக்குப்புற மக்களின் வழிபாட்டில் பெரிதும் பங்கு வகிக்கின்றது. இது தனியாரின் ஆலயம் இலங்கையில் தமிழ் மொழியில் பூசைகள் நிகழ்கின்ற ஆலயமாகும். சைவப் பாரம்பரியமும் வைஷ்ணவப் பாரம்பரியமும் இடம்பெறுகின்றன. சிறந்த மரங்களின் சோலையில் அமைந்து உரும்பிராயமக்களையும் கோப்பாய் மக்களையும் சைவ வைஷ்ணவ வழிபாட்டில் ஒன்றிணைக்கும் ஆலயமாகத் திகழ்கின்றது.

உரும்பிராயில் சைவத்தையும், தமிழையும், சாந்தி சமாதானத்தையும் வளர்ப்பதில் முன்னணிப் பங்கு வகிப்பவைகளாக சைவ ஆலயங்களும், சைவப்பாடசாலைகளும் திகழ்கின்றன. மக்கள் தொடர்ந்து அவற்றின் வழியில் நின்று மேம்பாடு அடைவார்களாக.



சைவத்தமிழ் வித்தியாலய வரலாற்றில் இடம்பெயர்வும், மீள் செயற்பாடும்

அ.ஈஸ்வரநாதன்,
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
தெல்லிப்பளை.

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

கல்வியின் நோக்கலையும், கல்வி வழங்கலின் முக்கியத்துவத்தையும் உணர்ந்து நாவலர் வழியில் சைவத் தமிழ்க் கலாசாரப் பண்பாட்டுடன் இயங்கி வந்த இந்துக் கல்லூரியின் அதிகார சபையினால் உரும்பிராய் இந்துக் கல்லூரியின் வளாகத்தில் 1915ம் ஆண்டு டிசம்பர் 03ம் திகதி ஆரம்பிக் கப்பட்ட இப்பாடசாலை ஆரம்பகாலத்தில் அமிர்தலிங்கம் சட்டம்பியார், சின்னப்பு உபாத்தியார், ஊர் வாசிகளின் உதவியுடன் பண்டிதர் வேலுப்பிள்ளை அவர்களது தலைமையில் நடைபெறலாயிற்று. பாலர் வகுப்பில் இருந்து மூன்றாம் வகுப்பு வரை நான்கு வகுப்புகள் இருந்தன. படிப்படியாக எட்டாம் வகுப்புவரை உயர்ந்த பாடசாலை 1945ம் ஆண்டு இலவசக் கல்வி காரணமாக 5ம் வகுப்புவரை குறைக்கப்பட்டது. இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்கு இடம் கொடுக்கும் பொருட்டு இத் தமிழ்ப் பாடசாலை கல்லூரி வளவைவிட்டு வெளியேறவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

வெளியேறிய பாடசாலையின் புதிய உருவாக்கம்

உரும்பிராய் கற்பக விநாயகரின் 11பரப்பு காணியில் 120 அடி நீளமும் 24 அடி அகலமும் கொண்ட புதிய கட்டிடம் அமைக்கப்பட்டு 1949ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 05ம் திகதி யானை முகத்தானது திருவருளுடன் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வித்தியாலயத்தை அந்தக்காலப் பகுதியில் பெற்றோர் ஆசிரியர் சங்கம் எடுத்த முயற்சியினால் தான் பாடசாலை கட்டிடங்கள் வளர்ச்சியுற்றன. பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினர் பாடசாலை நிர்வாகத்தினுள் புகுந்து கொள்ளாமலே பாடசாலையின் வளர்ச்சிக்கு எடுத்துக் கொண்ட நல்ல நடவடிக்கைகள் ஏராளம். அதன் பயனாக பாடசாலையும் வளர்ச்சி கண்டது.

1993ம் ஆண்டு இப்பாடசாலையின் அதிபர் பொறுப்பை ஏற்கும் பாக்கியத்தை கற்பகவிநாயகன் ஏற்படுத்தி தந்தார். அவரது துணையுடன் கடமையை ஏற்று இவ்வாண்டிலேயே பாடசாலை தனது பவள விழாவினை வெகு விமரிசையாக அதிபர் அ. சின்னத்தம்பி அவர்களின் தலைமையில் கொண்டாடியது. இந்த விழா நிறைவு பெற்று ஒரு சில மாதத்தில் நான் பாடசாலையின் அதிபர் பதவியை ஏற்ற வேளை அன்றைய பாடசாலை அபிவிருத்திச் சபையின் நிர்வாக சபை உறுப்பினராக இருந்து என்னை இன்முகத்துடன் வரவேற்ற அச்சபை உறுப்பினர்களை என்றும் மறக்க முடியாது.

தலைவர் அ. சின்னத்தம்பி (அதிபர்), முன்னாள் அதிபர் அமரர் அ. பஞ்சாட்சரம் (காரியதரிசி), திரு. த. சிவசுப்பிரமணியம் (தனாதிகாரி) உப தலைவர்களாக அமரர் க. சிவஞானம், திரு. க. ஆனந்தராசா, உபகாரிய தரிசியாக அமரர். ச. செல்வரட்ணம், நிர்வாக சபை உறுப்பினர்களாக அமரர் பொற்கொடி ஜெகநாதன், திருமதி. மதுரைநாயகி திருநாவுக்கரசு, திரு. இ. ராஜ்குமார், அமரர்களான து. இ. இரத்தினவேலு, ச. ஏகாம்பரநாதன், திரு. ந. கணேசலிங்கம், திரு. அ. இ தர்மலிங்கம், அமரர். கா. குமாரசாமி, அமரர். சு. அப்புத்துரை, திரு. பொ. தர்மலிங்கம், அமரர். சி. அரியநாயகம், திரு. பொ. சிவபாதசுந்தரம்பிள்ளை, அமரர். காந்திமதி இராஜகோபால் அடங்குவார்.

இவர்களது ஒத்துழைப்பும், ஊக்கமும், பாடசாலையின் கல்வித் தரத்தையும், இணைபாடவிதானச் செயற்பாட்டையும் மேலும் வளர்க்க உறுதுணையாக இருந்தது. இதுவரை காலமும் பாடசாலையின் உள்ளே நடைபெற்ற இல்ல மெய்வல்லுனர் போட்டி கற்பகப் பிள்ளையாரது வீதியில் கொட்டகைகள் அமைக்கப்பட்டு வெகு சிறப்பாக நடந்தேறியது.

1994, 1995ம் ஆண்டு காலப்பகுயில் இங்கு வாழ்ந்த மக்கள் உயிரை காப்பாற்ற பதுங்கு குழிகளையும். புகைக்கூடுகளையும், நீர்த்தாங்கிகளையும் தேடி ஓடி உயிரைக் காப்பாற்றிய காலம். ரிவிரச இராணுவ நடவடிக்கை, சூரியகதிர் இராணுவ நடவடிக்கை எனப் பல போராட்ட நிகழ்வுகள் மத்தியில் இவ்வித்தியாலயம் இடம் பெயர்ந்த மாணவர்களையும் உள்வாங்கி மாணவர் எண்ணிக்கை 1140 வரை , ஆசிரியர்கள் 38பேர் பலத்த செல்வீச்சுக்கள் மத்தியிலும் மன உறுதியுடன் கற்றல் மற்றும் இணைபாட விதானச் செயற்பாடுகளில் சாதனையை நிலை நாட்டியது என்றும் மறக்க

முடியாத நிகழ்வாகும். விளையாட்டு மைதானம் இல்லாத நிலையில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உதவியுடன் வித்தியாலத்தின் மேற்கு புறம் உள்ள இரண்டு காணிகளையும் 10வருட குத்தகைக்கு ஏற்பாடு செய்து பாடசாலையின் விளையாட்டு நிகழ்வுகள் சிறப்பாக நடாத்தப்பட்டது. உதை பந்தாட்ட அணிகள் உருவாக்கப்பட்டு கோட்ட. வலய மட்டம் வரை வெற்றிகளை உருவாக்கியது.

தமிழ்த்தினப் போட்டி, ஆங்கிலதினப் போட்டி, புலமைப்பரிசில் பரீட்சை, க. பொ. த (சாதாரணப்) பரீட்சை என்பவற்றில் சிறப்பான வெற்றிகளை உருவாக்கி மேலும் பிரகாசித்தது. 1995ல் இப்பிரதேசத்தை விட்டு நாங்கள் எல்லோரும் மிகப் பெரும் இடப் பெயர்வொன்றைச் சந்தித் தோம். அவ்வேளையில் வித்தியாலயத்தின் பெறுமதியான சொத்துக்கள், ஆவணங்கள், கோவைகள், மாணாக்கர் பிறப்புப் பத்திரம், விடுகைப் பத்திரம், பதிவேடுகள், சம்பவதிரட்டுப் புத்தகம் என முக்கியமானவற்றை நிலைமை உணர்ந்து இடம் பெயர்விற்கு இரண்டு தினங்களுக்கு முன்பே கைதடியில் எனது தாயாரின் காணியில் ஒரு குடில் அமைத்து பாதுகாத்தமையால் பாடசாலைக்கு பாரிய இழப்பு ஏற்படாமல் காப்பாற்றப்பட்டது. இப் பிரதேசத்தில் எமது பாடசாலையில் கல்வி பயிலும் ஒரு தொகுதி மாணவர்களும் இடம் பெயர்ந்து உறவினர், நண்பர்களின் வீடுகளில் இருந்தமையால் கல்விப் பணிமனையின் அறிவுறுத்தலுக்கு அமைய கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் எமது வித்தியாலத்தின் செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டது. 26 மாணவர்களுடன் எமது செயற்பாட்டை ஆரம்பித் தோம். கைதடி, மட்டுவில், நுணாவில், தச்சன் தோப்பு, மறுவன்புலவு என்னும் பிரதேசங்களில் இடம்பெயர்ந்து இருந்த ஆசிரியர்களும், மாணவர்களும் ஒன்று சேர்க்கப்பட்டு போராட்டத்தின் மத்தியில் ஐந்து, ஆறு மாத செயற்பாடுகள் இடம்பெற்றது.

எமது நிலத்திற்கு நாங்கள் மீண்டும் 1996ம் ஆண்டு திரும்பக் கூடியதாக இருந்தது. வந்த எம்மை பேரதிர்ச்சி இராணுவ ஆக்கிரமிப்பு. பாதுகாப்பு அரண்கள் இவை எமது வித்தியாலய மைதானத்தின் ஊடாக ஏற்படுத்தப் பட்டிருந்தது. திரும்பிய யான் அபிவிருத்திச் சங்க செயலாளர் ஆசிரியமணி மற்றும் முகாமைத்துவ குழு உறுப்பினர்கள் போன்றோருடன் பாடசாலையை வந்து பார்வையிட்டோம். பாடசாலைக் கட்டிடங்கள் பெரும் சேதத்திற்கு உள்ளாகமல் இருந்தது. இது எமக்கு ஓரளவு தென்பை தந்தது. படிப்படியாக

மெல்ல மெல்ல எமது செயற்பாடுகளை ஆரம்பித்து மீண்டும் வித்தியால யத்தை பழைய நிலைமைக்கு கொண்டுவர அல்லும் பகலும் பாடசாலைப் பற்றுடன் முகாமைத்துவக்குழு மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், கல்விப் பணிமணை போன்ற தரப்பினர் வழங்கிய ஒத்துழைப்பு காலப்போக்கில் வித்தியாலத்தை பழைய நிலைக்கு கொண்டு வந்தது கற்பக விநாயகரின் திருவருள் துணை இருந்தமையால் பாடசாலைச் சொத்துக்கள், கோவைகள், ஆவணங்கள் பாதுகாக்கப்பட்டது.

பாடசாலை ஆரம்பப் பிரிவு நிலங்கள் குன்றும் குழியுமாக இருந்தது. அங்கு கடமை புரிந்த சிரேஷ்ட ஆசிரியை திருமதி. அன்னலட்சுமி சீவரத்தினம் அக் குழி ஒன்றில் கால் தடக்கி விழுந்து P.O.P போட்ட நிலையில் கற்பித்தலில் ஈடுபட்ட காட்சி இன்னும் எனது மனக்கண் முன்னே தென்படுகிறது. பின்பு அபிவிருத்திச் சங்கத்தின் உதவியுடன் (சீமெந்து பெறமுடியாத நிலையில்) சிப்பி, மணல், முருகமிலை, கரி போன்ற கலவையால் ஓரளவு சீர் செய்து கற்றல் கற்பித்தலுக்கு இடையூறு இல்லாது செயற்பட்டோம். மாணவர்கள் வெள்ளை உடுப்பை தோய்ப்பதற்கு சவர்க் காரம் பெறமுடியாத வாழ்க்கை. பனம்பழத்தின் பாணியில் உடுப்புத் தோய்த்து மாணவர்கள் வித்தியாலத்திற்கு வருகை தந்தமை, அத்தியாவசிய உணவு சீராகப் பெறமுடியாது தத்தளித்தமை, பாடசாலை சமூகம், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், புலம் பெயர் பழைய மாணவர்கள், சங்கங்கள், சபைகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி வித்தியாலய செயற்பாட்டை பழைய நிலைக்கு கொண்டுவர உதவியது.

எனது வீடும் பாடசாலையும் இராணுவ காவல் அரணால் பிரிக்கப் பட்டிருந்தது. பஸ் டிப்போ முன் ஒரு நுழை வாயில் இதன் ஊடாகத்தான் நாங்கள் பாடசாலைக்கு வருகைதரமுடியும். நுழை வாயிலைக் கடப்பது என்பது நீண்ட வரிசையில் நின்று பல மணி நேர செயற்பாடாக அமைந்தது. காலப்போக்கில் இராணுவத்தினருடன் பிரச்சினைகளை முன்வைத்து அரச உத்தியோகத்திற்கு செல்வோர், பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர் களுக்கு தனிப்பட்ட வரிசை ஏற்பாடு செய்யப்பட்டு படிப்படியாக கடமை நேரத்தை அதிகரித்து பாடசாலை செயற்பாடுகளை நிறைவாக்கினோம். அந்த வேளை ஆசிரியமணி அவர்களின் ஒத்துழைப்பு மறக்கமுடியாதது. எனது இளைய மகன் இப் பாடசாலையில் ஆரம்பப் பிரிவில் கற்றுவந்தார். இராணுவ காவல் அரணை இலகுவாக கடப்பதற்கு எனது இளைய

மகனையும் ஏற்றிக்கொண்டு துவிச்சக்கர வண்டியில் பாடசாலைக்கு வந்து வித்தியாலய செயற்பாட்டிற்கு ஊக்கமளித்தமை என்றும் நினைவு கூரத் தக்கது.

1997ம் ஆண்டு மாணவர் மன்றத்தின் ஊடாக பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது. மாணவர் சஞ்சிகை வெளியீடு செய்யப்பட்டது. முன்னும் பின்னும் அச்சுப் பிரதியாக உள்ளடக்கப்பட்ட விடயங்கள் றோணியோ செய்யப்பட்டு முதலாவது சஞ்சிகை வெளியீடு செய்யப்பட்டது. முதலாவது சஞ்சிகையாக கற்பகம் எனும் பெயரில் வெளிவந்து பலரதும் பாராட்டுகளையும் பெற்றது. தொடர்ந்து 1998ம் ஆண்டில் முழு அளவில் அச்சேற்றப்பட்டு தொடர் வெளியீடுகளாக மாணவர் சஞ்சிகை கற்பகம் தொடர்ந்தும் வெளி வந்தது. அப்போது கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய திரு. அ. இராஜேந்திரன் அவர்கள் தனது ஆசிச் செய்தியிலே சைவத் தமிழ் வித்தியாலயம் தனக்கேயுரித்தான கற்றல் மரபுகளின் படி மாணவரின் கல்வி ஆற்றலை, கற்கும் திறனை உயர்த்திட கற்பகம் வழிகாட்டியமை பாராட்டப்பட வேண்டியது என குறிப்பிட்டிருந்தார்.

இடப் பெயர்வின் போது செயற்பட்ட ஆசிரியர்கள் இந்தக்காலப் பகுதியில் வித்தியாலய வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஆசிரியர்கள் என்றும் மறக்க முடியாதவர்கள். திரு. த. சிவசுப்பிரமணியம், திரு. இ. இராஜேந்திரம், அமரர் பொ. ஜெகநாதன், திருமதி. சி. பவானந்தன் (ஸ்ரீ ரீச்சர்), திருமதி. ம. திருநாவுக்கரசு, திருமதி. சி. சீவரத்தினம், திரு. இ. இராஜ்குமார், திரு. வி. ஜெயராசா, திரு. செ. செல்வராசா, திரு. வ. சிவலிங்கம், திரு. இ. பஞ்சரத்தினம், அமரர். பு. ஸ்ரீசந்திரராசா, திரு. மு. சுகுமார், திரு. த. திருமால், திரு. கு. ஸ்ரீதரன், திரு. தி. ஜெயக்குமாரன், திருமதி. செ. ஜெகநாதராசா, திருமதி. ம. சிவசிதம்பரலிங்கம், திருமதி. தி. கணேசலிங்கம், திருமதி. கௌ. யோகேஸ்வரன், செல்வி. சு. பவானி, செல்வி. வா. பங்சாட்சரம், செல்வி வா. சியாதா, செல்வி. ம. குமுதினி, திருமதி. தனபாலசுந்தரம், செல்வி. உதயகலா, செல்வி. மு. சுகுணாமினி, செல்வி. இ. சுமிதா, செல்வி. இ. திலகா, செல்வி. வீ. விஜயகுமாரி, செல்வி. சொ. ஜெனனி, செல்வி. ஜெ. சோமசுந்தரம், செல்வி. ஆ. அருள்மொழி, செல்வி. சு. ராகினி, திருமதி. யோ. ஜெயரத்தினம், திருமதி. சி. சிவநாதன். மேற்குறிப்பிட்ட ஆசிரியர்கள் தமது ஆசிரிய தொழிலை உயர் தொழிலாக, வாண்மையுடன், அர்ப்பணிப்புடன் செயற்பட்டு தமது பணியால் தம்மை உயர்த்தி ஆசிரிய

நல்வழி சமூகமாக விளங்கினர். இவர்கள் சமூகத்தை சீரமிக்கும் நோய்களைத் தீர்க்கும் வைத்தியராக பாரிய பொறுப்புணர்ந்து "தூயவை துணிந்த போது பழி வந்து தொடர்வதில்லை" என்னும் முதுமொழிக்கு ஏற்ப சமூக விடுதலைக்கும், முன்னேற்றத்திற்கும் பாடசாலையை நன்கு பயன்படுத்தி சமூகம் மாசகன்று மலர்ச்சி பெற மகிழ்வுடன் பணியாற்றி வித்தியாலயத்தை மிளிர வைத்த பெருமைக்குரியவர்கள்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் கோப்பாய்க் கோட்டத்தில் முன்னிலையில் முத்திரை பதித்த பாடசாலைகளில் ஒன்றாக சைவத்தமிழ் வித்தியாலயம் திகழ்ந்தது. பௌதீக வளங்கள் தேவை முக்கியம் பெற இலுப்பை மரத்தை தறித்து தற்போது அமைக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடத்திற்கான செயற்பாடுகளுக்கு பிள்ளையார் சுழி போட முகாமைத்துவ குழுவும், கணித ஆசான் திரு. வி. ஜெயராசா அவர்களும் என்னுடன் இணைந்து முயற்சி எடுத்தமை குறிப்பிடத்தக்கது. கற்பக விநாயகர் துணையால் தொடர்ந்து பணியாற்றிய அதிபர், அபிவிருத்தி சங்கம், அன்றைய கல்விப் பணிப்பாளர் திரு. தணிகாசலம்பிள்ளை, அரச அதிபர் போன்றவர்களது வழிகாட்டலினால் இது உருவாக்கப்பட்டு ஓரளவு வகுப்பறை பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டுள்ளது மகிழ்வுக்குரியது.

தற்போது புதிய அதிபர் விக்கினேஸ்வரன் தலைமையில் மேலும் பல செயற்பாடுகளில் வெற்றிகளையும், சாதனைகளையும் நிலைநாட்டி வருவது உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் கல்விப் பணிக்கு மேலும் உரமிட்டுள்ளது. நூற்றாண்டு விழாவைக் காணும் இவ்வித்தியாலயம் உரும்பிராய் கிராமத்திற்கு மட்டுமல்ல அயல் கிராமங்களில் இருந்து கல்வி கற்க வரும் மாணவர்களுக்கும் மேலும் சிறப்பான செயற்பாட்டை வழங்க வேண்டுமென எல்லாம் வல்ல கற்பக விநாயகரைப் பிரார்த்திக்கின்றேன்.



நூறாவது அகவையில் சைவத்தமிழ்.....

திரு. சு. யோகராசா,
முன்னாள் முதல்வர்,
உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.

வளம் கொழிக்கும் உரும்பிராய் மண்ணிலே சைவத்தையும் தமிழையும் கொண்டு கல்வியில் கலங்கரை விளக்காய் ஒளிரும் இப்பள்ளி யானது 04.05.1915ல் இந்து அதிகார சபையின் முகாமைத்துவத்தில் இந்துக் கல்லூரி யுடன் ஆரம்பிக்கப்பட்டு 1949ல் தற்போதைய இடத்தில் செயற்படத் தொடங்கியது. அருகில் கற்பக விநாயகர் கோவில் தலைநிமிர்ந்து காட்சி தருவது தனிச்சிறப்பாகும். 05.05.1999ல் கடமை ஏற்ற நாளிலிருந்து அயராது பணியாற்றியதன் பயனாக வளம் மிக்க பள்ளியாக வளர்த்தெடுத்த பெருமை யுடன் அகவை நூற்றாண்டு விழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆசிரியர் மாணவர்களது கற்றல், கற்பித்தல் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்குத் தேவையான அடிப்படை வளங்களற்ற நிலையே பொறுப்பேற்கும் போது காணப்பட்டது. இந்நிலையை மாற்றியமைக்கும் நோக்குடன் பள்ளிக் குழுமங்களின் அவசியமும் நெருங்கிய உறவையும் மனதில் கொண்டு முதல் நாளன்று ஆசிரியர் நலனோம்பு மன்றமும் அதனைத் தொடர்ந்து பழைய மாணவர் சங்கமும் அங்குராற்பணம் செய்யப்பட்டது. தமிழ் பிரதேசங்களுக்கு அரச வளங்கள் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் புலம் பெயர்ந்து வாழும் பழைய மாணவர்களது கரங்களைப் பற்றிப்பிடிப் பதன் மூலமே வளங்களைப் பெருக்க முடியும் எனும் நோக்கில் கனடா, இலண்டன் பழைய மாணவர் சங்கங்களுடன் எமது உறவை இணைத்துக் கொண்டோம். நிலப்பற்றாக்குறை, விளையாட்டு மைதானம், மலசலகூடம், தொடர்மாடிக்கட்டிடம், நீர்த்தாங்கி, நூல்நிலையம், சிறுவர் பூங்கா, தள பாடங்கள், நவீன கற்பித்தல் உபகரணங்கள், கணணிகள், சுற்றுமதில் போன்ற அத்தியாவசிய தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது.

ஆசிரியர்களது அர்ப்பணிப்புடன் கூடிய வினைத்திறன் மிக்க கற்றல், கற்பித்தல் செயற்பாட்டின் விளைவாக இணைப்பாடவிதான பரீட்சைப் பெறுபேறுகள், தரம் 5 புலமைப் பரீட்சையின் முதன்மைநிலை பெறு பேறுகள் ஆகியன தூரவுள்ள ஊர்களின் மாணவர்களை அதிகளவில் ஈர்த்தெடுத்ததனால் வளங்களின் தேவை அதிகமாயிற்று. காணிக் கொள்வனவின் பொருட்டு நிதி சேகரிக்கும் நோக்கில் சீட்டிழுப்புத் திட்டத்திற்குப் பரிசில் நிதியாக பழைய மாணவன் திரு. சண்முகநாதன் கரிகரன் (கண்ணன்) நாற்பதாயிரம் ரூபா அன்பளிப்புச் செய்து இச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பள்ளியின் வரலாற்றையே மாற்றி யமைக்கும் வகையில் பேருதவி புரிந்த பெருமைக்குரியவர்களை இங்கு நினைவு கூரவேண்டிய கடப்பாடு எனக்குண்டு. அரிமாக் கழகத்தில் இணைந்து கொண்டதன் பயனாக எனது கோரிக்கைகளை ஏற்று அமரர் தலைவர் இ. நடராசா அவர்களின் ஆதரவுடன் G.T.Z நிறுவன ஒதுக்கீட்டில் மலசல கூடங்களும், அதனைத் தொடர்ந்து நீர்த்தாங்கியும் மதிற் சுவரும் அமைக்கப்பட்டது.

மூன்று மாடிக்கட்டடம் (130 x 25) அமைக்கும் நோக்கில் எனது கோரிக்கையை ஏற்று வடக்குப்புறம் 01 பரப்புக் காணியை பழைய மாணவன் திரு. சிவஞானம் சிவராம் நன்கொடையாக வழங்கி உதவினார். மைதானம் இல்லாத குறையை நிவர்த்தி செய்ய பழைய மாணவன் K.T. கோணேஸ் (இலண்டன்) 9.1/2 பரப்பு காணியை வாங்கி நன்கொடையாக வழங்கியதுடன், புதிய நூல் நிலையத்திற்கு 251801.00 ரூபா பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்தார். திருத்த வேலையின் பொருட்டு RAAN நிறுவனம் ஒதுக்கி இரண்டு இலட்சம் ரூபாயைக் கொண்டு மூன்று மாடிக் கட்டத்திற்குரிய (70 X 20) அத்திபாரமும் 16 தூண்களும் நிறுவப்பட்டது. மிகுதி வேலைகள் மாகாணக் கல்வி அமைச்சு நிதியில் செய்யப்பட்டது. G.T.Z நிறுவனத்தின் ஆதரவுடன் (60 X 25) மிகுதி கீழ்த்தளம் பூரணப்படுத்தப் பட்டது. மேற்தளம் இரண்டும் நிக்கொட் நிதி உதவியுடன் மூன்று மாடிக்கட்டடம் பூரணப்படுத்தப்பட்டது. கனடா, இலண்டன் பழைய மாணவர்களின் நிதி உதவியுடன் சுற்றுமதில்கள் அமைக்கப்பட்டன்.

ஆசிரியர், மாணவர்களுள்கான தளபாடங்களை மாவட்ட செயலகம், NECORD, G.T.Z வழங்கி உதவின. கனடா பழைய மாணவர்களான திரு.

திருமதி சபேசன் ஒலிபெருக்கியும், திரு. பஞ்சலிங்கம் சாந்தலிங்கம் LEAZER PRINETER, வருடாந்த பரிசளிப்பு விழா மலருக்கு எண்பதாயிரம் ரூபாவும், திரு. ஆ. வசீகரன் OVERHED PROJECTOR, திருமதி மதிலா ஸ்ரீபத்மநாதன் தொலைபேசியும், திரு. க. நெடுஞ்செழியன் மேலைத் தேச வாத்தியக் கருவியும் அன்பளிப்புச் செய்தார்கள். RAAN, ROTORY CLUB கனடா பழைய மாணவர்கள் கணனிகளைத் தந்து உதவினர். வருடாந்த பரிசளிப்பு விழாவிற்குப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினூடாக பலர் பரிசில் நாள் நிதியாக நிலையான வைப்பில் இட்டுள்ளனர். பழைய மாணவர் சங்க நிதி நிலையான வைப்பில் இடப்பட்டுள்ளது. இவ்வாறு மேலும் பலர் தேவை யறிந்து பணமும், பொருட்களும் வாரி வழங்கியுள்ளனர். அனைவரையும் இவ்வேளை நன்றியுடன் நினைவுகூருகின்றேன்.

சமூகத்திற்கு பொருத்தபாடுடையவர்களை உருவாக்குவதில் பள்ளிகள் முதன்மை இடத்தை வகிக்கின்றன. இவற்றின் ஊடாகவே கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்கள் வளர்க்கப்படுகினறன. எமது பள்ளியும் துறைசார் நிபுணர்களையும் கல்வியலாளர்களையும் உருவாக்கிய பெருமைக்குரியது. இன்று உலக நாடுகள் அனைத்திலும் எமது பழைய மாணவர்கள் நன் நிலையில் வாழ்வது சிறப்பம்சமாகும்.

நூற்றாண்டு விழா கொண்டாடும் எமது பள்ளியின் வளர்ச்சிக்குத் தோள் கொடுத்து உதவிய பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், கனடா, இலண்டன் (பா.ம.ச) பழைய மாணவர்கள், ஏனைய பள்ளிக் குழுமங்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள், ஆரம்ப காலம் தொட்டு பணிபுரிந்த முதல்வர்கள், ஆசிரியர்கள், தற்போது கல்விப்பணியாற்றிக் கொண்டிருக்கும் முதல்வர், ஆசிரியர்கள், கல்வி சரா ஊழியர்கள் ஆகிய அனைவர்க்கும் இத்தருணத்தில் எனது மனமார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதுடன் மேலும் இப்பள்ளி மேம்பாடடைந்து மிளிர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

பாடசாலை நிகழ்வுகளில் சில . . .

நேரம் ஒரு வளம்

திரு. ச. வேலழகன் (SLPS - I),
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர்,
பொருளாளர் கல்வி அபிவிருத்திக் குழு,
கோப்பாய் கோட்டம்.

நேரம் என்பது சகலருக்கும் சம அளவில் ஒதுக்கப்பட்ட வளமாகும். சகல செயல்களுக்கும் அடிப்படையான இவ் வளத்தை சிறந்தவொரு திட்டமிடலினூடாக பயன்படுத்த வேண்டும். நேரமெனும் வளம் எமது செயற்பாட்டு வெற்றியில் தாக்கம் செலுத்துகிறது. வெற்றியடையத் தவறும் நிலைமைகளில் வெளிப்படையாகவே நேரத்தினைக் காரணமாகச் சுட்டிகாட்ட நாம் தவறுவதில்லை. உதாரணமாக....

- நேரம் போதாமையினால் இப்பரீட்சையில் சித்தி பெறவில்லை.
- சிலவினாடி முன்பு ஓடிமுடித்திருப்பின் மரதன் ஓட்டத்தில் முதலாவதாக
- அரை மணி நேரம் முன்பதாக வைத்தியசாலைக்குச் சென்றிருப்பின் விபத்தில் சிக்கியவரின் உயிரைக் காப்பாற்றியிருக்கலாம்.
- ஒரு நிமிடம் முந்திச் சென்றிருந்தால் அந்த வண்டியை பிடித்திருக்கலாம்.

என நேரத்தை முக்கியப்படுத்திச் சிலர் பேசுவதை நாம் பார்த்திருக்கிறோம். நேரம் சகலருக்கும் ஒரேயளவில் கிடைக்கும் வளம். அதை முகாமிப்பு செய்வதிலேயே வெற்றிகளைச் சிலரும், தோல்விகளைச் சிலரும் தமதாக்கிக் கொள்கின்றனர். எனவே சிறந்த நேர முகாமைத்துவத் திறனை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஆகவே தனிப்பட்ட வாழ்விலும், பொது வாழ்விலும் சிறந்த திட்டமிடல் அவசியமாகிறது. காலையில் எழுந்து மாலையில் படுக்கைக்குச் செல்லும் வரை என்னென்ன காரியமாற்றப் போகிறோம் என்பதை முன்னுரிமை அடிப்படையில் திட்டமிட வேண்டும்.

நேர முகாமைத்துவம் என்பது நேரத்தை வினைத்திறனுடன் முகாமை செய்வதைக் குறிக்கும். அதாவது ஒருவர் எப்படி தனக்குரிய வேலைகளை/

கருமங்களை நேரத்தை வீணடிக்காமல் செய்து முடிக்கலாம்? என நெறிப்படுத்துவதாகும். இது நேரத்தைத் திறமையாகப் பயன்படுத்தல் எனக் கொள்ளப்படும்.

குறிப்பாக எந்தச் செயற்பாடாயினும் எவ்வாறு அதைக் குறைந்த நேரத்தில் சிறப்பாக நிறைவு செய்ய முடியும் என்பதையே குறித்து நிற்கும். நாம் எதனைச் செய்கிறோமோ அதன் அடைவையும் நாம் செய்ய வேண்டிய தேவையுள்ள கருமங்களை நிறைவு செய்தலையும் நோக்காகக் கொண்டு எமது நேரத்தை முகாமை செய்தல் பற்றிய கருமமே நேர முகாமைத்துவம் எனப்படுகின்றது (John Adair - 2005) எனவும் நேர முகாமைத்து வமானது இலக்கினை நோக்கித் தூண்டுவதாகவும் விளைவுகளை மையமாகக் கொண்டதாகவும் காணப்படுகின்றது என "வலுவூட்டல் முகாமைத்துவம்" எனும் நூலில் கலாநிதி வேல்நம்பி குறிப்பிடுகின்றார்.

பாடசாலை என்னும் நிறுவனமும் நேர முகாமைத் திறனை வளர்ப்பதில் பங்காற்ற வேண்டும். ஒவ்வொரு நிறுவனங்களிலும் உள்ளது போல பாடசாலைகளும் இலக்கு நோக்கியதாகவே தமது திட்டமிடலை மேற்கொள்கின்றன. அத்திட்டமிடலில் நேரம் ஓர் பிரதான வளமாகக் காணப்படுகின்றது. எனினும் திட்டமிட்ட இலக்கினை அடைய முடியாத விடத்தில் தாக்கம் செலுத்தியிருக்கக் கூடிய பிரதான காரணியாகவும் நேரம் அமைந்திருப்பதைக் காணலாம். சாதாரணமாக ஒரு பாடசாலையின் அடைவு மட்டத்திலும் பின்னடைவு ஏற்படும் போது நேரம் எனும் காரணி செல்வாக்குச் செலுத்தியிருப்பதைக் காணலாம். நேரமானது பொதுவாக பெரியளவில் செல்வாக்குச் செலுத்தியமையைக் காணமுடியாதாயினும் சிறிய சிறிய நேர முகாமைத்துவப் பின்னடைவுகளின் ஒட்டு மொத்த வினாவாக அடைவு மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். அன்றாடம் பாடசாலைகள் மட்டத்தில் எதிர்நோக்கக் கூடிய சில சந்தர்ப்பங்களை நாம் உதாரணமாகக் கூறலாம்.

மாணவர்கள் சார்பாக:

பாடசாலைக்குத் தாமதமாக வருதல்
சீரற்ற வருகை
வகுப்புகளுக்குத் தாமதமாகச் செல்லல்.
உரிய வீட்டுப் பாடம் செய்யாதிருத்தல்.
தேவையான கற்றல் உபகரணங்களை எடுத்து வராமை

கற்றவற்றை அன்றாடம் மீட்டல் செய்யாமை
இணைக் கலைத்திட்ட செயற்பாடுகளைப் புறக்கணித்தல்
வெளிநிலைப் போட்டிகளைப் புறக்கணித்தல்

ஆசிரியர் சார்பான நேர முகாமைத்துவப் பலவீனம்

அதிக லீவுகள் பெறுதல்.
திடீர் லீவுகள் பெறுதல்கள்.
லீவுக்கான பதிற்கடமை திட்டமிடாமை.
பாடத் திட்டமிடலின்மை. (பாட வேலைத் திட்டம், பாடக்குறிப்பு)
செயற்பாட்டுக் கற்பித்தலுக்கு முன்னாயத்த மின்மை.
பாடத்திற்கு செல்வதில் தாமதம்.
பாடத்தை நிறைவு செய்வதில் தாமதம்.
பாட நேரத்தில் தொலைபேசிப்பாவனை.
அலகு ரீதியான, பாடரீதியான மதிப்பீட்டுத் தாள்களை உரியவேளையில் மதிப்பீடு செய்து பின்னூட்டல்செய்யாமை.
ஒதுக்கப்பட்ட புறக் கிருத்தியச் செயற்பாட்டுக்காகப் பாடநேரத்தைப் பயன்படுத்தல்.
புதிய மாற்றங்களுக்குத் தம்மை இற்றைப்படுத்தாமை.

முகாமைத்துவம் சார்ந்தவை.

திட்டமிடலின் பலவீனம்
பணிப்பகிர்வின் பொருத்தபாடின்மை
உள்ளக மேற்பார்வைச் செயற்பாட்டின் பலவீனம்
முன்னுரிமை அடிப்படையில் செயல்களை திட்டமிடாமை
பணிகளை ஒத்தி வைத்தல்
முகாமைத்துவக் குழுவில் பொருத்தமானவர்களை உள்வாங்காமை.

பெற்றோர் சார்ந்த முகாமைத்துவப் பலவீனம்

கற்றலுக்கான அடிப்படை வசதிகளை வீட்டில் ஏற்படுத்தாமை
கிரமமான பாடசாலை வரவை (பிள்ளைகளின் வரவை) உறுதிப்படுத்தாமை
பிள்ளைகளின் அடிப்படை சுகநல வசதிகளை உறுதிப்படுத்தாமை.
கற்றலுக்குரிய ஊக்குவிப்பை வழங்காமை
பாடசாலையுடனான கிரமமான தொடர்பைப் பேணாமை.
கூட்டங்களில் கலந்துகொள்ளாமை
குடும்பச் சச்சரவுகள் மாணவர் கற்றலில் தாக்கத்தை ஏற்படுத்தல்.

மேற்போந்த மாணவர், ஆசிரியர், முகாமைத்துவம், பெற்றோர் சார்ந்த காரணிகளில் சில நேரடியாகவும், சில மறைமுகமாகவும் நேர முகாமைத் துவத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி இலக்கை அடைவதில் இடர்பாட்டைத் தோற்றுவிக்கிறது.

ஒவ்வொரு சாராரும் மேற்குறித்த காரணிகள் இழிவளவான விளை வையே செலுத்தும் எனக் கருதுவர். ஆனால் ஒட்டு மொத்த விளைவு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் எனவே திட்டமிடல் என்பது சகல தரப்பாருக்கும் அவசியமானது.

"நேரம் போதாது" என்ற கூற்று நேரத்தைத் திட்டமிடாதவர்களால் வெளிப்படுவதாகும். இருபத்து நான்கு மணிநேரம் தான் உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் தினமும் ஒதுக்கப்படும் நேரமாகும். மேலதிக ஒரு வினாடியைக் கூடக் கேட்டுப்பெற முடியாது. ஏனெனில் அவ்வினாடி பிறிதொரு நாளுக்குரியதாகவே இருக்கும். எனவே நேரத்தைத் திட்டமிடு வதற்கு பின்வரும் இரு அம்சங்களின் அடிப்படையில் திட்டமிடவேண்டும்.

1. நேரத்தைப் பொருத்தமாக பயன்படுத்தல்
2. நேரத்தைப் விரயமாக்கும் விடயங்களை இணங்காணல்.

மேற்குறித்த அம்சங்களைக் கருத்திற் கொண்டு தமது செயற்பாடு களைப் பின்வரும் வகையில் ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும்.

1. மிகவும் அவசியமானவை
2. மிகவும் அவசரமானவை
3. அவசியமானவை ஆனால் அவசரமற்றவை
4. மிகவும் அவசரமானவையும், மிகவும் அவசியமானவையும்.

என்னும் ஒழுங்குக்கமைய எமது திட்டமிடல் அமைவது நன்று. அத்துடன் தொழில் துறையிலுள்ளோர் தமது திட்டமிடலின் போது தமது நேரத்தைப் பின்வரும் வகையில் ஒதுக்குதல் சாலச் சிறந்தது.

1. சுயதேவைக்கான நேரம் - Time for Selfnelds.
2. தொழில் - பாடசாலைக்கான நேரம் - Time for School
3. சமூக உறவுக்கான நேரம். - Time for Social Nests.

மேற்குறிப்பிட்ட வகைப்படுத்தலானது பாடசாலை அதிபரானவர் உடல் உள ஆரோக்கியம் நிறைந்தவராகவும், சமநிலை குலையாதவராகவும்

தனது கடமையையாற்ற அவசியமானதென "பாடசாலைகளை முகாமை செய்தல் சமகால அணுகுமுறை" எனும் நூலில் முதுநிலை விரிவுரையாளர் மா. சின்னத்தம்பி அவர்கள் (பக்கம் - 63) குறிப்பிடுகிறார். மேற்சொன்ன நேரமுகாமைத்துவத் திட்டமிடலானது தொழிலிலீடுபடும் அனைவருக்கும் பொருத்தமானதாகும்.

பாடசாலையைப் பொறுத்தவரை பாடசாலைக்கென ஐந்தாண்டுத் திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டத்தையும் அடிப்படையில் கொண்டு செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். திட்டமிடலில் வேலைப்பகிர்வு மற்றும் நேர வளப்பகிர்வு என்பன திட்டமிடப்படவேண்டும். அத்துடன் நேரசூசி அடிப்படையில் செயற்பாடுகள் நடைபெறுவதை தொடர் மேற்பார்வை மதிப்பீட்டினூடாக உறுதி செய்தல் அவசியமாகிறது. அத்துடன் பாடசாலையின் திட்டமிட்ட இலக்கை அடைய முகாமைத்துவம், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் ஒன்றிணைந்து பணியாற்றுகையில் நேரத்திற்கு முன்னுரிமை தரல் இன்றியமையாததாகும்.

நேர விரயத்தைச் சீர்செய்ய....

01. அவசியமும் அவசரமும் மிக்கவைகளை
02. பயனற்ற தொலைபேசி உரையாடலைக் குறைத்தல்/ தவிர்த்தல்.
03. கூட்டங்களை வினைத்திறன் மிக்க வகையில் ஒழுங்கமைத்தல்.
04. வகுப்பறை/ அலுவலகத்தின் ஒழுங்கமைப்பைச் சீர்செய்தல்.
05. பயனற்ற விடயங்கள் தொடர்பான விவாதங்களைத் தவிர்த்தல்.
06. கற்பித்தலுக்கோ/ ஏனைய செயற்பாடுகளுக்கோ தேவையான முன் ஆயத்தங்களை மேற்கொள்ளல்.
07. உறுதியான தீர்மானங்களை எடுத்தலும், தீர்மானம் எடுத்தபின் அதை மாற்றாதிருத்தலும்.
08. அலுவலகங்களிலும், வீடுகளிலும்தேவையற்றவற்றை அகற்றுதல்.
09. பொருட்களும், ஆவணங்களும் இலகுவாக எடுக்கக் கூடியவகையில் ஒழுங்கமைத்தல்.
10. திட்டமிட்டு வேலைகளை நிறைவேற்றல்.

11. அறிவித்தல்கள், அறிவுறுத்தல்களைக் காட்சிப்படுத்தல்.
12. நினைவூட்டல் பதிவேடுகளைப் பேணுதல்.
13. கூட்டங்கள், செயலமர்வுகளின் போது கைத்தொலைபேசிகளை நிறுத்தி வைத்திருத்தல்.
14. செயற்பாடுகள்/ கூட்டங்களின் போது ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலை முன்கூட்டியே சமர்ப்பித்தலும் அதனைச் செயற்படுத்தலும்.
15. பிறரின் நேரத்தையும் மதித்துச் செயற்படல்.
16. கூட்டங்கள் மற்றும் செயற்பாடுகளுக்கு போதிய முன்னறிவித்தல் கொடுத்தல்.
17. நிறுவனங்களில் ஒதுக்கப்படும் வேலைகளை உரிய வேளையில் செய்து முடித்தல்.
18. பாடசாலைகளில் நேரசூசியை முழுமையாகச் செயற்படுத்தல்.
19. பாடநேரத்தை முழுமையாகப் பயன்படுத்தல்.
20. ஒத்திவைக்காது நிறைவேற்றுதல்.

உண்மை நேர்மை திறமைஆகும். உழைப்பு நாட்டுப்பற்று இருந்தால் எந்தக் கிராமத்திலும் எந்த ஏழையாக இருந்தலும் எந்த மதக்காரன் ஆனாலும் வாழ்வின் உன்னதத்தை அடையமுடியும்.

"அப்துல்கலாம்"

பாடசாலை நிகழ்வுகளில் சில . . .

கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளும் உலக உணவுத் திட்டமும்

திரு. சோ. தவநடராஜா,
(B.Com, Com. sp.Trd, PGDE, MED)
உலக உணவுத்திட்ட உத்தியோகத்தர்,
கோட்டக்கல்வி அலுவலகம். கோப்பாய்.

யாழ் மாவட்டத்தில் உள்ள யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் மூன்று கல்விக் கோட்டப் பிரிவுகளுள் கோப்பாய்க் கோட்டப் பிரதேசம் ஒன்றாகும். வலிகாமம் கிழக்குப் பிரதேசசெயலர் பிரிவு எல்லையின் ஆரம்பமான இருபாலை கிழக்கு, இருபாலை தெற்கு கிராம சேவையாளர் பிரிவு தொடக்கம் தற்போது மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள வளலாய் கிராமசேவையாளர் பிரிவு எல்லைவரை கோப்பாய்க் கோட்டக் கல்விப் பிரதேசமானது பரந்து விரிந்துபட்டுள்ளது. இப்பிரதேசம் முழுமையாக விவசாயப் பொருளாதரத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

பெருமளவு பிள்ளைகள் கோப்பாய்க் கோட்டப் பிரதேசப் பாட சாலைகளுக்கு மிகவும் பின் தங்கிய அன்றாடக் காய்ச்சிகளாகிய குடும்பப் பின்னணியில் இருந்தே வருகை தருகின்றனர். யாழ்ப்பாண நகரத்தை அண்மித்த பகுதியாக கோப்பாய்ப் பெருநிலப்பரப்பு அமைந்துள்ள காரணத்தால் ஒரளவு வசதிபடைத்த பொருளாதாரப் பின்புலங்களை உடைய குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகள் நகரப்புறப் பாடசாலைகளை நோக்கித் தமது கற்றல் செயற்பாட்டிற்காகச் செல்கின்றனர். வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகள் கோப்பாய்க் கோட்டப் பிர தேசப் பாடசாலைகளில் தமது கற்றல் நடவடிக்கைகளைத் தொடரு கின்றார்கள்.

கோப்பாய்க் கோட்டத்தில் சுமார் 40 பாடசாலைகள் தற்போது செயல்நிலையில் காணப்படுகின்றன. 1AB வகையைச் சார்ந்த 05 பாடசாலைகளும் 1C வகையைச் சேர்ந்த 02 பாடசாலைகளும் வகை II தரத்தைச் சேர்ந்த 10 பாடசாலைகளும் வகை III தரத்தைச் சேர்ந்த 23 பாடசாலைகளும் இவற்றுள் உள்ளடங்குகின்றன.

மேற்குறிப்பிட்ட பாடசாலைகள் அனைத்தும் தேவையான உட்கட்டமைப்பு மற்றும் பௌதீக வசதிகளைக் கொண்டிருக்கின்றன என்று கூறமுடியாது. ஆனாலும் மாணவர்களின் அடிப்படை மற்றும் கற்றலுக்கான வசதிகளை உள்ளடக்கி இயங்கிக் கொண்டிருக்கின்றன.

கோப்பாய்க் கோட்டப் பிரதேச மாணவர்களின் இன்றைய கல்வி நிலை தொடர்பாக உற்று நோக்கும் போது க.பொ.த உயதரப் பரீட்சை, க.பொ.த சாதாரண தரப் பரீட்சை, தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை என்பவற்றில் கணிசமான அளவு பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்கின்ற போதும் யாழ்ப்பாணக் கல்வி வலயப் பெறுபேற்று அடைவில் சரிவினை ஏற்படுத்தும் கோட்டமாகக் கோப்பாய்க் கோட்டப் பெறுபேறுகள் காணப்படுவதாக கல்வியியல் ஆர்வலர்கள் குறிப்பிடுகின்றனர். எனினும் அண்மைக்காலங்களில் கோப்பாய்க் கோட்ட மட்ட பொதுப்பரீட்சைப் பெறுபேறுகளில் சிறிய அளவிலான வளர்ச்சி ஏற்படுவதை அவதானிக்க முடிகின்றது.

மேற்கூறப்பட்ட அடைவுமட்ட நிலை தொடர்பாகப் பல காரணிகள் இணங்காணப்படுகின்றன. பாடசாலை அதிபர்களுடனான நேர்காணல் பாடசாலைகளுடன் தொடர்புடைய நிறுவன அங்கத்தவர்களுடனான கலந்துரையாடல். கல்வி ஆய்வு தொடர்பான கல்வியலாளர்களுடனான சந்திப்பு போன்றவற்றின் ஊடாகபின்வரும் காரணங்களைக் கண்டறியக் கூடியதாக உள்ளது.

01. கோப்பாய்க் கோட்டப் பிரதேசத்தில் உள்ள பிள்ளைகளின் குடும்பப் பொருளாதார நிலை பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றன. பிறழ்வு பட்ட குடும்பங்கள், தாய் தந்தை பிரிந்து வாழும் குடும்பங்கள், தாய் அல்லது தந்தையை இழந்த குடும்பங்கள், வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மிகவும் பின்தங்கிய பொருளாதாரத்தை உடைய குடும்பங்கள் எனப் பல்வேறு குடும்பப் பின்னணிகளில் இருந்து பிள்ளைகள் பாடசாலைக்கு வருகின்றனர்.

02. கோப்பாய்க் கோட்டத்தில் உள்ள வசதி கொண்ட அல்லது ஓரளவு வசதி படைத்த மற்றும் நடுத்தரவர்க்கக் குடும்பங்களில் இருந்து வரும் பிள்ளைகள் யாழ்ப்பாண நகர்ப்புறப் பாடசாலைகளை நோக்கி கல்வி

கற்பதற்காகச் செல்கின்றனர். அதாவது அப்பிள்ளைகளின் பெற்றோர் நகர்ப்புறப் பாடசாலைகளில் கல்வி கற்பதை விரும்புபவர்களாகக் காணப்படுகின்றமை.

03. ஆசிரியர் வளப்பங்கீட்டில் காணப்படும் சமனற்ற தன்மை யாழ்ப்பாணம், நல்லூர்க் கோட்டப்பாடசாலைகள் பெரும்பாலும் நகரப் புறத்தை அண்மித்த பகுதிகளில் காணப்படுவதனால் இங்கு கல்வி கற்பிப்பதற்கு பெருமளவு ஆசிரியர்கள் விரும்புகின்றனர்.அதேவேளை கோப்பாய்க் கோட்டத்தில் பாடசாலைகளின் அமைவிடம். தூர இடைவெளி கூடுதலாகக் காணப்படுவதாலும் விருப்பத்துடன் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் செல்வதற்கு கணிசமான அளவு ஆசிரியர்கள் பின்னிற்றல்.

04. பாடசாலையில் இருந்து இடைவிலகல் வீதம், பாடசாலைக்கு ஒழுங்கான வரவின்மை வீதம், போசாக்கின்மை வீதம் என்பன கோப்பாய்க் கோட்டப் பாடசாலைப் பிள்ளைகளிடத்தில் உயர்வாகக் காணப்படு கின்றமை குடும்பங்களில் காணப்படும் இடைவெளி அதிகரிப்பு, குடும்பச்சுமைகளை பாடசாலைக்குச் செல்லும் வயதில் சுமக்க வேண்டி இருத்தல் போன்ற காரணிகளால் இடைநிலை வகுப்புக்களுக்கு மாணவர்கள் செல்வது குறைவாக இருக்கின்றமை.

05. அதிகரிக்கப்பட்ட போதைப் பொருட் பாவனை, சட்டவிரோதமான முறையில் மதுபானம் அருந்துதல் போன்ற காரணிகளும் பாடசாலைக்கு வருகை தரும் மாணவர்களின் வரவு வீதத்தில் தாக்கம் செலுத்துகின்றன.

06. கற்றலில் ஈடுபடும் மாணவர்கள் தற்கால நவீன தொடர்பாடல் கருவிகளின் உந்துதல், மோகம் காரணமாக ஊக்கமாக கற்பதில் பின்னிற்றல் சமூகம் வளர்ச்சியடைந்த போதிலும் நவீன தொடர்பு ஊடகங்களின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு தவறுகின்றமை.

மேற்குறிப்பிட்ட காரணிகள் கோப்பாய்க் கோட்டப் பாடசாலை மாணவர்களின் தேசிய மட்டப் பெறுபேறுகளின் அடைவுகளில் கணிசமான அளவு தாக்கத்தைச் செலுத்துகின்றன.

ஒரு மாணவனின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு அறிவு சார்ந்த, உளப்பாங்கு சார்ந்த, திறன் சார்ந்த விருத்தி அவசியமாகிம் அவனது உடல் சார்ந்த தேவை முதன்மையானது. சாதாரண வழக்கில் கூறப்படும் "சுவர் இருந்தால் மட்டுமே சித்திரம் வரையலாம்" என்ற முதுமொழி இங்கும் பொருத்தமுடையதாகின்றது. நல்ல போஷாக்கான உணவு மூலம் உடற்சுகத்தினையும் ஆரோக்கியத்தினையும் பெறுவதுடன் மட்டுமன்றி வகுப்பறையில் மாணவர்களின் கற்கும் திறனையும் மேம்பாடு அடையச் செய்ய முடியும். இவ்வகையில் பாடசாலைக்கு வரும் பிள்ளை களின் வயிற்றுப் பசியைப் போக்குகின்ற அளப்பரிய பணியை உலக உணவுத் திட்டம், மாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து மேற்கொள்வது பாராட்டுக்குரியதாகின்றது.

2006ம் ஆண்டு முதல் கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளில் கல்வி பயிலும் தரம் 01 முதல் தரம் 09 வரையான வகுப்புக்களைச் சேர்ந்த மாணவச் செல்வங்களிற்கு உலக உணவுத்திட்டம் கல்விக்கான உணவு என்ற தொனிப்பொருளின் அடிப்படையில் (MID DAY MEALS) என்ற திட்டத்தை இன்றுவரை தொடர்ந்த வண்ணம் உள்ளனர். "பசியற்றதோர் உலகம்" என்ற ஐக்கிய நாடுகள் சபையின் முன்மொழிவுக்கு அமைவாக பல உலக நாடுகளில் இருந்தும் பொருளாகவும், பணமாகவும் பெற்றுக்கொள்ளப்படும் உதவி களை மையமாகக் கொண்டு இலங்கை அரசாங்கத்தின் அனுசரணையுடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

அரிசி, பருப்பு, எண்ணெய் போன்ற உணவுப் பொருட்களை உலக உணவுத்திட்டம் பாடசாலைக்கு வழங்குகின்றது. இவற்றைப் பாடசாலைகள் தங்களது பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்கள், பெற்றோர் ஆகியோரின் கூட்டுப் பொறுப்புணர்வுடன் சமையல் தொண்டர்களை நியமித்து அன்றோ சில பாடசாலைகளில் பெற்றோர்கள் மனமுவந்து உதவுவதன் ஊடாக இடைவேளை உணவாக மாற்றி மாணவர்களுக்கு வழங்குகின்றார்கள். மாகாணக் கல்வித் திணைக்களம் இவ் உணவு வழங் கலுக்கான மரக்கறிக் கொள்வனவுக்காக பண உதவியை வழங்குகின்றது. எது எவ்வாறாயினும் எமது பிரதேசப் பாடசாலையின் அதிபர்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் இவ் வேலைத்திட்டத்துக்கு முன்னுரிமை கொடுத்து நடைமுறைப்படுத்தி வருகின்றனர். Mid Day Meals விநியோகம் கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளிற்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

மிகவும் பின்தங்கிய குடும்பப் பொருளாதார பின்னணியில் இருந்து வெறும் வயிற்றுடன் பாடசாலை வரும் சிறார்களின் கற்றல் மேம்பாடு அடைவதற்கு இவ் உணவு வழங்கல் பெரிதும் உதவியாகவே உள்ளமை குறிப்பிட்டுக் கூறக் கூடியதொன்றாகும். உலக உணவுத் திட்டம் உலகில் பல நாடுகளில் இருந்து பொருட்களைத் திரட்டி எமது பிரதேசச் சிறார்களின் போஷாக்கு விருத்திக்காக வழங்குவது பாராட்டுவதற்குரியது மட்டுமன்றி தயவுடன் நன்றி பகரக் கூடிய விடயமாகும்.

அண்மைக் காலமாக மீன்ரின், பேரீச்சம்பழம் ஆகியன உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்படுகின்றது. மாணவர்களின் மூளை வளர்ச்சி, சிந்தனை ஆற்றல் விருத்தி என்பவற்றுக்குத் தேவையான அளவு புரதச் சத்தினை மீன்ரின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. ஆனாலும் கோப்பாய்க் கோட்டத்தில் சில பாடசாலைகளில் பாடசாலைக் கலாசாரம், பாடசாலை சமூகத்தின் கட்டுப்பாடுகள் காரணமாக மீன்ரின் உபயோகிப்பது இல்லை. அவை தவிர்க்க முடியாத காரணிகளாக அமைகின்ற அதேவேளை தற்போது மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ள வளலாய், கதிரிப்பாய் போன்ற பாடசாலைகளிலும் வாதரவத்தை போன்ற கஸ்டப் பிரதேசப் பாடசாலை களிலும் மீன்ரின் பயன்பாடு பூரணமாகக் காணப்படுகின்றது. பேரீச்சம்பழம் தற்போது எல்லா மாணவர்களிற்கும் மதிய உணவு இடை வேளையின் பின்னர் வழங்கப்படுகிறது. இதுவும் வரவேற்கத்தக்க விடயமாகும்.

உலக உணவுத் திட்ட விநியோகம் காரணமாக கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள்.

கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளில் மாணவர் இடைவிலகல் எனப்படுவது மிகப்பாரிய பிரச்சினையாகும். கல்வி கற்கும் பருவத்தில் பாடசாலை செல்லாது முறைமைசார் பாடசாலைக் கல்வியில் இருந்து இடைவிலகுவது அவர்களது வாழ்க்கைக்கான தடை என்றே கூறலாம். இதனால் அவர்களின் கற்றல் திறன் குறைவடைவதுடன் கல்வி அறிவு நிலையிலும் தேக்கநிலை ஏற்படுகின்றது. இவ்வாறான இடைவிலகல் ஏற்படுவதற்கு அப் பிள்ளைகளினது பெற்றோர்கள் தமது வீட்டின் வறுமை யைப் போக்குவதற்காக குடும்பச் சுமையை அவர்களிடம் சுமத்துவதற்காக பள்ளிப் பருவ வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க எத்தனிக் கின்றனர். இவ் உணவுத்திட்டம் நடைமுறைப்படுத்துவதனால் தமது வறுமையைக் காரணம்

காட்டாது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புகின்றனர். பின்தங்கிய குடும்ப நிலைகளில் உள்ள பெற்றோர்களின் "பாடசாலை எதிர்ப்பண்பாடு" "Anti School culture" உலக உணவுத் திட்ட Mid Day Meals வழங்கலால் இல்லாது ஒழிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் நாளாந்த வரவு வீதம் அதிகரிக்கின்றமை

இன்றைய நவீன கற்றல் செயன்முறைகளில் வகுப்பறைச் செயற்பாடுகளின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. ஒரு மாணவன் தொடர்ச்சியான வகுப்புக்களிற்கு சமூகமளிக்கும் போது தனது கற்றல் அடைவை மேம்படுத்திக் கொள்ளமுடியும். இன்று கோப்பாய்க் கோட்டப் பிரதேசப் பாடசாலைகளில் பசி என்ற காரணத்தால் மாணவர்கள் பாடசாலைக்குப் வராமல் விடுவதை நிறுத்தியுள்ளதுடன் பெற்றோர்களும் தமது குடும்ப நிலை பின் தங்கி இருந்தாலும் ஒவ்வொருநாளும் பாடசாலைக்கு பிள்ளைகளை அனுப்ப வேண்டும் என்ற மனப்பாங்கு நிலையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இவை மேற்படி உணவு வழங்கல் திட்டத்தினால் ஏற்பட்ட மாற்றம் என்றே கூறலாம்.

இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களின் ஆற்றல்கள் வெளிப்படுத்தப்படுகின்றமை

ஒரு மாணவனின் வாழ்க்கைக் கோல வளர்ச்சிக்கு வெறுமனே அறிவு சார் விருத்திமட்டும் காரணமாக அமைந்துவிடாது. மாறாக அம் மாணவனிடத்தில் காணப்படும் வெவ்வேறுபட்ட திறன்களை விருத்தி செய்வதும் உள்ளடக்கப்படுகின்றது. சுவட்டு நிகழ்வுகள், மைதான நிகழ்வுகள் என்பனவற்றில் திறமைகளை வெளிப்படுத்துதல், கோலம் போடுதல், மாலை கட்டுதல், குத்துச்சண்டை, கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம் போன்ற விளையாட்டுகளில் இப்பிரதேச மாணவர்கள் மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் அண்மைக்காலங்களில் வெற்றியீட்டி வருவதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக இன்று நூற்றாண்டு விழாவை கொண்டாடுகின்ற யா/ உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய மாணவர்கள் இருவர் குத்துச்சண்டைப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் வெண்கலம், வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றுத் தாம் கற்ற பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். இது போன்று கிராமப்புற மாணவர்களிடையே மறைந்து காணப்படும் ஆற்றல்கள் வெளிப்படுவதற்கும் இவ் உலக உணவுத்திட்டத்தின் பாடசாலைச் சிறார்களுக்கான இடைவேளை உணவுச் செயற்திட்டம் பெரிதும் உதவுகின்றது.

கோப்பாய்க் கோட்ட மட்டப் பெறுபேற்று அடைவுமட்டத்தில் முன்னேற்றம் காணப்படல்.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை, தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை போன்றவற்றில் கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளின் பெறுபேற்று அடைவு மட்டத்தில் கணிசமான அளவு முன்னேற்றம் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது. கடந்த ஆண்டுகளைக் காட்டிலும் 2012, 2013, 2014 ஆண்டுகளின் பெறுபேற்று அடைவு மட்டத்தில் அதிகரிப்பு நிலை காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளில் உலக உணவுத்திட்டம் நடைமுறைப் படுத்துவதனால் ஏற்பட்டுள்ள/ ஏற்படக்கூடிய சவால்கள்

பொதுவாக நோக்கும் போது உலக உணவுத்திட்ட இடைவேளை உணவு வழங்கல் கோப்பாய்க் கோட்டப் பிரதேச பாடசாலை மாணவர்களிற்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ள போதும் கீழ்வரும் விடயங்கள் சார்பாக சிறிய அளவிலான முன்னேற்றங்களும் ஏற்பட இடமுண்டு.

பாடசாலைகள் சமையல் தொண்டர்களை இத்திட்டத்திற்கு ஒழுங்குபடுத்துவதில் சிக்கல்கள் காணப்படுகின்றமை. பெருமளவு மாணவர்களின் பெற்றோர்கள் நாளாந்தக் கூலி வேலைக்குச் செல்வதனால் தங்களது பிள்ளையின் நலன் கருதிப் பாடசாலைக்கு வந்து சமையல் செய்வதில் இடர்பாடுகள் காணப்படுகின்றது. கணவன் மனைவி இருவரும் வேலைக்குச் செல்லும் குடும்பங்களில் இத்தகைய நிலைமை காணப்படு கின்றது. தரம் 05 ற்கு உட்பட்ட அனேகமான பாடசாலை அதிபர்கள் மேற்படி விடயம் சார்பாக கடுமையான சவால்களை எதிர்கொள்கின்றனர்.

இவ்விடைவேளை உணவுத்திட்டத்திற்கு இலங்கை அரசாங்கம் பச்சை மரக்கறிகளுக்கான கொடுப்பனவை வழங்குகின்றது. இக் கொடுப்பனவு சிறிய பாடசாலைகளுக்கு மரக்கறிக் கொள்வனவிற்கும் ஏனைய இதர பொருட் கொள்வனவிற்கும் பற்றாக்குறையாகக் காணப்படுவது குறைபாடாகக் காணப்படுகின்றது.

பருவகாலங்களில் சந்தையில் மரக்கறி விலைகள் அதிகரிக்கும் போது போஷாக்கான சத்துள்ள மரக்கறிகளைக் கொள்வனவு செய்து உள்ளீடுகளாகப் பயன்படுத்துவதில் இடர்பாடுகள் காணப்படல்.

உலக உணவுத்திட்டத்தினால் வழங்கப்படும் பொருட்களைத் தவணை விடுமுறைக்காலங்களில் களஞ்சியப்படுத்துவதில் சிக்கல்கள் காணப்படல்.

சில பாடசாலைச் சமூகங்கள் சைவப் பாரம்பரியத்தைக் கடைப் பிடிப்பதால் போஷாக்கு நிறைந்த மீன்றின் உபயோகத்தைப் பாடசாலை மாணவர்கள் பயன்படுத்த முடியாதுள்ளமை.

மேற் கூறப்பட்ட குறைபாடுகள் காணப்படுகின்ற போதும் அவற்றுக்கு ஏற்றவாறு சில மாற்றுவழி முறைகளைக் கையாண்டு இன்று இத்திட்டம் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றது. இத்திட்டம் மென்மேலும் எமது பிரதேச சிறார்களுக்கு வலுவூட்டக் கூடிய வகையில் முன்னெடுக்கப்படவேண்டும். இதனால் அவர்களது உடல், உள ஆற்றல்கள் மேம்படுத்தப்படுவதுடன் அவர்களது குடும்பமும் முன்னேற்றம் காண்பதற்கு வழி ஏற்படுகின்றது. இத்திட்டம் நடைமுறைப்படுத்துவதில் கல்விச்சேவைகள் அமைச்சு, மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், உலக உணவுத் திட்ட அலுவலகம், வலயக் கல்வி அலுவலகங்கள், கோட்டக் கல்விப் பணிமனைகள், பாடசாலைகள், மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்கள் உட்பட அனைத்து அமைப்புக்களும் கூடியளவு உத்வேகத்துடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இனி வரும் காலங்களிலும் தொடர்ந்து இத் திட்டம் முன்னெடுக்கப்படுவதால் மாணவர்களின் கற்றற்ப் பேறு உயர்வடைந்து அவர்களது எதிர்காலம் சிறப்புப் பெறும் என்பதில் ஐயமில்லை.



மீண்டும் பல்லாண்டு கண்டு மேன்மையுடன் வாழ்க

கவிமணி க. ஆனந்தராசா,
முன்னாள் ஆசிரியர்,
(அன்னைதாசன்), ஓய்வுபெற்ற அதிபர்,
இசைசொற்பொழிவாளர்,
“ஸ்ரீரங்கம்”, ஊரெழு.

(இராக மாளிகை)
சங்கராபரணம்

அருமை

எத்தனை பள்ளிகள் எங்களுக்கு இருந்தாலும்
சத்தான கல்வியைக் கற்றிடவே - முத்தான
உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியா சாலையை
விரும்பியே வருவாரெம் மக்கள்.

கற்பக விநாயகனைக் கை தொழுது எந்நாளும்
பொற்புறு வீதியிதன் மருங்கிருந்து - கற்பதற்கு
வற்றாத வாஞ்சையுடன் வருகின்ற பாலகரைப்
பற்றுடனே படிக்க வைக்கும் தாய்.

(ஆனந்தபைரவி)

பெருமை

கிடுகுக் கொட்டிலிலே தொடங்கினாள் தன் பணியை
தடுப்புச் சுவர மைத்து தவழ்ந்து வளர்ந்து இன்று
அடுக்கு மாளிகையோடு ஆளணி வளங்களுடன்
மிடுக்குடனே வளர்ந்து மேன்மையாய் மிளிர்கின்றாள்.

ஆற்றல்மிகு அதிபர்களின் அரிய உழைப்பாலும்
அறிவூட்டும் ஆசான்கள் அர்ப்பணிப்பாலும்
அயராது கற்றுயரும் அரிய சிறார்களாலும்
அரும்பெருஞ் சாதனைகள் படைக்கின்றாள் அன்னை.

(கேதாரகௌளை)

தாயிவள் மடியினிலே தவழ்ந்தவர் வரிசையிலே
தமிழ்த்தாயின் தலை மாதவன் தம்பி சிவகுமாரனும்
அமிழ்தான உயிர் நீத்த தியாக தீபம் திலீபனும்
புகழ்பூத்த அன்னையிவள் புதல்வர்கள் புரிந்து கொள்வீர்.

திறமை

கோட்ட மட்டத்திலல்ல வலய மட்டத்திலுமே
மாகாண மட்டத்திலும் மாண்பான சாதனைகள்
நாங்காணும் வண்ணமிங்கே நம் சிறார்கள் செய்ய
நீங்காத நினைவு தாங்கி நூற்றாண்டைத் தொட்டாள் அன்னை.

ரஞ்சனி

பொறியியலாளரோடு புகழ் பூத்த வைத்தியர்கள்
அறிவூட்டும் ஆசிரியர் அதிபர்கள் அலுவலர்கள்
நெறி நல்கும் நீதியாளர் நிதியாளர் கலைஞர்கள்
செறிவான பரம்பரையை உருவாக்கியுள்ளாள் அன்னை

சைவமொடு தமிழை வளர்ப்பவள் மட்டுமல்ல
மெய் வல்லுனராக்கி மேன்மைகொள் கலைபயிற்றி
பல்கலை செல்ல வைத்து பதவிகள் பலவும் பெறும்
நல்ல பிரசைகளை நாட்டிற்கு நல்கும் அன்னை

பாகேஸ்வரி

பவளவிழா மலரைத் தவழவிடுவதற்கு
பட்ட பாட்டை நினைக்கப் பனிக்கின்றன கண்கள்
எத்தகு இடர்வரினும் முத்தெனும் நின் பணிகள்
பக்தியாய்ச் செய்திடுவர் பணி செய்யும் நின்மைந்தர்.

வாழ்த்து

ஆண்டு ஒரு நூறு கண்டாய் ஆனந்தமாய் வாழ்க
நீண்ட பெருஞ்சேவை செய்த நித்திலமே வாழ்க
மீண்டும் பல்லாண்டு கண்டு மேன்மையுற வாழ
வேண்டுகின்றேன் அன்னையினை அன்னை தாஸன் நானே.

பாடசாலை நிகழ்வுகளில் சில . . .

கல்வியும் வாழ்வும்

திரு. கே. வி. குணசேகரம்,
ஓய்வு பெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர்.

கடவுளால் படைக்கப் பட்ட அனைத்தைப் பற்றியும் வள்ளுவர் மற்றைய புலவர்களை, அறிவாளிகளை விடத் தெளிவாகவும், புரியும்படி யாகவும் கூறியுள்ளார். அதனால் தான் உலகிலுள்ள மக்கள் அனைவரும் மொழி, சமய வேறுபாடுகளைக் கடந்து திருக்குறளைத் தமது வேதாகமம் போலக் கற்கிறார்கள். வள்ளுவன் கல்வியைப் பற்றி திருக்குறளிலுள்ள 133 அதிகாரங் களிலும் தேவைக்கேற்பக் கூறியுள் ளார். கடவுள் வாழ்த்தில்

"கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா அர் எனில்"

என்று கூறுகிறார். கற்றவர் பயன்பெற வேண்டுமானால் (வாண்மை உள்ளவ்ரகளை) கற்ற வர்களை மதித்தல் வேண்டும். சங்க காலம் முதல் இன்று வரை கற்றவர்கள் கற்றவர்களை மதிப்ப தேயில்லை. சிவபெருமான் சங்க காலத்தில் தான் எழுதிய பாடலை ஒரு புலவரிடம் கொடுத்துச் சங் கத்தில் சேர்ப்பித்தார். சங்கத்திற்கு அப்பாடலைக் கொண்டு சென்ற புலவரை அங்கமர்ந்திருந்த புலவர் கள் அவமதித்தனர். அதனால் அப்பாடலைச் சிவபெருமானே சங்கத்திற்குக் கொண்டு சென்று சமர்ப்பித்தார். புலவர்கள் அவரை யாரென்று அறியாது அவமதித் தனர். பின்பு சிவபெருமான் தன்னை யாரென்று காட்டிய போதும் அவர்கள் அதைக் குற்ற முள்ள பாடல் என்றனர். சிவபெரு மானுக்கு நேர்ந்த கதியை நினைத்தே வள்ளுவர் அக்குற ளைப் பாடியுள்ளார். அந்த நிலை இன்றும் பெரும்பாலான இடங் களில் முக்கியமாக பாடசாலை களில் காணப்படுகின்றது.

"கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

ஒருவர் கற்க வேண்டிய அரிய நூல்களையெல்லாம் தேடிக் கற்க வேண்டும். பின் அந்த நூல் களில் கற்றபடி வாழ வேண்டும்.

மிக மிக முக்கியமான இரு விடயங்களை வள்ளுவர் கூறியுள் ளார். அதை ஞாபகப்படுத்துகின் றேன். இதன்படி வாழ்ந்தால்

வாழ்க்கை பேரின்ப மயமாக இருக்கும். பழந்தமிழ் நூல்கள் கல்வியைப் பற்றியும், கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியர்களைப் பற்றியும், கல்வியைக் கற்கும் மாணவர்களைப் பற்றியும் கூறியுள்ளன. அதன்படி வாழ்ந்தமையால் தான் அன்றைய சமூகம் விழிப்புணர்வுள்ள நாகரிகமான சமூகமாக இருந்தது. பொதுவாக இலக்கியமானாலும் சரி விஞ்ஞான மானாலும் சரி அவை என்றோ முழுமையடைந்து விட்டன. பிற்காலத்தில் முன் கண்டு பிடித்தவற்றிற்குச் சிறு சிறு மாற்றங்கள் செய்யப்படுகின்றனவே தவிர புதுமையாக இன்றுள்ள விஞ்ஞானப் புதுமைகள் யாவும் அவற்றுள் இருப்பதைக் காணலாம். அதற்குக் காரணம் அன்றைய கல்வி முறை.

மாணவர்கள் ஆசிரியரைப் பணிந்து அவர்களின் சொற் கேட்டு அவர்களிடமிருந்து ஞானமாகிய கல்வியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஆசிரியரை மதிக்காத மாணவர்களுக்கும், அவர்களின் சொற்களைக் கேளாத மாணவர்களுக்கும் கலைமகள் கல்விச் செல்வத்தை மனமுவந்து கொடுக்க மாட்டாள் என்றும், ஒரு பொருளை பெறுவது போலக் கல்வியென்ற ஞானத்தை பெற முடியாது என்றும், ஆசிரியரை மதித்து அவரின் சொற் கேட்பதன் மூலம் மாணவன் தன்னை குருவிடம் ஒப்படைக்கின்றான் என்றும் ஒரு பழந் தமிழ் நூல் கூறுகிறது.

ஒழுக்கமில்லாத ஆசிரியன் குருவாக முடியாது. பூரணமான கல்வியும் கருணையும் யாரிடம் அமைந்திருக்கிறதோ அவன்தான் உண்மையான ஆசிரியன். மாணவனின் நல்லொழுக்கத்தினால் தான் ஆசிரியர் பூரணமடைவார்.

கல்வியென்ற ஞானம் மயக்கத்தை நீக்கும். அந்த ஞானம் கைவரப் பெற்றவர்களிடத்தில் ஆணவம் இருக்காது. அதனால் அவர்கள் எல்லா மாணவர்களையும் தம் பிள்ளைகளாக நினைப்பர். தீயானது விறகுகளைச் சாம்பலாக்குவது போலக் கல்வி என்ற ஞானத் தீ அஞ்ஞானங்களையெல்லாம் சாம்பலாக்கும். அறிவைத் தரு கின்ற கல்விக்கொப்பானது இவ்வுலகில் எதுவும் இல்லை. சிரத்தையுள்ளவன், ஆசிரியனை நம்பியுள்ளவன் நிறைந்த கல்வி ஞானத்தைப் பெறுவான். அவ்வாறான கல்வியைப் பெற்றவன் மக்களுக்கு உதவுபவனாக இருப்பான். அறிவில் சிரத்தையில்லாதவன், ஆசிரியரில் நம்பிக்கையில்லாதவன். கல்வியென்ற ஞானத் தைப் பெறாமையால் இவ்வுல கிலும் இன்பமாக வாழமாட்டான். அவ்வுலகிலும் இன்பமாக வாழ மாட்டான். அதனால் நிறைந்த ஞான

மாகிய கல்வியை மாணவர்கள் பெறல் வேண்டும். தினமும் கல்லுங்கள் இறக்கும் வரை கல்லுங்கள் என்று இன்னுமொரு பழந்தமிழ் நூல் கூறுகிறது. சைவ சித் தாந்த நூலான திருமந்திரம் கல்லாதவரைப் பற்றி பின்வரு மாறு கூறுகிறது.

"கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர்சொல் கேட்கக் கடன் அன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்
கல்லாத மூடர் கருத்தறி யாரே"

எவனொருவன் அழியாத ஞானமான கல்வியைத் தேட முயலுகிறானோ, அவனுக்குக் கடவுள் வலியச் சென்று உதவுவார். அவனுடைய சிரத்தையை ஊக்குவிப்பார். அதனால் அவன் எடுக்கும் பிறவிகள் தோறும் கல்வியாளனாகப் பிறந்து மக்களுக்குச் சேவை செய்வான். ஒரு பிறப்பில் கற்கும் கல்வி அவனது ஏழு பிறப்பிற்கும் உதவி செய்யும். கல்வியை அர்ப்பணிப்புடன் புகட்டுதல் வேண்டும். அதுதான் இன்றைய தேவையுமாகும். வாழ்க்கை முழுவதும் கல்வி கற்றல் வேண்டும் என்பதே நவீன உலகியற் கோட்பாடாகும். ஆசிரியர்கள் கல்வி சம்பந்தமான நூல்கள் அனைத்தையும் வாசித்து, கிரகித்து மாணவர்களுக்குத் தேவையானவற்றை மாணவர் களைக் கொண்டு வாசிக்கச் செய்தல் வேண்டும். சங்க காலம் தொட்டு சமீப காலம் வரை இது நடைமுறையில் இருந்தது. தற் பொழுது இந்நிலையற்றுப் போய் விட்டது. இதை ஆசிரியர்கள் தொடர வேண்டும்.

நான் ஒரு கிளி வளர்த்தேன் பறந்துவிட்டது
அணில் ஒன்றை வளர்த்தேன் ஓடிவிட்டது
மரம் ஒன்றை வளர்த்தேன் எல்லாம் திரும்பி வந்துவிட்டன.
"அப்துல்கலாம்"

உரும்பிராயில் விவசாயம்

திரு. ம. ரகுநாதன்,
ஆசிரியர்,
உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்.

இலங்கையிலுள்ள ஆயிரக்கணக்கான கிராமங்கள் பலவற்றை எடுத்து நோக்கும் போது அவற்றிற்கு வழங்கப்பட்டு வரும் பெயர்கள் ஏதோ ஒரு காரணத்தோடுதான் வழங்கப்பட்டு வந்திருக்கின்றன. எம்மவர்கள் ஒவ்வொரு இலக்க பெறுமானத்திற்கும் ஒவ்வொரு எழுத்தை குறியீடாக பயன்படுத்தும் வழமை இருந்துள்ளது. அந்த வகையில் 2 என்ற இலக்கத்திற்கு "உ" எழுத்தையும் 5 என்ற இலக்கத்திற்கு "ரு" என்ற எழுத்தையும் பயன்படுத்தி வந்த நிலையில் வரிசையாக வீதியோரமாக நடப்பட்டிருந்த பராய் மரங்களில் 25வது பராய் மரம் நின்ற காரணத்தினால் உரும்பிராய் என்ற பெயர் எமது கிராமத்திற்கு வழங்கப்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

எமது கிராமத்தின் விவசாயிகள் ஊக்கத்திலும் கடின உழைப்பிலும் ஏனைய விவசாயிகளுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தவர்கள். விவசாயத் தொழில் நுட்பத்தைப் பொறுத்தவரை அவர்களிடமிருந்து இன்றும் நாம் கற்க வேண்டியவை ஏராளம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இயற்கையுடன் இசைந்து வாழ்வது எப்படி என்று உணர்ந்து விவசாயத்தை இயற்கையோடு இசைந்த வாழ்வு முறையாக வகுத்திருந்தனர். சூழலுடன் ஒன்றிய சூழலை மாசுபடுத்தாத இயற்கை வாழ்வு தமிழராகிய இக்கிராமத்து மக்களின் வாழ்வாக இருந்து வந்துள்ளது.

இக்கிராம மக்கள் காலங்காலமாக நிலத்தின் தன்மைக்கேற்பவும், நீர்வளத்திற்கேற்பவும் பலவித பயிரினங்களை உருவாக்கியிருந்தார்கள். பயிர்ச் சுழற்சியும், கலப்புப் பயிர்ச் செய்கையும் காணப்பட்டது. கால்நடைகளை போக்குவரத்திற்கும், உழவுக்கும், நீரிறைக்கவும் பயன்படுத் தியதுடன் கால் நடைகளின் எருவை நிலத்தில் சேர்ப்பதற்கும் பல வழிமுறைகளை வைத்திருந்தனர். பண்டைய கிராம மக்கள் கிணற்று ஊற்றுக்களுக்கு கோடை காலத்தில் நீர் வழங்கினால் நிலத்தடி நீரினுள் உவர்நீர் ஊடுருவி வராதென அறிந்து தரிசு நிலங்களில் மாரிகாலத்தில் நீர் தேங்கி நிற்பதற்காக உயரமான எல்லை வரம்புகளை அமைத்திருந்தனர்.

எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை சராசரியாக 1200 மி.மீ மழை வீழ்ச்சியைக் கொண்ட வரண்ட வலயமாக இருப்பதால் மழையில்லாக் காலங்களில் கிணற்று நீரை நம்பியே விவசாயத்தில் ஈடுபட்டனர். அந்த வகையில் எமது பிரதேசத்திற்குப் பொருத்தமான குறைந்தளவு நீரைப் பயன்படுத்தி கூடிய விளைச்சலைத் தரக்கூடிய தானியப்பயிர்கள், கிழங்குப் பயிர்கள் விளைவிக்கப்பட்டன. அந்தக் காலத்தில் மக்கள் சுயதேவையைப் பூர்த்தி செய்யக் கூடியதும் இயற்கையுடன் இசைந்ததாகவும் சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்கக் கூடியதுமான விவசாய முறைகளையே கைக் கொண் டிருந்தனர். பயிர் விளைவுகள் மனிதனுக்கு மட்டுமன்றி கால்நடைகளுக்கும் பயன்படும் வகையில் ஏற்ற பயிர்களை விளைவித்தனர். அந்த வகையில் இக்கிராமத்தில் பனிச்சாமி, தினைச்சாமி, குரக்கன், வரகு போன்ற தானியப் பயிர்களும் மரவள்ளி, சட்டிக்கரணை, இராசவள்ளி, ரத்தவெள்ளி, காவெள்ளி, சிறுகிழங்கு, கொடிக்கரணை போன்ற கிழங்குப் பயிர்களும் குடும்ப பயன்பாட்டிற்கென சிறியளவில் வெங்காயப் பயிரும் செய்கை பண்ணப்பட்டது. கலட்டு நிலங்களில் வரகுசெய்கை பண்ணப் பட்ட தாகவும் உழவர்கள் கலட்டு நிலங்களை உழும்போது கலப்பையை கையால் உயர்த்தியும் பதித்தும் (கல்லில் கலப்பை பாதிப்படையாமல் இருப்பதற்கு) உழுவார்கள் என வயது முதிர்ந்த கிராமத்தவர் தமது அனுபவத்தை கூறுவர்.

பண்படுத்தல் செயற்பாட்டில் மண்வெட்டி கொண்டு “கடுவல் கொத்து” எனப்படும் மண்ணை ஆழக் கொத்திப் புரட்டுதல் நடைபெறும். அதனால்மண் இறுக்கமடைந்து கொள்ள வாய்ப்பில்லை. மண்ணை வளப்படுத்துவதிலும் பல நுட்பங்களைக் கையாண்டு வந்துள்ளனர். கோரைப்புல் அதிகமுள்ள நிலத்தில் சணல் பயிரிட்டு மண்ணுடன் சேர்த்தலும் பெரும்போக மழை ஆரம்பிப்பதற்கு முன்பதாக பனையோலை யால் மண்ணை மூடுவார்கள், பின்பு அவ்வோலைகளையும் வீடு மேய்ந்து கழிக்கபடும் பழைய பனையோலைகளையும் மண்ணுடன் சேர்த்து விடுவார்கள். இதன் மூலம் மண்ணின் பௌதீக இயல்புகள் மேம்பட்டு விவசாயிகள் சிறந்த அறுவடையைப் பெற்றிருந்தனர்.

முன்னைய காலங்களில் எமது கிராம மக்கள் நீர் இறைப்பதற்கு துலாப்பட்டை முறையை பயன்படுத்தினர். பனைமரம் அல்லது தென்னை மரத்தால் செய்யப்பட்ட துலாவில் ஒருவர் ஏறி நின்றுகொண்டு முன்னும் பின்னுமாக ஓடுவார். கீழே நிற்பவர் துலாக்கொடியில் இணைக்கப்பட்ட பட்டையை (பனையோலையால் செய்யப்பட்டது) நீரால் நிரப்பி இழுத்து

துரவினூடாக நீர் பாய்ச்சுவார். துலாப்பட்டை முறையில் நீர் பாய்ச்சுவதற்கு அதிகாலைப் பொழுதே பொருத்தமானதாக இருக்கும். உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு நிலம் வழங்கியவரும் கிராமத்தில் பிரபல்யமானவரும் தனவந்தருமாகிய சின்னத்தம்பி வேலுப்பிள்ளை என்பவர் துலா மிதிக்கும் போது சாதாரணமாக முன்னும் பின்னும் ஓடுவதற்கு பதிலாக அச்சுலக் கையில் நின்று முன்னொருகால் பின்னொரு கால் வைத்து துலாமிதிப்பார் என கிராமத்து பெரியோர்கள் சொல்வார்கள். தோட்டத்தில் வேலை செய்பவர்களுக்கு பழஞ்சோற்று நீரும், பனாட்டும் தயிர் சேர்த்து பிசைந்த பழஞ்சோறும் காலை உணவாக இருக்கும். துலாப்பட்டை மட்டுமன்றி சூத்திரம் வளைத்து நீர் இறைக்கும் முறைகள் உரும்பிராய் கிராமத்தில் இருந்திருக்கின்றன. பெரியவாளி சூத்திரமானது உரும்பிராய் மேற்கில் விதானையார் தர்மலிங்கத்தின் தோட்டத்திலும் தெற்கில் பூபாலபிள்ளை யின் தோட்டத்திலும் கிழக்கில் பாரதிகடை ஒழுங்கையடி தோட்டத்திலும் அமைந்திருந்தன. இரண்டு மாடுகள் வட்ட வடிவில் சுற்றி வந்த வண்ணமும் மாடுகளைச் சாய்ப்பவர் ஒருவருமாக இருப்பார்.

விவசாயிகளின் தோட்டங்களும் அவர்களது வீடுகளும் அக்காலங் களில் தனித் தனியாவே காணப்பட்டன. ஒவ்வொரு விவசாயிக்கும் மூன்று அல்லது நான்கு தொட்டில் மாடுகள் சாதாரணமாக இருக்கும். ஒவ்வொரு தொட்டிலிலும் நான்கு மாடுகளைக் கட்டுவார்கள். தோட்டங்களிலேயே மாடுகளை வைத்துப் பராமரிப்பார்கள். இதனால் தோட்டத்திற்கு தேவையான மாட்டெருவுடன் சிறுநீரும் மண்ணிற்கு பசளையாக சேர்ந்து மண்வளம் மேம்படும். முன்னைய காலங்களில் பணம் சம்பாதிப்பதற்காக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டது கிடையாது. தமது வாழ்வாதார தேவையின் பொருட்டே பயிர்களை விளைவித்தனர். பயிர்களுக்கு சேதங்கள் ஏற்படுத் தும் பூச்சி பீடைகள் இரைக் காவிகளான குருவி, சிலந்தி, தும்பி, செண்பகம் போன்றவற்றால் கட்டுப்படுத்தப்பட்டன. அழுக் கணவன் தாக்கம் ஏற்பட்ட பயிர்களுக்கு பனி ஈரத்துடன் சாம்பல் வீசி கட்டுப்படுத் துவார்கள். தமது பிள்ளைகளை கவனிப்பது போல பயிர் களையும் நாள்தோறும் அவதானித்து பீடைகளைக் கைகளால் கட்டுப் படுத்தினர். தனியொரு பயிரை செய்கை பண்ணுவதை விடுத்து பல பயிர்களை ஒரே காலத்தில் செய்கை பண்ணி வந்துள்ளனர்.

1960 களின் இறுதிப் பகுதியில் அதிக விளைச்சல் தரக்கூடிய பயிர் பேதங்களின் அறிமுகம், விவசாய இரசாயனங்களின் பயன்பாட்டில் ஏற் பட்ட அதிகரிப்பு, பண்ணைகள் இயந்திரமயமாக்கல், இரண்டு போகங் களிலும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படல் போன்ற காரணங்களால் உலகளாவிய ரீதியில் உலகதானிய உற்பத்தி இருமடங்கு ஆகியதுடன் உபஉணவு உற்பத்தியிலும் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டது. இம்மாற்றம் பசுமைப் புரட்சி என அழைக்கப்பட்டது. இதன் காரணமாக உரும்பிராயில் மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகிய பயிர்களில் அமோக விளைச்சல் காரணமாக விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தில் பாரிய அபிவிருத்தியைக் காணக்கூடியதாக இருந்தது. 1970 - 1975 காலப்பகுதியில் பனையோலை மற்றும் தென்னையோலையால் வேயப்பட்ட மண் வீடுகள் யாவும் கல்வீடுகளாக மாற்றம் கண்டன. உரும்பிராய் சந்தியில் இருந்து ஏறத்தாள அரைக்கிலோமீற்றரில் கோப்பாய் வீதியில் இருமருங்கிலும் (நீதவான் பங்கடி) நூற்றுக்கணக்கான பரப்பில் கிருஸ்ணசாமி என்பவர் திராட்சைத் தோட்டத்தை வைத்திருந்தார். ஒரேயொரு திராட்சைக் கொடியை வைத்திருந்த இவர் விடாமுயற்சியும் பயிர்ச் செய்கை பற்றிய புதிய நுட்பங்களைத் தேடியறியும் ஆவலும் காரணமாக திராட்சைச் செய்கையில் வெற்றி காண முடிந்தது. இதன் காரணமாக இலங்கைப் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அவர்களால் சிறந்த விவசாயிக்கான வெகுமதியும் “இலங்கைக் காவலர்” என்ற பட்டமும் இவருக்கு உரும்பிராயில் வைத்து வழங்கப்பட்டது.

பசுமைப்புரட்சி காரணமாக குறுகிய காலத்தில் அதிக விளைச்சல் பெற்று விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் மேம்பட்டிருந்தாலும் மண்வளம் பாதிக்கப்பட்டு தற்போது திராட்சைச் செய்கை உரும்பிராயில் கைவிடும்

நூற்றாண்டு விழாக்குழு

பழைய மாணவர் சங்கம் - 2015

சைவத் தமிழ் வித்தியாலயத்தில் எனது அனுபவங்கள்

திருமதி. துளசிமலர் ரவீந்திரன்,
பொருளாளர்,
பழைய மாணவர் சங்கம்.

பாடசாலை வாழ்க்கை என்பது ஒவ்வொருவருக்கும் ஐந்து வயதில் ஆரம்பமாகிறது. பாலர் பிரிவில் ஆரம்பித்து தரம் 11 வரையும் அதாவது 5 - 16 வயது வரையும் பாடசாலைக் கல்வி முக்கியமானதொன்றாகும். இந்தக் காலத்திற்குள் பிள்ளைகள் பெறுகின்ற அனுபவங்களும், கல்வியும், மகிழ்ச்சி, துக்கம் எல்லாமே அவரவர் வாழ்க்கையில் மறக்கமுடியாத ஒன்றாகும். அதுவும் முதல் நாள் அனுபவம் மிகமிகப் புதுமையானதாகும்.

அந்த வகையில் நான் 1967ம் ஆண்டு உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் பாலர் பிரிவில் சேர்க்கப்பட்டேன். பெற்றோர் என்னை அதிபரிடம் கூட்டிச் சென்று பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது. பின்னர் பாலர்பிரிவு அதாவது தரம் - 1 ஆசிரியரிடம் என்னை ஒப்படைத்தனர். அக்காலத்தில் இந்தக் காலத்தில் இருப்பது போன்று பாலர் பாடசாலைகள் எங்கள் ஊரில் இல்லை. ஆகவே வீட்டுச்சூழலை விட்டு நேரடியாக பாடசாலைக் கல்வியைத்தான் ஆரம்பிக்க வேண்டும். திடீரென்று சூழ்நிலை மாற்றத்தால் எனக்கு முதல் நாள் ஒரு வித தயக்கம். கலக்கம், பயம் என என்ன என்று சொல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இக்காலத்தில் பிள்ளைகளுக்கு அந்தப்பயம் கிடையாது. காரணம் தற்காலத்தில் பாலர் கல்வியின் அபிவிருத்தியில் ஊருக்கு ஊர் தரமான முன்பள்ளிகள் இயங்குகின்றன. பிள்ளைகள் முன்பள்ளியில் சென்று கல்வி கற்பதால் அவர்களது அச்ச உணர்வுகள் அகன்று பாடசாலையில் சேரும் போது ஆவலுடன் செல்வார்கள். பிள்ளைகளின் அறிவு ஆற்றல் திறன்களும் மேம்பட்டுக் காணப்படுகின்றது.

ஆனால் அக்காலத்தில் இப்படியான நிலை இல்லை. பாடசாலை ஆசிரியர்களை நம்பியே பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புகின்றனர் பெற்றோர். பாடசாலையில் எமது அச்சம் அகன்று இயல்பான நிலைக்கு வரவே ஒருமாதம் வரையில் செல்லும்.

ஆகவே பாலகர்களின் அச்சத்தை அகற்றி அவர்களை அரவணைத்து அன்பு காட்டி கற்பிப்பதுதான் ஆசிரியர்களின் உன்னத கடமையாகும். அன்பை ஊட்டி கற்பிப்பதில் பெண் ஆசிரியைகள் தான் சிறப்பாக இருப்பார்கள் என்பதால் பாலர் பிரிவுகளுக்குப் பெண் ஆசிரியர்களையே நியமிப்பார்கள். அவர்கள் ஒரு அன்னையைப் போல ஆதரவு காட்டி அழுகின்ற பிள்ளைகளையும் சமாதானமாக்கி பிள்ளைகளை வகுப்பிற்கு இசைவாக்கப்படுத்தித் தான் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வர். பிள்ளைகளுக்கு கல்வியில் விருப்பத்தை ஏற்படுத்தினால் தான் பாடசாலைக்கு ஒழுங்காக வருவார்கள். பாலர் வகுப்பு பிள்ளைகளுக்கு முதலில் காட்ட வேண்டிய கல்வி அன்பே ஆகும்.

நான் தரம் 1ல் சேர்ந்த போது எனக்கு வகுப்பாசிரியராகக் கடமையாற்றியவர் திருமதி ஞானேஸ்வரி சிவசுப்பிரமணியம் என்பவர். அக்காலத்தில் 1ம் வகுப்பிற்கு சிலேற்றும் பென்சிலும் தான் எழுது கருவிகள். எனது ஆசிரியை என்னைத் தனது மடியில் வைத்து எனது வலது கையைப் பிடித்து "அ" எழுத்தை எழுதப் பழக்கினார். அந்த நாள் இன்றும் எனது நினைவில் நின்று நினைக்கும் தோறும் மகிழ்ச்சியைக் கொடுக்கிறது.

எனது வகுப்பில் நாற்பது மாணவர்கள் இருந்தார்கள் ஒவ்வொரு மாணவரையும் அவர்களது பண்பு, நலன் அறிந்து ஒரு ஆசிரியர் கற்பிப்பதென்றால் அவருக்கு எவ்வளவு பொறுமை வேண்டும். அது மட்டுமல்ல சிறுவயதில் இருந்தே நற் பழக்க வழக்கங்களையும் அந்த ஆசிரியர் தான் சொல்லிக் கொடுக்க வேண்டும். பாடசாலைக்கு வந்த பின்பு பிள்ளைகள் பெற்றோரை விட ஆசிரியர்கள் மீதுதான்அதிக நம்பிக்கை வைக்கின்றார்கள். அதை பிள்ளைகளின் வாயினாலேயே அறியலாம். "எங்கடை ரீச்சர் சொன்னவ இப்படித்தான் சொன்னவா" என்று ஆசிரியர் மீது வைத்த பற்றையும், நம்பிக்கையையும் வெளிப்படுத்துகின்றனர்.

நான் படித்த காலத்தில் எங்களுக்குத் தளபாடப் பற்றாக்குறை இருந்தது. அதனால் நிலத்திலே அமர்ந்து படிக்க வேண்டிய நிலையும் இருந்தது. விளையாட்டு மைதானம் கூட இல்லை. ஒரு சிறிய இடத்தில் தான் நாம் விளையாடுவோம். அந்த இடத்தில்தான் வெள்ளிக்கிழமை பிரார்த்தனையும் இடம்பெறும். பாலர் கீழ்ப்பிரிவு, பாலர் மேற்பிரிவு, ஆண்டு 2 மாணவர்கள் நின்று பஞ்ச புராணம், சிவபுராணம் எல்லாம் பாடுவோம். ஒரு

ஆசிரியை சொல்லிக் கொடுப்பார் நாங்கள் எல்லோரும் சேர்ந்து சொல்லு வோம். ஏனைய நாட்களில் தங்கள் தங்கள் வகுப்புகளிலேயே நின்று தேவாரம் படிக்கத் தொடங்குவோம்.

ஆண்டு 1 -5 வரை நான் இந்தப் பாடசாலையில்தான் கல்வி கற்றேன். ஆண்டு 6 -11 வரை கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் நேரசூசியில் இல்லை. அந்தப் பாடங்களைப் போதிப்பதற்குப் பயிற்சி பெற்ற ஆசிரியர் களும் இல்லை. எனவே அதிகமான மாணவர்கள் ஆண்டு 6ல் வேறு பாட சாலைகளை நாடிச் சென்று விடுவார்கள். நானும் வேறு பாடசாலைக்குச் சென்று விட்டேன்.

இப்பாடசாலையில் வசதிக் கட்டணம் மிகக் குறைவு. ஒவ்வொரு மாணவரிடமிருந்தும் ரூபா 5.00 தான் அறவிடப்படும். சில மாணவர்கள் தொடர்ந்து இப்பாடசாலையிலேயே படிப்பார்கள்.

நான் இந்தப் பாடசாலையை விட்டு விலகினாலும் இப்பாடசாலை சிறப்பாக நடைபெற வேண்டும் என்ற ஆர்வம் உண்டு. ஆகவே பழைய மாணவர் சங்கத்தில் உறுப்பினராக இருந்து சேவையாற்றி வருகின்றேன். எனது ஆரம்பக்கல்வியைத் தொடங்கிய பாடசாலை என்ற பற்று இன்று வரையும் எனது மனதை விட்டு நீங்காமலே இருக்கின்றது.

தற்போது பாடசாலை கல்வி வளர்ச்சியில் நல்ல முன்னேற்றத்தைக் கண்டு வருகிறது. அது மட்டுமல்ல கட்டடங்கள் கூட நல்ல அழகான முறையில் அமைக்கப்பட்டுள்ளது. அழகிய பூஞ்செடிகள் பாடசாலைச் சூழலை மிக இனிமையாக ரசிக்கக் கூடியவாறு அமைந்துள்ளது.

கல்வி வளர்ச்சியில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறு பேறுகளைப் பெறுகின்றது. தரம் 6 - 11 வரை எல்லாப் பாடங்களுக்கும் விஷேட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறுகளும் மிகச் சிறப்பாகக் காணப்படுகின்றது. விளை யாட்டிலும் பல வெற்றிகள் கிடைத்துள்ளன. இத்தகைய வளர்ச்சிக்கு அதிபரினதும், சக ஆசிரியர்களினதும் அயராத உழைப்புத்தான் காரணமாகும்.

சிறந்த நிர்வாகத்தையும், சிறந்த ஆசிரியர் குழாத்தினையும் கொண்டு முன்னேற்றத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. இப்பாடசாலை. இது எனது மனதுக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் பெருமிதத்தையும் கொடுக்கின்றது.

மேலும் எனது அவா என்னவென்றால் இப்பாடசாலையில் உயர்தர வகுப்பினை ஆரம்பிக்க வேண்டும். கலை, விஞ்ஞான, வர்த்தகம் என எல்லாத் துறையிலும் எமது கிராமத்துப் பிள்ளைகள் இப்பாடசாலையிலேயே தமது உயர்தரக் கல்வியை தொடரவேண்டும். ஏனைய நகரத்துப் பாடசாலைகளை நாடிச் செல்லாத நிலை வேண்டும் என்பதே ஆகும். இந்தக் கனவு எதிர்காலத்தில் நனவாகும் என்பது எனது திடமான நம்பிக்கை ஆகும்.

ஆகவே உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலை மேலும் பல நூற்றாண்டுகளைக் கண்டு வளரவேண்டும் என வாழ்த்துகிறேன். எனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதில் எனக்கு ஆத்ம திருப்தி ஏற்பட்டது என்பதையும் இக் கட்டுரை வாயிலாக வெளிக் கொணர்ந்தேன். பாடசாலைச் சமூகத்திற்கு நன்றிகள் பல.

எல்லோருக்கும் நீ நம்பிக்கைக்குரியவனாக இரு
ஆனால் யாரையும் நீ நம்பிவிடாதே - ஏனென்றால்
நீ உயிரிலும் மேலாக நேசித்த உறவுகூட உன்னைவிட்டு
தாமதமில்லாமல் நகர்ந்து செல்லலாம்.

பாடசாலை முகாமைத்துவக் குழு

தகவல் தொழில்நுட்ப மன்றம்

பழைய மாணவியின் ஓர் பார்வை

பத்மலோஜினி சந்திரபாலன்,
பழைய மாணவி .

இன்று போல் இருக்கிறது அரிவரியில் "அ" படிப்பதற்காக அம்மாவின் முன்தானையைப் பிடித்தபடி என் அன்னை உரும் பிராய் சைவத்தமிழ் வித்தியா சாலைக்கு ஆரம்பக்கல்விக்குச் சென்றது. நீள்சதுரமான ஓலையால் வேயப்பட்ட ஓர் கொட்டில், அருகில் ஓர் காளி அம்பாள், நெல்லி மரத்துடன் 10 ஓடு போட்ட ஓர் கொட்டில், ஓர் கேணி, பாடசாலைவளவில் ஓர் ஆலமரம். அழுது, அழுது சென் றது என் நெஞ்சில் தங்கரதத்தால் பதிந்துள்ளது.

தங்கமணிரீச்சர், ஞானேஸ்வரிரீச்சர் என்னும் பல ஆசிரியர் களின் கற்றல் மண், சிலேட்டில் எம் பொன் எழுத்து, பெற்றோரைக் கவர்ந்தது. மூன்றாம் வகுப்பு பெரிய பள்ளிக்கூட ஆர்வக் கற்றலுடன் ஓர் அழகான காட்சி. பன்னயோலைக் கொட்டில், அதிபர் அறை பின்னால் கற்றல் உபகரணங்கள் பாடசாலை ஓலை யால் வேயப்பட்டாலும் தரமான ஆசிரியர்கள் கல்வி, உரையாடல், சவுந்தலா ரீச்சர், இராசலட்சுமி ரீச்சர், தங்கரத்தினம் ரீச்சர், சரவணமுத்து வாத்தியார், சின்னத் துரை வாத்தியார், கதிரவேலு வாத்தியார், இராசையா வாத்தி யார், தங்கமணி ரீச்சர், கற்றலுக் காகவரும், பார்த்தீபன், தீலீபன், செவ்வேள், இவர்களையும் இவர் களின் மேலான பொன்னுத்துரை வாத்தியார் அதிபர், பஞ்சாட்சரம் வாத்தியார், எப்படி மறப்பது. தன்னலமற்ற சேவை, பனை யோலைக் கொட்டிலில் ஆசிரியர் கூடம் கலந்துரையாடல் மூக்குப் பேணி தேநீர் பன்னோலை ஓர் வகுப்பாக இடம்பெற்றது. நினைத் துப்பார்த்தாலே பூரிப்பு பொன்னுத்துரை அரங்கு ஆகா, இம்மேடைபோல் இன்றும் நான் கண்டது அல்ல எத்தனை அரங் குகள் தானும் பொன்னுத்துரை அரங்கிற்கு நிகராகாது பல விழிப் புணர்வான கூட்டங்கள் கண்கவர் நடனங்கள், இயல் இசை நாட கங்கள்,

மெய்சிலிர்க்கும் வித்தைகள், எத்தனை கௌரவிப் புக்கள், தினா, மாளி, உள்தினா போட்டு வர்ண மின்இனைப்பு இடம்பெறும் நிகழ்வுகள் இன்றும் என் மனதை விட்டு அகலா, பசுமரத்தாணி போல் என் மனதில் பதிந்துள்ளது. என்பிள்ளைகளையும் கற்பித்த என் அன்னை சைவத் தமிழச்சி புலமைப் பரீட்சை சாதா ரண தரப் பரீட்சையின் மைய மாக வளர்ந்து பழைய மாணவர் களை நிலையாக நின்று கல்வி கற்கும் வாய்ப்பைக் கண்டு கழிக்கின் றேன். உண்மையில் இங்கு படிப் பித்த ஆசிரியர்களின் பெயர்களை குறிப்பிட்டு எழுதுவதானால் பக்கங்கள் ஒதுக்குவதற்கே மலர் குழுவிற்கு பெரும் இன்னல்களைக் கொடுத்தவளாகி விடுவேன்.

இன்று இந்த சைவத்தமிழ் வித்தியாலயம் இந்த நிலைக்குவர உழைத்த அதிபர்கள், ஆசிரியர் களின் தன்னலமற்ற சேவையை வியந்து பார்க் கின்றேன். காலத் திற்கு காலம் வரும் அதிபர், ஆசிரியர்குழாம், கலை, கலா சார விஞ்ஞான, உடற்கல்விகள் மற்றும் வரவேற்பு கௌரவிப்புக்களை வலுவூட்டுவதில் திறமையாக உள்ளவர்கள். அதன் மகத்துவமே வேறு சாதனை வித்தகர்கள், ஆர்வலர்கள், பழையமாணவர் சங்கத்தின் பங்களிப்பு பரப்பளவைக் காணுகின்றது. அயலவர் களின் பாதுகாப்பும், மங்கை யக்கா, நாகம்மாக்காவின் மூக்குப் பேணி குடிதண்ணீரும் என் றென்றும் பழைய மாணவர்களின் மனதை விட்டு அகலாது.

அன்று சைவத் தமிழ் மாணவத் தலைவியாக கையில் இடாப்பும் சோக்கும் எடுத்த மாணவி நான் பல போட்டிகளில் பங்கு கொண்டு பல பரிசில் களையும் பெற்ற தோடுமல்லாது குறும்புக்காரி என்ற செல்லப் பட் டத்தையும் பெற்றேன். குறுகிய காலப் படிப்பிற்காக இராமநாதன் கல்லூரியில் கற்கவேண்டிய சந்தர்ப்பம்.

இன்று ஊர் மகளிர் சமூக சேவகியாக, ஆலயத் தொண்டும், பரிபாலன சபை, சமாதான நீதிவானாகவும் பணிபுரிகின்றேன் என உளமகிழ்கின்றேன்.

இன்று சைவத்தமிழ் அன்னை அவள் என்றும் பல் லாண்டு, பல்லாண்டு காலம் வாழ மேலும் கல்விச்சமூகம் வளர எம் ஊர் மக்களாகிய நாம் அனைவரும் பூரண ஒத்துழைப்பை நல்கி நிற்போம்.

இந்து மாமன்றம்

கிறிஸ்தவ மன்றம்



சைவத்தமிழ்ப் பாடசாலையின் இனிய நினைவுகள்

எம். ரி. செல்வராஜா
பழைய மாணவர்,
இலண்டன்.

அ, ஆ என்று நான் எழுதக் கற்றது உரும்பிராய் சைவத்தமிழ் பாடசாலையில் தான். தினமும் காலையில் சுமார் 2மைல் தொலைவில் உள்ள கரந்தன் கிராமத்தில் இருந்து மாமா பஞ்சலிங்கம் என்னுடன் சேர்த்து 10 சிறுவர், சிறுமியர்களை அழைத்துக்கொண்டு செல்வார். அந்தக் கூட்டத் திலே அவர்தான் வயதில் பெரியவர். ஆறுதலாக நடந்தால் தலையில் ஒரு பலமான குட்டுவிழும். ஆரம்பமணி அடிக்கும் முன் செல்லாவிட்டால் பின்னர் வீட்டுக்கு வரும் போது எல்லோருக்கும் தலையில் குட்டு விழும். அதற்காக நாம் எல்லோரும் பாடசாலை ஆரம்பமணி அடிக்கும் முன்னரே ஓடோடிச் சென்றுவிடுவோம்.

அப்பொழுது திரு. பொன்னுத்துரை ஆசிரியர் தான் தலைமை ஆசிரியர். சில வகுப்புக்கள் அன்றிருந்த மரங்களின் கீழே தான் நடைபெறும். ஒருநாள் மூன்றாம் வகுப்புப்பரீட்சை தற்போது பாதையோரம் இருக்கும் புதிய அடுக்குமாடிக் கட்டிடம் இருக்கும் இடத்தில் அன்றிருந்த ஓர் இலுப்பை மரத்தின் கீழ் வட்டமாக நின்று ஆசிரியர் கேள்விகள் சொல்வார். நாம் எமது பதில்களை எமது கற்பலகையில் (Slate) எழுத வேண்டும். எழுதிய பதில்களை மற்றையவர்களுக்கு காட்டக் கூடாது. அதன் படி கேள்விகளுக்கு மறைவாக பதில்களை எழுதிக்கொண்டு இருந்தோம் இடையிலே ஆசிரியர் கூறிய கேள்வி எனக்கு நன்றாகக் கேட்கவில்லை. ஆசிரியரிடம் கேட்கப் பயந்து அருகில் நின்ற மாணவனிடம் என்ன? என்ன? என்று மெதுவாகக் கேட்டேன். அவனும் மெதுவாக "நாய், நாய்" என்றான். நான் என்ன கேள்வி என்று கேட்க நண்பன் பதிலையே கூறிவிட்டானே என்று அவனை மனதிற்குள் பாராட்டியவாறு நானும் "நாய்" என்று எழுதி வைத்துவிட்டு நிமிர்ந்து நின்றேன். ஆசிரியர் கேட்ட கேள்வி "முருகனின் வாகனம் என்ன? என்பது தான் எனக்கு அதற்குப் பதில் தெரிந்திருந்தும் நண்பனின்

உதவியால்” நாயை முருகனுக்கு வாகனமாக்கி விட்டேன் ஆனால் அவன் மயில் என்று சரியான பதிலை எழுதிவிட்டான் என்பதும் பின்னர் தெரியவந்தது. இது இன்றும் என் மனதில் அப்படியே இருக்கின்றது.

அப்போது தான் பாடசாலையின் உள்ளே இருக்கும் சிறிய கோவில் கட்டப்பட்டது. அப்போது வரைதல் பாட ஆசிரியராக இருந்த திரு. மயில்வாகனம் ஆசிரியர் தான் வாசலின் இருபுறமிருந்த அலங்கார வேலைப்பாடுகளை அமைத்துக் கொடுத்தார் என்பதும் நன்றாகவே நினைவிருக்கின்றது. அப்போது மிகப்பிரபல்யமாக இருந்த ஔவையார் திரைப்படத்தில் நடித்த கே. பி. சுந்தராம்பாள் யாழ்ப்பாணம் வந்திருந்தார். எமது சைவத்தமிழ் பாடசாலைக்கும் வந்திருந்தார். அந்தச் சிறிய கோவிலிலும் வந்து வணங்கிய காட்சி இப்போதும் அப்படியே என்மனதில் அழியாமல் இருக்கின்றது.

பாடசாலைக்கென புதிய ஊஞ்சல்கள், சறுக்கிவிளையாடும் Slide என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் விளையாட்டு உபகரணம், புதிய அம்பு, வில்லு என பலவற்றை மாணவர்களுக்காக வாங்கி விட்டிருந்தனர். பெரிய வில்லும் அம்பும் ஒன்றாகவே இருக்கும். நன்றாக இழுத்து விட்டாலும் அம்பு ஒருபோதும் வில்லில் இருந்து வெளியேறாதபடி அமைத்திருந்தார்கள்.

நான் நான்காம் வகுப்புப் படித்த போது திருமதி. இராஜலட்சுமி அப்புத்துரை ஆசிரியர் எனது வகுப்பாசிரியராக இருந்தார். ஒருமுறை விளையாட்டுப் போட்டிக்கு என்னை ஒரு வேடம் போடும்படி கூறினார். என்ன வேடம் என்று கூறவில்லை. மரங்களின் கிளைகளை குறிபார்த்து எய்ய வேண்டும். என்றார். எதற்காக என்னைத் தெரிவு செய்தார். என்றோ என்ன கூறினார். என்றோ எனக்கு விளங்கவில்லை. நான் வேண்டுமென்றே சற்றுத் தாமதமாகப் போய் அவரின் கண்களில் படாமல் நின்றிருந்தேன். என்னைக் காணாதபடியால் நான் போட வேண்டிய வேடத்தை வேறு ஒரு மாணவனுக்குக் கொடுத்துவிட்டார். அது ஒரு வேடன் வேடம், அரையில் ஒரு கோவணம் மட்டும்அணிந்தபடி கைகளிலே பாடசாலையில் புதிதாக வாங்கிய இரும்பினால் ஆன அம்பும் வில்லும் வைத்துக் கொண்டு அங்கிருந்த ஓர் இலுப்பை மரத்தைச் சுற்றிச்சுற்றி வந்து குறிபார்த்து எய்தபடி இருந்தார் அந்த மாணவன். அவர் என்னைத் தெரிவு செய்தது ஏனென்றால் நான்

கொஞ்சம் உயரமானவன், எனது உயரத்திற்கும், நிறத்திற்கும் என்றுதான் எண்ணுகிறேன். இப்போது இலண்டனுக்கு வந்து சிறிது நிறத்திருந்தாலும் அப்போது வேடனுக்குரிய நிறமாக இருந்திருக்க வேண்டும்.

நான்காம் வகுப்பிலேயே தோட்டப்பாடமும் ஒன்று இருந்தது. மரவள்ளிக்கட்டைகள், கத்தரி போன்ற பயிர்களை நட்டிருந்தனர். ஒரு வகுப்பு மாணவர்கள் நட்டவற்றை எமது வகுப்பு குறும்பு மாணவர்கள் பிடுங்கிப்பார்ப்பார்கள். "ஏன் பிடுங்கினாய்? என்று கேட்ட போது "அதற்கு வேர் வந்துவிட்டதா என்று பார்க்கத்தான்" என்று பதில் கூறினார்கள்.

ஒருநாள் முன்னால் வகுப்பு நடைபெற்றுக்கொண்டிருந்த போது பின்னால் இருந்த இரு மாணவர்களுக்கிடையிலே ஒரு போட்டி ஆரம்ப மாகியது. நன்றாக இருக்கும் பல் ஒன்றை யார் முதலில் பிடுங்குவது என்பது தான் போட்டி. எனக்கு பயம் ஒருபுறம், முன்னாலிருக்கும் ஆசிரியரை பார்ப்பதா? அல்லது பின்னால் நடைபெறும் போட்டியை பார்ப்பதா? என்கின்ற ஆர்வம். எனது ஆச்சரியத்திற்கேற்றாற்போல் பாலா என்கின்ற மாணவன் ஐந்து நிமிடத்திற்குள் தனது பல் ஒன்றை ஆட்டி ஆட்டிப் பிடுங்கிவிட்டான். எல்லா மாணவர்களும் அவனையே திரும்பிப் பார்க்க ஆசிரியரும் அதனைக் கண்டு விட்டார். அவன் வாயெல்லாம் ஒரே இரத்தம். உடனே தலைமை ஆசிரியரை அழைத்து அவனை வீட்டிலே கொண்டு போய் விட்டு விட்டார்கள். பாலாவை இப்போது காணும் போதுகூட அந்தக் காட்சிதான் முதலில் நினைவிற்கு வரும்.

அப்போது மதிய வேளைகளில் "ஐஸ்பழம்" (Ice Lolly) விற்பார்கள். ஒருநாளவது அதனை வாங்கிச் சாப்பிட வேண்டுமென்று தணியாத ஆசை இருந்தது. ஆனால் அதனை வாங்குவதற்குரிய ஐந்து சதமும் என்னிடம் தெரியும். ஒருநாள் முதல் முறையாக ஒரு பத்து சதத்தை யாருககும் தெரியாமல் எடுத்து எனது புத்தகத்துள் வைத்து இறுகப்பிடித்தபடி ஓரிடத்தில் கூட நிற்காது ஒரே ஓட்டமாக பாடசாலையை வந்தடைந்து புத்தகத்தை விரித்துப் பார்த்தேன். அந்தப் பத்துச்சதத்தைக் காணவில்லை. கண்ணீர் பொத்துக்கொண்டு வந்தது. இனிமேல் திருடமாட்டேன் என்று எனக்கு நானே சமாதானம் கூறிக்கொண்டேன்.

ஒருமுறை பாடசாலையில் திருட்டுப்போய்விட்டது அப்போது பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த உயர்வகுப்பு மாணவன் ஒருவன் தான் முதல் நாள்இரவு பாடசாலையின் கூரையை உடைத்துத் திருடியவன் என்பது தெரியவந்தது. அவனைப்பிடித்து பாடசாலை மாணவர்கள் எல்லோரையும் நடுவிலிருக்கும் திறந்தவெளியில் ஒன்றாக கூட வைத்து அவர்கள் முன்னால் நடந்தவற்றைக்கூறி, குற்றவாளியின் கைகளில் இருபது பலமான அடிகளைக் கொடுத்தனர். அதுமட்டுமல்ல, அவனை ஆண்களின் மலசலகூடத்தினுள் அன்று முழுவதும் அமரும்படியும் பணித்துவிட்டனர். இதனை என்னால் மறக்கவே முடியவில்லை.

ஒருமுறை நாடு முழுவதும் பாடசாலைகளுக்கிடையிலே அஞ்சலோட்டம் ஒன்று நடாத்தப்பட்டது. அப்போது நான் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். மாணவ முதல்வர் தலைவனான நான் அஞ்சலையும், செயலாளரான நண்பன் குமரேஸ்வரராஜா பாடசாலைக் கொடியையும் கொண்டு ஓரிடமும் நிற்காது சைவத்தமிழ் வித்தியாசாலைக்கு ஓடிவந்து கொடுத்ததையும் மீண்டும் எண்ணிப்பார்க்கிறேன்.

நான் இலண்டனுக்கு வருவதற்கு முன்னர் நண்பர்களுடன் சேர்ந்து பல நாடகங்களை சைவத்தமிழ் வித்தியாசாலையின் திறந்த வெளியரங்கில் மேடையேற்றினோம். உரும்பிராய் மக்கள் பெருந்திரளாக வந்து ஆதரவு தந்தார்கள். அதிலொன்றைப் பார்த்த ஈழத்து நாடகத்தந்தை கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் எம்மை தனது வீட்டிற்கு அழைத்துப் பாராட்டியதையும் வாழ்நாளில் மறக்க முடியாது.

இப்படியாக எனக்கு அ, ஆ சொல்லித்தந்ததோடு பல நல்ல பழக்க வழக்கங்களையும் சொல்லித்தந்த எனது ஆரம்பப் பாடசாயை வாழ்நாளில் மறக்கவே முடியாது எப்போது வந்தாலும் உவ்விடம் வராமல் இருக்கவில்லை. பல உலகப் புகழ்பெற்ற நல்லவர்களை, வல்லவர்களை, தியாகிகளை உருவாக்கிய அன்னைக்கு ஆயுள் நூறு என்பதை எண்ணும் போது கண்களில் ஆனந்தக்கண்ணீர் பெருகுகின்றது. எமது அன்னை இன்னும் பல நூற்றாண்டுகள் வாழவேண்டும். நல்ல மாணவர்களை உருவாக்க வேண்டும், அவர்களால் நாடும் நலம்பெறவேண்டும். அதற்கு எல்லாம் வல்ல இறைவன் நிச்சயம் அருள்புரிவார்.

ஆரம்பப் பிரிவு தமிழ் மன்றம் - 2015

பாடசாலை அபிவிருத்திக் குழு - 2015

அகவை நூறு கண்ட அன்னையே வாழ்க!

திருமதி செந்தில்நாயகி பரமலிங்கம்,
விஷேட பயிற்சி தமிழ்,
பகுதித் தலைவர்,
யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.

செம்புலப் பதியாம்
உரும்பிராய் ஓடையம்பதியில்
அற்புதம் நிறைந்த
கற்பக விநாயகர் கருணைசேர் நிழலில்
உற்பவித்திட்ட உயர்சிகரம்
பச்சைப் பசேல் என்ற
பசுமைச் சூழலில் அகலமாய் உயரமாய்
அமைந்த கட்டடங்கள்
அன்னையின் எழிலோ சொல்ல வொண்ணா
கற்பகக் களிற்றின் பொற்பதம் போற்றி
வித்தைகள் நூறு விளம்பிடத் துணிந்தாய்
வளர்ந்தாய் அம்மா வானைத் தொட்டிட
அன்னையே உன்மடியில்
ஆயிரத்தையும் விஞ்சிய முத்துக்கள்
ஆளுமை மிக்க அதிபருடன்
அறுபதையும் விஞ்சிய ஆசான்கள்
எத்தனை போட்டிகள் எத்தனை சோதனைகள்
எது வந்தாலும் சளைத்தவள் அல்ல
கோட்டம், வலயம், மாகாணம்,
தேசியம் என்றெல்லாம்
விரைந்து சென்றே விருதுகள் பெற்றிடுவாள்
வாழிய தாயே வாழ்க பல்லாண்டு

அன்று உன்மடியில்
தவழ்ந்த பல முத்துக்கள்
இன்று இம்மண்ணின்
புகழ் பூத்த சொத்துக்கள்
அர்ப்பணிப்புடனே சேவையாற்றிடும்
ஆசிரியப் பெருந்தகைகள், அதிபர்கள்
சட்ட வல்லுநர்கள்
விடுதலை வீரர்கள்
வியாதிகள் தீர்க்கும் விற்பன்னர்கள்
இன்னும் எத்தனை எத்தனை
வித்தகப் பேர்களை
சாலவே சமைத்துச் சான்றோர் ஆக்கி
சரித்திரம் படைத்த சரஸ்வதியே
வாழிய பல நூறாண்டு நீ மேலும்
வாழிய! வாழிய!! வாழிய தாயே!!!

துன்பம் இல்லாத இன்பமும்
முயற்சி அல்லாத வெற்றியும்
அதிக நாள் நிலைப்பது இல்லை.
"அப்துல்கலாம்"

வகுப்பறை முகாமைத்துவமும் கற்றல் கற்பித்தல் வெற்றியும்

திருமதி. செல்வரஞ்சினி ஸ்ரீதரன்,
விஷேட பயிற்சி வர்த்தகம்,
யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.

பாடசாலைகளில் வகுப்பறையானது பல்வேறுபட்ட சமூக, கலாசார, இனமொழி என்ற ஆதிக்க முறைமைக்குள் கட்டுண்ட பிள்ளைகளின் நடத்தைக் கோலங்கள், மனவெழுச்சிகள், விஷேட தேவை வேண்டி நிற்போர் என்றவகையில் பல்வேறுபட்ட குணவியல்புகளைக் கொண்ட மாணவர்களை ஒன்றிணைத்து பாடசாலைச் சூழலில் கிடைக்கப் பெறும் வளங்களைக் கொண்டு கற்றல், கற்பித்தல் செயற்பாட்டினை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லும் வகையில் நன்கு திட்டமிடப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்ட செயற்பாடே வகுப்பறை முகாமைத்துவமாகும்.

வகுப்பறையானது ஒரு கல்வி முறையின் அடிப்படையான நிறுவன அலகாக விளங்குகின்றது. இங்கேதான் உண்மையான கற்றல் கற்பித்தல் தொழிற்பாடு நடைபெறுகிறது. எல்லாப் பாடசாலைகளிலும் வகுப்பறை உண்டு. வகுப்பறையென்பது மாணவர்கள் அவர்தம் வயது, ஆற்றல்கள் என்பவற்றின் அடிப்படையில் குழுக்களாகப் பிரிக்கப்பட்டதைக் குறிக்கும். “வகுப்பறை” என்பதன் நேரடிப்பொருள் ஒரு தனியான அறையைக் குறிக்கும். ஆனால் நடைமுறையில் அவ்வாறில்லை. இலங்கையில் பெரும்பாலான வகுப்பறைகள் பெரிய மண்டபங்களில் காணப்படுகின்றன. ஒரு வகுப்பிற்கும் இன்னொரு வகுப்பிற்கும் இடையில் சிறிய இடைவெளியே உண்டு. இந்நிலைமை வகுப்பறையை நிர்வகிக்கும் செயற்பாடுகளையும் கற்பித்தலையும் பெருமளவு பாதிக்கின்றது.

கல்வியலாளர் மார்லாந்து என்பவர் (1984) வகுப்பறையின் முக்கியத்துவத்தை பின்வருமாறு கூறியுள்ளார். ”இடைநிலைக் கல்வியைப் பொறுத்தவரையில் சாதாரண வகுப்பறையில் நாளாந்தம் நடைபெறும் விடயங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை” ஒரு பாடசாலை பல விடயங் களைத் திட்டமிடலாம். பாடப்புறச் செயல்கள் அமையலாம். பல

ஆலோசனைகள் இருக்கலாம். எவ்வாறாயினும் வகுப்பறையில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையில் ஏற்படு கின்ற தொடர்புகளே பாடசாலையின் வெற்றியையும், தோல்வியையும் நிர்ணயிக்கின்றன. புதிய கல்வித் தத்துவங்களை ஏற்றுக்கொள்ளலாம். எமது சூழல் பற்றிய சமூகவியல் காரணிகள் சிறந்த தொடர்புகளை ஏற்படுத்திச் கொள்ளலாம். அல்லது கால அட்ட வணைகள் அமைக் கலாம். ஆனால் அவையாவும் வகுப்பறையை மையமாகக் கொண்டே இயங்குகின்றன.

இந்த வகையில் மாணவர் நடத்தைகள் மீது செல்வாக்குச் செலுத் தும் காரணிகளை ஆசிரியர் அறிந்திருப்பது மட்டுமன்றி கலைத்திட்டம், கல்வி உளவியல், மனிதவள மேம்பாடு, ஆளுமை, கல்வி ஆலோசனை வழிகாட்டல், கல்விக் கோட்பாடுகள், முறையியல்கள், தொழிநுட்பங்கள், வளங்கள், நேரம், கணிப்பீடு என்ற அம்சங்களில் சிறந்த அறிவுடைய ஆசிரியர் ஒருவரால் சிறப்பான வகுப்பறை முகாமைத்துவத்தினை ஏற்படுத்தி செயற்படுத்த முடியும்.

உரிய நேரத்தில் பாட வேளையைத் தொடங்கி முடிப்பதன் மூலம் ஆசிரியர்கள் போதனை நடைபெறாத நேரத்தை மிகச் சிறிய நேரமாகக் குறைத்துக்கொள்ள வேண்டும். ஒரு செயலிலிருந்து மற்றச் செயலுக்கு மாறும் நேரத்தை மிகக் குறைந்த நேரமாக்கிக் கொள்ள வேண்டும். கருத்துள்ள வினைத்திறனுடன் கூடிய விதிகளையும் வழமைகளையும் விருத்தி செய்து அமுலாக்கக் கூடிய வகையில் வகுப்பறைகளை முகா மைத்துவம் செய்ய வேண்டும்.

ஆசிரியர்கள் விரும்பத்தக்கதான சமூகம் சார் நடத்தைகளை வலுவுள்ளதாக்க வேண்டும். இந்த நடவடிக்கைகளை குறிப்பாக நடத் தைப் பிரச்சினையுடைய மாணவர்கள் சார்பாக அமுல்படுத்த வேண்டும். பொருத்தமான வழிகளில் நல்ல நடத்தைகளைப் பின்பற்றுதலின் பெறு மதியை இம்மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய தேவை உண்டு. ஆக்கத்திற்கான நடத்தைகளினதும் சமூகம்சார் நடத்தைகளினதும் பெறுமதி யைப் போற்றும் மாணவர்களுக்கு உதவிசெய்யும் வழிகளாவன ஆசிரியர் களின் பாராட்டும் அங்கீகாரமும் ஆகும்.

பொருத்தமில்லாத நடத்தைக்காக ஒழுங்கான, நீதியான கட்டுப்பாடு களையும், தண்டனையையும் எல்லா மாணவர்களுக்கும் வழங்க வேண்டும். கட்டுப்பாடுகளும் தண்டனையும் தேவைப்படும்போது ஆசிரியர் தனது கவனம் முழுவதையும் மாணவனின் பொருத்மில்லா நடத்தையின் மீது கவனம் செலுத்தப்பட வேண்டுமேயொழிய மாணவனின் ஆளுமை மீதல்ல. ஆசிரியர்கள் பின்வருவனவற்றை மாணவர்களுக்கு தெரியப்படுத்தக் கூடிய வர்களாக இருத்தல்வேண்டும்.

01. வகுப்பில் முதலாவது முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது அதனை மாணவர் கள் அவதானிக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றார்கள்.

02. வகுப்பறையில் எல்லா நேரங்களிலும் என்ன நடைபெறுகின்றது என்பதை தெரிந்திருக்கின்றார்கள்.

03. ஒரே சமயத்தில் பல்வேறு விடயங்களைக் கையாளக் கூடியவராக (சர்வ அவதானம்) இருக்கிறார்கள்.

04. தாம் நடாத்திக் கொண்டிருக்கும் பாடத்தின் பிரதான நோக்கத்திலி ருந்து கவனத்தை வேறு வழியில் திசை திருப்பு வதில்லை. மாணவர் களின் கற்றலுக்கு மாணவர்களே பொறுப்புடையவர்கள் எனவும் அவர்களின் வேலையின் தராதரத்திற்கும் அவர்களே பொறுப்பு எனவும் நம்புகிறார்கள்.

வகுப்பறையில் பராமரிக்கப்படவேண்டிய ஆவணங்களும் பதிவேடுகளும்.

- மாணவர் வரவு இடாப்பு
- பாடத்திட்டம்
- வேலைத்திட்டம்
- பாடக்குறிப்பு
- நேரசூசி
- வகுப்பறை சம்பவதிரட்டு புத்தகம்
- மாணவர்களின் புள்ளிப் பதிவேடுகள்
- மாணவர்களின் புள்ளிப் பகுப்பாய்வு
- மாணவர்களின் சுயவிபரக் கோவைகள்

- விஷேட மாணவர் பற்றிய விபரங்கள்
- மாணவர் பாடசாலை வரவு பற்றிய பகுப்பாய்வு
- மாணவர்களின் கடந்தகாலப் பரீட்சைகளின் விடைத்தாள்கள்
- மாணவர்களுக்கு வழங்கப்பட்ட ஒப்படைகள், செயன்முறைகள் பற்றிய விபரங்கள்.
- மாணவரின் ஆக்கங்கள்
- மாணவர் பொறுப்புக்களின் விபரம்
- மாணவரிடம் வசூலிக்கும் நிதி பற்றிய விபரங்கள்
- பெற்றோர் சந்திப்பு தொடர்பான விபரங்கள்
- மாணவர்களின் கற்றலை ஊக்குவிப்பதற்காகப் பிரயோகிக்கப்படும் உத்திகள் பற்றிய விபரம்
- செயற்றிட்டப் பதிவுகள்
- சீருடை பற்றிய பதிவுகள்

போன்ற இன்னோரன்ன ஆவணங்களைப் பயன்படுத்துவதன் மூலம் சிறப்பாக கற்றலை ஊக்குவிக்கலாம்.

உயர்ந்த குணம் உயர்ந்த எண்ணம் இது ஒருவனை தெய்வமாக்கும் மந்திரக் கோல்.

அதிபர், பிரதி அதிபர், பகுதித் தலைவர் மற்றும் கல்விசாரா ஊழியர்கள்

2015 இல் இடமாற்றம் பெற்ற கல்விசாரா ஊழியர்களுடன் அதிபர்

வகுப்பறையினுள் கற்றல், கற்பித்தல் சாதனமாக கணினியை பயன்படுத்துததல்

திருமதி. த.நவகாந்தன்,
தகவல் தொடர்பாடல்,
தொழில்நுட்ப பாட ஆசிரியர்.

கணினி மற்றும் இணையத்தளம் போன்ற முன்னேற்றமடைந்த தொழில்நுட்ப அங்கங்களை அறிமுகப்படுத்துவதுடன் உலகம் முழுவதும் கல்வி நவீன போக்கினைக் கொண்டுள்ளது. ஆதலால் இலங்கையில் கல்வி முறைமையினுள்ளும் முடியுமான சந்தர்பங்களில் பாரம்பரிய கற்றல், கற்பித்தல் முறைக்குப் பதிலாக கணினி, நவீன தொழில்நுட்பங்களைப் பயன் படுத்தி நவீனமயமாக்கப்பட்ட கற்றல் - கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்த வேண்டும்.

ஆசிரியரின் பங்குபற்றல் மற்றும் கணினிப் பயன்பாடு ஒன்றிணைப் பில் நாம் நினைப்பதிலும் பார்க்க அதிகளவு கற்றல் சந்தர்ப்பங்களை பரவ லாக்க முடியும். விஷேடமாக நெருக்கமாக உள்ள வகுப்பறையினுள் கற்றல், கற்பித்தல் செயல்முறையை ஒழுங்கமைப்பதற்கும் இலகுவாக மாணவர்களின் அவதானத்தை அதில் ஈடுபடுத்துவதற்கும் கணினி உதவிசெய்கின்றது.

கணினி அடிப்படையான கற்றல், கற்பித்தல் துணைகள் என்ற எண்ணக்கருவை சரியாக இனங்காண்பதன் மூலம் கற்றல், கற்பித்தல் செயல்முறையினுள் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

தொழில்நுட்ப அடிப்படையிலான கற்றற் பொருளாக அறிமுகப் படுத்தப்படுவது பல்லூடகம் உள்ளடங்கிய பொதி (Multi Media Packages) ஆட்சியினுள் பிரதானமாக திட்டமிடப்பட்ட நிபுணத்துவர்களால் நிர்மாணிக்கப்பட்ட பல்வேறு தகவல்களை இப் பல்லூடகங்கள் உள்ளடக் கியுள்ளது. ஆசிரியர்களுக்கு இவற்றை பயன்படுத்தி தமது மாணவர்களுக்கு எண்ணக்கருவை சிறந்தமுறையில் விளக்கக் கூடியதுடன் பல்வேறு எண்ணக் கருக்களை கற்பிக்க முடியும். வகுப்பறையில் கணினி அடிப்படையிலான

கற்றல், கற்பித்தல் சந்தர்ப்பங்களில் பயன்படுத்தக் கூடிய பல்வேறு முறைகளும் அதன் முக்கியத்துவத்தையும் பின்வருவன வற்றிலிருந்து அறிந்து கொள்வோம்.

அடிப்படையிலான கற்றல், கற்பித்தல் சந்தர்ப்பங்களில் பயன் படுத்தக் கூடிய பல்வேறு முறைகளும் அதன் முக்கியத்துவத்தையும் பின் வருவன வற்றிலிருந்து அறிந்து கொள்வோம்.

வகுப்பறையினுள் ஒரு கணினியை மாத்திரம் கற்றல் சாதனமாகப் பயன்படுத்தல். வகுப்பறையில் தமது கற்பித்தல் செயல்முறையில் வகுப்பறையில் கணினியை மற்றும் பல்லூடக புறஜெக்டரைப் பயன்படுத்தி வரைபு, படங்களுடன் மிகவும் கவர்ச்சியாகக் கூடிய முறையில் தமது பாடத்தை மாணவருக்கு விளக்குவதற்கும் முடியும். புறஜெக்டரைப் பயன் படுத்துவதனால் மாணவருக்கு மிகவும் பரந்த திரையில் தெளிவாக கணினி யின் மூலம் வழங்கப்படுவனவற்றை அவதானிப்பதற்கும் இடமளித்து வேறு முறைகளிலும் பார்க்க இம்முறையிலுள்ள அனுகூலங்கள் பலவாகும். சில வேளைகளில் மாணவர்கள் யாதாயினும் எண்ணக்கருவை விளங்கிக் கொள் வதில் குறைபாடுகள் ஏற்படலாம். அவ்வாறன சந்தர்பங்களில் ஆசிரியர் மேற்கூறிய முறைகளைப் பயன்படுத்தி முன்கற்ற வரைபு படங்களை மீண்டும் பெற்று உரிய விளக்கத்தை இலகுவாக மேற்கொள்ள முடியும்.

ஆசிரியருக்குப் பல்லூடக பொதியைத் தயாரிப்பது தொடர்பாக சரியான பயிற்சி வழங்கினால் கற்பித்தலில் தம்மால் தயாரிக்கப்பட்ட அல்லது வேறு முறையில் அசையாத கட்புல காட்சி மற்றும் ஒலியுடன் கற்றல் பொதியை நிர்மாணிப்பதற்கு இயலுமாக இருக்கும். இவ்வாறான விடயங் களைப் பயன்படுத்தி மிகவும் செயற்பாட்டுடனும் வினைத்திறனுடனும் கற்றல் - கற்பித்தல் செயல்முறையினை வகுப்பறையினுள் நடத்த முடியுமாக இருக்கும். இதன் மூலம் மாணவர்கள் மிகவும் ஆக்கபூர்வமான படிமுறை படி முறையாகக் கட்டியெழுப்பும் கற்றல் செயல்முறையில் பங்குபற்ற முடியுமாக இருக்கும்.

<u>உதாரணம்:</u> ஆசிரியர் கிரக மண்டலக் கோள்களின் இயக்கம் தொடர்பாக மாணவர்களுக்கு கற்பிப்பதாக கருதுவோம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அதற்குரிய வீடியோ இணைப்பைக் கணினியுடன் தொடர்பு படுத்தி மிகவும் சிறந்த முறையில் கிரகங்களின் இயக்கம் தொடர்பாக கற்பிக்க

முடியும். இதை உளப் படமாக்கலை பயன்படுத்தி கற்பிப்பதிலும் பார்க்க கூடிய பெறுபேறு கிடைக்கும். அது மட்டுமல்லாது எரிமலை, வன விலங்குகள், நீரிலுள்ள உயிரினங்கள்,பல்வேறு உயிர்களின் நடத்தைக் கோலங்கள் தொடர்பாக கற்பித்தலில் இவ்வாறான முறையைப் பயன் படுத்துவதன் மூலம் உரிய நிலைமைகள் தொடர்பாக பூரணமான சரியான விளக்கத்தை மாணவருக்கு வழங்க முடியும். அதேபோல் ஆற்றலுடைய வராயின் கணினியைப் பயன்படுத்தி மேலே கூறபட்ட நிலைமைகளை செயற்கையாக நிர்மாணிக்க முடியும்.

மேற்கூறிய விடயங்களை கவனத்தில் எடுத்து கணினி எவ்வளவு புதுமையானதாக கற்றல் - கற்பித்தல் செயல்முறையினை இலகுபடுத்தும் துணைகளாக செயற்படுகின்றது என்பது தெளிவாகின்றது. அது மாத்திர மல்லாது கட்புல செவிப்புல சாதனங்கள், வீடியோ காட்சிகளை வழங்கி மாணவர்களின் நுண்மதியினை விருத்தி செய்வதற்கு கணினி அதிகமாக உதவுகின்றது.

அன்னியோன்னிய குழுக் கற்றலுக்காக கணினியை ஒரு சாதனமாகப் பயன்படுத்துதல்.

தற்காலத்தில் கல்வியின் நவீன போக்குகளாக மாணவர்களுக்கு கற்பிக்கையில் அவர்களினுள் குதூகலத்தையும் விருப்பத்தையும் ஏற்படுத்தக் கூடிய செயற்பாடுகள் மூலம் புதியவற்றை சிந்திப்பதற்கும், புதியவற்றைக் கண்டுபிடிப்பதற்கும் அவர்களை ஊக்கப்படுத்துவதாகும். விளக்கத்தி னூடாக பெற்றுக்கொள்ளப்படும் புதிய விடயங்களை கண்டுபிடிப்பதற்கும் ஆக்கத்தில் ஈடுபடுவதற்கும் அத்தியாவசியமாகும். யாதாயினும் ஒரு பிரச் சனையில் எதிர்கொள்ளப்படும் ஏன்? என்ற வினாவுக்கு விடையளிக்கையில் என்ன? எவ்வாறு? என்ற வினாக்கள் எழும். அதன் மூலம் ஒருவர் கண்டறிதலில் ஊக்கப்படுத்தப்படுவதுடன் அதன் மூலம் சில விளக் கத்தையும் பெறுவர்.

அன்னியோன்னிய குழுச் செயற்பாடுகளின் மூலம் இதற்குப் பரவலாக இடவசதி வழங்கப்படும். இவ்வாறான குழுக்கற்றலுக்கு கணினியை பயன் படுத்த முடியும். மாணவர்களுக்கு விடயங்களை உள்ளடக்கிய குறிப்புகள் வீடியோ, ஒலி செயற்பாடுகள் மற்றும் தீர்ப்பதற்குத் தேவையான பிரச் சனையை வழங்கினால் மாணவர் குழுக்களுக்கு ஒரு கணினியைப் பயன்

படுத்தி உரிய செயற்பாடுகளில் ஈடுபடமுடியும். இங்கு குழுக்களுக்கு ஒரு கணினியைப் பயன்படுத்தி உரிய பின்னூட்டலை பெற்று வெற்றிகரமாக கற்றல் செயலில் ஈடுபடுவதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும். இவ்வாறு அவதானிப்பதன் மூலம், கலந்துரையாடல் மூலம், கண்டறிதல் மூலம், பிரச்சனை தீர்த்தல் மூலம். செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம், ஆக்கங்களை உருவாக்குவதன் மூலம் சம வயதுக் குழுக்களுடன் செயற்பட்டு விநோதம் மாத்திரமல்லாது குழுவாக வேலை செய்யும் ஆற்றலையும், ஒத்துழைப்பையும், செயற்படும் ஆற்றலையும் வழங்குகின்றது.

தனியாளின் கற்றலுக்காக கணினியைத் துணையாகப் பயன்படுத்துதல்.

மாணவருக்கு நல்ல முறையில் திட்டமிடப்பட்ட பல்லூடக கற்பித்தல் பொதியினை வழங்கினால் தனியாளின் கற்றலை இலகுபடுத்தும் காரணியாக கணனியைப் பயன்படுத்த முடியும். அக்கற்றல் பொதியிற்கான விபரம், விளையாட்டு பிரச்சனை தீர்த்தல் சந்தர்ப்பங்கள், கட்டியெழுப்பலில் பயிற்சி சந்தர்ப்பங்கள், ஒப்படைகள் உள்ளடங்கியிருப்பின் மாணவர்களுக்கு ஆற்றலையும் பரந்த அறிவையும் அம்முறையினால் பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாறான முறையில் கற்பிப்பதனால் ஒருவருக்கு ஒழுங்கு முறைப்படி தமது வேகத்தினை ஒழுங்கமைத்து கல்வியை வழங்கமுடியும்.

இவ்வாறான கற்றல் பொதுவாக கணினி அடிப்படையிலான கற்பித்தல் (CAT) என அழைக்கப்படுகின்றது. CAT பொதுவாக நிகழ்ச்சித் திட்டத்தை கற்பித்தலின் அடிப்படையிலேயே விருத்தி செய்யப்படுகின்றது. CAT மூலம் மிகவும் வினைத்திறனுடையதும் விளைதிறனுடையதுமான கற்றல் அனுபவங்கள் ஏற்படுத்தப்படும். இம்முறையில் கற்றல் பெறுபவர் கணினியினுள் தேக்கி வைக்கப்பட்டுள்ள தகவல்களின் கூடிய அளவினைப் பெற்றுக்கொள்ள முடியும். இது வேறெந்த ஊடகங்கள் மூலமும் பெற முடியாத ஒன்றாகும். இவ்வாறான முறையில் கற்பிக்கையில் மாணவர்களுக்கு மேலதிக விடயங்களைக் கண்டுபிடிப்பதற்கு இணையத் தளத்தைப் பெற்றுக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்.

கற்றலுக்காக கணினியை பயன்படுத்தக்கூடிய வேறு சந்தர்ப்பங்கள்

கணினி கற்றலை இலகுபடுத்துவது மட்டுமல்லாது கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கான உபகரணமாகவும் பயன்படுத்த முடியும். புதிய கணித்தறி கருவியாகவும் அச்சடித்தலாகவும் பயன்படுத்த முடியுமாக இருத்தல் எளிய பயன்பாடுகள் இரண்டாகும்.

மலர்க் குழு

தமிழ் மன்றம்

பல்லூடகங்களின் எழுத்தாக்கங்கள் (Multi Media Composer) முன் வைப்பதன் மூலம் பயன்படுத்தக்கூடிய துணையாகவும் தொடர்பாடல் உபகரணமாகவும் தரவுகளை மீண்டும் பெற்றுக்கொள்ளக் கூடிய உபகரண மாகவும், களஞ்சியப்படுத்தி வைக்கக் கூடிய உபகரணமாகவும் பயன்படுத்தக் கூடியதாக இருத்தல் கணினியின் முன்னேற்றமான பயன்பாடாகும்.

ஆசிரியருக்கு கணினியைப் பயன்படுத்தி மாணவர்களை குழுக்களாக் குதல், கலந்துரையாடல், போட்டிகளில் மாணவர்கள் துலங்கல்கள் புள்ளிகளைத் தயாரித்தல். நேர அட்டவணை மற்றும் நிகழ்ச்சித்திட்ட நிகழ்ச்சி நிரலைத் தயாரித்தல், விஞ்ஞான செய்முறை பரீட்சைகளில் பிரயோக தரவுகளைப் (அவதானித்தல்) பயன்படுத்தி தேவையான வரைபு களைத் தயாரித்தல் போன்ற செயல்களும் மற்றும் பாடத்தை தயாரித்தல் போன்றவற்றை இலகுவாகவும், விரைவாகவும் செய்யமுடியும். இதற்கு மேலதிகமாக கணினியில் பயன்படுத்தக் கூடிய இறுவெட்டுகளைப் பயன் படுத்தி மாணவர்களுக்கு மேலதிக அறிவை வழங்க முடியும் என்பது மிகையாகாது.

ஆரம்ப வகுப்புக்களில் விழுமியக் கல்வியின் முக்கியத்துவம்

திருமதி. நிர்மலா மகேஸ்வரன்,
பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி,
யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.

பிள்ளைகளின் ஒழுக்க விழுமியத்தை உருவாக்கம் செய்வதிலும் அதனை நெறிப்படுத்துவதிலும், வலுப்படுத்தவதிலும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள், சமயபாட ஆசிரியர்களினதும் அரவணைப்பும் அர்ப்பணிப்பும் மிக மிக வேண்டத்தக்கது. பெற்றோரின் ஒத்துழைப்புக்கு மேலாகப் பாடசாலை அதிபரின் தியாக மனப்பான்மை. பொறுப்புணர்வு, புதிய சிந்தனை, அர்ப்பணிப்பு, செயல் ஊக்கம், வழிகாட்டல் என்பன உச்ச கட்ட நிலையில் நடைமுறைப் படுத்துவது வரவேற்கத்தக்கது. 1 - 5 வயது வரை பெற்றோரின் அரவணைப்பிலிருந்த பிள்ளைக்கு இப் பண்பாட்டை நடை முறைப்படுத்தி ஊக்குவித்து வளர்த்தெடுக்கும் பொறுப்பு பெற்றோரைச் சார்ந்தது. இதிலிருந்து பெற்றோர் இம்மியளவும் விலகக் கூடாது.

சில தசாப்தங்களுக்கு முன் கூட்டுக் குடும்ப வாழ்க்கையில் பேரன், பேர்த்தியார் பெற்றோரை விட ஒழுக்க விழுமியங்களை மேம்படுத்துவதிலே தமது முழுப் பங்களிப்பையும் வழங்கினர். நாட்டார் பாடல்கள், நீதிக் கதைகள் என்பன இவர்களால் ஊட்டப்பட்டு குடும்பச் சூழல் நல்ல நிலையை அடைந்தது. பெற்றோர் வழங்கப்பட்ட தண்டனைகளை இவர்கள் வெறுத் தனர் மாறாக அன்பையும். அரவணைப்பையும், பாதுகாப்பையும் சிறார் களுக்கு வழங்கினர். சமய விழுமியங்களைத் தண்டனைகளாகப் பயன் படுத் தினர்.அவர்களும் மகிழ்ந்தனர், சிறார்களும் மகிழ்ந்தனர். வாழ்க்கைப் பயணமும் இலக்கை நோக்கி நேரிய பாதையில் சென்றது. அதேவேளையில் பாடசாலைகளும் சீரிய பணியைத் தொடர்ந்தது என்பது வரலாறு. மூத்தோர் சொல் வார்த்ததை அமிர்தமாகக் கருதப்பட்டது. சமூகத்தால் அங்கீகரிக் கப்பட்ட பண்பாட்டம்சங்கள் ஒழுக்க விழுமியங்கள் போன்றவை பாட சாலையூடாக அடுத்த தலைமுறையினர்க்கு நகர்த்திச் செல்லப்பட்டன. பிள்ளையும் சமூகமும் ஆசிரியரின் வாக்கை வேதவாக்காக ஏற்றுக் கொண் டனர். பாடசாலைகளில் தினசரி நடைபெறுகின்ற நற்சிந்தனை, விசேடமாக வெள்ளிக் கிழமைகளில் நடைபெறுகின்ற கூட்டுப் பிரார்த்தனை சமயச்

சொற்பொழிவுகள், குருபூசைத் தினம், சொற்பொழிவுகள், ஆலயங்களில் உற்சவ காலங்களில் நடைபெறுகின்ற சமய சொற்பொழிவுகள் ஆகியனவும் உரமூட்டின.

யதார்த்தத்தில் பாடசாலையில் ஒழுக்கத்தை நடைமுறைப்படுத்துவதிலும் கட்டுப்படுத்துவதிலும் பாடசாலை நிர்வாகம்பலத்த சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. குறிப்பாக மாணவர் ஒத்துழையாமை, பெற்றோர்கள் ஏற்றுக் கொள்ளாமை, அரச சுற்று நிருபங்கள், நீதி மன்றக் கட்டளைகள். சிறுவர் உரிமையில் குறிப்பிடப்படும் பல்வேறுபட்ட உரிமைகள், அரச , அரச சார்பற்ற நிறுவனங்களின் தலையீடு ஆகியன. எனவே இவற்றுக்கு மதிப்பளிக்கவேண்டிய நிலை பாடசாலை நிர்வாகத்தைச் சார்ந்ததாகவுள்ளது. அதிவேகமாக மாறிவரும் உலகில் மரபுரீதியான. சம்பிரதாய பூர்வமான அணுகு முறைகள் நலிவடைந்து வரும் நிலையில் ஒழுக்கத்தைக் கட்டிக்காத்த. ஒழுக்கத்தில் காவல் நாயாகக் கருதப்பட்ட தண்டனைக்கு சாவுமணி அடிக்கப்பட்டு சட்ட ரீதியாக அது இன்று கைவிடப்பட்டுள்ளது. எனவே ஊருடன் ஒத்தோடும் வகையில் சட்டத்துக்கு மதிப்பளித்து ஒழுக்கத்தை வலுவூட்டல் பொருத்தமானதும். எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதுமான ஒரு அணுகு முறையைக் கடைப்பிடித்து நடைமுறைப்படுத்த வேண்டி ய சூழ்நிலையொன்று வேண்டற்பாலது.

ஆரம்பக் கல்வியின் போது ஒழுக்க விழுமியங்களைப் பேணி வந்த மாணவர் இடைநிலைக் கல்விக்கு வந்த பின்பே கூடுதலானோர் ஒழுக்க விழுமியங்களைப் பின்பற்றுவதில் பிறழ்வான நெறிமுறைக்கு உந்தப்படுவதையும் பாடசாலைகளில் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இந்நிலையில் ஆரம்பத்தில் உள்ளக வன்முறையில் குழுவாகச் சேர்ந்து செயற்படுகின்ற தன்மை அதிகரிப்பதைக் காணலாம். சகபாடிக் குழுக்களின் பங்களிப்பே இங்கு தாக்கத்தை ஏற்படுத்துவதாக பல தரப்பினாலும் நம்பப் படுகின்றது. இவ்விடத்தில் இவர்களுக்குக் காத்திரமான நண்பர்களாக தொலைக்காட்சி நாடகங்கள், சினிமாப் படங்கள், சமகாலத் தொலைபேசிகள் என்பன அமைந்துள்ளன. இங்கு நடைபெறுகின்ற காட்சிகள் . இவ்வாறான நடைமுறையைப் பின்பற்றும் போது வாழ்க்கை அழிவுப் பாதைக்குச் செல்லும் என்ற உண்மையை எடுத்தியம்பி மாறாக நல்ல பாதைக்குச் செல்வதற்கு திசை காட்டியாக அமைந்துள்ளது என்ற கருத்தை இவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. இதை சிறு திட்டமாக இடித்துரைப் பதிலும் எடுத்துரைப்பதிலும் கல்விப் புலம் சார்ந்தோர் அக்கறை காட்டுவது புதிய ஒரு அணுகு முறையாக அமையலாம்.

இந்நிலையில் இடைநிலை வகுப்பாசிரியருக்குத் தமது மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களுக்கும் பொறுப்புக் கூறவேண்டிய பாரிய கடப்பாடுண்டு. சில பாடசாலைகளில் வேறு பாடசாலைகளிலிருந்து உள்வாங்கப்பட்ட மாணவர்கள் வேறுபட்டபிரதேசங்கள் சார்ந்த, சமூகம், சமயம் சார்ந்த பிள்ளைகள் இங்கு வரக் கூடும். அவர்கள் வாழும் சூழல் வேறுபட்டதாக இருக்கலாம் இந்நிலையில் மாணவர்கள் யாருடன் யார் சேர்வதென்றோ பிரச்சினைகள் உருவாகலாம். அதாவது தமது விழுமியத்திற்கேற்ப சகபாடிகளை ஏற்றுக்கொள்வதா என்பதாகும். இவற்றை இனங்கண்டு வழிகாட்டியாக நின்று தீர்வு காண்பதில் வகுப்பாசிரியர் வல்லவராக மாறிக் கொள்வது வரவேற்கத்தக்கது.

பிள்ளைகளின் விழுமியச் சீராக்கம், உருவாக்கம், வலுவாக்கம், வலுப்படுத்தல் என்பதில் பெற்றோர்கள் விட்டுச் சென்ற இடத்தினை தொட்டுச் செல்வதில் ஆசிரியரே செல்வாக்குச் செலுத்துகிறார். கிட்டத்தட்ட (6 - 13 வயது வரை) இதில் பெரும் பகுதி ஆரம்பக் கல்வி ஆசிரியரின் கையிலேயே தங்கியுள்ளது. பொதுவாகக் கூறின் விழுமியக் கல்வி சார் செயற்பாடுகளுக்கு சாதாரண வகுப்பறைப் போதனை முறைகள் போதுமானவையல்ல. செயற்பாடுகள் ஊடாக அனுபவங்களைத் தொட்டுக் காட்டி, சுட்டிக்காட்டி போதனை முறையை வழங்கும் போது விழுமியத்தை உருவாக்கம், வலுவாக்கம் செய்வது பொருத்தமான தொன்றாகக் கருதப்படுகின்றது. பாடசாலைகளில் விழுமியத்தைப் பின்வரும் முறைகளில் உருவாக்கலாம்.

1. சுதந்திரமான அணுகுமுறை (Independents approach) இது நேரடியாகப் பல்வேறு முறைகளினூடாகக் கற்பித்தலைக் குறிக்கும்.
2. ஒருங்கிணைப்பு அணுகுமுறை (Intengnafed approach) கலைத் திட்டப் பாடங்களுடன் இணைந்து அவற்றின் ஊடாக விழுமியங்களைக் கற்பித்தல் அணுகுமுறை (Suite approach) இது பாடசாலை முன் மாதிரியாகச் செயற்பட்டு அவ்விழுமியங்களை மாணவர்களைப் பின்பற்றச் செய்து கற்பித்தலைக் குறிக்கும்.

இவற்றுள் முதலாம், இரண்டாம் முறைகள் பாடசாலைகளில் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன ஆயின் இரண்டாம் முறையைப் பின்பற்றி பாடசாலைகள் முன்வரவேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இம்முறை சட்டத்திலிருந்தும் பாதுகாப்பை வழங்கக் கூடிய தாகவும் சட்டத்துக்கு அப்பால் எதிர்பார்ப்பை

நிறைவேற்றும் என்பது எதிர் பார்ப்பு கூடுதலாக ஆரம்பக்கல்வி மாணவர்கள், ஆசிரியர்களின் வழி காட்ட லையும். உந்துதலையும் வசப்படுத்தி நல்வார்த்தைகளான விழுமியங்களைப் பெற்றுள்ளனர். ஆனால் திட்டமிட்ட கற்றல் அனுபவங்களை வழங்குவதில் ஆசிரியர்கள் பின்னிற்பதால் தோல்வியைக் கண்டுள்ளோம் என்பது மறுக்க முடியாத உண்மை. எனவே இதனைச் சீர் செய்வது தோல்வியைத் தகர்த் தெறியும் என்பது உண்மை. இளையவர்களிடையே ஒழுக்க விழுமியங்கள் சிதைவடைந்துள்ளமைக்கு வளர்ந்தோரும் காரண கர்த்தாக்களாக அமைகின்றனர். ஒவ்வொரு பிரச்சனைகளை இனங்கண்டு தெளிவான விஞ்ஞான பூர்வமான விளக்கத்தையும் வழங்க வேண்டிய பொறுப்பு ஆசிரியரைச்சார்ந்ததாகும்.

எனவே ஒழுக்க விழுமியங்களைக் சீர் செய்வதற்கு ஏனைய எல்லாப் பாடங்களையும் விட சமய பாடம் மிக மிக வாய்ப்பானதாக அமையும் என்பது திடமான உண்மை. மாணவர்கள் விழுமியங்களைத் தம்மீது திணிப்பதை பெருமளவு விரும்புதில்லை. கசப்பான மருந்தை இனிப்பான பிஸ்கட் ஊடாக வழங்கலாம். இவ்வாறான மருந்தினை வழங்குவதற்குப் பல நுட்பங்களைக் கையாளவேண்டும். இதற்கேற்ப போதனை முறைகளிலும் நடைமுறை சார்ந்த நடைமுறைகளில் திட்டமிடல் வேண்டும். எல்லா மாணவர்களும் ஏதோ ஒரு சமயத்துடன் பின்னிப் பிணைந்தே இருப்பர். எனவே அறநெறிகளை வழங்கும் ஊடகமாக சமயக் கல்வி வளர்த் தெடுக்கப்பட வேண்டியது காலத்தின் கோலமாகும். ஒவ்வொரு சமயமும் தமக்குரிய நம்பிக்கைகளையும். ஆன்மீகக் கோட்பாடுகளையும். சமூக அற நெறியாக உள்ளடக்கியுள்ளது. எனவே இவ்வூடகத்தினூடாக நோக்கத்தை நிறைவுக்குக் கொண்டு வருவது இலகுவானதாக அமையும். இதற்கமை வாகவே சமயக் கல்விக்கு கலைத்திட்டத்தில் முக்கியத்துவம் வழங்கப் பட்டுள்ளது. எனவே சமயக் கல்விப் போதனையுடன் மட்டும் நின்று விடாது பல்பரிமாண விருத்தியை ஏற்படுத்துவதொன்றாகும். பிறமதங்களிலுள்ள பொதுவான விழுமியங்களை ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தையுடைய தாகவும் இருத்தல் வேண்டும். இவ்விழுமியங்கள் மாணவர்களிடையே நற்பண்புகளை வளர்த்தெடுக்க வேண்டும் இதற்காக வகுப்புகளிலிருந்தே செயல் வடிவம் கொடுத்தல் வேண்டும். இதனை இடைநிலைக் கல்வியிலும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி எடுத்துச் செல்வது உவப்பானதாக அமையும்.

உசாத்துணை நூல்கள்:

விழுமியக் கல்வி,
தென்மராட்சி வலயம்.



உடலின் சக்தி மையங்கள்

மருத்துவர் வேலும்மயிலும் கணேசவேல்,
சுந்தரவேல் வைத்தியசாலை,
உரும்பிராய் வடக்கு.

எமது உடலில் கால் முதல் தலைவரை ஏழு சக்தி மையங்கள் உண்டு. இவை முறையே மூலாதாரம், சுவாதிஸ்டானம், மனிப்பூரகம், அனாதகம், விசுத்தி, ஆஞ்ஞை, சகஸ்ரம் எனப்படும். இச்சக்தியைத் தூண்டும் யோகமுறை குண்டலினி, இந்த குண்டலினி யோக முறையினை சராசரி மனிதனால் செய்ய முடியாது. இந்த முறைகளையே சித்தர்கள் கையாண் டனர்.

இவ்சக்தி மையம் எனப்படும் சக்கரம் எமது உடம்பில் பாயும் சக்தி களுக்கு வாசல். ஒவ்வொன்றும் உடம்பிலுள்ள சுரப்பிகளுடன் தொடர்புடை யவை. அவை சக்தியையும், அதிர்வையும் ஏற்று அதற்குத் தக்க வாறு இயங்கும். எதிர்விளைவையும் உண்டு பண்ணும் உணர்வு ரீதியாகவோ, மனரீதியாகவோ, ஆன்மரீதியாகவோ ஏற்படும் அழுத்தம் சக்தி மைய ஓட்டத்தில் ஒவ்வாமையை ஏற்படுத்தி பிணிகளுக்கு அதாவது நோய் களுக்குக் காரணமாகின்றது. இதனை சற்று விரிவாக உற்று நோக்கில்

மூலாதாரம்:– இது முள்ளந்தண்டு எலும்பின் அடியில் அமைந்தது. சிறுநீரகம், சிறுநீர்ப்பை, நரம்பு மண்டலம், அதிரினால் சுரப்பிகள், இதன் கட்டுப்பாட்டிற்குட்பட்டவை.

இத்துடன் தொடர்புடைய நோய்கள், கால், இடுப்பு, புட்டப் பகுதி, நாளங்களின் வீக்கம், முழந்தாள் பிரச்சினைகள்.

சுவாதிஸ்டானம்:– பருவ எலும்பிற்கும், தொப்புழுக்கும் இடைப்பட்ட பகுதி, ஆணுறுப்பு, பெண்ணுறுப்பு இதன் கட்டுப்பாட்டுக்குட்பட்டவை. இத்துடன் தொடர்புடைய நோய்கள் இனவிருத்திக் கோளாறுகள், மாதவிடாய் ஒழுங்கற்றுப் போதல், ஆண், பெண் இருவரின் இய லாமை போன்றவைகள்.

கணித விஞ்ஞான மன்றம் - 2015

ஆசிரியர் நலன்புரிக் கழகம்

மணிப்பூரகம்:- விலா எலும்புக்கூட்டுக்கும், தொப்புழுக்கும் இடையில் உள்ளது. வயிறு, ஈரல், பித்தநீர்ப்பை, ஜீரணத்தொகுதி இதன் கட்டுப் பாட்டிலுண்டு.

தொடர்புடைய நோய்கள், புற்றுநோய், மூட்டுவலி, மலச்சிக்கல், வயிற்றுப்போக்கு, குடற்புண், சமிபாட்டுக் கோளாறுகள், ஒற்றைத் தலைவலி, இருதய நோய்கள்.

அனாதகம்:- நெஞ்சறை, நடுப்பகுதி, மார்பெலும்புக்கிடையில் அமைந் தது. இருதயம், இரத்த அழுத்தம், இரத்த ஓட்டம், நோய்த் தடுப்புச்சக்தி, நுரையீரல் ஆகியன இதற்குட்பட்டவை.

நோய்களாவன இருதய நோய்கள், இரத்தஓட்டப் பிரச்சினைகள் போன்றவை.

விசுக்தி:- தொண்டைப்பகுதியில் அமைந்தது. தைரொயிட் சுரப்பி, குரல், உணவுக்குழாய், கழுத்து, கீழ்த்தாடை ஆகியன இதன் கட்டுப் பாட்டிற்குட்பட்டவை.

ஆக்ஞை:- புருவமத்திக்கு ஒரு அங்குலம் மேலாக அமைந்த பகுதி. மனதில் பகுத்தறிவு, சமநிலை, நோக்கம், திட்டம் உறுதி இதன் கட்டுப் பாட்டிற்குட்பட்டவை.

சகஸ்ரம்:- தலையில் உச்சிப்பகுதி இருக்கிறது. பீனியச்சுரம்பி இதன் கட்டுப்பாட்டிலுள்ளது. கடுமையான மன உபாதைகள், அதிர்ச்சி ஜதார்த்தத்தை சந்திக்க முடியாத பலவீனம் இதனுடன் தொடர்புடை யவை யாகும்.



கலைக்கூடம் பற்றிய கலையா நினைவுகள்

திரு. அப்புத்துரை ஆனந்தராசா
BBA (Hons), Dip. In. Edu. SLPS. 2
பழைய மாணவன்,
அதிபர்,
யா/ கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்.

ஈழத்தின் சிகரமென இலங்கும் யாழ்ப்பாண மாவட்டத்தின் நடுவண் பேரும் புகழும் மிக்க கிராமமாக இலங்குவது உரும்பிராய்ப் பதியாகும். நாவலரும் பாவலரும் வாழ்ந்த சிறப்பு மிக்க இக்கிராமத்தினை ஊடறுத்துச் செல்லும் பலாலி வீதியின் குடதிசை மருங்கில் கருணை செய்யும் பிள்ளையார் எழுந்தருளியிருக்கும் கற்பக விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. அத்தலத்தின் மேற்குப் புறப் பிரகாரத்திற்கு மேற்கே உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் அமைந்துள்ளது.

நூற்றாண்டு அகவை கண்டு விருட்சம் போல் ஓங்கி வளர்ச்சி பெற்ற இவ்வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா மலருக்கு ஆக்கமொன்றைச் சமர்ப்பிப்பதில் என்மனம் கழிபேருவகை கொள்கின்றது.

இந்தக் கலைக்கூடம் இன்றென்னை அவையத்து முந்தி யிருக்கச் செய்திருக்கின்றது. "இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்பதற்கு அமைய ஆரம்பக் கல்வியைக் கற்க 1973 ஆம் ஆண்டு இப்பாடசாலையில் இணைந்து கொண்டேன். முதலாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை இப் பாடசாலையில் கற்று க. பொ. த சாதாரண தரப்பரீட்சையில் சிறந்த பெறு பேற்றையும் பெற்றேன். எனது தந்தையாரும் சகோதரர்களும் இப் பள்ளியிலே தான் கல்வி கற்றார்கள்.

இப்பாடசாலையில் 1973 ஆம் ஆண்டு முதல் 1982ஆம் ஆண்டு வரை கல்வி கற்ற போது நிகழ்ந்த நிகழ்வுகளும் பெற்ற நன்மைகளும் என்மன ஊஞ்சலில் நிழலாடிக் கொண்டேயிருக்கின்றன.

பிஞ்சுப் பருவத்தில் நான் முதலாம் வகுப்பிற் கற்ற போது என் நெஞ்சைக் கவர்ந்த ஆசிரியை திருமதி. அன்னலட்சுமி சீவரத்தினம் இன் முகங் காட்டிப் பாடஞ் சொல்லித் தந்த நிகழ்ச்சி இப்போதும் என்மனக் கண்முன்னால் அழியாத காட்சியாக உள்ளது.

நான் கல்வி கற்ற காலத்தில் இப்பாடசாலை அதிபராகக் கடமையாற்றியவர் திரு. வீ. அரியநாயகம் ஆவார். நிமிர்ந்த நன்னடையும், ஆளுமை மிக்க உடல்வாகும் கொண்ட அவர் பாடசாலையை சிறந்த முறையில் வழி நடாத்தி வந்தார். இவருடன் முதலாம் வகுப்பு முதல் க. பொ. த. சாதாரணதர வகுப்பு வரை கற்பித்த பல ஆசான்கள் என்மனக் கண்முன்னே இப்பவும் தோன்றுகின்றார்கள். அவர்களின் தன்னலமற்ற ஆசிரியப் பணிகளால் உயர்ச்சி பெற்ற மாணவர்கள் பலர். அவர்களில் நானுமொருவன்.

இப்பாடசாலையின் பிரதி அதிபராகவும் தமிழ் மற்றும் சமய பாட ஆசானாகவும் விளங்கிய மதிப்பிற்குரிய ஆசிரியமணி திரு. அ. பஞ்சாட்சரம் அவர்கள் தமிழ்ப் பாடத்தை ஐயம்திரிபறக் கற்பித்தார். தமிழ் எழுத்துக்களை இலக்கண விதிப்படி எழுதுவதற்கு வழிகாட்டினார். தமிழ்மொழி, சைவசமயம் ஆகிய பாடங்களில் உயர்சித்தி பெற வழிவகுத்தார். மலர்ந்த முகத்துடன் வகுப்பறைக்குள் நுழைந்து அவர் கற்பித்த முறையும், அவரது பேச்சு வன்மையும் என்னைப் பெரிதும் கவர்ந்தன.

பொன்னுத்துரை அரங்கே எனது கலையின் வெளிப்பாடுகளின் திறவு கோலாக விளங்கியது. நான் மாணவனாக இருக்கும் போது பேச்சுப் போட்டியிலும், முத்தமிழின் ஒரு கூறாகிய நாடக ஆற்றுகையிலும், காவடியாட்ட நிகழ்வுகளிலும் இவ் அரங்கில் பங்கு பற்றியிருந்தமை இப் போதும் என் மனக் கண்ணில் நிழலாடுகின்றது.

தற்போதைய அதிபர் தலைமையில் முன்னேற்றம் கண்டு வரும் இவ்வித்தியாலயம் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையிலும், க. பொ. த. சாதாரண தரப்பரீட்சையிலும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் பல சாதனைகளை நிலைநாட்டி வடமாகாணத்தின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாகத் திகழுவதற்கு எல்லாம் வல்ல கற்பக விநாயகனின் திருவருள் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்தித்து, இன்னும் பல நூற்றாண்டுகள் இக்கலைக் கூடம் பேரும் புகழும் குன்றாமல் வீறுநடை போட்டு வெற்றியுடன் திகழ வாழ்த்துகின்றேன்.

சைவ வழிபாட்டில் மரபுவழிக் கலைவடிவங்கள்.

திருமதி. சுஜிதா ரமணீதரன்
B.FA, Dip In Ed.
யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.

ஓம் கணபதியே நமஹ
ஓம் மம குருப்யோ நமஹ
ஐம் நமஸ்தே ஸரஸ்வத்யை ஹி
ஸர்வவேஷாம் நமோ நமஸ்தே

உணர்ச்சியின் வெளிப்பாடு கலை. இக்கலை மனித உணர்வுகளுக்கு வடிகாலாக அமைந்தள்ளது எனலாம். ஆரம்ப காலங்களில் மனித உணர்வுகள் கலைகளின் ஊடாக ஆழ்ந்த உணர்ச்சியையும் எளிமையையும் எவ்வித அச்சுறுத்தலுக்கோ, கட்டுப்பாட்டுக்கோ உட்படுத்தாதவாறு வெளிப்படுத்தும் போது அது ஆடலாகவும், பாடலாகவும் உருவாகிப் பூர்வீக கலை வடிவத்தைப் பெற்றது. ஆதி மனிதன் கொடிய மிருகங் களுடனும், பறவைகளுடனும் போராட வேண்டிய கட்டாய தேவையேற்ப் பட்டது. அது அவர்களின் பாதுகாப்பிற்காகவோ வேட்டையாடுவதற் காகவோ இருந்திருக்கலாம். இதுவே போர்த்தன்மை ஆட்டங்களையும் மிருகங்கள் பறவைகள் ஆடுவது போன்ற தன்மைகளையும் உருவாக்கியிருக் கலாம். இதற்காக மிருகங்களைக் கொல்வதற்குப் பயன்படுத்திய ஆயுதங் களையும் தோல், அம்பு, மரக்கத்தி என்பவற்றையும் பயன்படுத்தி ஒலி எழுப்பி இசைக் கருவிகளாகப் பாவித்தனர். இயற்கைச் சூழலில் இன்பத்தைக் தளமாகக் கொண்ட வீர நடனங்களை ஆடி மகிழ்ந்தனர்.

காலவோட்டத்தில் இம்மனிதன் இயற்கைக்கு அஞ்சினான். இடி, மின்னல், மழை போன்றவற்றிக்கும், பஞ்ச பூதங்களுக்கும் அஞ்சினான். உலகத்தை ஏதோ ஒரு சக்தி ஆட்டிப்படைக்கின்றது என நம்பினான். ஆவியின் சீற்றத்தை தணிக்க ஆவியை வழிபடத் தொடங்கினான். இறந்தவர்களின் ஆவிகளைத் தெய்வங்களாக வணங்கினான். வழிபாட்டின்

போது வாயால் ஒலியெழுப்ப உணர்ச்சிப் பெருக்கால் உருவெடுத்து உருவாடி வழிபட்டான். இதுவே நடனக்கலையின் தோற்றுவாயாக இருந்தது என ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

பின்னர் மனிதர்கள் விலங்குகளாக வேடம் போட்டு ஆடி வழிபட்டனர் ஆயினும் வாய் ஒலியூடாக எழுப்பப்பட்ட பாட்டுக்கு கருப்பொருள் எதுவும் இருக்க வில்லை. இச் செயற்பாட்டில் எல்லா சமயத்தவரும் ஈடுபட்ட போதும் சைவ சமயத்தவர்கள் மட்டுமே பக்திப் பிரார்த்தனையுடன் கலை பண்பாட்டு கலாச்சார விழுமியங்களையும் தமது வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்து பல உருவமாக கலை வடிவங்களை உருவாக்கக் காரணமாக இருந்ததாக உலகின் அபிவிருத்தியடைந்த, அபிவிருத்தியடையாத பல்வேறு நாடுகளில் மரபுவழிக் கலைவடிவங்கள் காணப்பட்ட போதும் சைவ சமய மக்களால் இன்றுவரை பேணப்படும் கலைவடிவங்கள் கிராமங்களின் பொக்கிச மேயாகும். ஆரம்ப காலத்தில் மன்னர்களின் பெருமை, போர்த் திறமை, வெற்றிகளின் சிறப்புக்கள், பழந்தமிழர் பண்பாடு, வாழ்க்கை நெறிமுறைகள், நல்லோரின் உயர்வு, தீயோரின் தாழ்வு ஆகியவற்றையும் பின்னணியாகக் கொண்ட நிகழ்ச்சிகள் மற்றும் கலைவடிவங்கள் உருவாகின. புலவர்கள் மற்றும் கலைஞர்கள் பரிசில்கள் வழங்கிக்க கௌரவிக்கப் பட்டனர். கி.பி. 3ம் நூற்றாண்டு தொடக்கம் 6ம் நூற்றாண்டு வரை நடந்த கொடுங்கோல் ஆட்சியினால் கலை, கலாசாரம் பாதிப்படைந்தது. நாட்டியக் கலைகள் சைவாலயங்களில் தஞ்சமடைந்தன. கலைஞர்கள் நடிகர்கள், நடிகைகள், தவில் நாதஸ்வர கலைஞர்கள்ஆகியோருக்கு ஆலயங்கள் இடமளித்து மானியங்களும் சம்பளமும் வழங்கப்பட்டன. ஆடற்கலைக்கு தெரிந்தெடுக்கப்பட்ட பெண்கள் ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்து இறைவனுக்கு உரிமையாக பொட்டுக்கட்டுதல் சடங்கைச் செய்தார்கள். அதாவது ஆயுட்காலம் முழுவதும் இறைவனை மகிழ்விக்கும் ஆடற்கலை புரிபவராகத் தம்மை ஆக்கிக் கொண்டனர். இவை சில பிரதிகூலங்களை ஏற்படுத்தினாலும் கலைகளின் வளர்ச்சிக்கு உறு துணையாக இருந்துள்ளது. நாயன்மார்கள் பண்ணுடன் பாடிய பாடல்கள் தமிழர் உள்ளங்களில் நெகிழ்ச்சியையும் கிளர்ச்சியையும் தோற்றுவித்தன.

பண்ணோடு இசை பாடல் மறந்தறியேன்
தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்
ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே...

என்றார் திருநாவுக்கரசர்.

இறைவனை சுலபமாக அடைவதற்கு இசையோடு தமிழில் பாடுதல் பெறுமதி மிக்கது. மேலும் பிரபஞ்சத்தில் இயங்கும் பஞ்ச பூதங்களின் இயக்கத்தை இறைவடிவாக்கி அந்த வடிவங்களுக்கு அம்பலக்கூத்தன், தில்லைக்கூத்தன், நடராஜர் என்னும் பெயர் சூட்டி ஆண்டவனின் அருளை வேண்டினர் சைவ மக்கள். இறைவன் ஆடற்கரசனாக மட்டுமல்லாது சக்தியை அரங்க நாயகியாகவும் நந்தி தேவனை மழுவுக்கலையின் முதல் வனாகவும் நான் முகனை நாடக ஆசிரியராவும் நாரதனை தம்புரா மீட்டு பவராகவும் கருடனை இசைக்கலைஞராகவும் தேவ மாதர்களை கூத்துக்களை வளர்ப்பவர்களாகவும் சரஸ்வதியை வீணையின் அதிபதி யாகவும் பிரகடனப் படுத்திய சைவ சமயம் கடவுளரைக் கலைஞர்களாக கொண்டது பெருமைக் குரிய விடயமாகும்.

பிரமன் தாளம் போட, மால்படகந்தனை முழக்க பேராம் வாணி
அருமையாம், வீணைகௌ, சீர்ங்குழவி ரவிசசியும் அடைவாயூத
கிருபையுடன் தேவதொலி செய்ய, நந்தி மத்தளம் சங்கீதத்தைத்தும்
புரு முழங்க, ரசம் பிறக்கச், சிவனாடும் நடனத்தைப் போற்றுவேனே.

–மகாபரத சூடாமணி–

பொதுவாக தமிழர்களுடைய கலைவடிவங்கள் சமயம் சார்ந்தன வாகவும், சமூகம் சார்ந்தனவாகவும் காணப்படுகின்றன. அவையாவன கர காட்டம், காவடியாட்டம், சிலம்பாட்டம், கும்மியாட்டம், கோலாட்டம், வசந்தன் ஆட்டம். குரவை ஆட்டம், வேலாட்டம், முகமூடி ஆட்டம், வசந்தன் கூத்து, பறைமேளக்கூத்து, தெருக்கூத்து, என பலவகை கலைவடிவங் களை கூறலாம். இவற்றுள் பல சைவ சமயச் சடங்குகள், திருவிழாக்கள், சமய விழாக்கள் என்பவற்றுடன் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன.

முக்கியமாக நடராஜரின் பஞ்சகிருத்தியமும் நடராஜ திருவுருவத்தத் துவத்தைதையும் எடுத்து நோக்கினால் - இறைவனான நடராஜர் நாட்டியக் கலைக்குத் தலைவர் என்றும், அவரிடமிருந்தே நாட்டியக்கலை தோன்றிய தென்றும் சைவ சமயத்தவர்கள் கருதுகின்றனர். மக்களின் நாட்டியத்தையும் இறைவனுடைய பஞ்ச கிருத்திய பிரபஞ்ச நாடகத்தையும் ஆற்றுப்படுத்திய காரணத்தால் பரத நாட்டியத்திற்கு வேறெந்த நாட்டின் நாட்டியத்திற்கு மில்லாதவாறு உயர்ந்த ஆன்மீக மதிப்பும் தத்துவக் கருத்தும் அமைந் துள்ளன. பரத சாஸ்திரங்களிலும் நாட்டியத்தின் தோற்றம் தெய்வீக தொடர்பு கொண்டதாகவே கூறப்பட்டிருக்கிறது.

பாடசாலை மாணவர்களின் நடன நிகழ்வுகளில் சில . . .

சிவபெருமான் பஞ்ச கிருத்தியங்களைச் செய்யும் நாட்டிய தத்துவம் நிறைந்த நடராஜ வடிவமாகக் காட்சியளிக்கின்றார். இத்தகைய இறைவன் நாட்டியக் கலையின் கலைஞனாக நாட்டியமாடி நாட்டியக் கலையைப் போற்றி புகழ்ந்து அக்கலையின் மேன்மையினையும் பரிசுத்தத்தினையும் தன் ஆடலினால் பிரதிபலிக்கின்றார். அவரது ஆனந்தத் தாண்டவ நிலையே நடராஜ திருவுருவம்.

பஞ்ச கிருத்தியம் என்பது இறைவனின் ஐந்தொழில்களான படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பவற்றைக் குறிப்பது. பஞ்ச என்றால் ஐந்து. க்ருத்தியம் எனும் வடமொழிச் சொல்லானது க்ரு - கர - (to - do) என்னும் சமஸ்கிருதவினையடியிலிருந்து உருவானது. க்ரு-கர் என்பது தமிழ் மொழியில் செயல் , செய்கை, எனப் பொருள்படும். ஆகவே ஆதியும் அந்தமுமில்லாத அருவமும் உருவமுமாகிய வடிவமாக எம்பெருமானாகிய சிவபெருமானது ஐந்தொழில்களைக் குறிப்பதே பஞ்சகிருத்தியம் ஆகும். இவற்றை ஏகன், அநேகன் என போற்றப்படும் இறைவன் ஏக காலத்தில் இவற்றை நிகழ்த்துகிறார். இவ்வைந்து செயல்களையும் ஒரே உருவத்தில் அமைத்துக் காட்டப்பட்டுள்ள உன்னதமான மூர்த்தமே நடராஜ திருவுருவம். இதனை ஆனந்தத் தாண்டவம் எனவும் பஞ்சகிருத்திய பரமானந்த தாண்டவம் எனவும் கூறுகின்றார்கள்.

உசாத்துணை நூல்கள்:

1. சு. வித்தியானந்தன் - நாடகம் நாட்டாரியில் சிந்தனைகள் - 1994
2. சதாசிவ ஐயர் - மட்டக்களப்ப வசந்தன் கவித்திரட்டு - 1940
3. கலாநிதி. சபாஜெயராசா - ஈழத்தமிழர் கிராமிய நடனங்கள் - 2000
4. ஆசிரியர் அறிவுரைப்பு வழிகட்டி - தரம் 13
5. பரதநாட்டியக்கலை - கலைமாமணி சரஸ்வதி



பழைய மாணவர் சங்கச் செயலாளரின் அனுபவம்

நல்லையா கணேசலிங்கம் J.P

இளைப்பாறிய வங்கிச் சேவை முகாமையாளர்,
முன்னாள் அபிவிருத்திச் சங்க உபதலைவர், செயலாளர்,
பழைய மாணவர் சங்கசெயலாளர்,
யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.

ஒடையம்பதி கற்பக விநாயகர் தாழ் வணங்கி ...

இந்துக்கல்லூரி அதிகாரசபையின் கீழ் இயங்கிய இந்துக்கல்லூரி, சைவத்தமிழ் வித்தியாலயம் இரண்டும் பலாலி வீதியில் அமைந்திருந்த காலத்தில் எனது சகோதரியுடன் அங்கே எமது பாலர் கல்வியை ஆரம்பித்தேன். நூற்றாண்டு விழாகாணும் சைவத்தமிழ் வித்தியாலயம் அந்த ஆண்டு 1949ம் ஆண்டு ஒடையம்பதி கற்பகவிநாயகர் ஆலயத்திற்குச் சொந்தமான காணியில் எமது தந்தையார் வேலுப்பிள்ளை நல்லையா (முன்னாள் கூட்டுறவாளர்) அவருடன் சேர்ந்த சமூகப்பெரியார்கள் பிறக்ரர் ஆ. தனபாலசிங்கம் உடையார், சு. நல்லநாதன், திரு. சி. செல்லப்பா, திரு. அ. இளையதம்பி, திரு. ஆ. முத்துவேலு இராசவாசமுதலியார், திரு. வை. பொன்னம்பலம் போன்ற சமய சமூகப் பெரியார்களுடன் அதிபர் ஆ. கந்தையா (இடைக்காடு), திரு. அ. பொன்னுத்துரை ஆசிரியர், திரு. க. சோதிலிங்கம், திரு. சின்னத்துரை, திரு. தாமோதரம்பிள்ளை, திரு. செ. ஐயாத்துரை (கவிஞர்) பண்டிர் திரு. நவரத்தினக்குருக்கள், திருமதி. இராமுப்பிள்ளை தங்கமணி உபஅதிபர், இன்னும் அப்போதைய ஆசிரியர்களின் பெரும்பங்களிப்பால் ஊர்பிரமுகர்களின் பங்களிப்பாலும் கற்பகவிநாயகர் பெருங் கருணையால் சிறிய சிறிய அமைப்பான கட்டிடப் பகுதியில் நாங்கள் கல்விபயின்றோம். காலம் கடந்தோட பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்று புதிய புதிய ஆசிரியர்களும், புதிய புதிய கட்டிடங்களும் அமைக்கப்பட்டன. அதிபர் இடைக்காடு கந்தையா அவர்கள் தோற்றத்தில் அகத்தியர் போல் காட்சி அளித்து எம்மையெல்லாம் கண்டிப்பாக கற்பித்தமை பொன்னெழுத்தால் பொறிக்கத்தக்கவை தொடர்ந்து திரு. மு. பொன்னுத்துரை வாத்தியார் முதல் வாத்தியார் ஆன காலம் மிகவும் கூடிய வளர்ச்சிப்பாதையில் அடிஎடுத்து வைத்த காலம் 5ம் தர மாணவர்களைத் தரப்படுத்தியமை திரு. நடேசலிங்கம், திரு. சுசீலா, திரு. சீ.

வணிக மன்றம்

சக்திக் காப்பு முகாமைத்துவ கழகம்

பத்மநாதன் போன்ற மாணவர்களை மேற்படிப்புக்குப் போக உயர்த்தி வழிகாட்டி ஆசியர்களைச் சகமாணவர்கள் என்றென்றும் மறக்க மாட்டார்கள். இவர்களுடைய காலத்தில் ஆங்கிலப் பாடசாலையில் படிக்க வேண்டுமென மாணவ மாணவிகள் இந்துக்கல்லூரி செல்லும் மரபு வழியாக நானும் அங்கே சென்று O/L, A/L படிக்கும் காலத்தில் திரு. சு. குமாரசேகரம், திரு. கு. சபாரத்தினம், திரு க. நடராசா ஆகியோர் சிலவருடங்கள் அதிபர்களாகக் கடமையாற்றி நற்சேவையாற்றினார்கள். 1975ம் ஆண்டு யாழ் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் இருந்து பட்டதாரி திரு. வி. அரியநாயகம் அவர்கள் நிமிர்ந்தநடையும் பண்பும் உள்ளவர். அதிபராக நியமிக்கப் பெற்று பாடசாலையை நடாத்திவரும் காலத்தில் நான் அயலில் இருந்த காரணத் தாலோ அல்லது அண்மையிலேயே கிராமிய வங்கி முகாமையாளராக இருந்த காரணத்தாலோ அப்போதைய பாடசாலை அபிவிருத்திச்சபையில் ஓர் உறுப்பினராக உப தலைவராக சிறியவனாகிய என்னை தங்கட்கு பக்கபலமாக சேர்த்து பாடசாலை வளர்ச்சிக்கும் எனது வளர்ச்சிக்கும் ஓர் மனத்துணிவுடன் ஈடுபாடு உள்ளவராக்கிய மாணவர்கள் கல்வி வளர்ச்சி பாடசாலைப் பரிசளிப்பு விழா என்றால் கற்பக விநாயகர் சூழல் விழாக்கோலம் தான்.

முதல் யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் துரைராஜா அவர்கள் பரிசளிப்பு விழாவிற்கு வந்தநேரம் இன்றும் மறக்க முடியாது. திரு. நாகலிங்கம், திரு. சுந்தரலிங்கம் போன்ற கல்விமான்களையெல்லாம் பாடசாலைக்கு வரவழைப்பதால் மாணவர்களுக்கும் ஓர் உத்வேகம் மனதில் தூண்ட வழிவகுத்தனர். இவருடைய காலத்தில் திரு. அ. பஞ்சாட்சரம் ஆசிரியமணி உப ஆசிரியர்களாக அதிபர்களாக இருந்து ஓய்வு பெற்றவர்கள். செல்வி அ. சின்னத்தம்பி போன்றோரும் பக்கபலமாக இருந்து கல்விப் பணியாற்றினார்கள். திரு. அ. ஈஸ்வரநாதன் தற்போதைய தெல்லிப்பழை கோட்ட பணிமனை பொறுப்பதிகாரி அவர்களும் முன்னவர்கள் இந்துக் கல்லூரிக்கு அதிபராக இடமாற்றம் பெற்றுச் சென்றார். இவரது இடத்தை எவ்வாறு நிரப்பலாம் என பாடசாலை அபிவிருத்திச்சங்கம் கதிகலங்கி நின்றநேரம் பட்டதாரி யாழ் கொழும்புத்துறை துரையப்பா வித்தியால யத்தில் அதிபராகக் கடமையாற்றிய திரு. சு. யோகராசா அதிபராக நியமிக்கப்பெற்று கடமையைப் பொறுப்பேற்றார். அன்று மதியம் ஒரு மணிக்கு பாடசாலை அலுவலகத்திற்குச் சென்றேன். அவரது யோசனை சிந்தனை எல்லாம் ஓர் சொந்த ஊரவர் போல பல விடயங்களையும் கதைத்தார். பாடசாலைக்கு எப்படியானாலும் முன்னர் எங்களால் முன்

மொழிவு செய்யப் பெற்ற மாடிக்கட்டடத்தினை கட்டி நிறைவேற்ற வேண்டும் என்ற யோசனை. அநேகமான பாடசாலைக் கட்டிடங்கள் ஒரே மாதியான நீள அகலத்தில் கட்டிடம் அமைக்கப் பொறியியலாளர்களுக்கு பணிக்கப் பெற்றதால் எமக்குக் காணி அவ்வளவு நீளத்தில் இல்லை. இக்காலம் எவ்வாறாயினும் பணம் மதிப்பீடு அளவுகள் திரும்பாமலப் பார்க்க வேண்டி சூழ்நிலை எமது மைத்துனர் க. சிவஞானம் அவர் துணைவியார் எனது சகோதரி மங்கையர்க்கரசி அவர்களுக்கு உள்ள நாலு பரப்புகாணியில் பரப்பை அதிபர் அவர்களின் விடாமுயற்சிக்கான நல்ல நோக்கத்திற்காக அவர் மகன் திரு. சி. சிவராம் அவர்கள் போக்குவரத்துத் தொடர்பு இல்லாதநேரத்தில் வவுனியாவில் இருந்து தனது செலவிலேயே உறுதியை எழுதி அனுப்பியிருந்தார். அவர்களுக்கு அபிவிருத்திச்சபை என்றென்றும் நன்றி மறவாத மதிப்பளித்துள்ளனர். அதிபர் திரு. சு, யோகராச பகுதி பகுதியாக ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர் மூலமும் பணத்தைப் பெற்று கீழ் மாடியை முடித்து இந்து கலாசார அமைச்சு மாண்புமிகு தி. மகேஸ்வரன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இக்கட்டிடப் பணியை திரு. இராமச்சந்திரன் அமரர் (லயன்ஸ்) சொந்தப் பணியாக நிறவேற்றித்தந்தார். மூன்று மாடியாக மிளிரும் என்ற நம்பிக்கையில் திரு. இ. நடராசா பொறியியலாளர் லயன்ஸ் கழக உதவியுடன் நீர்த்தாங்கியைக் கட்டி அன்பளிப்புச் செய்தார். தொலைபேசி இணைப்புக்கள் எடுப்பதற்கு மிகவும் கஸ்டமான காலத்தில் திரு. திருமதி கணபதிப்பிள்ளை ஆசிரியரின் மகள் மூலம் இப்பணியை நிறைவேற்றினார்.

பழைய அலுவலகத்துடன் இணைந்ததாக லண்டன் வாழ் பழைய மாணவர திரு. தருமலிங்கம், கோணேஸ் அவர்களின் நிதிப்பங்களிப்புடன் ஓர் தரமானநூல் நிலையத்தை உருவாக்கியும் பாடசாலைக்கு முன் உள்ள காணியில் தற்போதைய அதிபர் திரு. மு. விக்னேஸ்வரன் அவர்களுடைய விடாமுயற்சியின் பயனாகக் காட்சியளிக்கும் கணிதவள, விஞ்ஞானவள கேட்போர் கூடம், நூற்றாண்டு விழா மண்டபம் அமைய அதனையும் ரூபா ஏழு அரை லட்சம் பெறுமதிக்கு பெற்றுக் கொடுத்தார். ஆரம்பபிரிவு ஒரு வகுப்பு குறைக்கப் பெற்ற நேரம் கல்விச் செயலாளர், திரு. பரமேஸ்வரன் அவர்களால் நடமாடும் சேவை யாழ் மத்திய கல்லூரியில் நடைபெற்ற நேரம் பாடசாலைச் சமூகத்தை அங்கே நேரடியாகத் தொடர்பு வைக்கச் செய்து கூடுதலாக மேலும் அனுமதியைப் பெற்ற பெருமையும் திரு. சு. யோகராசா அதிபர் அவர்களையே சாரும். இவரது சேவையை தொடர்ந்து உபஅதிபர்

திருமதி ப. தியாகலிங்கம், திரு. மு. விக்னேஸ்வரன் அவர்கள் பாடசாலையைப் பொறுப்பேற்றார். கூடுதலான ஆசிரியர்கள் இவரது காலத்தில் சேவையாற்றுகின்றார்கள். பாடசாலைக்குத் தேவையான வளங்களை கல்வித் திணைக்களத் திலும் கனடா பழைய மாணவர்கள், லண்டன் பழைய மாணவர்கள் வசதியான பெற்றார்களிடமும் பெற்று பாடசாலைத் தேவைகளை நிறைவு செய்கின்றார். இவரது சேவைக்காலத்தில் நூற்றாண்டு விழா நடைபெறு வதும் நூற்றாண்டு விழா மண்டபம் அமைக்கப்பட்டதும் பழைய மாணவர் களால் போற்றுதற்குரிய விடயமாகும். மேலும் மலர்க்குழுவினரால் நூற்றாண்டுவிழா செய்தி கேட்டமைக்கும் நன்றியை தெரிவிக்கிறேன்.

துன்பம் இல்லாத இன்பமும்
முயற்சி அல்லாத வெற்றியும்
அதிக நாள் நிலைப்பது இல்லை.
"அப்துல்கலாம்"



தரம் - 11 க. பொ. த. சாதாரணதர சித்தி வீதம்....?

திரு.ந. பாலச்சந்திரன்,
ஆசிரியர்,
விசேட பயிற்சி வர்த்தகம்,
யா/ உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்.

இதன் மூலம் பெறப்படும் தகவல்கள் மூலம் எடுக்கப்படுகின்ற தீர்மானம் பூரணத்துவம் உடையதா என்பதை சற்று சிந்தித்துப் பார்ப்போம்?

"அழகு" என்ற பதத்தினை இன்றுவரை பலர் பல்வேறு விதமாக வரை விலக்கணப் படுத்தியுள்ளனர். காரணம் பல்வேறு சமூகச் சிக்கல் நிறைந்த வையும், விருப்பு வெறுப்புகளுக்கு உட்பட்டவையாகவும் காணப்படு கின்றது.

அதே போன்று சித்தி வீதமானது எண்கணித தகவல்களே அன்றி அதனை வைத்து முழுமையான தீர்மானம் எடுப்பது என்பது சில தவறுகளையும் தோற்றுவிக்க வழிகோலுகின்றது. அதாவது இருவேறுபட்ட பாடசாலைகளில் சாதாரணதரத்தில் (O/L) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் தகவல் தொழில் நுட்ப (I.C.T) பாடத்தின் சித்தி வீதத்தினைப் பார்ப்போம்.

X பாடசாலை	Y பாடசாலை
மாணவர் எண்ணிக்கை - 65	மாணவர் எண்ணிக்கை - 2
சித்தியடைந்தோர் - 60	சித்தியடைந்தோர் - 02
தோற்றியோர் - 65	தோற்றியோர் - 02
சித்தி வீதம் - 92வீதம்	சித்தி வீதம் - 100 வீதம்

எனவே இரண்டு பாடசாலைகளிலும் கற்பித்த ஆசிரியர்கள் பற்றி சற்றுச் சிந்தித்துப் பார்ப்போம். இருவரும் ஆசிரியர் தான் இதில் Y பாட சாலையில் கற்பிப்பவர் மிகவும் பிரபலம் ஆனவர் என வரையறுத்து விட முடியாது. இங்கு இரு பாடசாலைகளின் பௌதீகவளம், சமூகப்பின்னணி, பாடசாலை நிர்வாகம், ஆசிரியரின் அர்ப்பணிப்பு போன்ற பல்வேறுபட்ட பாடசாலைச் சூழல் சார்ந்த காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றது. இவை தொடர்பான விடயங்கள் சித்தி வீதம் வெளிப்படுத்துவதில்லை.

தொழிநுட்ப மன்றம்

உடற்கல்வி - சுகாதார மன்றம்

இதே போன்று இம் மாணவர்கள் தரம் 11ல் மட்டும் கல்வி கற்கவில்லை. தரம் 1 - 5 வரை ஒன்றிணைந்த பாடத்திட்டத்தின் கீழ் ஆரம்பப் பிரிவிலும், தரம் 6 - 11 வரையான இடைநிலைக் கல்வியின் இறுதியில் தான் சித்தி வீதம் கணிக்கப்படுகின்றது. இக்காலப்பகுதி மாணவர்களின் கற்றல் திறனில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கும் என்பது உண்மை.

அதாவது தரம் 1ல் மாணவர்கள் சேர்கின்ற போது தரம் 1ல் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் முதலிடம் வகிக்கின்றார்கள். இங்கு பல்வேறு பட்ட சமூகவர்க்கத்தினரிடம் இருந்து கபடம் ஒன்றும் அறியாத பச்சிளம் பாலகர்கள் வருகின்றார்கள். இங்கு அவர்கள் அனைவரையும் அரவணைப்பதில் தரம் 1ன் ஆசிரியரின் பங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. தரம் - 1 ஆசிரியரின் அரவணைப்பில் தான் அம்மாணவனது எதிர்காலம் தங்கியுள்ளது எனவே எல்லா மாணவரையும் ஒரே அளவாக அரவணைப்பது என்பதுஎமது சமூகத்தில் மிகவும் சிரமம் என்பது எமது சமூகத்திற்கு நன்கு தெரியும். எனவே தரம் 1ல் ஆசிரியர் சில இயல்பாகச் செயற்படக் கூடிய மாணவர்களைத் தட்டிக் கொடுப்பதன் மூலம் அவர்கள் சித்தி வீதத்திற்குள் நகர்த்தப்படுகின்றார்கள். மாறாக மீத்திறன் குறைந்த, பின் நிற்கின்ற மாணவர்கள் தொடர்ந்தும் கவனிக்க முடியாமையினாலும் பின் தள்ளப் படுகின்றனர். மேலும் 2, 3, 4 ம் தரத்திற்குச் செல்கின்ற போது ஆசிரியர் மாற்றமடைகின்றார். (பெரும்பாலும்) இதனால் மாணவர் அரவணைப் பானது மாற்றமடைகின்றது இது ஆசிரியரின் அர்ப்பணிப்பிலும் தங்கி யுள்ளது. இன்றைய தொடர்பாடல் விருத்தியடைந்த சூழலில் பிரபலமான பாடசாலைகளில் தரம் - 3ல் கல்வி கற்கின்ற மாணவர்கள் சிலர் தரம் - 4ல் குறிப்பிட்ட ஆசிரியரின் வகுப்புக்குச் செல்ல மாட்டேன் என அடம்பிடிக் கின்றார்கள். காரணம் அவ்வாசிரியர் மீதுள்ள பயம். இச் செயற்பாடானது மாணவர்களின் கல்விச் செயற்பாட்டில் எவ்வளவான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனாலும் இச் செயற்பாட்டை அளவிட முடியாது.

உதாரணம்: ஒரு கிராமத்தில் உள்ள பாடசாலையில் தரம் 1ல் பிரபல்யமான குடும்பத்தில் பிறந்த மாணவன் சேருகின்றான். தரம் ஒன்றில் ஆசிரியர் அம்மாணவனுக்கு கூடிய அரவணைப்பைச் செலுத்தும் போது சிறந்த செயற்திறன் மிக்க மாணவனாகச் செயற்பட்டதுடன் கல்வியிலும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் திறம்படச் செயற்பட்டான். தொடர்ந்து தரம் 3க்கு அம்மாணவன் வருகின்ற போது வேறு மாவட்டத்தில்

இருந்து இடம் மாற்றம் பெற்று வந்த ஆசிரியர் வகுப்பாசிரியராக இணைக்கப் படுகின்றார். இதன் மூலம் அவ்வாசிரியரின் செயற்திறனுக்கு ஏற்ப அம் மாணவனின் அரவணைப்பில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியமையால் தானாகவே ஒதுங்கத் தொடங்கியுள்ளான். இதனால் தொடர்ந்தும் தரம் - 4,5 ல் கல்வி கற்று புலமைப்பரீசில் பரீட்சையிலும் மிகவும் குறைந்த புள்ளி களையே பெற்றுள்ளான். இவ்வாறான செயற்பாடுகள் கணிதரீதியில் வெளிப் படுத்த முடியாது.

மாறாக புலமைப்பரிசில் பரீட்சையை மையமாகக் கொண்டு தரம் 4ல் பரீட்சை நடாத்தப்படுகின்றது. இதில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களை ஒரு வகுப்பிலும் ஏனைய மாணவர்களை வேறு பிரிவுகளாகவும் வகுத்து கற்பிக்கப்படுகின்றது. இங்கு புலமைப்பரிசில் பரீட்சையானது எல்லோராலும் பேசப்படுகின்ற சமூக மதிப்பை ஏற்படுத்து கின்ற ஒரு போட்டிப் பரீட்சைக்கென தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக் கென போட்டியை ஏற்படுத்தும் வகையில் அமைந்த கற்பித்தல் இடம்பெறுகின்றது. மாறாக மற்றய பிரிவுகளில் போட்டி நிலைமை நிலவுவது இல்லை. இதனால் சில பாடசாலைகளில் 15, 20 மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து காணப்படுகின்ற போது அப்பாடசாலை களில் புலமைப்பரிசில் பரீட்சையில் குறைந்த புள்ளிகளைப் பெறுவோரும் காணப்படுகின்றனர்.

இவ்வாறு மிகவும் குறைந்த புள்ளி பெறக்கூடும் என்றவகையில் அமையும் சில மாணவர்களை தரம் - 4ல் வைத்தே வேறு பாடசாலைகளுக்கு இடம் மாற்றிய பாடசாலைகளும் உண்டு. இவற்றையும் சித்தி வீதம் வெளிப்படுத்துவதில்லை.

எது எவ்வாறாயினும் மிகவும் குறைந்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் மீத்திறன் குறைந்த மாணவர்கள் என்ற போர்வைக்குள் ஒன்றிணைந்த கல்விக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு இடைநிலைக் கல்விக்குள் தள்ளப்படுகின்றார்கள். அங்கு வந்ததும் அவர்கள் நிலை பற்றி சித்தி வீதம் எதனையும் வெளிப்படுத்துவதில்லை. இவ்வாறு எழுத்தறிவு, கணித அறிவு (உதாரணமாக தரம் - 6 செல்கின்ற மாணவர்களுக்கு நான்காம் வாய்பாடு தெரிவதில்லை) மிகவும் குறைவு. இம் மாணவர்களின் நிலை எவ்வாறு அமைய முடியும். இவ்வாறு தொடர்ச்சியாக தரம் 11ஐ வந்தடை கின்ற மாணவர்களின் செயற்பாடு எவ்வாறு அமையும்.

இந்நிலையில் தரம் 11ல் கல்வி கற்கின்ற ஆசிரியர்களை மட்டும் கேள்வி கேட்கின்ற சுட்டியாகச் சித்தி வீதம் காணப்படுகின்றது. இங்கு சித்தி வீதத்தை அடிப்படையாகக் கொண்டு சில தீர்மானங்கள் எடுக்கும் போது அத்தீர் மானங்கள் மிகவும் குறைபாடு உடையதாகக் காணப்படும். என்பதில் ஐயம் இல்லை. அதாவது சித்தி வீதத்தை அடிப்படையாகக் கொண்டு சிறந்த ஆசிரி யர்கள் என வரையறுக்கமுடியாதுள்ளது.

உதாரணமாக சில பிரபலமான பாடசாலைகள் தமது சித்தி வீதத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காக மிகவும் சித்தியடைய மாட்டார்கள் எனக் கருதும் மாணவர்களை இரண்டாம் தரம் பரீட்சை எடுப்பவர்களாகக் காட்டுவதன் மூலம் சித்தி வீதத்தில் உயர்ந்தவர்களாகக் காட்டுகின்றனர். இச் செயற்பாட்டைச் சித்தி வீதம் வெளிப்படுத்துவதில்லை.

எனவே இச்சித்தி வீதத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படு வோம் ஆயின் அது மென்மேலும் உண்மைத் தகவல்களை வெளிப்படுத்த மாட்டாது.

எனவே சித்தி வீதக் குறிகாட்டியுடன் மாணவர்களினது குடும்பச் சூழல், சமூகச் சூழல் போன்ற காரணிகளையும் கருத்திற் கொள்வதன் மூலமும் இம் முக்கிய சூழல்களையும் கருத்திற் கொள்ளக் கூடிய வகையில் குறிகாட்டிகளையும் சேர்த்துக் கொள்வோமாயின் பல சிறந்த முடிவுகளை மேற்கொள்ள பாடசாலை, தரம் - 11 ஆசிரியர் பற்றிய தீர்மானத்தை ஓரளவு முழுமையாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

மற்றவர்களிடம் இருந்து எதையும் எதிர்பார்க்காதீர்கள் ஏனென்றால் அவர்களுக்கு தெரியாது உங்களுக்கு என்ன தேவையென்று.

Challenges are the Secret of Success

